டெரிக் பிரின்ஸ்

பரிசுத்த ஆவியின் வரங்கள்

Derek Prince Ministries - India

``AAVIYIN VARANGAL"

This book was compiled from the extensive archive of Derek Prince's unpublished materials and edited by the Derek Prince Ministries editorial team.

``GIFTS OF THE SPIRIT"(Tamil)

3000/0125/LOP

Published by DPM India
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

ISBN : 978-93-92947-84-1
BK-B092-100-TAM

Derek Prince Ministries - India
www.derekprince.com/ta-in

Derek Prince
MINISTRIES INDIA

பொருளடக்கம்

பகுதி 1 + வரங்களின் தன்மைகள்

1: பரிசுத்த ஆவியின் வரங்கள்

புதிய ஏற்பாடு கிறிஸ்தவத்தை ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்வின் வழி என்று விளக்குகிறது. கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவமாக செயல்படுவதற்கும், இதேபோல இவ்வுலகத்தில் அவருக்கு அதிக வல்லமையான சாட்சியாக விளங்குவதற்கும், பரிசுத்த ஆவியின் ஒன்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்களைப்பற்றியும் நம்முடைய வாழ்வில் அவைகளைச் செயல்படுத்தும் முறைகளைப் பற்றியும் நாம் புரிந்துகொள்வது அவசியமாகும். பரிசுத்த பவுல் அப்போஸ்தலர் இந்த வரங்களைப் பற்றி 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார்.

> *வரங்களில் வித்தியா*சங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொ*ருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுத*லும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.
>
> *(1 கொரிந்தியர் 12:4-11)*

இந்த வரங்கள் அனைத்தும் இயற்கைக்கு அப்பாற்பட்டவை. அவைகளில் ஒன்றைக்கூட இயற்கையாகப் பெற்ற திறமையினாலோ,

கல்வியினாலோ அல்லது திறத்தினாலோ விளக்க முடியாது. ஞானத்தைப் போதிக்கும் வசனம் அல்லது அறிவை உணர்த்தும் வசனம் ஆகிய இவைகளை 15 வருடங்கள் ஒரு கல்லூரியில் படிப்பதின் மூலமாகவோ அல்லது மூன்று பட்டப்படிப்புகள் படித்துச் சான்றிதழ் பெறுவதின் மூலமாகவோ அடைந்துவிட முடியாது. இங்கு குறிப்பிடுவது இவற்றின் மூலம் பெறும் ஞானமோ அல்லது அறிவோ அல்ல. இந்த ஞானம் அல்லது அறிவு பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்ட கொடையாகும். குணமாக்கும் வரமும், பொதுவான மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சையினால் வரும் சுகம் தெய்வீக சுகத்திற்கு இணையானது அல்ல. நாம் மருத்துவ விஞ்ஞானத்திற்கு மதிப்பு கொடுக்கிறோம், அதற்கு நன்றியுடையவர்களாகவும் இருக்கிறோம். ஆனால், தெய்வீக சுகமோ இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் குணமடைதலாகும்.

ஆவியின் ஒன்பது வரங்கள்

ஆவியின் சில வரங்களைப்பற்றி நாம் அதிகத் துல்லியமான மொழிபெயர்ப்பில் மேலே காணும் பத்தியிலிருந்து காண்போம். அவைகளில் ஒவ்வொன்றைப் பற்றியும் தேடிக் கண்டுபிடிப்பதற்கு வரும் அத்தியாயங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. புதிய கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் எட்டாவது வசனத்தில், "*எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,*" என்று சொல்லப்பட்டுள்ளதில் கிரேக்க மொழியில் "அந்த" என்ற வார்த்தைக் காணப்படவில்லை. ஆகவே நான் இந்த வரங்களை "ஞானத்தைப் போதிக்கும் ஒரு வசனம்" என்றும் "அறிவை உணர்த்தும் ஒரு வசனம்" என்றும் மொழி பெயர்க்கின்றேன். 10ஆம் வசனத்தில், "*வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும்*" என்பது "அற்புதங்களைச் செய்வதாகும்". குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான இரண்டு வார்த்தைகளும் பன்மையில் உள்ளன. இதேப் போல, "*ஆவிகளைப் பகுத்தறிதலும்*" பன்மையிலேயே உள்ளது.

ஆகவே இவைகளில் நான்கு வரங்கள் இயற்கையாகப் பன்மையில் உள்ளன:

(1) குணமாக்கும் வரங்கள்,

(2) அற்புங்களைச் செய்யும் வரங்கள்,

(3) ஆவிகளைப் பகுத்தறிதல், மற்றும்

(4) பல பாஷைகளைப் பேசுதல்.

இந்த வரங்களின் பல்வேறு தன்மைகளைப் புரிந்து கொள்வது இந்த வரங்கள் செயல்படும் விதத்தை அறிந்து கொள்ள உதவும்.

இந்த ஒன்பது வரங்களும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, ஒவ்வொன்றிலும் மூன்று வரங்களாக மூன்று தலைப்புகளில் வெளிப்படுத்தும் வரங்கள், வல்லமைப் பெருகும் வரங்கள், வாய்மொழி வரங்கள் என்பவைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

வெளிப்படுத்தும் வரங்கள்

ஞானத்தைப் போதிக்கும் வரம்

அறிவை உணர்த்தும் வரம்

ஆவிகளைப் பகுத்தறிதல்

வல்லமை வரங்கள்

விசுவாசம்

குணமாக்கும் வரங்கள்

அற்புதங்களைச் செய்யும் சக்தி

வாய்மொழி வரங்கள்

பல பாஷைகளைப் பேசுதல்

பாஷைகளை வியாக்கியானம் செய்தல்

தீர்க்கதரிசனம்

பல வருடங்களாக வேத பண்டிதர்களும், வியாக்கியானம் செய்பவர்களும் ஆவியின் வரங்களை நாம் எளிதாகப் புரிந்து கொள்வதற்காக மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளனர். இந்த மூன்று பிரிவுகள் ஒவ்வொன்றிலும் மூன்று வரங்கள் குறித்து விளக்கப்படுகிறது. இந்தக் குறிப்பிட்ட வகையறுப்புகள் மூலமாகவே நாம் வரங்களைப் புரிந்து கொள்ள முடியும்

அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், ஊழியர்கள், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள் ஆகியோர் இயேசுவின் ஊழியத்தில் அவருடைய சபைகளுக்கு வரங்களாகக் கொடுக்கப்பட்டவர்கள்.

என்பதல்ல. ஆனால் அவைகளை வரிசைப்படுத்தவும், அவைகளை அதிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும் இத்தகைய வகையறுப்புகள் உதவுகின்றன.

ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், மற்றும் ஆவிகளைப் பகுத்தறிதல் ஆகியவை வெளிப்படுத்தும் வரங்களாகும்; வேறு எந்த வழியிலும் நாம் பெற்றுக் கொள்ள முடியாத வெளிப்பாடுகளை இவைகள் அறிவிக்கும். விசுவாசம், அற்புதங்களைச் செய்யும் வரங்கள், மற்றும் குணமாக்கும் வரங்கள் ஆகியவை வல்லமையான வரங்களாகும் - அவைகளில் கிரியை உண்டாகும். அவைகளை நாடக வரங்கள் என்றும் அழைக்கலாம்; இந்த வரங்கள் ஜனங்களின் கவனத்தை ஈர்க்கிறது. பல பாஷைகளைப் பேசுதல், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல், மற்றும் தீர்க்கதரிசனம் ஆகியவை வாய்மொழி வரங்கள். ஏனென்றால் அவைகள் மனிதர்களின் குரல்வளையிலிருந்து செயல்படுவது அவசியமாகிறது.

ஊழியத்திற்கான வரங்கள் மற்றும் ஆவியின் வரங்கள்

வரக்கூடிய குழப்பங்களைத் தவிர்ப்பதற்கு இவைகளுக்கு நடுவில் உள்ள அதாவது ஊழியத்தின் வரங்களின் தொடர்புகளையும், வித்தியாசங்களையும் கருத்தில் கொள்வது அவசியமாகும். இவைகள் எபேசியர்4:13இல் காணப்படுகிறது. இவைகள் பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களாகும்.

இந்த வரங்களுக்கான சூழ்நிலை எபேசியர் 4:11இல் குறிப்பிடப்பட்டுள்ளது. வசனங்கள் 8 மற்றும் 10இல் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப்பற்றி வாசிக்கிறோம். *“ஆதலால், அவர் உன்னதத்திற்கு*

ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்.... இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார்." வசனம் 13ல் உயிர்தெழுந்த கிறிஸ்து மனித சமுதாயத்திற்கு கொடுத்த ஐந்து வரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது: *"அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்."*

இந்த வரங்களை இரண்டு இணையான காலங்களில் காணலாம்:

ஊழியத்திற்கான வரங்கள்	**ஆவியின் வரங்கள்**
அப்போஸ்தலர்கள்	ஞானத்தைப் போதிக்கும் வசனம்
தீர்க்கதரிசிகள்	அறிவை உணர்த்தும் வசனம்
சுவிசேஷகர்கள்	விசுவாசம்
மேய்ப்பர்கள்	குணமாக்கும் வரங்கள்
போதகர்கள்	அற்புதங்களைச் செய்தல்
	தீர்க்கதரிசனம் உரைத்தல்
	ஆவிகளைப் பகுத்தறிதல்
	பல பாஷைகளைப் பேசுதல்
	பாஷைகளை வியாக்கியானம் செய்தல்

இந்த இரண்டு வகையான வரங்கள் ஒன்றிற்கு ஒன்று மூன்று வழிகளில் வேறுபடுத்திக் காட்டப்படுகிறது.

ஈவாய்க் கொடுக்கப்பட்ட நபர் / ஒரு நபருக்குக் கொடுக்கப்பட்ட வரம்

ஊழிய வரங்களைப் பற்றி முதலாவது பார்க்கும்பொழுது அந்த விசுவாசியே திருச்சபைக்கு கிறிஸ்து வழங்கும் வரமாக இருக்கிறார். வசனம் இதை அழுத்தமாக கூறுகிறது. அதாவது *"அவர், சிலரை*

அப்போஸ்தலராகவும் ... ஏற்படுத்தினார்.'' அவர் சிலருக்கு "அப்போஸ்தலத்துவத்தைக்" கொடுக்கவில்லை, ஆனால் அவர் சிலரை அப்போஸ்தலராக ஏற்படுத்தினார். அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், மற்றும் போதகர்கள் இயேசுவின் ஊழியத்திற்கான வரங்களாக அவரவரது சபைக்குக் கொடுக்கப்பட்டவர்கள். ஏனெனில் சபையானது இவர்கள் இல்லாமல் தேவன் விரும்புவதைச் செய்ய முடியாது. உதாரணமாக, பரிசுத்த பவுலடிகளார் புறஜாதியான விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்ட இயேசுவின் வரம்.

இதற்கு எதிர்மாறாக, ஆவியின் வரங்கள் ஒரு மனிதனுக்கு, மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்படியாக கொடுக்கப்பட்டுள்ளன. பரிசுத்த பவுல், "*எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்...*" என்று 1கொரி. 12:8இல் எழுதுகிறார். ஆகவே, ஊழிய வரங்களில் மனிதனே வரமாவான், ஆவிக்குரிய வரங்களில் மனிதன் வரத்தைப் பெற்றுள்ளான்.

வாழ்விற்கு வழங்கப்பட்ட வரம் / குறுகிய காலம் வெளிப்படும் வரம்

ஊழிய வரங்களில் இரண்டாவதாக, ஊழியத்தின் ஒவ்வொரு பகுதியும் முழுமையாக வரத்தை உண்டாக்குகிறது. இது, ஒரு விளையாட்டு வீரன் குறிப்பிட்ட தூரத்தை அடைய மற்ற அனைவரையும்விட வேகமாக ஓடுவதற்கு ஒப்பாகும். அவனுடைய முழுவாழ்வும் குறிப்பிட்ட தூரத்தை ஓடி அடைவதையே மையப்படுத்தி இருக்கும். இதைப்போலவே, வரம் பெற்ற ஊழியனும் தன் வாழ்நாள் முழுவதும் சபைக்கு அப்போஸ்தலனாகவோ, தீர்க்கதரிசியாகவோ, சுவிசேஷகனாகவோ, மேய்ப்பராகவோ, போதகராகவோ இருப்பதை மையப்படுத்தியே இருக்கும். பரிசுத்த பவுல் அடிக்கடி கிறிஸ்தவ ஊழியத்தை விளையாட்டு வீரர்களின் செய்கைகளுக்கு ஒப்பிடுகிறார். ஏனெனில் அங்கே இவ்விருவருக்கும் மத்தியில், பயிற்சி செய்வதிலும், கட்டுப்பாடுடன் இருப்பதிலும், அதிலே முழுமையான அர்ப்பணிப்புடன் இருப்பதிலும் இணையான கோடுகள் செல்வது போல் உள்ளன. ஊழியம் என்பது வாழ்வின் பணியாகும்.

இதற்கு மாறாக, இந்த ஒன்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்கள் சுருக்கமானதாகவும், நாடகப் பாங்கிலும், அறிவுக்கூர்மையானதாவும், வெளிப்படுத்தல்களை ஈர்க்கிறதாகவும் இருக்கிறது. அவைகள் தோன்றுகின்றன உடனே முடிந்துவிடுகின்றன. எடுத்துக்காட்டாக, தீர்க்கதரிசன வெளிப்பாடுகள் ஒரு சில மணித்துளிகளோ அல்லது நிமிடங்களோ மட்டும் நிலைத்திருக்கும். அதோடு அது முழுமையடைந்து விடுகிறது. எப்பொழுதும் தொடர்ந்து கொண்டே இருக்கும் சில செயல்கள் என்று சொல்ல முடியாது. ஞானத்தை உரைக்கும் வசனமும் ஒரு சில மணித்துளிகளே இருக்கும். ஒரு மனிதன் திடீரென்று ஒரு வெளிப்பாட்டைப் பெறுகிறான். அது அவனை அவன் அறியாத, செய்ய முடியாத ஒன்றை செய்யச் சொல்கிறது. அவன் அதை இயற்கையான முறையில் புரிந்து கொள்வதும் இல்லை. ஆவிகளைப் பகுத்தறியும் வரம் கொடுக்கப்படும்போது, ஒரு மனிதன் திடீரென்று அங்கே பெருமையின் ஆவி அல்லது விபச்சாரத்தின் ஆவியை ஒருவனில் காணலாம். ஆவிக்குரிய வரம் பெரும்பாலும் மின்னல் மின்னி மறைவது போலவும், இடி இடிப்பது போலவும் இருக்கும். அது அந்த இடத்திலேயே முடிந்து விடும்.

நன்னடத்தை அவசியம்/நன்னடத்தையானது முன் தேவையல்ல

மூன்றாவதாக, ஊழியவரமானது ஒரு மனிதனின் நன்னடத்தையிலிருந்து பிரிக்க முடியாததாகும். அது அப்படித்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் ஊழியவரத்தின் தன்மையானது அவர்கள் அதை செயல்படுத்துவதற்கு மிகவும் அவசியமாகும். இதற்கு மாறாக, ஆவியின் வரங்களைப் பொறுத்த வரையில், நன்னடத்தையோடு சேர்ந்திருப்பது அவசியமில்லை. அது தொடர்புடையதாகத் தோன்றுகிறது எப்பொழுதும் அப்படியிருக்க வேண்டுமென்பதில்லை. இதை நாம்

. . .ஒருவருடைய குணாதிசயங்களில் இருந்து ஊழிய வரத்தைப் பிரித்திட முடியாது . . . அது வரங்கள் செயல்பட அதிமுக்கியமானது.

கற்றுக் கொள்வது அவசியம் அல்லது நாம் கசப்பான ஏமாற்றமடைவதற்கு ஏதுவாகும். ஜனங்களுடைய விசுவாசம், அவர்கள் ஒருவனுடைய நன்னடத்தையும் அவன் பெற்ற வரத்தைப் பயன்படுத்துதலும் ஒன்றுக்கொன்று பொருந்தாமல் இருக்கும் பொழுது தீங்கு விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கலாம்.

எடுத்துகாட்டாக, ஒருவன் ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்ளாதபொழுது, சோம்பேறியாகவும் பொறுப்பற்றவனாகவும் இருந்திருக்கலாம், வரத்தைப் பெற்ற பின்பும் அவன் அவ்விதமாகவே சோம்பேறியாகவும், பொறுப்பற்றவனாகவும் இருக்கலாம். ஒரு தேவ தூதனைப்போல தீர்க்கதரிசனம் சொல்லலாம். இருந்தாலும் நீ பலமுறை அவரைச் சந்திக்க கேட்டிருந்தாலும் குறித்த நேரத்தில் அவர் உன்னைச் சந்திக்காமல் காத்திருக்க வைக்கலாம். பரிசுத்த பவுல் எபேசியருக்கு எழுதும் போது 4:13இல் "*(கிறிஸ்து) அவர் சிலரை... தீர்க்கதரிசிகளாகவும் ஏற்படுத்தினார்*" என்கிறார். அவர் மேலும் 1கொரிந்தியர் 14:31இல் "*எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ் சொல்லலாம்*" என்று எழுதுகிறார். எல்லா விசுவாசிகளும் ஆவியின் தீர்க்கதரிசன வரத்தை உபயோகிக்கலாம். எனினும் தேவன் நாம் எல்லோரும் தீர்க்கதரிசிகள் என்று ஒரு போதும் சொல்லவில்லை. தனக்குத்தானே தீர்க்கதரிசனஞ்சொல்லிக் கொள்வது உங்களுக்குத் தீர்க்கதரிசன ஊழியத்தைக் கொடுக்காது. இதைப் போல நடத்தையும் ஊழிய வரத்தோடு ஒத்துப்போக வேண்டும் என்று அவசியமில்லை. எப்படியாயினும், நீங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வரத்தைப் பெறும்போது அது உங்களது பொறுப்புகளையும் அதிகரிக்கச் செய்கிறது. மேலும் ஒரு பொறுப்புள்ள மனிதன் தன்னை, தான் செய்யும் மற்ற செயல்களையும் தான் பெற்ற வரத்தோடு இணைந்து செல்லும்படியாக தனது நடத்தையையும் காத்துக் கொள்வான். நாம் இதில் அறிந்துகொள்வது என்னவென்றால் வரத்தை எடுத்துக்கொள்ளும் எல்லோரும் இத்தகைய பொறுப்பினை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் அல்லது இந்த வகையில் போதுமான முதிர்ச்சி அடைபவர்களாகவும் இருக்கமாட்டார்கள்.

இந்தக் கருத்தை இன்னும் சிறந்த முறையில் அறிந்து கொள்ள உதவுவதற்குப் பரிசுத்த ஆவியின் வரங்கள் ஒரு கிறிஸ்மஸ் மரத்தின்

அடியில் இருக்கும் பரிசுப் பொருட்களைப் போன்றதாகும். ஒரு கிறிஸ்மஸ் மரத்தின் கீழ் பரிசுப் பொருளை வைப்பதோ அல்லது ஒரு பரிசினை திறப்பதோ நீண்ட காலம் எ டுக்கும் செயலல்ல. இவைகள் அந்தந்த காலத்தில் ஏற்படும் செயல்களாகும். நான் ஒருமுறை ஒரு கிறிஸ்மஸ் பரிசினைத் திறந்து பார்த்துவிட்டு அதில் மின்சாரத்தால் இயங்கும் ஒரு ஷூ பாலிஷரைக் கண்டேன். ஆனால் அது என்னை நான் முன்பு இருந்ததிலிருந்து அந்த ஷூ பாலிஷரைப் பெற்ற பின்பும் ஒரு வித்தியாசமான மனிதனாக மாற்றவில்லை. அது என்னுடைய நடத்தையின் ஒரு பகுதியைக் கூட மாற்றவில்லை.

ஆவியின் வரங்கள் மட்டுமே குணத்தையும் நடத்தையையும் மாற்றுவது இல்லை.

தயவு செய்து என்னைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். வரங்களைக் குறைவாகப் பேசுவது நிச்சயமாக என்னுடைய நோக்கமல்ல. தேவனுடைய கிருபையும் (அவருடைய இலவசமான, தகுதியற்றோருக்கு கொடுக்கப்படும் தயவு) மற்றும் பரிசுத்த ஆவியானவர் செயல்படும் வித்தியாசமான வழிகளையும், அவைகளின் அளவு கோல்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதே என் நோக்கமாய் இருக்கிறது. ஆவிக்குரிய வரங்களைப் பிரயோகிப்பதுதான், ஒரு மனிதனை ஆவிக்குரியவனாக மாற்றுகிறது என்று நாம் எண்ணுவோமானால், நாம் பிலேயாமின் கழுதையைத் தான் நினைவு கூறவேண்டும். அது மறுபடியும் நம்மை தாழ்மைப்படுத்தும். தீர்க்கதரிசி தேவனுக்குச் செவிகொடுக்க மறுத்ததால், தேவன் ஒரு கழுதையைப் பேச வைத்தார். (எண்ணாகமம் 22:22-40). அதன் பாடத்தை இவ்வாறு சுருங்கக் கூறலாம்: நீங்கள் தீர்க்கதரிசனம் கூறு முன், ஒரு கழுதையாய் இருந்தால், பின்னர் நீங்கள் எப்படி இருப்பீர்கள் என உங்களுக்குத் தெரியுமா? ஆவிக்குரிய வரங்கள் மட்டுமே, நமது சுபாவத்தையோ அல்லது குணத்தையோ மாற்றாது. கடைசி முயற்சியாக, தேவன் ஒரு கழுதையை உபயோகிக்க முடியும். மேலும், இது எவ்வித்திலும் வரங்களைக் குறைவுபடுத்தாது, ஆனால் அவைகள் வரங்களே என்று நாம் உணரவேண்டும்.

வரங்களும் ஆவியின் கனியும்

மற்றொரு வகையில் நாம் இவ்வரங்களையும் நடத்தையையும் கண்ணோக்கும் பொழுது ஆவியின் வரங்கள் ஒன்று, ஆவியின் கனி மற்றொன்றாகும். ஆவியின் கனி ஒன்பது என்பதை நாம் பார்த்தோம். கலாத்தியர் 5:22-23 வசனங்கள் ஆவியின் கனி ஒன்பது வகையில் இருப்பதை உணர்த்துகிறது: "*ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.*" அநேக கிறிஸ்தவர்கள் தேவன் தங்களுக்கு நியமித்ததை இழந்து போய்விடுகிறார்கள். அவர்கள் தர்க்க ரீதியாக வரங்களுக்கும் ஆவியின் கனிக்கும் இடையில் உள்ள அடிப்படையான வேறுபாடுகளை அறிவதில் தவறிவிடுகின்றனர். நான் ஆரம்பத்தில் சொன்னது போல வரங்கள் ஒரு கிறிஸ்மஸ் மரத்தில் தொங்கவிடப்பட்ட பரிசுப் பொருட்களைப் போலாகும். வரங்களுக்கும் கனிக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை கிறிஸ்மஸ் மரத்தில் தொங்கும் அலங்காரப் பொருட்களுக்கும், ஒரு கனிகொடுக்கும் மரத்தில் தொங்கும் கனிக்கும் உள்ள வித்தியாசம் என்று சொல்லலாம். கிறிஸ்மஸ் மரத்தில் அலங்காரப்பொருட்களைத் தொங்கவிட சிறிது நேரமே ஆகும், மேலும் இவைகள் அந்த மரத்தில் ஒரு பாகம் ஆகாது. இருந்தாலும் நீங்கள் ஒரு ஆப்பிள் பழத்தை ஒரு ஆப்பிள் மரத்தில் ஒட்டவைக்க முடியாது. அதற்குப் பயிரிடுதல், வளருதல், முதிர்ச்சியடைதல் ஆகிய பல நிலைகளை அடைய வேண்டும். அந்த மரம் வளர்ந்து புசிக்கத்தக்க ஆப்பிள் பழங்களைத் தருவதற்குக் குறிப்பிட்ட கால அவகாசம் தேவை என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். இதைப் போலவே, ஆவியின் கனியில் வளருவதற்கும் பல நிலைகளை அடைவது அவசியம். அதற்கு உழைத்து, பயிர் செய்து, பொறுமையுடன் இருந்து, திறமைகளை உபயோகித்துச் செயல்பட வேண்டும்.

ஒரு மரத்தில் தயார் செய்த ஆப்பிளையோ அல்லது ஆரஞ்சுப் பழத்தையோ எதிர்பார்ப்பது பொருத்தமானதல்ல. "*பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடையவேண்டும்*'' என்று 2தீமோத்தேயு 2:6ல் பரிசுத்த பவுல் கூறுகிறார். கனி தானாகவே உருவாக முடியாது. இந்த உண்மையை நாம் அடிக்கடி கவனிக்கத் தவறுகிறோம் என்று நான் கருதுகிறேன். ஒரு முயற்சியுமின்றி தானாகவே கனி

உருவாவதைக் குறித்துப் பேசுகிறோம். ஆனால் இன்று உலக சந்தையில் தானாகவே வளர்ந்து தானாகவே கனிகொடுக்கும் கனிகள் விலை போகாது. எல்லா கனிக்கும் அதிக கவனமாக, கருத்துடன் பயிரிடுவது தேவைப்படுகிறது. இதற்காக நேரத்தையும் கவனத்தையும் நாம் செலுத்த வேண்டும். இதைப்போலவே, ஒருவரும் ஆவியின் கனியை விளையச் செய்யாவிட்டால் அக்கனியை முழுமையடையச் செய்ய முடியாது. ஒரு ஆவியின் வரமானது அதை நீண்டகாலமாக கனி கொடுக்கும்படிச் செய்யும் வரைக்கும் அது வல்லமையுள்ளதாக இருக்காது என்பதையும் கூட நாம் புரிந்து கொள்ள வேண்டும். வரத்தை *உபயோகிக்கும் போது* அது நடத்தையில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணும்.

1 கொரிந்தியர் 13:1-2ஆம் வசனத்தில் பரிசுத்த பவுல், ஆவியின் எல்லா வரங்களையும் பெற்றிருந்தாலும் அன்பு இல்லாவிட்டால் அதைப் பெற்றுள்ள அந்த மனிதனுக்கு அதனால் எந்த பிரயோஜனமும் இருக்காது என்று சுட்டிக்காட்டுகின்றார். இக்கூற்று மிகவும் சிந்திக்கத்தக்கது, ஏனென்றால் இந்த வரங்கள் இன்னும் பிறருக்கு பயனளிப்பதாய் அமையும். எனக்கு குணமாக்கும் வரம் இருந்து அன்பு இல்லாமல் அதை உபயோகித்தால் அதனால் எனக்கு ஒரு பிரயோஜனமும் இருக்காது. ஆனால், அதினால் குணம் பெற்ற மனிதனுக்கு அது பயனுள்ளதாக இருக்கலாம். ஓரல் ராபர்ட்ஸ் அவர்கள் இதைக்குறித்து, நான் ஒரு போதும் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியோடு தொடர்புபடுத்திக் கூறுகிறார். ஒரு பெண்மணி, அவருடைய கூட்டம் முடிந்த பின்பு அவரைத் தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தாள். அவள் தன்னுடைய எல்லையைக் கடந்து அவருக்குப்பின்னால் ஓடிக் கொண்டிருந்தாள். அவர் அவளிடம் “கூட்டம் முடிவடைந்துவிட்டது; நான் மக்களுக்காகத் தனிப்பட்ட முறையில் ஜெபிப்பதில்லை” என்று கூறினார். அவள் அவருக்காக நீண்டநேரம் அங்கேயே காத்திருந்தாள், எனினும் பொறுமையை இழந்த நிலையில் அவர் தனது கையை நீட்டி அவளைத் தொட்டார்- உடனே அவள் குணமடைந்தாள். அவள் சுகம் பெற்ற போதிலும், அவர், “இதனால் நான் ஒரு ஆசீர்வாதத்தையும் பெறவில்லை: இதனால் எனக்கு ஒரு நன்மையும் இல்லை” என்றார். இந்த வரத்தை உபயோகிக்கும் ஒருவனுக்கு அன்பு இராவிட்டால் இதனை உபயோகிப்பதனால் அவனுக்கு இதிலிருந்து ஒரு நன்மையும் உண்டாகாது. சில வேளைகளில் நானும் இதைப் போன்ற

அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். இதனை நான் உணரும்போது பல முறை ஆச்சரியப்பட்டிருக்கிறேன். ஆனால் தேவன் நம்மைவிட பெரியவர்.

ஒரு சில மக்கள் ஆவியின் கனியைப் பெற்றதால் வரங்கள் தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். இவ்வாறு பேசும் மக்கள் எவ்வளவு கனி கொடுப்பார்கள் என்ற கேள்வியை எனது அனுபவம் எனக்குக் கற்றுக் கொடுத்தது. ஒருவேளை "எனக்கு அன்பு இருக்கிறது; எனக்கு வரங்கள் தேவையில்லை" என்று சிலர் கூறுவார்கள். அது முழுவதுமாக வேதத்திற்கு முரணானது. ஏனெனில் வேதாகமம் கூறுகிறது "*அன்பை நாடுங்கள்; ஞானவரங்களையும் விரும்புங்கள்*". (1 கொரிந்தியர் 14:1). நாம் அன்பை நாடுகிறோம் என்பதற்கு உள்ள சான்றுகளில் ஒன்று, நாம் ஆவிக்குரிய வரங்களை விரும்புகிறோம் என்பதே. உண்மையில், ஆவிக்குரிய வரங்களை கருவிகளாக வைத்துதான் அன்பு கிரியை செய்கிறது. அன்பை வலிமையாக்குவது, வரங்களாகிய சாதனங்களே. அன்பில்லாமல், வரங்கள் பெரும்பாலும் பலனற்றதாகவும், ஏமாற்றுவிக்கிறதுமாய் இருக்கிறது. அன்பு ஒரு பொழுதும் ஒரு விசுவாசியைத் தேவனின் வரங்களை மறுக்க வழிநடத்தாது. அப்பேற்பட்ட ஒருவருக்கு என் பதில், "உங்கள் எல்லா அன்பையும் வைத்து, என்ன செய்யப் போகிறீர்கள்? மனித சமுதாயத்திற்கு எப்படி உதவப் போகிறீர்கள்? அதற்காகவே தான் உங்களுக்கு வரங்கள் தேவை." ஒரு தாய் தன் சுகவீனமான குழந்தையின் அருகிலிருந்து இவ்வாறு பேசுகிறார் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள், "அன்பே, நான் உன்னை நேசிக்கிறேன், நான் உன் அருகிலே தான் இருக்க போகிறேன். உனது உடல் உஷ்ணத்தை நான் பரிசோதிக்கப் போவதில்லை. மருந்தும் கொடுக்க போவதில்லை, வைத்தியரையும் அழைக்கப் போவதில்லை, உனக்காக ஜெபம்கூட பண்ணப்போவதில்லை. ஆனாலும் நான் உன்னை நேசிக்கிறேன்." அந்த தாயிடம் எவ்வளவு அன்பு தான் உள்ளது? வார்த்தையில் தான் அன்பு உள்ளதே தவிர, கிரியையில் இல்லை.

வேதாகம அன்பு எப்போதும் நடைமுறைப் படுத்தக்கூடியதாய் உள்ளது. அழகான சொற்றொடர்களை சொல்லுவதோடு நின்றுவிடாது: அது கிரியை செய்கிறது.

அன்பு செயலாற்றப்பட முக்கிய சாதனம் பரிசுத்த ஆவியின் வரங்கள் மூலமாகத்தான். சபையை மேம்படுத்த ஆசைப் படுகிறீர்கள். ஏன் ஏனில் சபையை நேசிக்கிறீர்கள் அப்போது சபையை அதிகமாக பயனடையச் செய்யும் தீர்க்கதரிசன வரத்தையே விரும்புவீர்கள். அல்லது வியாதியாய் இருப்போரை நேசிப்போமானால், அவர்களுக்கு ஊழியம் செய்ய, சுகமாக்கும் வரங்களையும், அற்புதங்களை செய்யும் வரங்களையும் நாடுவோம். வேதாகம அன்பு அதிகம், எப்போதும் நடை முறையில் காணப்பட வேண்டியதாய் இருக்கிறது. அழகான வார்த்தைகளை சொல்லுவதோடு நின்று விடாமல், அது கிரியை செய்கிறது.

ஒரு தலைபட்சமாய் நாம் இருக்கக் கூடாது. நமக்கு வரங்களும், அன்பும்- இரண்டும்- தேவை. நமக்கு வரங்களும், கனியும் தேவை. நமக்கு ஆவிக்குரிய வரங்களும், ஊழிய வரங்களும் தேவை. இவை மற்ற வரங்களுக்கு, மாற்றுப் பதில்வரங்களாகாது. நமக்கு அவை அனைத்தும் தேவை.

அனைத்து விசுவாசிகளுக்கும், ஆவிக்குரிய வசனங்கள் உண்டு

நாம் ஆவியின் வரங்களின் தன்மையை அறிந்து கொள்ள தொடரும்போது, சில குறிப்பிட்ட நோக்கமுடைய, அதாவது ஆவியின் வரங்களைப்பற்றி குழப்பமானதாகவும், அவை வேதத்திற்கு விரோதமானவை என்றும் கூறுகிற மக்களை நான் முகவரியிட்டுக் கூற விரும்புகின்றேன். முதலாவதாக சில ஜனங்கள், விசுவாசிகள் ஆவியின் வரங்களைப் பெற்றிருப்பதைப்பற்றிப் பேசுவதே தவறாகும் என்று நம்புகின்றனர். ஏனென்றால் இது பெருமையை உண்டாக்குகிறது என்பதாகும். இருப்பினும் ஒருமனிதன் ஒரு வரத்தைப் பெறும் பொழுது பெருமைகொள்வதற்கு ஒன்றுமில்லை. முதலாவது இடத்தில் இதை நாம் பார்த்தோம். அவன் ஆவியின் வரத்தைப் பெறுவதற்கு முன்பாக எப்படியிருந்தானோ அப்படியே ஒரு மாற்றமும் பெறாமல் இருப்பான். இரண்டாவதாக அவனிடத்தில் மற்ற மனிதர்களைவிட வித்தியாசமானவனாக மாறுவதற்குரிய வேறு எதுவும் இல்லை, ஆவிக்குரிய வரத்தைப் பெற்றதைத் தவிர. வரத்தைப் பெற்ற ஒரு மனிதன் அதற்காக நன்றியுடையவனாக இருக்க வேண்டுமே தவிர அதைப்பற்றிப் பெருமைப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

இரண்டாவதாக சில ஜனங்கள் விசுவாசிகள் இவ்வாறு சொல்ல வேண்டும் என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. உதாரணமாக "எனக்கு குணமாக்கும் வரம் இருக்கிறது." யாராவது ஒருவர் சுகம் பெற்றால் சுகம் பெற்ற ஒருவன் சுகமாக்கும் வரத்தைப் பெற்றுக் கொண்டான் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அல்லது தீரக்கதரிசனம் வெளிப்பட்டால், அதைப் பெற்றவன் அந்த வரத்தைப் பெற்றுக் கொண்டான் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்த எண்ணமானது மக்கள் மேல் ஒரு குழப்பத்தை உண்டுபண்ணும். மேலும் அப்படியானால் அது வேதத்திற்கு உகந்ததாக இருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன். தேவன் உனக்கோ அல்லது எனக்கோ ஒரு வரம் கொடுத்தால் அவர் வரம் கொடுத்திருக்கிறார் என்பதைக் கடமையுணர்வுடன் உணர்ந்து அறிக்கையிட வேண்டும். குணமாக்கும் தெய்வீக வரம் பெற்ற மனிதர்கள், எதிர்மறையாக செயல்பட்டலோ அல்லது சர்சைக்குட்பட்டாலோ அதைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதே மேலானது என்று நான் அறிகிறேன். அவர்கள் "நான் ஒருபோதும் குணமாக்கும் வரத்தைக் கேட்கவில்லை. தேவன் சுகமளிக்கிறார்" என்று சொல்கிறார்கள். தேவன் சுகமளிக்கிறார் என்பது உண்மைதான். ஆனால் மனிதர்களை ஒரு கருவியாக உபயோகித்து அதன் மூலம் தான் சுகம் அளிக்கிறார்.

புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் விசுவாசிகளுக்கு வரங்கள் உண்டு என்று திட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

1கொரிந்தியர் 12:7இல் "*ஆவியினுடைய அநுக்ரகம்* ***அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.***" என்கிறார். கிரேக்க மொழியைப் பொறுத்தவரை வினைச் சொற்களின் காலம் அடிக்கடி மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. இந்த வசனத்தில் வினைச் சொல்லானது நிகழ் தொடர்காலமாகக் காணப்படுகிறது. "*ஒருவருக்கு ஆவியின் வரமாகிய ஞானத்தைப் போதிக்கும் வரம் கொடுக்கப்பட்டுள்ளது இது போல மற்றும் பிற.*'' இந்த வரங்களையுடைய ஒரு மனிதன் அவைகளை ஒழுங்காக வெளிப்படுத்துவான்.

"**நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே** நாம் வெவ்வேறான வரங்களுள்ள அவயவங்களானபடியினாலே"

(ரோமர் 12:6)

"அவனவனுக்கு தேவனால் அருளப்பட்ட **அவனவனுக்குரிய வரமுண்டு**; அது ஒருவனுக்கு ஒருவிதமாயும், மற்றொருவனுக்கு வேறுவிதமாயும் இருக்கிறது."

(1 கொரிந்தியர் 7:7)

"எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?" (1 கொரிந்தியர்12:30) இது ஒரு முக்கியமான வசனம் ஏனென்றால் இது வரங்களில் ஒன்றை உள்ளடக்கியுள்ளது, ஜனங்கள் அவர்களுக்கு வரங்கள் உண்டு என்று சொல்லுவதற்கு தடுமாறுகின்றனர். பரிசுத்த பவுல் எழுதும் போது "*எல்லோரும் குணமாக்கும் வரங்களைப் பெற்றவர்களா?*" என்று கேட்டு அவர் தெளிவாக எல்லோரும் பெறுவதில்லை. ஆனால் ஒரு சிலர் பெற்றிருக்கின்றனர். இல்லாவிட்டால் அது ஒரு அர்த்தமற்ற, பயனற்ற கேள்வியாக இருக்கும். விசுவாசிகளுக்கு எனக்கு குணமாக்கும் வரமுண்டு அல்லது பலபாஷைகளை வியாக்கியானம்பண்ணும் வரமுண்டு மற்றும் பல வரங்கள் உண்டு என்பதற்குத் தெளிவான ஆவிக்குரிய அதிகாரம் உண்டு. தேவன் எனக்கு அவ்வரங்களைக் கொடுத்திருக்கிறார். இவ்வரங்கள் என்னை நான் முன்பு இருந்ததை விட இன்னும் சிறந்தவனாக ஆக்கவில்லை. ஆனால் அனுபவத்தினால் அவை என் மூலமாக வெளியாக்கப்படுகின்றன.

"*இப்படியிருக்க மேலான வரங்களை நாடுங்கள்*" (1கொரிந்தியர் 12:31) நாம் வரங்களைப் பெறாவிட்டால் அதைப் பெற நாடுவதற்கு ஒன்றுமில்லை. எனினும் வரங்களை நாடுவதில் தேவனுடைய சித்தம் ஒன்று இருக்கிறது என்பது தெளிவாகிறது.

"மூப்பராகிய சங்கத்தார் உன் மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் ***உனக்கு அளிக்கப்பட்ட*** *வரத்தைப்பற்றி அசதியாயிராதே."* (1 தீமோத்தேயு 4:14) *"இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால்* ***உனக்கு உண்டான*** *தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்."* (2 தீமோத்தேயு 1:6) பரிசுத்த பவுல் தீமோத்தேயுக்கு ஒரு குறிப்பிட்ட வரம் இருக்க வேண்டுமென்று முழுமையாக ஒருவகையில் உணர்த்துகிறார். உனக்குள்ளாக வரம் இருந்தால் நீ அதை பாதுகாத்துக்கொள்.

“*அவனவன்* ***பெற்ற வரத்தின்படியே****, நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்.*” (1 பேதுரு 4:10) பரிசுத்த பவுல் உபயோகித்த மொழியையே பேதுருவும் உபயோகித்துள்ளார். உங்களிடத்தில் இல்லாத ஒன்றை வைத்து நீங்கள் ஊழியம் செய்ய முடியாது. முதலாவது நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பேதுரு எல்லா கிறித்துவர்களுக்கும் வரங்கள் உண்டு என்று உறுதிப்படுத்துகிறார். இவ்வாறாக ஒருவருக்கொருவர் உதவி செய்து ஊழியம் செய்ய வேண்டும். உண்மையான தரித்திரம் என்னவென்றால் கொடுப்பதற்கு ஒன்றுமில்லாமல் இருத்தலே! கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்துள்ள ஆலயத்திற்குச் செல்லும் கிறிஸ்தவர்களில் 90% மக்கள் பெரும்பாலும் இந்த பரிதபிக்கத்தக்க நிலையிலேயே உள்ளனர். தேவன் அவர்களுக்காக உண்டாக்கி வைத்திருப்பதை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. ஆகவே அவர்கள் அதைக் கொடுக்க முடியாது. ஆனால் இது தேவனுடைய சித்தமல்ல. கிறிஸ்து இயேசுவின் விசுவாசிகளில் ஒருவரும், பரிசுத்த ஆவியின் வல்லமையான வெளிப்பாடுகள் இல்லாமல் இருப்பது அவசியமில்லை. “*ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.*” “*இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.*” (1 கொரிந்தியர் 12:7, 11)

எல்லா விசுவாசிகளுக்கும் வித்தியாசமான வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் போது, இதில் எந்த வரமாவது, எந்த மனிதன் மூலமாவது, எந்த நேரத்திலாவது பரிசுத்த ஆவியின் வெளிப்பாடுகளை வரையறுக்க முடியாது. அவர் இதைக் கொடுக்க விரும்புகிறார். ஏனென்றால் அனைத்து வரங்களுக்கும் ஆதாரம் அவரே. உதாரணமாக, உனக்கு ஒரு அவசரம் ஏற்பட்டு ஒருவர் உனக்கு முன்பாக மரித்துக் கொண்டிருக்கும் போது, உன்னால் அங்கே நிற்க முடியாமல் “எனக்கு குணமாக்கும் வரம் இல்லை, என்னால் இங்கே ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லாமா?” நீ பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தால் அவருக்குள் இருக்கும் எல்லாவற்றையும் இயற்கையாக நீயும் பெற்றிருப்பாய். அத்தருணத்தில் பரிசுத்த ஆவியானவர் குணமாக்கும் வரத்தைக் கொடுப்பார் அதைத்தடுக்க ஒருவராலும் முடியாது. எனினும்

உங்களுக்கு குணமாக்கும் வரம் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டால் உன்னுடைய வாழ்வில் அது முறையாகக் கிரியை செய்யாவிட்டால் வேதம் அதை நியாயப்படுத்தாது. எந்த மனுஷனுக்கு எந்த விதமான வெளிப்பாடு தேவையோ அதைக் தேவனால் கொடுக்க முடியும். ஆனால் இந்த வரத்தைப் பெற்றிருப்பது ஒரே விதமாக இருக்காது. பிலேயாமின் கழுதை தீர்க்கதரிசனம் சொல்லும் வரத்தைப் பெற்றிருந்தது என்று நாம் சொல்லக்கூடாது ஏன்? ஏனென்றால் அது ஒரே ஒரு சம்பவத்தில் தான் நடைபெற்றது. ஆகவே பரிசுத்த பவுல் ஆவியின் வரங்களை தொடக்க முதல் முடிவுரை வரிசைப்படுத்தி, விசுவாசிகளாகிய நம் ஒவ்வொருவருக்கும் நம்முடைய வாழ்வில் பரிசுத்த ஆவியினால் இந்த வரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு நம்முடைய சொந்த பிரயோஜனத்திற்காக வழங்கப்பட்டுள்ளது என்பதை ஞாபகப்படுத்துகிறார்.

உங்களிடத்தில் இல்லாத ஒன்றை வைத்து நீங்கள் ஊழியம் செய்ய முடியாது. முதலாவது நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பரிசுத்த பவுல், ரேஷன் கடைகளில் அளவோடு பொருட்கள் வழங்குவது போல தேவன் ஒரே ஒரு வரத்தை மட்டும்தான் கொடுப்பார் என்று ஆலோசனை கூறவில்லை. இந்த வெளிப்பாடுகள் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் எந்த விசுவாசியும் அவனுடைய வாழ்க்கைக்குரிய தேவனுடைய சலுகைகள் எல்லாவற்றிலும் குறைவான நிலையையுடையவனாகவே இருப்பான்.

சபையிலிருந்து இந்த வரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டனவா?

ஒரு சில மக்கள் சபையிலிருந்து வரங்கள் முதலாம் நூற்றாண்டிற்குப் பின்னர் விலக்கிக் கொள்ளப்பட்டது என்று நமக்குச் சொல்லுகிறார்கள். இருப்பினும், பரிசுத்த பவுல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கும் சபையானது இந்த வரங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்.

கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப்பட்டபடியே, நீங்கள் இயேசுக் கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும், சம்பூரணமுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடியால், அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும் படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்.**

(1 கொரிந்தியர் 1:4-8)

ஆவிக்குரிய வரங்கள் ஏதோ கடந்த காலத்திற்கு மட்டும் உரியதல்ல. அவை ஆவிக்குரிய தீரச்செயலில் ஈடுபடுபவர்களுக்கு மட்டும் உரித்தானதல்ல.

தேவனின் வருகை மிகவும் சமீபித்திருப்பதால் நாம் அதிகமான வரங்களை வெளிப்படுத்துவது அவசியமாகும். தேவனின் கிருபையினால் கொடுக்கப்பட்ட இயற்கைக்கு மேலான வரங்கள் இயேசு கிறிஸ்துவின் சபையிலிருந்து எப்பொழுதாவது எடுத்துக் கொள்ளப்படும் என்று வேதாகமத்தில் ஒரு வேதவார்த்தை கூட சொல்லப்படவில்லை. சபை மணவாட்டியாக, மணவாளனான இயேசு கிறிஸ்துவை சந்திக்கும் பொழுது, அவரால் அனுப்பப்பட்ட வரங்களாகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்படும்.

சில விசுவாசிகளுக்கு இந்த வெளிப்பாடுகள் கிடைக்கப் பெறாததற்குக் காரணம் என்னெவென்றால் அவர்கள் இயற்கையானவற்றிலிருந்து இயற்கைக்கு மேலானவைகளை எடுத்துக் கொள்ள முக்கியமாக அடியெடுத்து வைப்பதில் முயற்சி செய்யவில்லை. இதற்கான, அவசியாமான முதற்படி என்னவென்றால் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுவதாகும். இதோடு கூட அற்புதமான பலபாஷை பேசும் வரமும் தொடர்ந்துவரும். ஒருமுறை நீங்கள் ஆவிக்குரிய இயற்கைக்கு மேலான மண்டலத்துக்குள் நுழைந்துவிட்டால் நீங்கள் தொடர்ந்து அந்த மண்டலத்திற்குள்ளாக செயல்படுவது தேவனுடைய சித்தமாகும்.

ஆவிக்குரிய வரங்கள் ஏதோ கடந்த காலத்திற்கு உரியதல்ல. அவை ஆவிக்குரிய தீரச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கும் பிரசங்கிமார்களுக்கும் வெளிநாட்டில் பணிபுரியும் மிஷனரிகளுக்கு மட்டும் உரியதல்ல. விசுவாசிகளின் சாதாரண கிறித்துவ வாழ்விற்கு இந்த வரங்கள் ஆவிக்குரிய சாதனங்களில் ஒரு பகுதி என்று புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது, இது கிறிஸ்து மீண்டும் வருகிற வரைக்கும் எல்லாக்காலங்களிலும் இவ்வாறு இருக்கும்.

ஆவியின் வரங்களின் முழுமையான நோக்கம்

இந்த அத்தியாத்தில் தேவனுடைய கண்ணோட்டத்தின் கருத்தில் இந்த வரங்களின் நோக்கத்தைப் பற்றி ஆராய்ந்து இந்த அத்தியாயத்தை முடித்துவிடலாம். நாம் அடிக்கடி அவருடைய நோக்கங்களையும், அவருடைய கொடுக்கும் தன்மையையும் அவைகள் நமக்கு என்ன நன்மை செய்யும் என்ற தவறான சிந்தனையை உருவாக்கிக் கொள்கிறோம். உதாரணமாக ஜனங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவதைப் பற்றிக் கேள்விப்படுகிறார்கள். “அந்த ஞானஸ்நானத்தைப் பெற்றால் அதிசயத்தை உணர்வீர்கள்.” ஆனால் நீங்கள் எப்பொழுதும் அதிசயத்தை உணரமாட்டீர்கள். சிலவேளைகளில் நீங்கள் இருக்கின்ற நிலைகளிலும் இதற்குமுன் அடைந்திராத மோசமான நிலையை அடைந்திருக்கலாம். ஏனென்றால் நீங்கள் எச்சரிக்கையாய் இல்லாத பிரச்சனைகள், தேவைகள், ஆவிக்குரிய அழுத்தம் ஆகியவற்றை இதற்கு முன் சந்தித்திராதவற்றைச் சந்திக்க நேரிடலாம். மற்றவர்கள் “உங்களுடைய வேதாகமப் படிப்பிற்காக அபரிமிதமாக உதவி செய்வோம்” என்று சொல்லலாம். அது உண்மைதான். இல்லாவிட்டால் அவர்கள் ‘‘நீங்கள் வல்லமையான சாட்சியாக விளங்கலாம்’’ என்று கூட சொல்லலாம். இதுவும் உங்கள் ஞானஸ்நானத்தின் அதிசயமான விளைவாக இருக்கலாம். எனினும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டதினால் மேலே சொன்ன காரணங்களெல்லாம் அவைகள் உங்களுக்கு என்ன செய்யும் என்ற திசையை நோக்கியே பார்க்கிறோம். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதின் உன்னதகாரணம் என்னவென்றால் அது, இயேசுக் கிறிஸ்துவின் சரீரத்திற்கு என்ன செய்யும் என்பதேயாகும்.

“எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.” (1 கொரிந்தியர் 12:13) ஏன்? நம்மை இயேசு கிறிஸ்துவின் சரீரத்தின் மிகவும் வல்லமையான அவயவங்களாக்கவே! இது தேவனை மகிமைப்படுத்தும். வெஸ்ட்மினிஸ்டர் நற்போதனை கீழே காணும் வாசகத்தை உள்ளடக்கியது. “மனிதனின் பிரதான முடிவு என்ன?” அது என்ன வென்றால் “தேவனை மகிமைப்படுத்துவதும் எப்பொழுதும் அவரில் களிகூருவதுமாகும்.” நம்மில் மிகச்சிலரே, வாழ்வின் உன்னதமான முடிவு தேவனை மகிமைப்படுத்துவதே என்ற உண்மையை உணர்ந்துள்ளனர். ஒருமுறை ஒருவர் என்னிடத்தில் “நீங்கள் தேவனுடைய மகிமைக்காக வாழாவிட்டால், நீங்கள் வாழ்வதற்குரிய எந்த உரிமையையும் பெறவில்லை” என்றார். அதுதான் உண்மையாகும். ஒவ்வொரு பொருளும் தேவனுடைய சந்தோஷத்திற்காகவே படைக்கப்பட்டுள்ளது. ஏன் ஆவிக்குரிய வரங்கள் முக்கியமானவை? அது ஏனென்றால் அவைகள் தேவனுக்கு மகிமையை உண்டுபண்ண வேண்டும்.

எபேசியர் நிருபத்தில் இதைப் பற்றிய முழு மூச்சுக்காற்றைப் போன்ற வார்த்தைகள் அடங்கியுள்ளன.

> நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்..... பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயையுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகாரப் புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்..... தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படித் தெரிந்துகொள்ளப்பட்டோம்.
>
> *(எபேசியர் 1:3, 5-6, 12)*

அவரின் சுவிகார பிள்ளைகளாக தேவன் நம்மை தெரிந்து கொண்டமையின் இறுதியான நோக்கம் என்ன? *“அவருடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக நாம் இருக்கவேண்டும் என்பதே”* அந்த நோக்கம். ஆறாம் வசதி இறுதி பாகத்தை ஒரு மொழிபெயர்பு இவ்விதமாக கூறுகிறது. *‘‘நம்மை பிரியமானவரிடம் கிருபையாக தயவு பெறச்செய்தது’’* என்பதே நம்மேல் கிருபை, குவியலாக வைக்கப்பட்டுள்ளது. நாம் தகுதியற்றவர்களாய் இருக்கும்போதே கிருபை

நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய சிறப்பான தயவை நாடும் பொருளாக நாம் ஆக்கப்பட்டிருக்கிறோம். இவ்வுலகத்தில் வேறெந்த பொருளைவிட, அவரின் தயவைப்பெறும். மக்களாக நாம் வைக்கப்பட்டிருக்கிறோம். அதற்கு காரணம் இயேசு கிறிஸ்துவோடு உள்ள நமது உறவே.

நாம் முன்பு சொல்லப்பட்ட மொழிபெயர்ப்பையே, ''*நம்மை பிரியமானவரிடம் ஏற்றுக் கொள்ளும்படி செய்தது*'' என்பதை நான் விரும்புகிறேன். ஏன் எனில், அமெரிக்காவில் ஐந்தில் ஒருவர் கைவிடப்பட்டவர்கள் போல் உணருகின்ற அடிப்படையான பிரச்சனையில் இருக்கிறார்கள். இப்பேற்பட்ட பிரச்சனையில் உள்ள அநேகருக்கு நான் ஊழியம் செய்துள்ளேன். வாழ்க்கையில் சில அதிர்ச்சியான அனுபவங்களால் - பொதுவாக, பெற்றோரிடமிருந்து அன்பை பெறாதவர்கள் - அவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்களாய் - வாழ்க்கையை கடந்து வந்திருக்கிறார்கள்.

ஆனாலும், அபாத்திரரான நம்மை, வெகு துரமாயிருந்த நம்மை, அவரோடு நெருங்கி உறவு கொள்கிறவர்களாய் மாற்றியிருக்கிறார். நித்திய காலமாக, அவருடைய கிருபையின் மகிமைக்கு புகழ்ச்சியாக இருக்கும்படி, தேவனுடைய தயவின் செல்வங்களெல்லாம் நம்மேல் குவியலாகப் போடப்பட்டுள்ளது. இங்கே தான் வரங்கள் செயலாற்ற வேண்டும். எபேசியர் 3:10 கூறுகிறது. ''*உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அனந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக,*'' தேவனின் ஞானமாகிய முழு உலகத்திற்கும் இயேசு கிறிஸ்துவின் சபை வெளிப்பாடாக இருக்க வேண்டும். நமது ஆங்கில மொழி பெயர்ப்பு ''*அனந்த ஞானம்*'' என்று கூறுகிறது. கிரேக்க வார்த்தை இதைவிட பெலன் மிகுந்தது. ''*முடிவில்லாத பல்வேறு வகைப்பட்ட ஞானம்*'' என்று அர்த்தம் கொள்கிறது. ஆண்டவரின் முடிவில்லாத பல் வகை ஞானத்தை வெளிப்படுத்த, தேவன் தம் திட்டத்தை நிறைவேற்ற, நாம் வரங்களை உபயோகிப்பது ஒரு முக்கியமான பங்கு ஆகும்.

அடுத்த அத்தியாயத்தில், தேவனுடைய கிருபைக்கும், நமக்கு அருளப்பட்ட வரங்களுக்கும் உள்ள அழகான மற்றும் இன்றியமையாத தொடர்பைப் பார்ப்போம்.

கள்

2 கரிஷ்மா: கிருபை வரங்கள்

'வரங்கள்' மற்றும் 'வரம்' என்பவைகளுக்கு 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் காணப்படும் கிரேக்க வார்த்தை *கரிஷ்மா* ஆகும். வேதத்தில் குறிக்கப்பட்டுள்ள ஒன்பது வரங்கள் மட்டும் கிருபை வரங்கள் அல்ல. கரிஸ்மா என்னும், கிருபை என்னும் சொல் வருமிடம் எல்லாம் அது ஒரு சங்கிலித் தொடர் போல் பல அர்த்ததங்கள் உடையது. தேவன் வெளிப்படுத்த விரும்பும் காரியத்தை முழுவதுமாகப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் மற்ற பகுதிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். மற்ற கிருபா வரங்களைப் பற்றி அறிந்து கொள்வது இந்த ஒன்பது வரங்களை சரியான நிலையில் புரிந்து கொள்ள உதவும். உதாரணமாக கடைசி அதிகாரத்தில் ஆவியின் வரங்களுக்கும் ஊழிய வரங்களுக்கும் உள்ள உறவு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

கரிஸ்மா என்ற வார்த்தை கிரேக்க ஆதார வார்த்தை *கரிஸ் என்ற வார்த்தையிலிருந்து வந்தது. கரிஸ்* என்பது *கிருபை* என்று பொதுவாக மொழிபெயர்க்கப்படுகிறது. "அபாத்திரமான மற்றும் தகுதியற்றவர்களுக்கு தேவனின் நற்கதியற்றோருக்கு காட்டப்படும் தயவு," என்று கிருபையை நாம் விவரிக்கலாம். தேவன் நமக்கு அருளும் அன்பு, கிருபை மற்றும் தயவிற்கு நம்மிடத்தில் எந்த முகாந்தரமும் இல்லை. அவர்தம் கிருபையால் இதைச் செய்ய விழைந்தார்.

தேவனின் கிருபையைப் பற்றி அநேக முக்கிய குறிப்புகளை நாம் காண்போம். அவை தரப்படும் கிருபையின் வரங்களுக்கும் பொருந்தும்.

தேவனின் கிருபையின் தன்மையும், அது பயனளிக்கும் விதமும்

கிருபை இலவசமானது

முதலாவதாக, கிருபை இலவசமானது அது சம்பாதிக்க முடியாதது.

நற்செய்தி, தேவனின் கிருபையின் ஒரு வெளிப்பாடாகும். அது தகுதியற்றவர்களுக்கு அவர் கொடுக்கும் தயவு; அவர்கள், தங்கள் பாவங்களினாலும், எதிர்ப்பினாலும் நியாயம் தீர்க்கப்படுதலையும் ஆக்கினையை அடைதலையுமே பெற தகுதியாய் இருந்தனர். நன்மை செய்வோருக்கு கடவுள் உண்மையாக பரிசளித்தாலும், அது கிருபை ஆகாது. வேலைக்கு பலன் அளிப்பதை போலில்லாமல் கிருபை முற்றிலும் வேறுபட்டதாய் இருக்கிறது.

சில மதப்பற்றுடையோர் தேவனுடைய கிருபையை ஈட்டுவதற்கு சிலவற்றைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதை விட மோசமாக, அதை பெறுவதற்கு சிலவற்றை செய்துவிட்டோம் என்று எண்ணுகிறார்கள். இரண்டிலுமே அவர்கள் தவறு செய்கிறார்கள். தேவனுடைய கிருபையை சம்பாதித்துக்கொள்ள நாம் ஒருபோதும், ஒன்றும் செய்ய முடியாது. ஒரு மதப்பற்றுள்ள ஒருவனுக்குப் புரிந்து கொள்வதற்கு கடினமான ஒரு காரியம் என்னவென்றால் தேவனுடைய கிருபைக்கு அவன் உரிமை பாராட்ட முடியாது என்பதே. தேவனுடைய கிருபையை ஏற்றுக் கொள்வதின் மூலமே தேவனை திருப்திப்படுத்த முடியுமேயன்றி அந்த கிருபையைச் சம்பாதிக்க முற்படுவதின் மூலமோ பூரணமாய் இருக்க முற்படுவதின் மூலமோ திருப்திப்படுத்த முடியாது.

தேவனுடைய கிருபையை சம்பாதிப்பதற்கு நான் ஒன்றும் செய்ய இயலாது.

கிருபை தேவ ஆற்றலினால் அளிக்கப்படுவது

இரண்டாவதாக தேவனுடைய கிருபை என்பது அவருடைய இறைமையின் தெரிந்தெடுப்பாகும். அது குறித்து எதை அவர் செய்ய விரும்புகிறாரோ அதை முழுவதுமாக செய்ய அவருக்கு அதிகாரம் உண்டு. அவருடைய கிருபையின் செயல்பாடுகளைக் குறித்து விவரித்து யாரும் அறிக்கை கொடுப்பது அவருக்கு உகந்ததல்ல. தேவன் "*அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்றார்.*" (ரோமர் 9:15) என்கிறார்.

கிருபை இயேசுகிறிஸ்துவின் மூலமாகக் கிடைக்கிறது

மூன்றாவதாகக் கிருபைக்கு ஒரே ஒரு வாய்க்காலும், ஒரே ஒரு வழியும் மட்டுமே உண்டு. அதாவது இயேசு கிறிஸ்து ஒருவராலே மட்டுமே கிருபை மனித குலத்திற்குக் கிடைக்கிறது. *“எப்படியெனில் நியாயப் பிராமணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.’’* யோவான் 1:17 இவ்வசனத்தில் இவ்வாறு வாசிக்கிறோம். தேவன் தம்முடைய குமாரனின் மூலமாகவே அல்லாமல், கிருபையை எந்த நிலையிலும், அல்லது எந்தச் சூழ்நிலையிலும் யாருக்கும் கொடுக்கமாட்டார்.

கிருபை தாழ்மையுள்ளவர்களுக்கு உண்டாகிறது

நான்காவதாகக் கிருபை ஒரே ஒரு விதமான மனிதனுக்கு, அதாவது தாழ்மையுள்ளவனுக்கு வழங்கப்படுகிறது. யாக்கோபு மற்றும் பேதுரு ஆகிய இருவருமே தங்களுடைய நிருபங்களில் நீதிமொழிகள் 3:34ஐக் குறிப்பிடுகின்றனர். “*தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.*” (யாக்கோபு 4:6) இதே வசனம் (1பேதுரு 5:5)யிலும் காணப்படுகிறது. நாம் பெருமையோடு கடவுளுடைய கிருபையைப் பெற்றுக்கொண்டோம் என்று நினைத்தால் நாம் அதைப் பெற்றுக்கொள்ள முடியாது.

கிருபை விசுவாசத்தின் மூலம் வருகிறது

கிருபையை சுதந்தரித்துக் கொள்வதற்கு ஒரே வழிதான் உள்ளது. விசுவாசத்தால் மட்டுமே கிருபையை வாழ்விலும் அனுபவத்திலும் உணரமுடியும். எபேசியர் 2:8இல் “*கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;*” என்று கிருபையைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது.

இந்த விசுவாசமும் தேவனால் அருளப்பட்டதுதான். நீங்கள் உங்களிடத்தில் விசுவாசம் இருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது ஏனென்றால் தேவன் அதை உனக்குக் கொடுக்கும் வரைக்கும் நீ அதைப் பெற்றுக்கொள்ளமாட்டாய். தேவன் தனது

கிருபையை இயேசு கிறிஸ்து மூலமாகத்தான் வழங்குகிறார். அது தாழ்மையானவர்களுக்கு மட்டும் வழங்ப்படுகிறது. சரியான விசுவாசம் அவனுக்குள் இருந்தால் மட்டும் கிருபையை அடைய முடியும்.

கிருபை பரிசுத்த ஆவியானவரால் ஆளுகை செய்யப்படுகிறது

தேவனுடைய கிருபையை ஒரே ஒருவர்தான் ஆளுகை செய்பவராகவும் முக்கியஸ்தராகவும் இருக்கிறார் - அவர் தான் பரிசுத்த ஆவியானவர். எபிரெயர் 10:29இல் அவர் *"கிருபையின் ஆவி"* என்றழைக்கப்படுகிறார். ஆவி, நாம் இயேசுகிறிஸ்துவின் மூலம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொன்றையும் ஆளுகை செய்வதுபோல தேவனுடைய கிருபையையும் ஆளுகை செய்கிறது.

புதிய ஏற்பாடு முழுவதும் ஆவியின் அருட்கொடைகள்

கிருபையின் தன்மையைப்பற்றி இந்த புரிந்துகொள்ளுதலோடு *கரிஸ்* அல்லது கிருபை என்பதைப் பற்றிக் காணலாம். கிருபையின் வரங்கள் அல்லது அருட்கொடைகள் எப்படி பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் காணும் நிலைக்கு வருவோம். *கரிஸ்* என்ற வார்த்தையோடு கூட *மா* என்ற வார்த்தையை இணைக்கும் போது, அதை ஒரு பொதுவான அஃறிணை பெயர்ச் சொல்லிலிருந்து ஒரு திட்டமான குறிப்பிடப்பட்ட பெயர்ச்சொல்லாக மாற்றிவிடுகிறது. *கரிஸ்மா* என்பது பயன்படக்கூடிய கிருபை. கிருபையானது ஒரு குறிப்பிட்ட முறையில் நமக்குப் பயனளிக்கக்கூடியது. அது ஒரு குறிப்பிட்ட நிலையில் தேவனால் வெளிப்படுத்தப்பட்டு செயற்படும்.

அங்கே *கரிஸ்மா* என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் உபயோகிக்கப்பட்டுள்ளது. இன்னும் நன்கு கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு, இந்த வார்த்தையின் அர்த்தத்தையும், அதன் தொடர்பையும் அந்த உதாரணங்கள் மூலம் பார்த்தால், இதனை உபயோகித்து ஒன்பது ஆவியின் வரங்களை விண்ணப்பிக்கலாம்.

ரோமர் நிருபத்தில் ஆவியின் கொடைகள்

அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் ரோமாபுரியிலுள்ள

கிறிஸ்தவர்களுக்கு எழுதும் பொழுது, இவர்களை நேரில் சென்று பார்க்காத பொழுது இவ்வாறு எழுதுகிறார்.

“நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சிலவரங்களை உங்களுக்கு கொடுக்கும்படிக்கும், உங்களிலும் என்னிலுமுள்ள விசுவாசத்தினால் உங்களோடே கூட நானும் ஆறுதல் அடையும்படிக்கும், உங்களைக் காண வாஞ்சையாய் இருக்கிறபடியினாலே,” (ரோமர் 1:10, 11) பரிசுத்த பவுலின் மனதில் என்ன வரம் அல்லது வரங்கள் இருந்தது என்பதைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இருப்பினும் அவர் “*ஆவிக்குரிய*” என்ற வார்த்தையை உபயோகிப்பதினால் உடனடியாக நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் ஆளுகைசெய்பவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் பெறப்பட்ட பரிசுத்த ஆவியின் வரங்களையே குறிப்பிடுகிறார் என்று நாம் அறிந்துகொள்வோம்.

ரோமர் நிருபத்தின் 5ஆம் அதிகாரத்தில் *charisma* என்ற வார்த்தை இரண்டு முறைகள் வந்துள்ளது. இந்த நிகழ்வில் அது “இலவசமாக வழங்கப்பட்ட வரம்” என்று மொழி பெயர்க்கப்பட்டு, கிருபையோடு கூட உள்ள தொடர்பை சிறப்பாக அழுத்தமாகக் கூறுகிறது. பரிசுத்த பவுல், மனித குலத்திற்கு ஆதாமின் பாவத்தினால் விளைந்த விளைவுகளையும் - இயேசு கிறிஸ்துவின் நீதியினால் மனித குலத்திற்கு ஏற்பட்ட நன்மைகளையும் வேறுபடுத்திக்காட்டுகிறார்.

> ஆனாலும் மீறுதலின் பலன் கிருபைவரத்தின் பலனுக்கு ஒப்பானதல்ல எப்படியெனில், ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும் இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது.
>
> *(ரோமர் 5:15)*

தேவனுடைய கிருபைக்கு அங்கே ஒரே ஒரு ஆளுகை செய்பவர் அல்லது கொடையாளர் தான் உண்டு. அவர் தான் பரிசுத்த ஆவியானவர்.

இந்த வசனத்தில் பரிசுத்த பவுல் நேரிடையாக கிருபையையும் வரத்தையும் வரிசைப்படுத்துகிறார். *“தேவனின் கிருபை மற்றும் இயேசு கிறிஸ்துவின் கிருபையின் வரங்கள்,”* இதில் இரண்டாவது வார்த்தையான வரம் என்பதற்கு டோரியா (dorea) என்ற கிரேக்க வார்த்தை பயன்படுகிறது. இதனுடைய அர்த்தம் ‘ஒரு

அருட்கொடை’ என்பதாகும். இது இலவசமாகக் கொடுக்கப்பட்ட ஒன்று என்று விளங்குகிறது. பரிசுத்த பவுல், அநேகர் மேல் பெருகிவரும் இந்த ஈவை வாய்க்காலாய் விளங்கும் இயேசு கிறிஸ்துவின் வழியாக மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதை வலியுறுத்துகிறார்.

> மேலும் ஒருவன் பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு தேவன் அருளும் ஈவுக்கு ஒப்பானதல்ல; அந்த தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது; கிருபை வரமோ அநேக குற்றங்களை நீக்கி நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது.
>
> *(ரோமர் 5:16)*

17 ஆம் வசனத்தில் கரிஷ்மா என்ற வார்த்தையை உபயோகப்படுத்தாவிட்டாலும் பவுல் குறிப்பிடும் குறிப்பிட்ட வரம் என்ன என்பதை நாம் அறிவோம்.

> அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய் மரணம் ஆண்டுகொண்டிருக்க, **கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும்** பெறுகிறவர்கள் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே.

பரிசுத்த பவுல் எழுதும் இலவச வரம் என்பது நீதியேயாகும். அது அதிகமாக முக்கியப்படுத்துவது குறிப்பிடப்பட்ட கிருபையின்வரம், புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது நீதி என்னும் வரமேயாகும். இயேசுகிறிஸ்துவின் மூலமாக அவரிடத்தில் வருகிறவர்களின் வாழ்க்கையில் முதலாவது வெளிப்பாடு கடவுளின் நீதி. அவர் நம்மை நீதியுள்ளவர்களாக்கும் வரைக்கும் கடவுள் நமக்காக எதையும் செய்ய முடியாது. நீதியானது ஒரு கிருபையின் வரம். தகுதியற்றவர்களுக்கு வழங்கப்படும் இலவச வரம் நீ அதை ஒரு வரமாகப் பெற்றுக்கொள் இல்லாவிட்டால் அதைப் பெற்றுக் கொள்ளாதே.

நீதியானது ஒரு கிருபையின் வரம். அபாத்திரர்களாய் இருந்தாலும் வழங்கப்படும் இலவசமான வரம்.

அடுத்ததாக நாம் நன்றாக அறிந்த இந்த வசனத்திற்கு வருவோம். “*பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.*” (ரோமர்

6:23) மீண்டும் பரிசுத்த பவுல் சம்பளத்திற்கும் கிருபை வரத்திற்கும் இடையிலான முற்றிலும் எதிரான வேறுபாட்டைக் காட்டுகிறார். சம்பளம் என்பது நாம் செய்த வேலைக்குரிய கூலியாகும். நீங்கள் ஒரு வாரத்தில் 5நாட்கள் வேலை செய்தால் ஒரு குறிப்பிட்ட சம்பளம், அந்த வாரத்தின் இறுதியில் நீங்கள் சம்பாதித்த உங்கள் சம்பளமாகும். அது உங்களுக்குரிய சம்பளம். பரிசுத்த பவுல் நாம் செய்த எல்லா பாவங்களுக்கும் சம்பளம் மரணம் என்கிறார். நீங்கள் நீதியைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளலாம், ஏனென்றால் தேவன் நீதிபரராயிருக்கிறார். ஆனால் நீதிக்கு மாற்றானது அவருடைய கிருபையாகும். இது உன்னால் சம்பாதிக்கப்பட்டதல்ல, நீ நல்லவனாக இருப்பதினாலுமல்ல, நீ உழைத்ததற்காக அல்ல ஆனால் தகுதியில்லாதவர்களுக்கு தேவனின் கிருபை வரம். அது தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் வாழும் நித்திய வாழ்வு.

ரோமர் 8:10இல் பரிசுத்த பவுல் வாழ்க்கைக்குரிய நீதிக்கும் இடையில் உள்ள தொடர்பைக் காட்டுகிறார். “*மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்.*” இந்த வாழ்வு பரிசுத்த ஆவியினால் உண்டாகிறது. ஏனென்றால் நாம் நீதியுள்ளவர்களாகக் கருதப்படுகிறோம். அநீதியுள்ளவர்களுக்கு தேவன் வாழ்வை வழங்க முடியாது. நித்திய வாழ்வு கிறிஸ்துவின் நீதியினிமித்தம் அதன் அடிப்படையில் உண்டாகிறது. நாம் அவர் மேல் வைத்துள்ள விசுவாசத்தின் மூலமாக நமக்குள் வருகிறது.

ரோமர் 11:29க்குக் கடந்து செல்லும்போது “*தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே.*” என்று பவுல் கூறுகிறார். தேவன் ஒரு வரம் கொடுத்தபிறகு அவர் தனது மனதை மாற்றிக் கொள்பவரல்ல. ஒருவேளை நான் என்னுடைய பெரிய மகளுக்கு ஒரு புதிய காரை அன்பளிப்பாகக் கொடுக்கிறேன். உண்மையாகவே அது ஒரு அன்பளிப்பாக இருந்தால், நான் ஒத்துக்கொள்ளாத காரியத்தை அவள் செய்தாள் என்பதற்காக அதற்குப் பின்பு நான் அதைத் திரும்பவும் பெற்றுக்கொள்ள முடியாது. இல்லாவிட்டால் அது சட்டதிட்டங்களின் பேரில் பெற்ற ஒரு கடன் தொகையைப்போல்தான் இருக்கும்.

இதைப் போல தேவன் உனக்கும் எனக்கும் வரங்களைக் கொடுக்கிறார், ஆவியின் வரம் உள்பட. நாம் அவற்றைத் தவறாக

உபயோகித்தால் கூட அவர் அதை திரும்பவும் எடுத்துக் கொள்ளுவதில்லை. அவைகளை உபயோகித்து நாம் என்ன செய்கிறோம் என்பதைக் குறித்து கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஏனென்றால் அவர்களது வரங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை. இது தேவனின் வரங்களுக்கு மட்டும் பொருந்தும் உண்மையல்ல தேவனுடைய அழைப்பிற்கும் இது பொருந்தும் உண்மையாகும். நான் சுவிசேஷகர்களாகத் தெரிந்து கொள்ளப்பட்ட அநேகரைப்பற்றி அறிவேன். அநேக காரியங்களில் அவர்களின் வாழ்க்கை சரியான நிலையில் இல்லாதிருக்கின்றது. அவர்கள் குடிகாரர்களாக இருக்கிறார்கள், அல்லது ஒழுக்கம் கெட்டவர்களாக இருக்கிறார்கள். இருந்தாலும் ஒவ்வொரு முறையும் அவர்கள் போதிக்கும் போது, பாவிகள் இரட்சிக்கப்படலாம். “இப்படிப்பட்ட ஜனங்களை தேவன் எப்படி உபயோகிக்கின்றார்?” என்று வினவலாம். அது ஏனென்றால் தேவன் அவர்களுக்கு வரத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் கொடுத்ததை ஒரு போதும் எடுத்துக் கொள்ளமாட்டார். எப்போதாவது நான் நல்லவனாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு வரத்தைப் பெற்றால்தான் அது தொடர்ந்து என்னில் நிலைத்திருக்கும் என்றால் அது கிருபையின் வரம் அல்ல. நாம் வரங்களைச் சம்பாதித்துப் பெற்றுக்கொள்ள முடியாது, அதற்குத் தகுதியுடையவர்களாகவும் இருப்பதில்லை, நல்லவர்களாகவும் இருப்பதில்லை. நாம் நாமாகவே துணிகரமாக அதை விட்டுவிடும் வரையில் அதைநாம் வைத்திருக்க முடியும். ஆனால் தேவனாகவே அதை எடுத்துக்கொள்ளவில்லை. கரிஸ்மா என்பது நிபந்தனையற்ற வரம் என்பதைப் புரிந்து கொள்வது ஆவியின் வரங்களைப் பெறுவதற்கும், அதை உபயோகிப்பதற்கும் மிகவும் முக்கியமானதாகும்.

பரிசுத்த பவுல் வரம் என்ற வார்த்தையையும் கிருபை என்ற வார்த்தையையும் வரிசையிடுகின்றார். ரோமர் 12:6-8 இல்

> நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே, நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழித்தியலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்;

முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கடவன்; இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.

பவுலடிகளார் ஏழு குறிப்பிட்ட வகையான கரிஸ்மா பற்றிக்கூறுகிறார். முதலாவது தீர்க்கதரிசனம், இரண்டாவது ஊழியம். ஊழியம் என்ற கிரேக்க பதத்திற்கு 'சேவை செய்தல்' என்று பொருள். முதலில் செயல்முறை பகுதியில் இவ்வாறு பொருள்படுகிறது. இச்சொல்லிலிருந்துதான் டீக்கன் என்ற சொல் பிறந்துள்ளது. வாழ்க்கையில் உலகப்பிரகாரமான பகுதியில் 'சேவை' என்ற வடிவில் இது முக்கியமாகிறது. கொடுத்தல் என்ற கிரேக்க வார்த்தையானது பகிர்ந்து கொள்ளுதல் என்ற வார்த்தையோடு தொடர்புள்ளது. இதன் பொருளாவது நம்முடைய உலகப்பிரகாரமான பொருள் அல்லது நம்முடைய பொருளாதார நிலையைக் குறிக்கிறது. தலைமை ஏற்றல் என்ற கிரேக்க வார்த்தை புரோஸ்டமி என்பது 'உண்டாக்கு' அல்லது 'தலைமைஏற்றல்' என்று அர்த்தமாகிறது. (1 தெசலோனிக்கேயர் 5:12; 1 தீமோத்தேயு 3:4-5, 12, 5:17 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்) 1 தீமோத்தேயு 3 ஆம் அதிகாரத்தில் குடும்பத்தை நடத்தும் ஒரு மனிதனும், சபையை நடத்தும் ஒரு மனிதனும் ஆகிய இருவருக்கும் நடுவில் ஒரு நேரான இணைப்பு உள்ளது. *"தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?"* (1 தீமோத்தேயு 3:4, 5) இதுதான் குடும்பத்திலுள்ள தகப்பனின் அதிகாரமாகும். ஆகவே இது தான் சபையின் தலைவனுக்கும் உள்ள அதிகாரத்தின் மாதிரியாகும்.

இறுதியாக இரக்கம் காட்டும் வரம். இரக்கம் காட்டுதல் கரிஸ்மாவில் குறிப்பிட்ட பகுதி. எல்லா கரிஸ்மா வரங்களும் வெளிப்படையாகக் காணப்படாது. அநேகர் பரவசமாக்கும் வரங்களையே எதிர்பார்க்கின்றனர். இவ்வுலகத்திலுள்ள இலட்சக் கணக்கான மக்கள் யாராவது தங்களுக்கு இரக்ககம் பாராட்ட வேண்டுவது அவசியம் என்று கருதுகிறார்கள். அங்கே தனிமையில் வாடும் அநேக மக்கள், அவர்களை யாராவது அன்புகூர வேண்டும் என்று ஆவலுடன் காத்திருக்கிறார்கள். நாம் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொண்டோம். நாம் அவருடைய இரக்கத்தைப் பிறருக்குக் காண்பிப்பதற்கு ஒரு தருணம்

நாம் தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொண்டோம். நாம் அவருடைய இரக்கத்தைப் பிறருக்குக் காண்பிப்பதற்கு ஒரு தருணம் உண்டு.

உண்டு. ஆதிகால திருச்சபை ஒழுங்காக ஏழை மக்கள் மீது கவனம் செலுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தது. பெரும்பாலான நவீன சபைகளில் ஒவ்வொரு செயலைச் செய்வதற்கும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஏழைகளைப் பராமரிப்பதற்கு மட்டும் குழுக்கள் இல்லை. இதை கிருபையின் ஊழியம் என்று சொல்லிக்கொண்டாலும் கிருபை மட்டும் அதிகமாக உதாசினப்படத்தப்படுகிறது. ஆனால் அங்கே எல்லாவிதமான வரங்களும் சபைகளிலுள்ள விசுவாசிகள் ஊழியம் செய்வதற்கு அருளப்பட்டுள்ளன.

1 மற்றும் 2 கொரிந்தியரில் கரிஸ்மா

1 கொரிந்தியர் புத்தகத்தில் வரங்கள் என்ற வார்த்தை மிக அதிக அளவில் திரும்ப திரும்ப உபயோகிக்கப்பட்டுள்ளது. ரோமர் நிருபத்தில் அவ்வாறு இல்லை. முதலாவதாக கொரிந்து சபைக்கு பவுலடிகளார் "*அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்.*" (1கொரிந்தியர்1:7) என்கிறார். குறைவில்லாதவர்களாய் என்று சொல்லப்பட்டதின் அர்த்தம் குறைவு உள்ளது என்பதாகும்.

நடத்தையைக் குறித்த பிரச்சனைகள் மோசமாக உள்ள இந்த சபையைப் பற்றி பவுல் சொன்னது முடிவில்:'உங்களுக்கு வரம் குறைவில்லாமல் இருப்பதைப் பற்றி மகிழ்கிறேன். ஒவ்வொரு வரங்களும் உங்களில் வெளிப்பட்ட.' கொரிந்துவிலுள்ள சபையின் பல பிரச்சனைகளைப் பற்றி எண்ணிப்பாருங்கள். உதாரணமாக, வெளியரங்கமான வேசித்தனம் காணப்பட்டது. ஓர் மனிதன் தன் தகப்பனின் மனைவியை எடுத்துக் கொண்டான். எனினும் பவுலின் வார்த்தைகளிலிருந்து விசுவாசிகள்

நாம் நல்லவர்களாக இருப்பதால் வரங்களைப் பெறவில்லை; அவற்றை நாம் விசுவாசத்தினால் பெறுகிறோம்.

எல்லாரும் கிருபையின் வரங்களைப் பெற்றிருந்தார்கள். என காண்கிறோம். ஏன்? அவர்கள் தகுதி உடையவர்களாய் இருந்ததால் வரங்களை பெற்றிருந்தார்கள் என்பதல்ல. மதப்பற்று இல்லாதோர், கிருபையின் வரங்களை உடைமையாக்கிக் கொள்வதை நான் பார்த்திருக்கிறேன்.

ஏனென்றால் அவர்கள் வரங்களைப் பற்றிக் கேட்டறியும்பொழுது, அவைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்து ஒருபோதும் தங்களைவருத்திக் கொள்ளவில்லை அதைச் செய்ய அவர்களால் முடியாது என்பதை அவர்கள் அறிவார்கள். இதற்கு எதிர்மாறாக நல்ல பக்தியுள்ள ஜனங்கள் அடிக்கடி கிருபையின் வரத்தைப் பெறுவது கடினம் என்று அறிகிறார்கள். ஏனென்றால், அவர்கள் தங்கள் மனதின் சில இடங்களில் இதைப் பெற்றுக்கொள்ள சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்று இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கொரிந்தியர்களுக்கு பவுலடியார் செய்த ஊழியம் வரத்தைப் பெறுவதின் மூலம் ஒரு மனிதனுடைய நடத்தையில் மாற்றம் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை என்பதை ஞாபகப்படுத்துகிறது. தேவன் நம்முடைய நடத்தையை அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் போல மாற்ற விரும்புகிறார். இதுதான் நாம் வரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அடிப்படை என்பது அல்ல. நாம் நல்லவர்களாக இருப்பதால் கிருபையைப் பெற்றுக்கொள்ளவில்லை. நாம் அவற்றை விசுவாசத்தினால் பெற்றுக்கொள்கிறோம்.

1 கொரிந்தியர் 7:7, 8இல் பவுலடிகளார்

> எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்புகிறேன். ஆகிலும் அவனவனுக்கு தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு; அது ஒருவனுக்கு ஒருவிதமாயும், மற்றொருவனுக்கு வேறுவிதமாயும் இருக்கிறது. விவாகமில்லாதவர்களையும், கைம்பெண்களையும் குறித்து நான் சொல்லுகிறது என்னவென்றால், அவர்கள் என்னைப் போல இருந்துவிட்டால் அவர்களுக்கு நலமாயிருக்கும். *என்று எழுதுகிறார்.*

குறிப்பிட்டவரம் அல்லது தேவனின் கிருபையின் வெளிப்பாடு என்ன என்பதை பரிசுத்த பவுல் தன்னுடைய சொந்த வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் கூறுகிறார். அதுதான் திருமணமாகாத நிலை, அதாவது திருமணம் செய்துகொள்ளாமல் வாழும் திறமை. இதற்கு உறுதியாக

அவர் ‘‘ஒவ்வொருவரும் இந்த வரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன், ஏனென்றால் அவர்கள் தேவனுக்காக தங்கள் முழு நேரத்தையும் செலவிட்டு சேவை செய்ய முடியும், ஆனால் எல்லோரும் அப்படிச் செய்ய முடியாது என்பதை நான் அறிவேன்’’ என்கிறார். ஒவ்வொரு மனிதன் அல்லது ஒவ்வொருபெண்ணும் அவனுடைய அல்லது அவளுடைய சொந்த குறிப்பிட்ட தேவனின் கிருபையின் வெளிப்பாடு பெற்று அவரவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று தேவனின் அழைப்பு இருக்கிறதோ, அதை அவர்கள் செய்ய முடியும். இந்த வரம் இல்லாதவன் இது இருப்பது போல்பாவித்து வாழ முற்படுவது சரியல்ல. பவுல் இதனை கிருபையின் வரம் என உறுதிப்படுத்துவதை நீ காண விரும்புகிறேன்.

1 கொரிந்தியர் 12:4இல் பரிசுத்த பவுல் “*வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே.*” என்று எழுதுகிறார். ஆரம்பத்தில் நாம் பார்த்தது போல அங்கே அநேக வித்தியாசமான வரங்கள் உண்டு. ஆனால் பரிசுத்த ஆவியானவர் ஒருவரே அவை எல்லாவற்றையும் வழங்குகிறார். பரிசுத்த பவுல் குறிப்பிட்ட ஒன்பது கிருபையின் வரங்களை வரிசைப்படுத்துகிறார். இவைகள்தான் இந்தப் புத்தகத்தின் மையக்கருத்தாகும்.

> எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப்பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.
>
> *(வசனம் 8-10)*

பின்பு பரிசுத்த பவுல் “*இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள்*” என்று கூறுகிறார். வரங்கள் என்றால் என்ன என்று தெரிந்துகொள்ளாத மக்கள் வரங்களை நாட முடியாது. கிறிஸ்தவர்கள் தேவனின் வரங்கள் என்னவென்று பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று உத்தேசிக்கிறார். அவர்களுக்கு என்ன கிடைத்துள்ளது என்றும் அறிய வேண்டும். அவர் நன்மையான வரங்களை நாடுங்கள் என்று

சொல்லும்போது பெருமைப்படுவதை அவர் ஊக்கப்படுத்தவில்லை. கிருபையின் வரங்கள் தாழ்மையுள்ளவர்களுக்கு மட்டுமே அருளப்படும். வரங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற ஆவல் இருப்பது தவறல்ல.

"நன்மையான வரங்களைப்பற்றி" புரிந்து கொள்ளுவதற்கு, பரிசுத்த பவுல் என்ன கருதுகிறார் என்று அறிய வசனம் 28ஐப் பார்ப்பது அவசியம். அங்கே அவர் *''தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்."* பவுல் எட்டு குறிப்பிட்ட பணிகளை சபைக்கு உரியது என்கிறார்: அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், அற்புதங்கள், சுகமளிக்கும் வரங்கள், உதவுதல் ஊழியம், பராமரித்தல், அரசாங்கம், பலவிதமான பாஷைகள். அவருடைய போதனைகளைச் சுருக்கி வரைந்தால் அவர் சொல்லுவது 'மேலானவைகளை நாடுங்கள்' என்பதேயாகும். அப்படியானால் எவைகள் மேலான வரங்கள்?

பவுலடிகளார் இந்த வரங்களைத் தகுதியின் அடிப்படையில் அடுக்கிச் சொல்லுகிறாரா? என்பது சந்தேகத்திற்குரியது. நீங்கள் எல்லாவற்றையும் பட்டியலிட்டு, இந்த வரிசையில்தான் இது முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறமுடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. சிறந்த வரங்கள் என்பது நீங்கள் நிறைவாகப் பெற்று அதை உபயோகிக்கும் விதத்தில்தான் உள்ளது. ஆகவே எந்த வரங்கள் உங்களுடைய நிலைமைக்கும் உங்களது சூழ்நிலைக்கும் அந்த அந்த வேளைக்கு ஏற்றாற்போல உதவுகிறதோ அதுதான் மேலான வரமாகும்.

முற்றிலும் வேறுபட்ட வகையில் வரங்கள் கீழ்வரும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. பரிசுத்த பவுல் தன்னுடைய சொந்தமிஷனரி ஊழியத்தில் குறிப்பிட்ட சில அனுபவங்களைக் குறிப்பிடுகிறார்.

> நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயத்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார்

என்று அவரை நம்பியிருக்கிறோம். அநேகர் மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும் பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்.

(2 கொரிந்தியர் 1:9-11)

மிகுந்த ஆபத்திலிருந்து, அற்புதமான விடுதலை கிடைத்ததை பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். அவர் இதை ஒரு வரம் என்று அழைக்கிறார். மேலும் இது தேவனுடைய கிருபைக்கு ஒரு வெளிப்பாடு என்கிறார். ஒரு வேளை, பரிசுத்த பவுல், லீஸ்திராவில் தனது விரோதிகளால் கல்லெறியப்பட்டு அவன் மரித்துப்போனான் என்று எண்ணி அவனைப்பட்டணத்திற்கு வெளியிலே இழுத்துக்கொண்டுபோனார்கள் என்ற சம்பவத்தைக் குறித்துச் சொல்லியிருக்கலாம். ஆனால் அவன் எழுந்து ஒன்றும் நடக்காததுபோல பட்டணத்திற்குள் பிரவேசித்தான். (அப்போஸ்தலர் 14:8-20ஐப் பார்க்கவும்) தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட தலையீடு ஒரு கிருபையின் வரமாகும். அநேகருடைய ஜெபத்திற்கு பதிலாக இவ்வாறு நடக்கிறது. ஒரு திடீரான தேவனுடைய இயற்கைக்கு மேலான தலையீடு சாதாரணமாக நாம் எதிர் பார்ப்பதைவிட எதிர்மாறாக இருக்குமானால், அது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நம்முடைய தேவையைச் சந்திப்பதற்காக தேவனால் வழங்கப்பட்ட ஒரு வரம் என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியமாகும்.

எந்த வரங்கள் உங்களுடைய நிலைமைக்கும் உங்களது சூழ்நிலைக்கும் அந்தந்த வேளைக்கு ஏற்றாற்போல் உதவுகிறதோ அது தான் மேலான வரமாகும்.

அற்புதங்கள் ஏற்படுவது ஒரு குறிப்பிட்ட நபருக்கு வெளிப்படுவதைவிட பொதுவாக ஒரு குழு ஜெபிப்பதின் மூலமே ஏற்படுகிறது என பவுல் இப்பகுதியில் கூறியிருப்பது புலனாகிறது.

“அநேகர் மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும் பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்.”

(2 கொரிந்தியர் 1:11)

மற்றொரு முக்கியமான உதாரணத்தைக் காணலாம். பேதுரு சிறையிலடைக்கப்பட்ட போது, குழுக்களாகக் கூடி ஜெபித்த ஜெபத்திற்குப் பதிலாக தெய்வீக அற்புத இடைபடுதல் ஏற்பட்டு, அவன் ஏரோதுவினால் வெளியேகொண்டு வருவதற்கு முந்தின இரவு பேதுரு சிறைச்சாலையிலிருந்து வெளியேகொண்டு வரப்பட்டான். (அப்போஸ்தலர் 12ஆம் அதிகாரத்தைப் பாருங்கள்). தேவனின் இந்த இடைபடுதல் கூட வரங்களைப் போல ஒரு வரமாகும் என்பது தெளிவாகிறது. ஏனென்றால் இந்த வரம் சம்பாதித்துப் பெற்றுக் கொள்ளவில்லை. இது தேவனின் இறைமையின் கிருபையைக் காட்டுகிறது. தேவன் ஒரு கடுமையான தருணத்தில் பேதுருவின் வாழ்வைக் காப்பாற்றும்படியாக தூதனை அனுப்பி செயல்படுகிறார். இந்த கண்ணோட்டத்தில் கிருபா வரங்களைப் பார்த்தால், நம்மில் அநகேர் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களையும் அற்புதங்கள் நடைபெறுவதையும் ஜெபத்திற்கான பதில் எனவும் இது கரிஸ்மா கொள்கைக்கு உட்பட்டது எனவும் காணலாம்.

1 மற்றும் 2 தீமோத்தேயுவில் கரிஸ்மா

தேவனின் கிருபையின் வரங்களை நமக்குக் கொடுக்க நாம் இடங்கொடுத்தால்... நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யக்கூடிய நிலையில் இருப்போம்.

1 தீமோத்தேயு 4:14இல் பரிசுத்த பவுல் தீமோத்தேயுக்கு ஆலோசனையின் வார்த்தைகளைக் கூறுகிறார். இவர் தீமோத்தேயுவை *"விசுவாசத்தில் உத்தம குமாரன்"* என்று முதலில் அழைக்கிறார். (1 தீமோத்தேயு 1:2) "*மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது, தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே*" என்கிறார். 2 தீமோத்தேயு 1:6இல் மீண்டும் இதே கருத்தைக் கூறுகிறார். "*இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்தினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்.*" தீமோத்தேயு தனக்கு தேவனால் கொடுக்கப்பட்டவரத்தை செயல்படுத்துவதில் வெட்கப்படுபவனாக இருந்தான். ஆகவே பரிசுத்த பவுல் ஒவ்வொரு நிருபத்திலும் பெற்ற வரத்தை அனல் மூட்டி எழுப்பிவிடுவது அவசியம் என்று உணர்ந்ததை

வலியுறுத்துகிறார். "*அந்த வரம் நீர்பூத்துப்போக அனுமதிக்காதே. இந்த வரம் உனக்கு இல்லாததுபோல் நினைத்து சும்மா இராதே. அதனை அனலூட்டி எழுப்பு. இது தேவனுடைய மகிமைக்கும் அவருடைய நோக்கங்களை நிறைவேற்றவும் கொடுக்கப்பட்டிருப்பதினால் இதற்கு நீ கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.*" இதைப் போலவே மற்ற கிருபா வரங்களைச் செயற்படுத்துவதற்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

1 பேதுருவில் கரிஸ்மா

கரிஸ்மாவைப் பற்றிய இறுதியான நிகழ்வு புதிய ஏற்பாட்டில் 1பேதுரு4:10இல் உள்ளது. "*அவனவன் பெற்றவரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்.*" ஒரு கிறிஸ்தவன் கூட, கிருபையின் வரத்தில் குறையுள்ளவனாக இருப்பதை பேதுரு எதிர்பார்க்கவில்லை. அவர் ஒவ்வொரு விசுவாசியும் வரங்களைப் பெற்று, அவர்கள் பெற்ற வரங்களின் அடிப்படையில் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய முடியும் என்று சுட்டிக்காட்டுகிறார்.

கிறிஸ்தவர்கள் ஊழியம் செய்யப் போவதாக இருந்தால், அவர்கள் முதலாவது தங்கள் சபை, சபைகளின் பெரும் பிரிவுகளிலிருந்து இவற்றைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அங்கே பெற்றுக்கொள்வதற்கு ஒன்றுமே இல்லாததுபோல் தெரிகிறது. பிரசங்கியார் அவர்களை நோக்கிப் பிரசங்கம் செய்து இதனைச் செய்யும்படி உற்சாகப்படுத்தலாம். ஆனால் எங்களுக்கு இதில் ஆர்வம் இல்லையென்றால், அதை எப்படிச் செய்வார்கள். இன்று கிறிஸ்துவ சபைகளின் பிரச்சனைகளில் அடிப்படையானது நாம் அதை இயற்கையாக இயக்கிவருகிறோம். நாம் கல்வி, நமது பின்னணி, சமுதாய சுற்றுப்புறச் சூழல் இவற்றைப் போல இன்னும் பல. தேவனின் கிருபையையும் வல்லமையையும்விட மேற்கூறியவற்றையே முக்கியப்படுத்துகிறோம். தேவன் நமக்கு கிருபையின் வரங்களைக் கொடுக்க இடம் கொடுக்கும்போது, அவற்றை நாம் சம்பாதிக்க தேவை இல்லை. அதற்காகக் கல்வி கற்று தேர்ச்சியடையவோ, பயிற்சி எடுக்கவோ அல்லது வேதாகமக் கல்லூரியின் சூழலோ தேவை இல்லை. ஆனால் நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய தகுதியைப் பெறுவோம்.

தேவகிருபையின் பரிபூரணமும் அதன் பிரிவுகளும்

புதிய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் சொல்லப்படாத மொத்தம் இருப்பதாறு வகையான charisma அல்லது கிருபையின் வரங்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளில் பெரும்பாலானவற்றை நாம் பார்த்திருக்கிறோம். அவற்றில் அதிகமானவைகள் வேதத்தில் நேரிடையாகக் கூறப்பட்டுள்ளன. அதே நேரத்தில் மற்றவைகள் யூகிக்கப்படுகின்றன.

1. நீதி (ரோமர் 5:15-17)
2. நித்திய ஜீவன் (ரோமர் 6:23)
3. தீர்க்கதரிசனம் உரைத்தல்(ரோமர்12:6, 1 கொரிந்தியர்12:10)
4. ஊழியம் செய்தல் (சேவை செய்தல்) (ரோமர் 12:7)
5. போதித்தல் (ரோமர் 12:7)
6. புத்தி சொல்லுதல் (ரோமர் 12:8)
7. பகிர்ந்து கொடுத்தல் (ரோமர் 12:8)
8. தலைமைத்துவம் (ரோமர் 12:8)
9. இரக்கம் காட்டுதல் (ரோமர் 12:8)
10. பிரம்மச்சரியம் (1 கொரிந்தியர் 7:7)
11. ஞானத்தைப் போதிக்கும் வசனம் (1 கொரிந்தியர் 12:8)
12. அறிவை உணர்த்தும் வசனம் (1 கொரிந்தியர் 12:8)
13. விசுவாசம் (1 கொரிந்தியர் 12:9)
14. குணமாக்கும் வரங்கள் (1 கொரிந்தியர் 12:9)
15. அற்புதங்களைச் செய்யும் சக்தி (1 கொரிந்தியர் 12:10)
16. ஆவிகளைப் பகுத்தறிதல் (1 கொரிந்தியர் 12:10)
17. பற்பல பாஷைகளைப் பேசுதல் (1 கொரிந்தியர் 12:10)
18. பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் (1 கொரிந்தியர் 12:10)
19. அப்போஸ்தலர்கள் (1 கொரிந்தியர் 12:28)
20. தீர்க்கதரிசிகள் (1 கொரிந்தியர் 12:28)
21. போதகர்கள் (1 கொரிந்தியர் 12:28)
22. உதவி செய்தல் (1 கொரிந்தியர் 12:28)
23. ஆளுகைகள் (அரசாங்கம்) (1 கொரிந்தியர் 12:28)
24. சுவிசேஷகர்கள் (எபேசியர் 4:13)

25. மேய்ப்பர்கள் (எபேசியர் 4:13)
26. அற்புதமான இடைபடுதல் (2 கொரிந்தியர் 1:11)

இந்த புத்தகம் முழுவதும் ஒன்பது ஆவியின் வரங்களைக் குறித்து மிக ஆழ்ந்து கண்ணோக்கும்போது, நீங்கள் எப்பொழுதும் மனதில் கொள்ளவேண்டியதாக நான் கருதுவது கிருபை - தேவனின் மேன்மையான கிருபை - அபரிமிதமாக கடவுளின் கிருபை - விதவிதமான தேவனின் கிருபை என்பதாகும். இந்த அத்தியாயத்தில் புதிய ஏற்பாட்டில் கரிஸ்மா என்ற வார்த்தை அடிக்கடி உபயோகிக்கப்பட்டிருப்பதை நான் விரிவாக விளக்கினேன். ஏன் என்றால் உங்களுக்கும்கூட தேவன் அளவில்லாமல் கொடுப்பார் என்பதை நம்பவைப்பதற்கு அந்த உணர்வைத் தூண்டிவிடுவதற்காக இதை வலியுறுத்துகிறேன். தேவன் ஒருபோதும் இரண்டு பனிக்கட்டித்துண்டுகளையோ அல்லது இரண்டு கைரேகைகளையோ ஒன்றுபோல் படைப்பதில்லை. அதேபோல இரண்டு கிறிஸ்தவர்கள் ஒன்றுபோல இருப்பதில்லை. ஏனென்றால் தேவனிடத்தில் போதுமான கிருபை, வரங்கள், அதிகஅளவிலான ஆசீர்வாங்கள் நம் எல்லோருக்கும் வைத்திருக்கிறார். கிருபையை ஒரு வரையறைக்குள் கொண்டுவந்து அளவோடு கிருபை பெற்று நீ வாழ்ந்தாலும், தேவன் உனக்கு அளந்து அளந்து கொடுப்பதில்லை. நீ தான் அளந்து கொள்ளுகிறாய். தேவனுடைய அளவில்லாத கிருபை வரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உங்கள் இதயக்கதவுகளையும் உங்கள் வாழ்வையும் திறந்து வையுங்கள்.

3. ஆவியின் வெளிப்பாடு

வேதாகமத்தில் கரிஸ்மா என்ற வார்த்தையில் இருந்து இருப்பத்தாறு முக்கிய நிகழ்வுகள் காணப்படுகின்றன. இதிலிருந்து எழும் ஒரு இயற்கையான கேள்வியானது ஏன் இந்த ஒன்பது வரங்கள் மட்டும் 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் அவைகளின் தன்மைப்படி சிறப்பான வகையில் கூறப்பட்டுள்ளது? ஒரு விஞ்ஞானப் பதத்தை பயன்படுத்த முற்படும்பொழுது 'கரிஸ்மா' என்னும் சொல்லை ஒரு தனிப்பிரிவாக தனி குழுமமாக (genus)ஆக கருத வேண்டும். அந்த "ஜீனசில்" இந்த ஒன்பது வரங்களும் ஒரு பிரிவு. இது இரண்டாம் கேள்வியான "இந்த வரங்களின் சிறப்பு என்ன?" என்னும் கேள்விக்கு வழிநடத்துகிறது.

இதற்குரிய பதிலை இதைப்பற்றி விளக்கிச் சொல்லும் வசனத்தில் உள்ள பட்டியலில் காணலாம் "*ஆவியினுடைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.*" (1கொரிந்தியர் 12:7) நிச்சயமாக இந்த வரங்களெல்லாம் ஒரு உபயோகமான, செயல்முறையிலான, லாபகரமான ஒரு நோக்கமாகும். ஒருவர் இவ்வாறு சொல்லியிருக்கிறார் அதாவது "பரிசுத்த ஆவியின் வரங்கள் விளையாட்டுப் பொருள்களல்ல, ஆனால் அவைகள் கருவிகளாகும்." இருப்பினும் நான் விசுவாசிப்பது, இதன் திறவுகோல் போன்ற வார்த்தையானது இந்த ஒன்பது வரங்களுக்கும் மற்றவரங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறது. அந்த முக்கிய வார்த்தைதான் "வெளிப்பாடு" என்பதாகும். வெளிப்பாடு என்பது ஐம்புலன்களாகிய கண், மூக்கு போன்றவை உணரும்படி வெளிப்படுவது.

ஒரு விசுவாசியின் சரீரத்தில் இயேசுகிறிஸ்து இருப்பதால் அது ஒரு ஆலயமாகும். அதில்தான் பரிசுத்த ஆவியானவர் வசிக்கிறார். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் "*உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த*

ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?” 1கொரிந்தியர் 6:19இல் கூறுகிறார். இருப்பினும் சரீரமாகிய ஆலயத்திற்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் கண்ணால்காண முடியாதவராக இருக்கிறார். அவ்வாறு அவர் இருப்பதை நமது ஐம்பொறிகளாலும் கூட உணர முடியவில்லை. ஆகவே இந்த ஒன்பது முக்கிய வெளிப்பாடாகிய ஆவியின் வரங்கள் தான் ஒரு விசுவாசியின் சரீரத்திற்குள் கண்ணால்காண முடியாத பரிசுத்த ஆவியானவர் வசிக்கிறார் என்பதற்கு அத்தாட்சியாகும். அந்த விசுவாசியில் காணமுடியாத பரிசுத்த ஆவியானவர் வெளிப்பாடுகளை உண்டாக்கும்போது அதுவே வழியாகும். இந்த வரங்களில் ஒவ்வொன்றும் ஏதாவது ஒருவகையில் ஐம்புலன்களில் உணரக்கூடியதாக உள்ளது.

இயேசு கிறிஸ்து நிக்கோதேமுக்கு பரிசுத்த ஆவியைப்பற்றிக் காற்றை உதாரணமாகக் காட்டிக் கற்பித்தார். “*காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத்தெரியாது. ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.*” (யோவான் 3:8) நம்மில் ஒருவரும் ஒருபோதும் காற்றைக் கண்டதில்லை. கண்ணுக்குப் புலப்படாமல் இருப்பதுதான் அதனுடைய இயற்கையான தன்மை. இருப்பினும் காற்றுவீசும்போது நாம் அதை அறிகிறோம். ஏனென்றால் காற்றினால் ஏற்படும் விளைவுகளைப் பார்க்கிறோம்: மரங்களிலிருந்து இலைகள் உதிருகின்றன, அந்த இலைகள் ஒரு குறிப்பிட்ட திசையில் அடித்துக்கொண்டு செல்லப்படுகின்றன, மேகங்கள் வானத்தில் கடந்து செல்கின்றன, தெருக்களில் புழுதிகள் சுழன்று மேலே எழுகின்றன, இதைப்போன்று பல செயல்கள் நடைபெறுகின்றன. இவைகள் தான் காற்று அடிப்பதற்குரிய வெளிப்பாடுகள். இதேபோன்று விசுவாசியினிடத்தில் பரிசுத்த ஆவி இருப்பதை ஒருவரும் பார்க்க முடியாது. ஆனால் அந்த விசுவாசியினால் அவர் மூலமாகப் பரிசுத்த ஆவி செயல்படும் செயல்களினால் உண்டாகும் வெளிப்பாடுகளால் பரிசுத்த ஆவியானவர் தங்கியிருப்பதை உணரலாம். இவைகள் தான் பரிசுத்த ஆவியானவர் உள்ளே தங்கி சிறப்பான வழிகளில் செயல்புரிகிறார் என்பதை வெளிப்படுத்துபவைகளாகும்.

சில கிறிஸ்தவர்களின் எண்ணத்தின் படி பரிசுத்த ஆவியானவர் - பரிசுத்தமானவர், காணக்கூடாதவர், மற்றும் ஆவிக்குரியவர், எனவே ஒருபோதும் அவரை நெருங்கிச் செல்லவோ அல்லது உணரவோ முடியாது. இந்த எண்ணம் சரியல்ல. ஏனென்றால் பரிசுத்த ஆவியின் வெளிப்பாடைப்பற்றி வேதத்தில் கூறப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவது முக்கியமாகும். பரிசுத்த ஆவியானவர் அதிகமாக செயல்பட்டுள்ளார் என்பதை ஜனங்கள் உணருவார்கள். நான் இதைப் புதிய ஏற்பாட்டிலுள்ள இரண்டு பகுதிகளைக் கொண்டு விளக்கிக் காட்ட விரும்புகிறேன்.

அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் பெந்தெகொஸ்தே நாளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் விளக்குகின்றன. இயேசு கிறிஸ்துவின் புதியதாக அமைக்கப்பட்ட சபையின் அங்கத்தினர்கள் மீது பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவி இறங்கியது. அந்த நாளில் பரிசுத்த ஆவியின் வெளிப்பாடு தெளிவாக உணரப்பட்டது. பெந்தெகொஸ்தே நாள் முழுமையாக வந்தபோது அவர்கள் எல்லோரும் ஒரு இடத்தில் கூடி ஒருமனப்பட்டவர்களாயிருந்தார்கள்.

> பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லோரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருந்த நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.
>
> *(அப்போஸ்தலர் 2:1-4)*

பரிசுத்த ஆவியை அவரது வெளிப்பாடுகளினால் அறிந்து கொள்ளலாம்.

விசுவாசிகள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு வெவ்வேறு பாஷையிலே பேசத் தொடங்கினார்கள். அவர்கள் படித்தறியாத புதிய பாஷைகளில் பேசினார்கள். பரிசுத்த ஆவியின் இந்த வெளிப்பாடுகள் திரளான ஜனக்கூட்டங்களை பேதுருவின் பிரசங்கத்தைக்கேட்கும்படி அழைத்து வந்தது. (வசனங்கள்

14-40ஐப் பார்க்கவும்.) இது மூவாயிரம் மக்களை இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்குபடிச் செய்தது. (வசனம்41ஐப் பார்க்கவும்) அங்கே இந்த வெளிப்பாடுகள் இல்லாவிட்டால் சீடர்களைத் தவிர வேறு ஒருவரும் பரிசுத்த ஆவி இறங்கியது என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவர் அவருடைய வெளிப்பாடுகளினால் அறியப்படுகிறார்.

பேதுரு தனது பிரசங்கத்தின் உச்சகட்டத்தை அடைந்தபோது, அவர் இயேசு கிறிஸ்துவைப்பற்றி பேசிய பின்பு அவருடைய ஊழியக்காலங்களில் அவருடைய மரணம், அவருடைய உயிர்த்தெழுதல், அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகியவை பற்றிக் கூறினான்.

> இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தின் படி பரிசுத்த ஆவியைப் பெற்று, **நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய** இதைப் பொழிந்தருளினார்.
>
> *அப்போஸ்தலர் 2:32, 33.)*

மக்கள் பரிசுத்த ஆவியை அவராகக் கண்டதுமில்லை, கேட்டதும் இல்லை. ஆனால் விசுவாசிகளிலும், அவர்கள் மூலமாகவும் அவர் செய்யும் செயல்களை அவர்கள் கண்டும் கேட்டும் இருக்கிறார்கள். வசனம் 33இல் சொல்லப்பட்டுள்ள ‘இது’ என்ற வார்த்தையைக் குறித்துக் கொண்டால் அது மிகவும் சுவையூட்டக் கூடியதாக இருக்கும். வசனம் 33இல் “*பரிசுத்த ஆவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.*” முதலாவது நாம் வாசித்த அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்திலும் இந்த வார்த்தை பலமுறை உபயோகிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பரிசுத்த ஆவியை அவராகக் கண்டதுமில்லை, கேட்டதும் இல்லை. ஆனால் விசுவாசிகளிலும், அவர்கள் மூலமாகவும் அவர் செய்யும் செயல்களை அவர்கள் கண்டும் கேட்டும் இருக்கிறார்கள்.

> **அந்தச்** சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடி வந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்ட படியினாலே கலக்கம் அடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி?
>
> *(அப்போஸ்தலர் 2:6-8)*

அந்த சத்தம் தான் அந்தக் கூட்டத்தைக் கவர்ந்தது. சத்தம் உண்டாவது ஒரு வெளிப்பாடு ஆகும். அதைக் கேட்பதின் மூலம் உணரமுடியும். இந்த வசனம் அந்தக்கூட்டத்தை ஆச்சரியப்படவைத்ததைக் குறிப்பிட்டுக்காட்டுகிறது. இந்த கலிலேய செம்படவர்கள் பேசிய மொழியினை அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஆனால் இந்த கலிலேயர்கள் இயற்கையாக கற்றதினாலோ அல்லது கேட்டுப்படித்ததினாலோ இதனை அறியவில்லை. இது கவனத்திற்குரியது.

இதைத் தொடர்ந்து நாம் வாசிப்பது "*எல்லோரும் பிரமித்துச் சந்தேகப்பட்டு, **இதென்னமாய்** முடியுமோ? என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.*" "*இது*" என்பது எதைக்காட்டுகிறது? இது என்பது எதைக் குறிக்கிறதென்றால் தாங்கள் அறியாத பாஷைகளில் பேசுகிறார்கள் என்பதே! சில ஜனங்கள் இதன் விளைவாக "*இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள்.*" (வசனம் 13)

பேதுரு எழுந்திருந்து:

> அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்: யூதர்களே, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்துகொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுதுவிடிந்து மூன்றாம்மணி வேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது.
>
> *(அப்போஸ்தலர் 2:14-16)*

"*இது*" பற்பலபாஷைகளில் பேசுவதையே குறிக்கின்றது. இந்த பற்பல பாஷைகளில் பேசுவதைப்பற்றி பேதுரு என்ன சொல்கிறார்?

“கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்;” (அப்போஸ்தலர் 2:17) அவர், வாக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவி ஊற்றப்படுதலைப்பற்றி பேசுகிறார். இது தீர்கத்தரிசி யோவேலினால் முன்னறிவிக்கப்பட்டிருந்தது. பேதுரு தன்னுடைய பிரசங்கத்தின் இறுதியில் “*இது*” என்ற வார்த்தையையே மீண்டும் உபயோகிக்கிறார்: *“அவர் (இயேசு) தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.”* (வசனம் 33)

இந்த பரிசுத்த ஆவி ஊற்றப்படுதலின் நிகழ்ச்சியினால் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்குள் வந்து வாசம் செய்கிறார் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. அந்த விசுவாசியின் வழியாக வெளிப்பாடுகள் உண்டாகின்றன. அதைப் பார்க்கவும் கேட்கவும் முடியும். புலன்களால் உணரவும் முடியும். இதுதான் அவர் பிரசன்னமாகியிருக்கிறார் என்பதற்கான உண்மையான நிருபணம் ஆகும். 1கொரிந்தியரில் பவுல் தன் ஊழியத்தில்தான் சொந்தமாகப் பிரசங்கிப்பதைக் குறித்துக் கொள்ளுங்கள்.

> சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன். உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.
>
> *1கொரிந்தியர் 2:1-5.*

அநேக ஜனங்கள் பரிசுத்த பவுல் ஒரு சிறந்த பிரசங்கி என்று கற்பனை செய்கிறார்கள். இந்த எண்ணம் வேதத்திலிருந்து மாறுபட்டதாக உள்ளது. அவர் சொல்லுகிறார், “*என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ*

ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல்," 2 கொரிந்தியர் 10:10ல் அவருடைய விரோதிகளைக் குறித்து அவர் சொல்லுகிறார், "சரீரத்தின் தோற்றமோ பலவீனமும், வசனம் அற்பமுமாயிருக்கிறதென்கிறார்களே." பேதுரு ஒரு பயங்கரமான பேச்சாளர் என்று நான் நினைக்கிறேன். ஆனால் பரிசுத்த பவுல் "*பிரசங்க பீடத்திற்குரிய தோற்றம்*" இல்லாதவராய் இருந்தார். அவர் சிறிது கூட சிறப்பான பேச்சாளராக இல்லை. அவர் நல்ல விளைவுகளை எப்படி உண்டாக்கினார்?

அது மிகவும் உயர்வாக மதிக்கப்பட்ட யூத நியாயசாஸ்திரியாகிய ஆசிரியர் கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து அவன் பெற்ற கல்வியினால் அலல. (அப்போஸ்தலர் 5:34, 22:3வசனங்களைப் பார்க்கவும்) பவுல் சொல்லுகிறார். "*சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுக்கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்.*" (1கொரிந்தியர் 2:1-2) அது அசாதாரண துணிச்சல் ஆகாதோ? அவர் கொரிந்தியர்களிடத்தில் "*அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்.*" (வசனம் 3) அப்போஸ்தலர் 18:1-11வரை நாம் வாசிப்பது, அவர் கொரிந்து சபையிலிருந்தபொழுது, அவருடைய உயிருக்கு ஆபத்தாய் இருந்தது. அதனால் அவர் பயத்துடன் இருந்தார். ஆனால் கர்த்தர் ஒரு தரிசனத்தின் மூலமாக அவரோடு பேசினார். "*இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்கு தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மௌனமாயிராதே; நான் உன்னுடனே கூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கை போடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார்.*" (வசனம் 9-10)

அநேக ஜனங்கள் பரிசுத்த பவுல் ஒரு சிறந்த பிரசங்கி என்று கற்பனை செய்கிறார்கள். ஆனால் இந்தக்கருத்து வேதத்திலிருந்து மாறுபட்டதாக உள்ளது.

ஆகவே பவுல் எப்படி விளைவுகளை உண்டாக்கினான்? அவனுடைய பிரசங்கம் "*ஆவியினாலும் பெலத்தினாலும்*

உறுதிப்படுத்தப்பட்டதாயிருக்கிறது.” (1 கொரிந்தியர் 2:5) “செய்துகாட்டுதல்” என்ற வார்த்தை சரியாக வெளிப்பாடு என்ற வார்த்தையோடு தொடர்புள்ளதாக இருக்கிறது என்பதை நாம் பார்த்துக்கொண்டு வருகிறோம். பவுலினுடைய ஊழியத்தின் ரகசியம் பிரசங்கிப்பதில் மட்டுமல்ல, கற்ற கல்வியினாலோ அல்லது தைரியத்தினாலும் கூட இல்லை ஆனால் கடவுளுடைய இயற்கைக்கு மேலான வல்லமையின் வெளிப்பாட்டினால்தான். மேலும் அவருடைய வாழ்வில் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலினாலும் அவரது செயல்பாடுகளினாலும்தான். அவர் தைரியமாகப் பிரசங்கித்தார்.

இதைப்போல விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் வல்லமையை, பவுலுக்குக் கொடுக்கப்பட்டிருந்த இயற்கைக்கு மேலான வல்லமையின் வழியாக தங்களது செயல்பாட்டினால் வெளிப்படுத்தவேண்டும். 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்தில் செயல்பாடு அல்லது வெளிப்பாடு ஆகிய இதன் நோக்கத்தைக்குறித்து பவுல் சொல்கிறார். “*உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும் படிக்கு,*” (1கொரிந்தியர் 2:4). ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனுடைய விசுவாசமும் தங்களுடைய அறிவுகூர்மையையோ தத்துவ விவாதங்களையோ அல்லது வேதாகமக்கல்லூரியின் பயிற்சிகளையோ மற்றும் பட்டங்களையோ அடிப்படையாகக்கொண்டு அமையக்கூடாது. அவைகள் தங்களுடைய பங்கைவகிப்பதாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் தேவனுடைய வல்லமையான தனிப்பட்ட அனுபவத்தைப் பற்றியதாகும்.

நான் கிழக்கு ஆப்பிரிக்காவில் மிஷனரியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்பொழுது அதாவது ஆப்பிரிக்க மாணவர்களுக்குப் போதகராகும்படி பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கும்பொழுது நான் சொல்லும் ஒவ்வொன்றுக்கும் அவர்கள் ஆம், என்று சொல்லுவார்கள். ஆனால் அவர்கள் உண்மையாக எவ்வளவாக விசுவாசிக்கிறார்கள் என்பதை நான் ஒருபோதும் அறியேன். பிரச்சனை என்னவென்றால் அதிகம் நெருக்கமாக இருப்பதுதான். ஒரு பிரார்த்தனை நேரத்தில் நான் மாணவர்களுக்கு முன்பாக நின்றேன். மேலும் “நான், நீங்கள் அதிகம் ஒத்துழைக்கிறவர்களாகவும், கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும் நாங்கள் சொல்வதைச் செய்கிறவர்களாகவும் இருக்கிறீர்கள் என்று சொன்னேன். இதற்கான காரணம் என்ன என்பதை நான் அறிவேன். உங்களுடைய

படிப்பு எங்களைச் சார்ந்திருக்கின்றது. உங்களுக்கு படிப்பு தேவை அதுதான் உங்கள் கடவுள்." பின்பு, நான் "உங்களில் அநேகருடைய மனதில் இன்றும் அங்கே ஒரு கேள்விக்குறி இருக்கிறது" என்றேன். நான் இதைச் சொன்னபோது அவர்கள் என்னையே பார்த்தார்கள். "உங்களுடைய மனதிலுள்ள கேள்வி இதுதான்: இந்த வேதத்தை வாசிப்பதற்கும், நம்புவதற்கும் இது ஆப்பிரிக்கர்களுக்கான புத்தகமா? அல்லது ஒரு வெள்ளைக்கார மனிதனின் புத்தகமா? அல்லது ஆப்பிரிக்கர்களுக்கு உண்மையாகத் தொடர்பில்லாததா? யாரோ இதை மற்ற தேசத்திலிருந்து கொண்டு வந்திருக்கிறார்கள். அநேகரான உங்களுடைய ஆப்பிரிக்க மூத்த சகோதரர்கள் உங்களிடத்தில், அது ஒரு வெள்ளைக்கார மனிதனின் புத்தகம். ஆகவே நீங்கள் உங்களது நேரத்தை அதில் செலவு செய்யவோ அதைக் கடைப்பிடிப்பதோ இல்லாமல் இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று சொல்கிறார்கள்."

நான் இதைச் சொன்னபொழுது அங்கே ஒரு அமைதி நிலவியது. நான் மேலும் சொன்னேன் "நான் உங்களுக்கு இன்னும் ஒரு காரியத்தைச் சொல்லப்போகிறேன். இந்தக் கேள்விக்குரிய விடையை என்னால் சொல்ல முடியாது." இந்த வாசகம் அவர்களிடத்தில் ஆச்சரியத்தை உண்டாக்கியது! அவர்கள் மிஷனெரிகளுக்கு எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்ல முடியும் என்று நினைத்தனர். "இந்தக் கேள்விக்கு ஒரே ஒரு பதிலைத்தான் சொல்லமுடியும் அதாவது அங்கே இதற்கு விடையாக ஒரே ஒரு வழிதான் உண்டு. மேலும் உன்னுடைய வாழ்க்கையில் கடவுளின் இயற்கைக்கு மேலான வல்லமையை உன்னுடைய சொந்த அனுபவத்தில் பெற்றால்தான் முடியும். அந்த அனுபவம் உனக்குக் கிடைக்கப் பெற்றால் வேதம் பிரிட்டனிலிருந்தும் வரவில்லை, அமெரிக்காவிலிருந்தும் வரவில்லை கடவுளிடமிருந்துதான் வந்தது என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

நான் அவர்களிடம் இதைக் குறித்து வாதாடவில்லை. நான் பிரார்த்தனைக் கூட்டத்தை முடித்துவிட்டபின் அவர்கள் கலைந்து சென்றார்கள். நான் சென்று இதன் அடிப்படையில் ஜெபித்தேன்: "தேவனே, நீங்கள் ஒருமனிதன் எதை விதைப்பானோ அதையே அறுப்பான் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் இந்த இளம் வாலிபர்களுக்கு உம்முடைய வார்த்தையாகிய விதையை விதைத்துள்ளேன். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய

ஜீவனை அறுப்பான் என்று சொல்லியிருக்கிறீர். உம்முடைய வார்த்தைக்காக நான் காத்திருக்கிறேன்.'' (2 கொரிந்தியர் 9:6; கலாத்தியர் 6:7, 8 பார்க்கவும்)

காலப்போக்கில் நான் மாணவர்களுக்குத் தொடர்ந்து பிரசங்கம் செய்து ஜெபித்தேன். கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எவ்விதத்திலும் வற்புறுத்தவில்லை. ஆறுமாதங்களுக்குப் பின்பு அங்கு தேவனுடைய வல்லமையான இடைபடுதல் அந்தக் கல்லூரியில் இருந்தது. அது மிகவும் குறிப்பிடத்தக்கதாகவும் இருந்தது. அரையாண்டு விடுமுறையில் அநேக மாணவர்கள் நீண்ட வார விடுமுறைக்காக வீடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். ஆனால் அங்கே ஆறு அல்லது எட்டு மாணவர்கள் மட்டும் வீட்டிற்குச் செல்லாமல் இருந்தார்கள். அவர்கள் வீடு அதிக தூரத்திலிருந்ததால் அவர்கள் இந்த விடுமுறைநாட்களுக்குள் வீட்டிற்குச் சென்று திரும்ப வரமுடியாததால் அவர்கள் கல்லூரியிலேயே தங்கியிருந்தார்கள். எனது மனைவியும் நானும் இந்த தனிமையில் இருக்கும் வாலிபர்களுக்கு எதையாவது செய்யவேண்டும் என்று நினைத்தோம். எனவே அவர்களை வீட்டிற்கு அழைத்து ஒரு சிறிய விருந்து கொடுக்கத்தீர்மானித்தோம். இப்படிப்பட்ட விருந்து அவர்களுக்குப் பழக்கமில்லை. இப்படிப்பட்ட வழக்கம் ஆப்பிரிக்காவில் கிடையாது.

அவர்கள் ஐரோப்பியர்கள் அல்லது அமெரிக்கர்கள் ஆகியவர்களின் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்ற விதமாய் நடக்கப் பழக்கப்படவில்லை. இருக்கைகளில் சுற்றி உட்காருவது, ஐக்கியமாக இருப்பது, ஒருவரோடு ஒருவர் உரையாடுவது ஆகியவற்றில் அனுபவம் இல்லாதவர்கள். எனவே நாங்கள் எல்லாரும் கடினத்தோடு உட்கார்ந்திருந்தோம். நாங்கள் அவர்களுக்கு தேநீர் பரிமாறினோம். அவர்கள் ஒவ்வொருவரும் ஐந்து தேக்கரண்டி சர்க்கரை எடுத்து தேநீரில் போட்டார்கள் ஏனென்றால் அவர்கள் அடிக்கடி இவ்வாறு விருந்துக்குச் சென்றதில்லை. பின்பு நான் இவர்களோடு நாம் என்ன செய்யப்போகிறோம் என்று நினைத்தேன். நாம் இப்பொழுது ஜெபிப்போம் என்றேன். அவர்கள் உடனே கீழ்ப்படிந்து முழங்கால்படியிட்டார்கள். அவர்கள் ஜெபிக்க ஆரம்பித்தபோது ஏதோ ஒன்று நடந்தது. அது ஒரு இடிமுழக்கம்போல் இருந்தது. ஏதோ ஒன்று அந்த அறைக்குள் வந்து எங்களை அசைந்தது. அந்த மாணவர்களில் ஒவ்வொருவரும் ஒரேநேரத்தில் ஜெபிக்க

ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் நான் அறியாத ஒரு பாஷையிலே ஜெபித்தார்கள். நான் அது அவர்களுடைய குலத்திற்கான மொழி என்று நினைத்தேன். நான் அவர்கள் பல பாஷையில் பேசுகிறார்கள் என்று நினைக்கவில்லை. நாங்கள் எல்லோரும் பெந்தெகொஸ்தே ஸ்தாபனத்திலிருந்தாலும் மற்ற மிஷனரிகள் நாங்கள் அதிக சத்தத்தை உண்டாக்குகிறோம் என்று புகார் கூறினார்கள். ஆனால் அது தேவனின் செயலே. நான் செய்வதற்கு ஒன்றுமே இல்லை. நான் என் அறிவின் வாயிலாக, எதையும் செய்திருக்க இயலாது. தேவன் அதை நடப்பித்தார்.

அந்த நிகழ்வு கிட்ட தட்ட நான்கு ஆண்டுகள் வனரக்கும். ஓர் அசைவை அரம்பித்தது. அந்த கல்லூரியில், பரிசுத்த ஆவியானவர் தனது இறையாண்மையில் இயற்கைக்கு அப்பாற்பட்டு செயல்பட்டார். மூன்று மாதங்களுக்குப் பின்னர், அதே மாணவர்களுக்கு திரும்பவும் பேசினேன். முன்பு வாசித்த அப்போஸ்தலர் 2:17ஐ வாசித்தேன். ''*கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது, உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர்கள் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களை காண்பார்கள்;*"

உண்மையான விசுவாசம், மனிதனின் ஞானத்தில் அல்ல, தேவனின் வல்லமையின் மேல் சார்ந்தது.

இந்த வசனத்தை நான் கவனமாகவும், மெதுவாகவும் வாசித்து, அவர்கள் அதன் அர்த்தத்தை புரிந்து கொள்ள செய்தேன். "அந்த வசனத்தில் கூறப்பட்ட ஒவ்வொரு அறிக்கையும் உனக்கு நடந்தது என்று பதிவு செய்யும்படி நான் சொன்னேன், இவை வேறொரு நாட்டிலோ, கல்லூரியிலோ அல்லது சபையிலோ நடந்தேறவில்லை. இது உனக்கு நடந்தது. நீ அதை அனுபவித்தாய். அதை உன் கண்கள் கண்டன. உன் காதுகள் கேட்டன. நீங்கள் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதே தேவ்ன் உங்களுக்கு சாட்சியாக கூறுவதாகும். ஓர் வெள்ளைக்காரன் சொன்னதையோ அல்லது வெள்ளைக்காரனின் கையிலிருந்த புத்தகத்திலிருந்ததையோ நீங்கள் நம்ப வேண்டும் என்று உங்களை கேட்கவில்லை. இது உண்மை என்று உங்களிடத்திலேயே முதற்படியான அனுபவ சாட்சி இருக்கிறது."

தொடர் பிரசங்கங்களோ, வாதங்களோ, இறையியல் சாட்சிகளோ அல்லது இறையியல் கல்லூரி பயிற்சியோ செய்யக் கூடாததை, உங்கள் நேரடி அனுபவ சாட்சி செய்தது. இது அவர்களின் முழு எண்ணத்தையும், நடத்தையையும் மாற்றி, ஒரு கல்லூரி இவ்வாறாக வாழ சிறந்த இடம் என்று அறியச் செய்தது. அவர்களை ஜெபம் செய்ய அழைக்கும் முயற்சி அல்ல. உண்மையாகவே அவர்களை ஜெபத்தை நிறுத்த சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இல்லை எனில் அவர்கள் உறங்க சென்றிருக்க மாட்டார்கள். தங்கள் அறைகளிலே அவர்கள் இரவு முழுவதும் ஜெபிப்பார்கள். இது தேவனின் ஒரு இடைபடுதல் தான். அது பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டால் கிடைத்தது. அவர்கள் சொந்த அனுபவத்திலே இதை கண்டு கொண்டபடியால், நாங்கள் அவர்களிடம் இதை திணிக்கவோ, தொந்தரவு செய்து வற்புறுத்தவோ இல்லை.

இதைத் தான் பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். நல்ல கொள்கை, இறையியல், கல்வி, வாதங்கள், அறிவுத்திறன் இருந்தால் போதாது. உண்மையான விசுவாசம் மனிதர்களின் ஞானத்தில் அல்ல, ஆனால் வல்லமையின்மேல் சார்ந்ததாய் இருக்கிறது. இந்த கடைசி நாட்களில், துன்மார்க்கத்தின் வல்லமை பெருகுகிறது. தேவனின் விசுவாசத்திற்கு எதிராக போர் தொடுக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்துவும் அவரது சபைக்கு எதிராகவும் பலவிதமான எதிர்ப்புகள் உள்ளன. தனது வாழ்வில் இயேசு கிறிஸ்துவின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையின் சொந்த அனுபவமின்றி, இவைகளை மேற்கொள்ள முடியாது. இது ஆடம்பரமானதல்ல. அவசியம் தேவையானது. பவுல் அப்போஸ்தலன் அதை அவ்வாறே கையாண்டார்.

> “உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.”
>
> *(1 கொரிந்தியர் 2:4-5)*

ıகள்

பகுதி 2 + வரங்களின் வெளிப்பாடு

ıகள்

4. ஞானத்தை போதிக்கும் வார்த்தை

இப்பொழுது நாம் நம்முடைய ஆழமான பார்வையை, ஆவியானவரின் தனிப்பட்ட வரங்களை - வெளிப்படுத்தும் வரங்களோடு ஞானத்தைப் போதிக்கும் வசனத்திலிருந்து ஆரம்பிக்கலாம்.

ஞானத்தையும் அறிவையும் ஒப்பிட்டு நோக்குதல்

ஞானத்தைப் போதிக்கும் வசனத்திற்கும், அறிவை உணர்த்தும் வசனத்திற்கும் இடையில் உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் கவனிப்பது நலமாக இருக்கும். முதலாவதாக ஞானத்தையும் அறிவையும் முழுவதும் வித்தியாசமான வகையாகப் பிரிக்க முடியாது. ஏனென்றால் அவைகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையன. உண்மையாக நம்முடைய பரிசோதனையில் ஆவியானவரின் அனைத்து ஒன்பது வரங்களுக்கும் மத்தியில் கோடிட்டுப் பிரித்துக்காட்டுவதை நாம் நாடவில்லை. அவைகள் வானவில்லில் காணப்படும், வயலட், இண்டிகோ, நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு போன்ற ஏழு நிறங்களைப் போன்றவையாகும். அவைகளைப் பிரிக்க முடியாது. ஒரு வானவில்லின் வித்தியாசமான நிறங்களை அறிந்து கொள்வது எளிதாகும். ஆனால் அங்கே நீ காணும்படியாக ஒரு தனி குவியம் காணப்படுவதில்லை. உதாரணமாக வயலட் முடிகிறது இண்டிகோ ஆரம்பிக்கிறது. இண்டிகோ முடிகிறது நீலநிறம் ஆரம்பிக்கிறது. அவைகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன.

இதே போன்ற உண்மை நாம் உரைத்துக் கொண்டிருக்கும் ஆவிக்குரிய வரங்களிலும், மற்ற ஆவிக்குரிய செய்திகளிலும் காணப்படுகிறது. நாம் அதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஞானம் அறிவு ஆகியன பற்றித் தனித் தனியாக பேசுவது பூரண உரிமையான கருத்துக்களாக

இருக்கும். ஆனால் அங்கே அவைகள் ஒன்றாக சந்திக்கும் இடத்தில் கூட சில கருத்துக்கள் உள்ளன. எங்கே ஞானம் முடிவடைகிறது, எங்கே அறிவு ஆரம்பிக்கிறது என்று நீங்கள் எப்பொழுதும் சொல்ல முடியாது. அங்கே நீங்கள் ஆச்சரியப்படக்கூடிய நேரங்கள் உண்டு. அது "ஞானத்தைப் போதிக்கும் வசனமா அல்லது அறிவைப் போதிக்கும் வசனமா?" பொதுவாக ஒரு வரம் செயற்படும் பொழுது அதனைத் தொடர்ந்து அடுத்த வரமும் வரும்.

இருப்பினும் பொதுவாக, ஞானத்திற்கும் அறிவிற்கும் உள்ள வேறுபாடு இதுதான். அதாவது *அறிவு நமக்கு உண்மைகளைக் கொடுக்கிறது. ஞானமானது அந்த உண்மைகளை எப்படி செயல்படுத்துவது என்று காட்டுகிறது*. நீ உலக ஞானம் அனைத்தும் பெற்றிருந்தாலும் உண்மைகள் பெறாவிட்டால் நீ அதைக் கொண்டு நேரடியாகப் பயன்படுத்தி அதிக நன்மையைப் பெற முடியாது. வேறு வகையாகப் பார்க்கப்போனால் நீங்கள் எல்லா உண்மைகளையும் அறிந்திருந்தாலும் நீ ஞானவானாக இல்லாவிட்டால் அவைகளை வைத்து தவறான காரியங்களைச் செய்ய வாய்ப்பு உண்டு.

இந்த உண்மையை சாலமோன் ராஜா மிக அழகாகத் தொகுத்துக் கூறியுள்ளார்: "*ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும்; மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும்.*" (நீதிமொழிகள் 15:2). ஒரு ஞானவான் தன்னுடைய அறிவை சரியான முறையில் பயன்படுத்துவான். அநேக மக்களுக்கு அறிவு இருக்கிறது, ஆனால் அதை சரியாகப் பயன்படுத்துவதில்லை. ஒன்று அல்லது இரண்டுபேர் எனக்கு ஞாபகம் வருகிறது, அவர்கள் அநேகக் காரியங்களை அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் எப்பொழுதும் தவறான நேரத்தில்தான் எதையும் சொல்வார்கள். பொதுவாக அவர்கள் தாங்கள் எவ்வளவு அதிகமாக எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்கள் என்ற எண்ணத்தை உண்டாக்க முயற்சி செய்கின்றனர். ஆனால் அவர்களுடைய நேரமும் அவர்கள் சொல்லும் விதமும் அந்த இடத்திற்கு பொருத்தமாக அமையாமல் அப்பாற்பட்டதாக இருக்கும் அவர்களுக்கு அறிவு இருக்கிறது, ஆனால் அதை எப்படி பயன்படுத்துவது என்ற ஞானம் இல்லை.

தேவ ஞானமும் உலக ஞானமும்

நாம் ஆவிக்குரிய ஞானத்தைப் போதிக்கும் வசனம், இவ்வுலகத்து ஞானத்தைப் போன்றதல்ல என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். நான் ஒரு தத்துவஞானியாக இருக்கும் போது......... நான் ஞானத்தோடு தொடர்பு கொண்டுள்ளேன் என்று நினைத்தேன். எனினும் இந்த ஞானம் மிக ஆழமாக குழப்பத்தை உண்டாக்கியது. மக்களை நான் அதிகமாகக் குழப்பும்போது அவர்கள் என்னை சாமர்த்தியமாக நினைத்தார்கள். நானும் கூட நான் சாமர்த்தியமாக இருப்பதாகக் கருதினேன். நீங்கள் குழப்பத்தில் கவனம் செலுத்த வேண்டுமானால் தத்துவத்திற்குச் செல்லுங்கள் ஏனென்றால் அங்குதான் நீங்கள் அதைக்கண்டு கொள்வீர்கள்.

அறிவு நமக்கு உண்மைகளை வழங்குகிறது. ஞானம் நமக்கு அந்த உண்மைகளை வைத்து என்ன செய்ய வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

இருப்பினும் நான் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபொழுது என்னுடைய வாழ்வை தேவனுடைய வசனத்தைக் கற்பித்தலுக்கும், போதனை செய்வதற்கும் அர்ப்பணித்தேன். அப்பொழுது நான் தேவனுடைய ஞானமானது நான் கடைப்பிடித்து வந்த ஞானத்தை விட வித்தியாசமானது என்பதைக் கண்டுகொண்டேன். அவருடைய ஞானமானது நடைமுறைக்கு ஏற்றதாகவும், கருத்துக்கு உகந்ததாகவும் இருக்கிறது. அது தொலைதூரத்திலுள்ளதல்ல, அது கீழுள்ள உலகத்திற்கு வருகிறது. அது மிகவும் எளிதான வார்த்தைகளால் சொல்லப்படுகிறது. உண்மையாக அது இந்த வகையில் இயேசு கிறிஸ்துவின் போதனைகளைப் படிக்க மிகவும் ஆர்வத்தைத் தூண்டுகின்றது. உண்மையில் இது தொடர்பாக இயேசு கற்பித்தவைகளைப் படிப்பது அற்புதமாக இருக்கிறது. கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பிலும் இயேசுவின் எழுதப்பட்டுள்ள போதனைகளிலும், ஒரே ஒரு தடவை மட்டும் நான்கு எழுத்துள்ள ஒரு சொல் வருகிறது. அது மறுபிறப்பாகும். அவர் போதனைகள் ஒரே வார்த்தையில்தான் இருக்கும். அவர் பேசின வார்த்தைகளாவன விளக்கு, எண்ணெய், ஆடு, மீன், வாழ்வு, மரணம், அன்பு, பகைமை போன்றவை. இவை சிறப்பான வார்த்தைகள். எல்லா வரலாற்று ஆசிரியர்களும் இந்த மனிதனைப்போல்

ஒருவனும் பேசினதில்லை என்று ஒத்துக்கொள்வார்கள். அவரது ஞானம் முற்றிலும் மாறுபட்ட ஞானமே ஆகும்.

வேதாகமம் சாலொமோனை தற்போது இருப்பவர்களிலும் இனிவரப்போகிறவர்களையும் விட மிகச் சிறந்த ஞானமுள்ள மனுஷன் என்று அழைக்கிறது. அவர் பிரசங்கி 10:10 இல் ஞானத்தின் தன்மையைப் பற்றித் தொகுத்துக் கூறியுள்ளார். "*இருப்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற்போனால், அதிக பலத்தைப் பிரயோகம் பண்ண வேண்டியதாகும்; ஆகையால் ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்*" என்பதாகும். (கிங் ஜேம்ஸ் வசனத்தில் "ஞானமே நேரடிப் பிரயோஜனமானது" என்று சொல்லப்பட்டுள்ளது) ஞானம் பிரயோஜனமுள்ளது, வழிநடத்துவதற்கு உபயோகமானது மேலும் அது வெற்றியைக் கொண்டுவருகிறது. ஆகவே ஞானமானது நேரடியாகச் செயல்படக்கூடியது. அறிவு மறைமுகமாகச் செயல்படக்கூடியது.

நான் எனது தந்தையோடு தென்மேற்கு இந்தியாவில் வசித்துக் கொண்டிருக்கும்போது, நான் இளம் வாலிபனாக இருந்தேன். இந்த வசனமானது எனக்கு எப்பொழுதும் நான் ஒரு மரத்தை வெட்டி வீழ்த்த வேண்டும் என்று முயற்சி செய்ததை ஞாபகப்படுத்துகிறது. அவ்வப்பொழுது எனக்கு திடீர் வேகத்துடன் கூடிய உற்சாகம் வரும். நான் எனது தந்தையாரிடம் நான் தோட்டத்தைச் சுத்தம் செய்வதற்குரிய வேலை ஏதாவது எனக்கு இருக்கிறதா என்று கேட்டேன். ஒரு நாள் அவர்கள் ''சிறிய நீரோடையின் கரையிலுள்ள மரத்தை வெட்டி வீழ்த்துவது அவசியமாகிறது" என்று சொன்னார்கள்.

நான் கோடாரியைத் தீட்டிக் கூர்மையாக்குவதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். தேவன் நமக்கு எந்த இடத்தில் அடிக்கவேண்டுமென்று போதித்து வழிக்காட்டுவதற்கு அவரை அனுமதிக்க வேண்டும்.

நான் வெளியே சென்று ஒரு கோடாரியைப் பெற்று இந்த மரத்தை வெட்டித் தள்ளுவதற்கான வேலையை ஆரம்பித்தேன். நான் முப்பது நிமிடமாக என் சக்தி முழுவதையும் செலவழித்த பின்பும் கூட அந்த மரம் கீழே சாயாமல் எதிர்த்து நின்றது. எனக்கு நேரிட்டது

என்னவென்றால் வேர்வை வழிந்தது, கைகளிளெல்லாம் கொப்புளங்கள் வந்துவிட்டன. அங்கே தோட்டக்காரன் வந்தான். அவன் என்னை இரக்கம் நிறைந்த சிரிப்போடு ஒரு மாதிரியாகப் பார்த்தான். அவன் அந்தக் கோடாரியை எடுத்துக் கொண்டுபோய் அதைத் தீட்டினான். அவன் அந்த மரத்தை ஏளனமாகப் பார்த்தான். ஒரு குறிப்பிட்ட இடத்தைப் (ஒரு பிளவு அல்லது வெடிப்பு) பார்த்து கோடாரியால் நான்கு அல்லது ஐந்து முறை வெட்டினான். அந்த மரம் கீழே விழுந்தது. நான் எப்பொழுதும் இந்த அனுபவத்தை நினைத்துப் பார்ப்பேன், ஏனென்றால் நான் இரண்டு தவறுகளைப் புரிந்திருந்தேன். முதலாவது நான் மழுங்கிய கோடாரியை உபயோகித்தேன். இரண்டாவதாக நான் மரத்தைச் சரியான இடத்தில் வெட்டவில்லை. இருப்பினும் தோட்டக்காரன் தன்னுடைய அறிவையும் ஞானத்தையும் உபயோகித்து மரத்தை வெட்டி வீழ்த்திவிட்டான்.

நான் ஒரு போதகரான பொழுது அநேக முறை என்னுடைய போதகத்தில்கூட இதே முறையில் நடந்து கொண்டேன் என்பதைப் பார்த்து நான் மனதில் குற்ற உணர்வு உள்ளவனாக இருப்பேன். சில வேளைகளில் போதகர்கள் மழுங்கிய கோடாரிகளை உபயோகிக்கின்றனர். மற்ற வேளைகளில் அவர்கள் கூர்மையான கோடாரிகளை உபயோகித்தாலும் அவர்கள் மரத்தைச் சரியான இடத்தில் வெட்டுவதில்லை. நான் ஒரு சம்பவத்தை நினைவு கூருகிறேன். நான் அமெரிக்காவிலுள்ள ஒரு 'அசெம்பிளி ஆப் காட்' ஆலயத்தில் பேசினேன். மேலும் ஒரு வாரத்திற்கு வெற்றிகரமான கூட்டங்கள் நன்கு நடைபெற்றன. அதேபோல கனடாவிலுள்ள ஒரு பெந்தெகோஸ்தே ஆலயத்தில் பேசவும் நான் அழைக்கப்பட்டேன். நான் மனதிலே முன்பு பேசிய அதே பிரசங்கங்களை வரிசைப்படுத்திப் பேசினால் போதும் என்று நினைத்தேன், அதைக் குறித்து ஒத்துக்கொள்வதற்காக நான் வெட்கம் அடைகிறேன். நான் அதே பிரசங்கங்களை அடிப்படையாகக் கொண்டு சில மாறுதல்களை உண்டாக்கி நிலத்தை உழுது மண்ணால் நிரப்புவது போல நிரப்பிவிட்டேன். அங்கு ஒரு விளைவும் ஏற்படவில்லை - ஒன்றுமே இல்லை. கடைசி நாளில், சில வருடங்களுக்கு முன்பாக அவர்கள் ஆலயத்தில் சபையாருக்குள் ஒரு பிளவு ஏற்பட்டதை கண்டுபிடித்தேன். அவர்களுக்குள் எதையோ குறித்து வாக்குவாதமும் சண்டையும் ஏற்பட்டது. அங்கு வலதுபக்கத்திலுள்ள இருக்கைகளில்

அமர்ந்திருப்பவர்கள் இடது பக்கத்திலுள்ள இருக்கைகளில் அமர்ந்திருப்பவர்களோடு ஒருபோதும் பேசமாட்டார்கள். அவர்கள் கோயிலுக்குள் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் பேசுவதே இல்லை. அவர்கள் தெருக்களில் சந்தித்தால் கூட ஒருவரையொருவர் பார்த்துப் பேசுவதே இல்லை. தீர்க்கதரிசி எலியாவே பரலோகத்திலிருந்து வந்து அவர்களிடத்தில் போதித்திருக்க வேண்டும். அவர்கள் ஒருவருக்கொருவர் ஒப்புரவாகும் வரைக்கும் அவர்களில் எந்தவித மாற்றமும் ஏற்படாது.

நான் தேவனிடத்தில் அமர்ந்திருந்து காத்திருந்தேனேயாகில் நான் பரிசுத்த ஆவியின் ஞானத்தினால் வழிநடத்தப்பட்டிருப்பேன். அவர் எனக்கு சரியான தேவசெய்தியைக் கொடுக்கும்படி அருளிச் செய்திருப்பார் என்பது உறுதி. ஆனால் நான் அங்கு நின்று, ஒருவாரகாலமாக மழுங்கிய கோடாரியை வைத்து வெட்டித்தள்ள முயற்சித்திருக்கிறேன். மரத்தை ஒருபோதும் வெட்டி வீழ்த்த முடியவில்லை ஆனால் நான் நிறைய கொப்புளங்களைத்தான் பெற்றுக்கொண்டேன். இந்த கடினமான வழியைக் கற்றுக்கொண்டேன்.

நாம் கோடாரியைத் தீட்டிக் கூர்மையாக்குவதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். தேவன் நமக்கு எந்த இடத்தில் அடிக்க வேண்டுமென்று போதித்து வழிகாட்டுவதற்கு அவரை அனுமதிக்க வேண்டும். அநேகமுறை நான் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படும்பொழுது, நான் சிலவற்றைச் சொல்லிவிட்டு, எனக்குள்ளே நான் கேட்டுக் கொள்வேன். இதற்காக நான் என்ன சொல்ல வேண்டும் என்று. ஆனால் அது மரத்தைக் கீழே தள்ளிவிட்டது என்பது நிச்சயம். பின்பு ஜனங்கள் அடிக்கடி என்னிடத்தில் வந்து அதை சொன்னது ஞாபகம் இருக்கிறதா? என்பார்கள். நான் சொல்லுகிறேன், இல்லை நான் அதை சொன்னதாக ஞாபகம் இல்லை. நான் அதைச் சொல்ல நினைக்கவில்லை என்பேன். அவர்கள் பதிலுரைக்கிறார்கள் "நல்லது" அது தான் என்னோடு பேசியது என்பார்கள். பரிசுத்த ஆவியானவர் அதை ஒரு ஞானத்தின் வார்த்தையாக எனக்குக் கொடுத்திருக்கிறார்.

ஞனத்தைப் போதிக்கும் வசனம், அன்றாட ஞானத்தோடு போட்டி போடுதல்:

இதோடுகூட ஞானத்தைப் போதிக்கும் வசனமானது தேவன் நமக்குக்

கொடுக்கும் அன்றாட ஞானத்தைப் போன்றதல்ல என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அங்கே ஒரு மிகவும் விலைமதிப்புள்ள வாக்குத்தத்தம் யாக்கோபு 1:5இல் உள்ளது. *"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும்."* உங்களுடைய முக்கியமான வேலைகளுக்கும் மற்றும் பொறுப்புகளுக்கும் இவற்றைச் செய்வதற்கு உங்களுடைய அன்றாட வாழ்வில் ஞானத்தில் குறைவுபட்டால் நீங்கள் கேட்கலாம், கேட்டால் அவர் கொடுப்பதாக வாக்களித்துள்ளார். மூடத்தனத்தைப்பற்றி சொல்லுவதற்கு வேதாகமத்தில் ஒரு நல்ல வார்த்தை கூட இல்லை. தேவன் நாம் மதியீனமாக இருப்பதை விரும்புவதில்லை. நாம் மற்றவர்களால் மூடர்களாக்கப்படுவதையும் கூட.

உங்களுடைய வேலையிலே உங்களுக்கு ஏதாவது சங்கடம் இருந்தால் அல்லது நீங்கள் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உங்களுடைய ஞானம் போதுமானதாக இல்லாவிட்டால் நீங்கள் தேவனிடத்தில் சென்று அவரிடத்தில் அன்றாடத் தேவைக்கான ஞானத்தைக் கேட்க உரிமையுடையவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் இவற்றைச் சிறந்தமுறையில் செய்வதற்கும் அந்தச் சூழ்நிலையைச் சமாளிப்பதற்கும் அது உதவியாயிருக்கும். அந்த உதவி இல்லாமல் நீங்கள் செய்வதற்கும் அந்த உதவியுடன் நீங்கள் செய்வதற்கும் வித்தியாசமிருக்கும். இந்த விதமான ஞானமானது பொதுவாக ஞானத்தைப் போதிக்கும் வசனத்தின் மூலமாக வரும். இந்த ஞானம் பொதுவாக ஞானத்தைப் போதிக்கும் வசனத்தின் வடிவில் வராது. இருப்பினும் அது படிப்படியாக உனது மனதில் ஒரு ஞானதிருஷ்டி அல்லது ஞானஒளியாக வரும். அதன் மூலமாக நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று அறிந்து கொள்வீர்கள்.

ஞானத்தைப் போதிக்கும் வசனம் விளக்கப்படுதல்

ஞானத்தைப் போதிக்கும் வசனமாகிய வரம் என்றால் என்ன? அது தேவனுடைய முழு ஞானத்தின் மிக மிகச் சிறிய ஒரு பகுதியாகும். அது

பரிசுத்த ஆவியினால் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நேரிடையாக அனுப்பப்படுகிறது. "*ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும்,*" (1 கொரிந்தியர் 12:8)

தேவன் அனைத்து ஞானத்தையும் உடையவராயிருக்கிறார். ஆனால் அதிர்ஷ்டவசமாக உங்களுக்கும் எனக்கும் அவர் அதை ஒரே நேரத்தில் ஒட்டுமொத்தமாகக் கொடுத்துவிடுவதில்லை. ஏனென்றால் அது முழுவதுமாக நம்மை அழுத்துவதாக இருக்கும். இந்த வரமானது இயற்கைக்கு அப்பாற்பட்ட வழியில் வழங்கப்படுவதாகும். ஏனென்றால் அதன் விளைவுகள் இயற்கையான முறையில் கிடைப்பதில்லை. அது பரிசுத்த ஆவியினால் வழங்கப்படுகிறது. நாமாகவே அதைப் பெற்றுக் கொள்ள முடியாது.

வேதத்தில் ஞானத்தைப் போதிக்கும் வசனத்தின் வெளிப்பாடுகள்

நாம் புதிய ஏற்பாட்டில் உள்ள சில அழுத்தமான உதாரணங்களை மீள்பார்வையாகப் பார்க்கவேண்டும். இந்த ஞானத்தின் வரம் எங்கு செயல்பட்டது என்பதைக் கவனிக்கலாம். முதலில் இயேசுவின் ஊழியத்தில் ஆரம்பித்து பின்பு ஆதித்திருச்சபையைப் பற்றிய உதாரணங்களுக்குச் செல்லலாம். இந்த வரம் உபயோகிக்கப்படும் விதத்தை நாம் காணலாம். அதனால் உண்டாகும் விளைவுகளையும் காணலாம். இயேசு கிறிஸ்துவில் ஐந்து ஊழியவரங்கள் அருமையாக விளக்கப்படுகிறது. அவர்கள் பூரணசற்குணரான அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பர்கள் மற்றும் போதகர்கள். இந்த ஊழியங்களில் பலவகையான இயற்கைக்கு மேலான வரங்கள் பரிசுத்த ஆவியினால் வழங்கப்பட்டு செயல்படுகின்றன. அவருக்குள் பழுதொன்றும் இல்லை என்பது வெளிப்படுகிறது.

மீனையும் மனிதர்களையும் பற்றிய ஞானத்தைப் போதிக்கும் வசனம்

முதலாவது உதாரணம் லூக்கா சுவிஷேத்திலிருந்து:

> "அவர் (இயேசு) போதகம்பண்ணி முடித்த பின்பு சீமோனை நோக்கி; ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப்

போடுங்கள் என்றார். அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆயினும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான். அந்தப்படியே, அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்றப் படவிலிருந்து கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும்படிக்குச் சைகை காட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள். சீமோன் பேதுரு அதைக்கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப்போகவேண்டும் என்றான். அவர்கள் திரளான மீன்களைப் பிடித்ததினிமித்தம், அவனுக்கும் அவனோடுகூட இருந்த யாவருக்கும் பிரமிப்புண்டானபடியினால் அப்படிச் சொன்னான். சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப்பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்."

(லூக்கா 5:4-10)

மெய்யைக் காணும்படி செய்தல் என்பது உண்மையான, இயற்கைக்கு மேலான ஞானத்தைப் போதிக்கும் வரத்தின் விளைவுகளில் ஒன்றாகும்.

இந்த விளைவு முற்றிலுமாக இயற்கைக்கு மேலானது ஆகும். முதலாவது இயேசு ஒரு தச்சராகப் பயிற்சி பெற்றவர், ஒரு அனுபவமிக்க மீனவனிடம் மீன்பிடிப்பதற்கு எங்கே ஆழத்தில் வலையை வீசவேண்டுமென்று சொல்லுவதற்குத் திறமையுடையவராயிருந்தார். பேதுரு மீன்பிடிப்பதின் மூலமாகவேத் தன் வாழ்வை நடத்தி வந்தான். இதுவே அவன் மீன் பிடிப்பதில் வல்லவன் என்பதற்குப் போதுமான ஆதாரமாகும். அவன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தான் இவன் கெனேசரேத்துக் கடலில் மீன் பிடித்தான். ஆனால் ஒன்று கூட அகப்படவில்லை. இயேசு அதிகாலையில் அங்கு வந்து, கடற்கரையில் உள்ள கூட்டத்திற்குப் போதித்தார். அவரது செய்தியின் முடிவில் அவர் சொன்னார், "*சீமோனே ஆழத்தில் தள்ளிக்கொண்டு உங்கள் வலைகளைப் போடுங்கள்*" என்பதாகும். அதற்குப் பேதுரு பதிலாக, "*ஐயரே இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆயினும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்*" என்றான். இது காலை

வேளையாயிருப்பதால் மீன் பிடிப்பதற்கு ஏற்ற நேரமல்ல என்றும் சொன்னான்.

இயேசு, அவனுக்கு எங்கே மீன் பிடிக்க வேண்டுமென்பதை ஒரு தெய்வீக வார்த்தையினால் நேரடியாக ஞானத்தைக் கொடுத்தார். அவன் அந்த வார்த்தையின்படி நடந்தால் வலை கிழிந்துபோகத்தக்க மீன்களைப் பிடித்தான். அவனது கூட்டாளிகளான யாக்கோபு, யோவான் ஆகியோருக்கும் படகுகளை வைத்திருந்ததால் அவனுக்கு உதவி செய்தார்கள். அவர்களது படகுகள் அமிழ்ந்துபோக ஆரம்பித்தால் எல்லா மீன்களையும் அவற்றில் போட முடியவில்லை.

இந்த அனுபவத்தின் பின் விளைவுவானது பேதுருவுக்குள் பயங்கரமான ஒரு ஆவிக்குரிய உணர்வை உருவாக்கியது. *“சீமோன் பேதுரு அதைக்கண்டு, இயேசுவின் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப்போகவேண்டும் என்றான்.”* உணர்வடைதல் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானத்தைப் போதிக்கும் வசனத்தை உபயோகிப்பதில் உண்டாகும் பலவகை விளைவுகளில் ஒரு உண்மையான விளைவாகும். ஞானத்தைப் போதிக்கும் வசனம் அறிவை உணர்த்தும் வசனம் ஆகிய இரண்டு வரங்களும் ஒரேவகையான உணர்வினை உண்டாக்குகிறது என்பதை நான் கண்டுள்ளேன். இந்த தீடீர் உணர்வைப்பற்றி தேவன் எல்லாவற்றையும் அறிவார், அவருக்கு முன்பாக எதையும் மறைக்க முடியாது என்பது அறியப்படுகிறது. அது ஒரு பாவியினுடைய பிடிவாதம், மேட்டிமையான இருதயம் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட வழியில் உடைத்துவிட முடியும்.

மீன்பிடிப்பதில் ஞானத்தைப் போதிக்கும் வசனமானது இயற்கையாக செயல்படுவது மட்டுமல்லாமல் அதோடுகூட ஆவிக்குரிய வகையிலும் செயல்படுகிறது. உடனடியாக பேதுருவின் பேச்சிற்குப் பின்னர் இயேசு அவனிடத்தில் *‘‘பயப்படாதே, இது முதல் நீ மனுஷரைப்பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்.”* (வசனம் 10) அவர்களுக்கு தேவைப்பட்டால் இயேசு நேரிடையாக அவர்களுக்கு மீன்பிடிப்பதில் ஞானத்தைக் கொடுப்பாரென்றால், அவர்கள் போதிக்க ஆரம்பித்து மனுஷரைப் பிடிக்கிறவர்களாவதற்கு எவ்வளவு அதிகமான ஞானத்தை கொடுக்க வேண்டும். நாம் ஒரு முக்கியமான உதாரணத்துடன்

ஞானத்தைப் போதிக்கும் வசனத்தைப்பற்றிப் பார்ப்போம். பேதுரு எங்கு எப்படி மீன்பிடிக்க வேண்டுமென்று ஆலோசனை பெற்றார். எப்படி எங்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்யவேண்டுமென்று பேதுரு, யாக்கோபு, யோவான் வழிநடத்தப்படுவர்.

இயேசு கிறிஸ்துவின் இந்த விளக்கத்தின் மூலமாகப் பெற்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட ஞானமானது, நான் இந்த மனிதர்கள் தங்களுடைய எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்தொடரச் செய்தது. *"அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்."* (வசனம்11) இவருக்கு உலகத் தளத்தில் இப்படி பதில் கிடைக்குமென்றால் இவரைப் பின்பற்றுவது பாதுகாப்பானது என நினைத்திருக்கக் கூடும்.

பயணம் செய்வதைப்பற்றிய ஞானத்தைப் போதிக்கும் வசனம்

அடுத்த உதாரணம் மத்தேயு 21:1-7 வசனத்திலிருந்து வேதம் சொல்லுகிறது.

> அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்து, ஒலிவமலைக்கு அருகான பெத்பகேயுக்கு வந்தபோது, இயேசுவானவர் சீஷரில் இரண்டுபேரை நோக்கி: "உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால்: 'இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்;' உடனே அவைகளை அனுப்பிவிடுவான்" என்று சொல்லி, அவர்களை அனுப்பினார். "இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்" என்று, தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. சீஷர்கள் போய், இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்து, கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை ஏற்றினார்கள்.

இயேசு எருசலேமுக்குள் செல்லும் வெற்றி பவனியின் ஆரம்பமாகும். இதுதான் குருத்தோலை ஞாயிறு ஆக ஆசரிக்கப்படுகிறது. சகரியா 9:9இல் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாக இவ்வாறு நடந்தது என்பதைப் பார்ப்பது மிகவும் முக்கியமானதாகும். வேதத்தின் வழியாகவும் பரிசுத்த ஆவியின் மூலமாகவும் இயேசு அந்த

நாளுக்குரிய தேவனுடைய சித்ததத்தை அறிந்திருந்தார். அங்கே ஒரு கழுதையும் ஒரு கழுதைக்குட்டியும் அவர் பவனியாக ஏறிச்செல்ல அவசியம் என்பதை அவர் அறிந்திருந்தார். அவை எங்கே கிடைக்கும் என்பதை அவர் அறிந்திருந்தபடியால் அவர் தன்னுடைய சீஷர்களில் இரண்டு பேருக்கு அதைச்சொல்லி அனுப்பினார்.

அநேக மக்கள் தங்களது கழுதையையும் கழுதைக்குட்டியையும் நீங்கள் "தேவனுக்கு இவை வேண்டும்" என்று நீங்கள் கேட்டதற்காக அவற்றை அவிழ்த்துக் கொண்டு போங்கள் என்று அனுமதி அளிக்கமாட்டார்கள். இருப்பினும் இது தெய்வீகமான நேரிடையாகச் செயல்படும் ஞானமாகும். மேலும் தேவன் இவற்றின் சொந்தக்காரர்கள் அல்லது உரிமையாளர்களின் இதயத்தை அதற்கு ஏற்றுக் கொள்ளும்படிச் செய்தார். இந்த ஞானத்தைப் போதிக்கும் வசனத்தின் விளைவுகளால் ஒரு செயல்படுத்த வேண்டிய தேவையைச் சந்திக்க முடிந்தது. மேலும் இருதயங்களையும் திறக்க முடிந்தது.

இந்த ஞானத்தைப் போதிக்கும் வசனம் இயேசுவின் அறிவிலிருந்து எழுந்தது என்பதை நான் அழுத்தமாகக் கூறுகிறேன். வெளிப்படுத்தும் வரங்களில் வேதத்தின் அறிவு அடிப்படையாக அமைகிறது.

ஊழியத்தைப்பற்றிய ஞானத்தைப் போதிக்கும் வரம்:

நம்முடைய அடுத்த உதாரணமானது ஒரு மிகவும் அவசரமான பிரச்சனையை ஞானத்தைப் போதிக்கும் வசனம் தீர்த்து வைக்கிறது. அப்போஸ்தலர் 6ஆம் அதிகாரம் ஒரு கருத்து வேற்றுமையானது ஆதித்திருச்சபையை அராமிய மொழிபேசும் யூத கிறிஸ்தவர்கள் அல்லது எபிரெயமொழிபேசும் எபிரெயர்கள் என்றும் கிரேக்க மொழி பேசும் யூத கிறிஸ்தவர்களென்றும் இரண்டு பிரிவாகப் பிரிந்து செல்லக்கூடிய பயமுறுத்தல் ஏற்பட்டது.

> அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகின போது, கிரேக்கரானவர்கள் தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். அப்பொழுது பன்னிருவரில் சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும்

நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்ககிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்தவேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்."

(அப்போஸ்தலர் 6:1-4)

ஆவிக்குரிய விஷயங்களில் முதல் முக்கியத்துவம் வாய்ந்தது ஜெபமும், தேவவசனத்தைப் போதிக்கிறதுமாகும். இதற்காகவே பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். இவைகள் இரண்டாம் தரமானவைகளே. தேவனுடைய வார்த்தையை பிரசங்கம் செய்து, ஜெபஊழியம் செய்வோர், அன்றாடம் நடைபெறும் பிரச்சனைகளை மேற்பார்வை செய்து கொண்டு இருப்பது, மையமான பணியை விட்டுவிட்டு, பக்க பாதையில் செல்வது போல் உள்ளது. அதனால், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலருக்கு ஒரு ஞானத்தின் வார்த்தையைக் கொடுத்தார். அவர்கள் அவர்களின் ஆதார ஊழியத்திலேயே நிலைத்திருக்க வேண்டும். மற்ற விசுவாசிகள் தங்கள் சபைமக்களிடமிருந்து எழும்ப மனிதர்களை பெயர் குறிப்பிட வேண்டும். அப்போஸ்தலர் அவர்களை உணவு போன்ற வெகுமதியாக பெற்ற பொருட்களை பங்கீடு செய்வதை மேற்பார்வை செய்ய வேண்டும்.

ஞானத்தின் வார்த்தைகள் விவாதங்கள், பிரச்சனைகள் மற்றும் குழப்பங்களை தீர்த்துவைத்து, ஒருமனப்பாட்டைக் கொண்டுவருகின்றன.

ஞானத்தின் வார்த்தைகள் அப்போஸ்தலர் 6:5 ஞானத்தின் வார்த்தை மக்களின் பதிலை நமக்குத் தருகிறது. இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. இது ஓர் ஞான வார்த்தைக்கு கிடைக்கும் மற்றொரு விழைவு. தேவனுடைய மக்கள் உடனடியாக 'அது சரிதான், அது பிரச்சனையைத் தீர்க்கிறது. அதைத்தான் நாம் செய்ய வேண்டும்.' ஞானத்தின் வார்த்தைகள் விவாதங்கள், பிரச்சனைகள் மற்றும் குழப்பங்களை தீர்த்துவைத்து, ஒருமனப்பாட்டை கொண்டுவருகின்றன.

ஏழு மனிதர்களை, கைம் பெண்களுக்கு பகிர்ந்தளிப்பதை மேற்பார்வையிட சபை தெரிந்தெடுத்தது. *''தேவ வசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும்*

பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்கு கீழ்படிந்தார்கள்." (வசனம் 7) நடைமுறை பிரச்சனையை தீர்த்து வைக்காவிடில், இது நடைபெற்றிருக்காது. ஏன் எனில் தொடர்ந்து பிரிவினையும், எமாற்றமும், பொறாமையுமே இருந்திருக்கும். தேவனின் ஆவியின் அசைவாடுதலும் தடைபட்டிருக்கும். இது ஓர் நடைமுறை பிரச்சனை மட்டுமல்ல. இது முக்கியமான ஆவிக்குரிய விழைவுகளையும் ஏற்படுத்தக்கூடியது. ஞானத்தின் வார்த்தையே அதை தீர்த்து வைத்தது.

ஒரு சாலை ஒரு இரதம் பற்றிய அறிவை உணர்த்தும் வார்த்தை

அப்போஸ்தலர் 8ஆம் அதிகாரத்தில் பிலிப்பு அப்போஸ்தலன், அதாவது பின்னர் சுவிசேஷகர் பிலிப்பு என்னப்பட்டவரின் ஊழியத்தில் நமக்கு ஓர் நல்ல உதாரணம் கிடைக்கிறது. ஆவிக்குரிய உலகத்தில் உள்ள இந்த உதாரணம், சரீர பிரகாரமாக உள்ள உலகத்தில் இயேசு, தம் சீடர்களை எங்கே மீன் பிடிக்க வேண்டும் என்று கூறியதற்கு ஒப்பாய் இருக்கிறது.

> பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி; "நீ எழுந்து, தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசாப் பட்டணத்துக்குப் போகிற வனாந்தர மார்க்கமாய் போ என்றான்." அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து; ஊருக்குத் திரும்பிப் போகும் போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதிரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஆவியானவர்; "நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள்" என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப் போய் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: ''நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான்."
>
> *(அப்போஸ்தலர் 8:26-30)*

இக்கதைக்கு பிண்னணியம் என்னவென்றால் சமாரியா பட்டணத்தில் தேவன் ஒரு பெரிய அசைவின் மத்தியில் பிலிப்பு இருந்தான் என்பதே. திரள் கூட்ட மக்கள் மனம் திரும்பினார்கள். அநேக அற்புதங்களும், அதிசயங்களும், அடையாளங்களும் நடந்தன. தீடீரென்று ஒரு தூதன் ஒரு செய்தியோடு வந்தான். 'எருசலேமிலிருந்து காசாவுக்கு செல்லும்

பாதையில் புறப்பட்டுபோ.' இந்த பாதை வனாந்திரமாக இருந்தது. இங்கே சபைமக்கள் கிடையாது. பாலைவனத்தில் பிரசங்கிக்கப்படுவதற்கு யாருமில்லை. அங்குப் போய் என்ன பயன்? ஆனாலும் பிலிப்பு ஒன்றும் வினவவில்லை, கீழ்படிந்திருந்தான். இந்த பாதையில் அவன் பிரயாணம் செய்யும்போது, இரதத்திலே இருந்த ஒரு அண்ணகரை சந்தித்தார். அவர் எத்தியோப்பியா நாட்டின் ஒரு உயர் அரசு அதிகாரி. அவர் யூதமார்க்கத்திற்கு மாறின ஒரு பக்தியான மனிதர். அவர் எருசலேமுக்கு ஆராதிக்க வந்தார். ஏசாயா புத்தகத்தைச் சத்தமாக வாசித்துக் கொண்டே தன் தாய் நாட்டிற்கு பயணித்துக் கொண்டிருந்தார்.

பரிசுத்த ஆவியானவர் பிலிப்புவை இரதம் மட்டும் போகச் சொன்னார். பிலிப்பு பரலோக உத்திரவை பெற்றுக் கொண்டிருந்தார். இந்த வழிநடத்துதலால், தேவன் சந்திக்க வேண்டிய மனிதனின் அருகில் கொண்டுபோய்விட்டார். இவை எல்லாவற்றையுமே தேவன் ஆயத்தம் செய்தார். ஏசாயா ஐம்பத்தி மூன்றாம் அதிகாரத்தில் அவன் வாசித்தவைகளுக்கு பதிலை அறிய ஆவலாய் இருந்தான். அது இயேசு கிறிஸ்துவின் பாவ நிவாரணத்தைப் பற்றிய மிக பெரிய தீர்க்கதரிசனமாகும். பிலிப்பு அவனுக்கு இரட்சிப்பின் வழியை விளக்கிக்கூறினார்.

பிலிப்புவைப் பற்றிய கதை எனக்கு தெரிந்த ஒரு சகோதரிக்கு நடந்த ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்துகிறது. அவள் அட்லாண்டா விமான நிலையத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது ஹிப்பி என்று அழைக்கக்கூடிய ஒரு வாலிபனைப் பார்த்தாள். அவன் பிரகாசமாக கருஞ்சிவப்பு நிற உடை அணிந்திருந்தான். அவள் அவனிடம், பிலிப்பு, அண்ணகனுக்கு பேசின வார்த்தைகளை பேச உந்தப்பட்டாள். “நீ வாசிப்பதின் அர்த்தம் உனக்கு புரிகிறதா?” சிறிது நேரம் போராடி, இது முட்டாள்த்தனம் என்று எண்ணினாள். ஆனால் பரிசுத்த ஆவிக்கு இணங்கி அவ்வாலிபனிடம் கேட்டாள். “நீ வாசிப்பது உனக்கு புரிகிறதா?”

இந்நேரத்தில் அவன் எதையும் வாசித்துக் கொண்டிருக்கவில்லை. அவள் கேட்ட கேள்வியைப் பற்றி சம்பாஷனை தொடர்ந்தது. அவன் நியூ இங்கிலாந்தைச் சேர்ந்தவன். அவனது பெற்றோர் செல்வந்தரும், மிகவும் மதிக்கப்படத்தக்கவருமாய் இருந்தனர். ஆனால் அவன் வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டுபிடிக்க போராடினான்.

மேலோட்டமாக இல்லாததை காண விரும்பினான். தன் வீட்டிலிருந்து ஓடி வந்திருக்கிறான். ஹிப்பிகளின் கூட்டத்தில் சேர்ந்து அவர்கள் கடந்து செல்லும் அனுபவங்கள் மூலம் வந்திருந்தான். எந்த முன்னேற்றமும் அடைய முடியாமல், சில காலம் வனாந்தரத்தில், வாழ்க்கைக்கு தேவையான சில குறைவான பொருட்களோடே வாழ்ந்தான். புதிய ஏற்பாட்டை தவிர அவனிடம் வாசிக்க வேறொன்றும் இல்லை. அவன் புதிய ஏற்பாட்டை படித்துக் கொண்டிருக்கும்போது, உண்மையை அறிந்து கொள்ள ஆசையாயிருந்தேன். தான் என்ன செய்கிறோம் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிய வில்லை. ஆனாலும் புதிய ஏற்பாட்டை வாசித்தது அவன் மேல் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அவன் தன் வீட்டிற்கு போய், தன் பெற்றோரோடு ஒப்புரவாக வேண்டும் என தீர்மானம் பண்ணினான். தன்னிடம் தான் அணிந்திருந்த கருஞ்சிவப்பு நிறமுடைய சுத்தமான உடைமட்டும் தான் இருந்தது. அட்லாண்டா விமான நிலையத்திலிருந்து திரும்ப நியூ இங்கிலாந்து செல்ல விமானத்திற்காக காத்துக் கொண்டிருந்தான். வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டுகொள்ள இன்னும் முயற்சித்துக் கொண்டிருந்தான்.

அவன் வாசித்துக் கொண்டிருப்பது அவனுக்கு புரிந்ததா என்று அந்த சகோதரி கேட்டதின் நிமித்தம் அவன் தன் உள்ளத்தை திறந்து, புதிய ஏற்பாட்டை அறிந்து கொள்ள தன் போராட்டத்தைப் பற்றி அவளிடம் கூறினான். இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றி சுருக்கமாக அவளால் எடுத்துக் கூற முடிந்தது. அது அப்போஸ்தலர் நடபடியில் கூறப்பட்ட ஒரு சம்பவம் போன்றிருந்தது. ஞான வார்த்தையின் விளைவைப் பாருங்கள் - அந்த வாலிபன் ஒரு திறந்த இருதயமுள்ளவனாய் இருந்தான். அட்லாண்டா விமான நிலையத்திலுள்ள எல்லாரிலும், அந்நேரத்தில் ஒரு வாலிபன் சந்திக்கப்பட தேவையாய் இருந்தான். ஜென்ம சுபாவத்தில் உள்ள எவரும் அது யார் என்று கண்டுகொள்ள முடியாது. ஆனால் இந்த நேரடி ஞானத்தின் வார்த்தையால், இந்த சகோதரி சரியான நபருடன் பேசுவதற்கு வழிநடத்தப்பட்டாள்.

தேவன் இரட்சிக்க விரும்பின மக்களைப்பற்றி ஒரு ஞான வார்த்தை.

அப்போஸ்தலர் 10ஆம் அதிகாரத்தில் இந்த ஞானத்தின் வரம் தேவனின் ஊழியக்காரர்கள், அவர்கள் ஊழியத்தில் எப்போது, எங்கே செல்ல

வேண்டும் என்பதை வழிநடத்த உபயோகிக்கப்படுத்தப்படுவதை உதாரணமாகப் பார்க்கிறோம். கொர்நேலியு என்ற ரோம நூற்றக்கதிபதி செசரியா பட்டணத்தில் வாழ்ந்த தேவனின் மேல் உண்மையான நம்பிக்கை கொண்டவனாய் இருந்தான். அவன் ஒரு தேவதூதனிடமிருந்து வருகையைப் பெற்று, யோப்பா பட்டணத்தில் சீமோன் பேதுருவை காண மக்களை அனுப்பச் சொன்னான். அந்த மனிதர்கள் அங்கே போய்க் கொண்டிருக்கும் போது,

> ...பேதுரு ஆறாம் மணி நேரத்தில் ஜெபம் பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினான். அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான்; அதற்கு அவர்கள் ஆயத்தம் பண்ணுகையில், அவன் ஞான திருஷ்டியடைந்து, வானம் திறந்திருக்கிறதாகவும், நாலு முனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப் போல ஒரு விதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டு மிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும்: பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல ஆண்டவரே, தீட்டும் அசுத்தமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். அப்பொழுது தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக்கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
>
> *(அப்போஸ்தலர் 10:9-16)*

பேதுரு தனது சொந்த, சுபாவமான சித்தம், விருப்பம், பின்னணி மற்றும் பயிற்சிக்கு விரோதமாக தேவனால் இயக்கப்படுதல்

பேதுரு தன் சொந்த, சுபாவமான சித்தம், விருப்பம், பின்ணணி மற்றும் பயிற்சிக்கு விரோதமாக, ஒரு பிற இனத்தவர் வீட்டிற்கு சென்று, சுவிசேஷத்தின் செய்தியை கொண்டு செல்ல தேவனால் இயக்கப்படுகிறார். *"அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கபட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும், எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கும் தேவன் எனக்கு காண்பித்திருக்கிறார்."* (வசனம் 28)

இந்த ஆவிக்குரிய நுண்ணறிவுத் திறனும், பேதுரு கொர்நெலியு ஆட்களுடன் செல்ல சம்மதித்ததும், தேவனிடமிருந்து பெற்ற வழிநடத்துதலின் விளைவுவாகும். பேதுரு கொர்நெலியுவோடு, அவன் குடும்பத்தார், நண்பர்களுடன் பேசும்போது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் இறங்கி, அவர்கள் பல பாஷைகளில் பேசி, தேவனைத் துதித்தார்கள். இதன் விழைவு இயேசு கிறிஸ்துவின் சபைக்கு ஒரு பெரிதளவான, புதிய மக்கள் சேர்க்கப்பட்டனர். இதற்கு வழிவகுத்த ஞானம், ஜெபநேரத்தில் ஞானதிருஷ்டி வடிவில் பேதுரு தேவனிடத்திலிருந்து பெற்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட வார்த்தையே ஆகும்.

நியாயப் பிரமாணம் - கிருபையைப் பற்றிய ஞான வார்த்தை:

அப்போஸ்தலர் 15ஆம் அதிகாரத்தில் முழு எருசலேம் சபை ஒரு மிக முக்கியமான பிரச்சனையைக் குறித்து வாதிட்டார்கள் - புற ஜாதி மக்கள் மனந்திரும்பி சபையில் திரளாக சேரும் போது, அவர்கள் செய்யவேண்டியதென்ன?

> சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின் படியே விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்பட மாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள். அதினாலே அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டான போது, அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.... அவர்கள் எருசலேமுக்கு வந்து, சபையாராலும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டபோது, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை விருத்தசேதனம் பண்ணுகிறதும் மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள். அப்போஸ்தலரும் மூப்பரும் இந்த காரியத்தைக் குறித்து ஆலோசனை பண்ணும்படி கூடினார்கள். மிகுந்த தர்க்கம் உண்டான போது, பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி: சகோதரரே, நீங்கள் அறிந்திருக்கிறபடி புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக்கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னை தெரிந்து கொண்டார். (அப்போஸ்தலர் 15:1-2,4-7)

பவுலும், பர்னபாவும் முதல் மிஷனரி பயணம் சென்று, புறஜாதி, மக்கள் மத்தியில் அதிசயமான விளைவுகளைக் கண்டார்கள். தேவன் அவர்களோடு அற்புதமாக கிரியை செய்து அநேக அற்புதங்களையும், சுகம் பெறுவதையும் மனந்திரும்புதலையும் கண்டார்கள். அவர்கள் இந்த செய்தியோடு, எருசலேமுக்குத் திரும்பி வந்தபோது, பரிசேய பின்னணியுள்ள கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட யூதர்கள் முடிவாக இவ்வாறு கூறினார்கள். 'இந்த புறஜாதி மக்கள், கிறிஸ்தவர்களாக வேண்டுமானால், அவர்கள் மோசேயின் நியாயப் பிரமானத்தின் கீழ் வந்து விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும்.' புறஜாதியிலிருந்து மனமாற்றம் அடைந்து சபைக்குள் வருபவர்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்ற முடிவு, இயேசு கிறிஸ்துவினால் கிடைக்கும் இரட்சிப்பின் தன்மையைப் பற்றிய சில முக்கியமான கேள்விகளை எழுப்பின.

முதலாவதாக, அவர்கள் பேதுருவை கேட்டனர். அவர் தாம் தேவனால் கொர்நேலியுவின் வீட்டிற்கு அனுப்பப்பட்டதையும், அங்கு இயற்கைக்கு அப்பால் நடந்தவைகளையும் ஞாபகப்படுத்தினார்.

> இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல் அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்துச் சாட்சிகொடுத்தார்; விசுவாசித்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்.
>
> *(அப்போஸ்தலர் 15:8-9)*

அடுத்தப்படியாக, நாம் வாசிப்பது, "*அப்பொழுது கூடிவந்திருந்த யாவரும் அமைந்திருந்து, பர்னபாவும் பவுலும் தங்களைக் கொண்டு தேவன் புறஜாதிகளுக்குள்ளே செய்த அடையாளங்கள் அற்புதங்கள் யாவையும் விவரித்துச் சொல்ல கேட்டார்கள்.*" (வசனம் 12) மற்ற வார்த்தைகளில் கூறினால், தேவன் புறஜாதி மக்களுக்கு அவர்கள் செய்த ஊழியங்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட விதமாய் சாட்சி பகர்ந்தார் என பவுலும் சீலாவும் சொல்லிக்கொண்டு இருந்தனர். தேவன் செய்து கொண்டிருப்பதை, நாம் எதிர்க்க முடியாது. எனினும், இக்கேள்விக்கு அவர்கள் தீர்வு காணவில்லை.

> அவர்கள் (பவுலும் பர்னபாவும்) பேசி முடிந்தபின்பு, யாக்கோபு அவர்களை நோக்கி: சகோதரரே, எனக்குச் செவிகொடுங்கள். தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதல் முதல் அவர்களுக்குச் கடாட்சித்தருளின விதத்தை சிமியோன் விவரித்துச் சொன்னாரே. அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப் பின்பு, திரும்பி வந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்படுத்தி, அதை செவ்வையாக நிறுத்தவேன் என்று இவைகளையெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது.
>
> *(வசனங்கள் 13-18)*

யாக்கோபு ஞானத்தை போதிக்கும் வார்த்தையால் தொடர்ந்தார். ஆனால் பழைய ஏற்பாட்டை அவர் அறிந்திருந்ததின் மேல் அந்த ஞானத்தை ஆதாரமாக வைத்தார் என்று நாம் பார்க்க முடிகிறது. (ஆமோஸ் 9:11-12 ஐப் பார்க்கவும்) மறுபடியும், ஒரு ஞானவார்த்தை, தேவனுடைய வார்த்தையின் அறிவோடு இணைந்து செல்லும். இங்கே யாக்கோபினுடைய ஞான வார்த்தையைப் பாருங்கள்.

ஞான வார்த்தை எப்போதுமே தேவனுடைய வார்த்தையின் அறிவோடு இணைந்து செல்லும்.

> ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்க பண்ணலாகாதென்றும், விக்கிரகங்களுக்குப் பலத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்.
>
> *(அப்போஸ்தலர் 15:19-20)*

இந்த ஞானத்தின் வார்த்தை நான்கு சாதாரண தேவைகளை உள்ளடக்கின. கூடியிருந்த சபைக்கு முழு ஒருமைப்பாட்டைக் கொண்டு வந்தது.

அப்பொழுது தங்களில் சிலரைக் தெரிந்து கொண்டு பவுலோடும் பர்னபாவோடும் (இந்த செய்தியோடு) அந்தியோகியாவுக்கு அனுப்புகிறது அப்போஸ்தலருக்கும் மூப்பருக்கும் சபையாரெல்லாருக்கும் நலமாகக் கண்டது.

(வசனம் 22)

இது தான் அந்த செய்தி:

எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்க வேண்டுமென்பதே. அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள் மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக் கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள்.

(வசனம் 28-29)

இது எவ்வளவு சிறப்பானது என்பதை கவனியுங்கள். அநேக ஆயிரக்கணக்கான யூத விசுவாசிகள் எருசலேம் சபையில் கூடியிருப்பார்கள். இந்த விஷயத்தில் இதற்கு எதிரிடையாக உள்ளோரின் எண்ணிக்கையை கவனியுங்கள். எப்பக்கத்தினரும் விட்டுக் கொடுப்பதாக தெரியவில்லை. எனினும் பரிசுத்த, நேரடியான ஞான வார்த்தை வந்து, அதை முடித்துத் தந்தது. எதிர்க்கும் பிரிவினர்கள் பூரண ஒற்றுமைக்கு வந்து சேர்ந்தனர். அங்கே சமாதானம், அமைதி, ஒற்றுமை காணப்பட்டது. அதனால் ஆவிக்குரிய வளர்ச்சியும் ஏற்பட்டது. சுவிசேஷம் வெற்றியாய் முன்னேறிச் சென்றது என இவ்வதிகாரத்தின் இதர பகுதி கூறுகிறது. ஞான வார்த்தை எவ்வளவு முக்கியமானது என்பதை தெளிவாக இந்த உதாரணம் காட்டுகிறது.

இடத்தைப் பற்றி ஒரு ஞான வார்த்தை

ஊழியத்தை வழி நடத்த இயக்கும் ஒரு ஞானவார்த்தையின் இறுதி உதாரணத்தை பவுலின் இரண்டாவது மிஷனரி பயணத்தில் பார்க்கலாம். பவுலும் சீலாவும் இன்று சிறிய ஆசியா என்று அழைக்கப்படுமிடத்திற்கு சென்றனர். பவுலும் பர்னபாவும் முதல் மிஷனரி பயணத்தில் சென்ற இடங்களுக்குகெல்லாம் போய் வந்தனர். இப்போது எங்கு செல்வது என யோசித்துக் கொண்டிருந்தனர்.

> அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்து போன போது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு, மீசியா தேவமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களை போகவொட்டாதிருந்தார். அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய் போய், துரோவாவுக்கு வந்தார்கள். அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்து நின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக் கொண்டதாக இருந்தது. அந்த தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுபோகப் பிரயத்தனம் பண்ணி,
>
> *(அப்போஸ்தலர் 16:6-10)*

இது குறிப்பிடத்தக்கது. சிறிய ஆசியாவின் மேற்கு கடற்கரையில் ஆசியா மாகாணம் இருக்கிறது. இதை நோக்கி அவர்கள் போய்க் கொண்டிருக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் அங்கு செல்ல வேண்டாம் என சொன்னார். இயேசு தம் அடியவர்களுக்கு கூறினார் *"...நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்."* (மாற்கு 16:15). அவர்கள் இங்கேயிருந்து ஆசியா மாகாணத்திற்குப் போக முயற்ச்சித்துக் கொண்டிருக்கிறார்கள். வேண்டாம் என்று பரிசுத்த ஆவியானவர் கூறினார். பின்னர் கருங்கடலின் தெற்கு கரைக்கு வடபுறமாக பித்தினியாவுக்கு போகலாம் என நினைத்தார்கள். ஆனால் பரிசுத்த ஆவியானவர் வேண்டாம் என்றார். அவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் வடமேற்காய் நகர்ந்தார்கள். அவர்கள் மக்கெதோனியாவுக்கு போக வேண்டும் என தேவன் காண்பித்தார். அங்கே தேவனின் ஒரு பெரிய அசைவைக் கண்டார்கள்.

தேவனின் அசைவை அவர்கள் அனுபவித்தார்கள் ஏன் எனில் அவர்கள் அங்கே போகப் பணிக்கப்பட்டார்கள், கதவு திறந்திருந்தது. மக்களின் இருதயங்களும் திறந்திருந்தன. அவர்களுக்காக வழியும் ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது. இரண்டுதடவை இல்லை என்பதற்கான பதிலை ஏற்றுக் கொள்ள போதுமான அளவு கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருக்க வேண்டும். துரோவாவிற்கு போவதற்கு சிறிது காலம் பிடித்தது. அந்நேரங்களிலெல்லாம், அவர்கள் விசுவாசத்தோடு நடந்து

கொண்டிருந்தார்கள். இன்று கிரேக்க தேசத்தின் வட பாகமாகவுள்ள மக்கெதோனியாவுக்கு வரும்படி அழைத்த மனிதனின் தரிசனத்தை அவர்கள் கண்டார்கள். இவ்வாறே சிறிய ஆசியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு சுவிசேஷம் முதன் முறையாக கொண்டு வரப்பட்டது. சபையின் வரலாற்றிலே இது முக்கியமான மாற்றங்களில் ஒன்றாகும். பவுலுக்கும் வீலாவுக்கும் பின்வரும் பத்தொன்பது நூற்றாண்டுகளில் சபையின் வரலாறு எப்படி வளர்ச்சியுறப் போகிறது என்பதைப் பற்றி எந்த எண்ணமும் இல்லாதிருந்தது. சுவிசேஷத்தை பாதுகாத்து, வெளியே அனுப்பி, மிஷனரி ஊழியங்களை இறுதியாக அனுப்பினது ஐரோப்பாவே!

சுருங்கக் கூறின், வேதத்தின் அறிவின் வார்த்தையோடு ஒரு ஞானவார்த்தையும் சேர்ந்திருந்தது. தேவனுடைய சித்தத்தோடு இது வெளிப்படும் போது, இது இவ்வகையான விளைவுகளைப் பொதுவாக உண்டுபண்ணுகிறது: உணர்த்தப்படுதல், திறந்த இருதயங்கள், ஒற்றுமை, திறக்கப்பட்ட கதவுகள் மற்றும் ஆவிக்குரிய முன்னேற்றம் வளர்ந்தன.

காலம் குறிப்பது முக்கியமானது

ஞானத்தைப் பற்றி ஒரு இறுதியான குறிப்பைப் பார்ப்போம். பின்னர் தமது இரண்டாவது மிஷனரி பயணத்தில், ஆசியாவின் முக்கியமான நகரமாகிய எபேசு பட்டணத்திற்கு பவுல் சென்றார். அங்கே தான் பவுல், தமது முழு ஊழியத்தின் பெரிதும், அற்புதமுமான விளைவுகளைக் காண்கிறார். என்றாலும் பரிசுத்த ஆவியானவர் அங்கே போகவேண்டாம் என்று முன்பு கூறியிருந்தார். கால கட்ட அமைப்பு அத்தியாவசிமானது. பவுல் ஆசியாவிற்குப் போக வேண்டியது இருந்தது. ஆனால் அவர் முன்பாக போக நினைத்த காலத்தில் அல்ல. மக்கள் சரியான இடத்தில் தவறான வேளையில் இருந்ததால் ஆயிரக்கணக்கான டாலர்களை வீணாக்கி வாழ்வில் ஊழியத்தில் சோர்ந்து போயினர். அவர்களுக்கு தெய்வீக நேரிடையான ஞானம் இல்லை. சாலொமோன் சரியான காலத்தின் முக்கியத்துவம் அறிந்து நமக்கறிந்த இந்த வசனங்களை எழுதியுள்ளார்.

> ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. பிறக்க ஒரு காலமுண்டு,

கள்

> இறக்க ஒரு காலமுண்டு; நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு; கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு; இடிக்க ஒரு காலமுண்டு, கட்ட ஒரு காலமுண்டு;
>
> *(பிரசங்கி 3:1-3)*

இந்த கேள்விக்கு எப்படி பதில் சொல்லுகிறோம்? சிலவற்றைப் உடைத்துப் போடுகிறோமா? அல்லது மேலாக கட்டுகிறோமா? நாம் நடுகிறோமா? அல்லது அறுவடை செய்கிறோமா? இது காலத்தைச் சார்ந்தது. ஞானத்தைக் குறித்து, எப்போதுமே முடிவாக ஆம் என்றோ அல்லது முடிவாக இல்லை என்றோ சொல்ல முடியாது. கால நிர்ணயம் தீர்க்கமானது. யார் சரியான வேளையைக் கூற முடியும்? பரிசுத்த ஆவியானவர். அவர் இதனைச் செய்யும் பிரதான முறை ஞானத்தை உணர்த்தும் வார்த்தையால்.

5 அறிவை உணர்த்தும் வசனம்

அறிவை உணர்த்தும் வசனத்தின் விளக்கம்

சென்ற அத்தியாத்தில், ஞானத்தைப் போதிக்கும் வசனம், தேவனுடைய முழு ஞானத்திலிருந்து ஒரு சிறிய பகுதியே, பரிசுத்த ஆவியினால் நமக்கு வழங்கப்படுகிறது என்று கூறியுள்ளேன். இதே போல அறிவை உணர்த்தும் வசனமும் இதற்கு இணையான விளக்கத்தைப் பெறுகின்றது. அதாவது அறிவை உணர்த்தும் வசனமும் தேவனுடைய முழு அறிவின் மிகக் குறைந்த அளவே பரிசுத்த ஆவியானால் நமக்கு வழங்கப்படுகிறது என்பதே. இது இயற்கைக்கு அப்பாற்பட்ட அறிவாகும்.

> “...வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,”
>
> *1 கொரிந்தியர் 12:8*

ஞானத்தைப் போதிக்கும் வசனத்தைப் போலவே இயற்கைக்கு மேற்பட்ட அறிவு இயற்கையின் உணருதலினாலோ, படிப்பினாலோ அல்லது பயிற்சியினாலோ வருவதில்லை. அது நேரிடையாக பரிசுத்த ஆவியினால் வழங்கப்பட்டு, தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழே செயல்படுகிறது. என்னுடைய சொந்த சித்தத்தினால் அதைச் செயல்படுத்த என்னால் அறிவை உணர்த்தும் வசனத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனக்கு அறிவு தேவைப்படுகிறது. நான் தேவனிடத்திலிருந்து அதைப் பெற்றுக்கொள்ள திறந்த மனதையுடையவனாக இருக்கவேண்டும். இருந்தாலும் அவர் தன்னுடைய கரங்களால் முழுமையாக அதை வழங்குகிறார்.

வேதத்தில் அறிவை உணர்த்தும் வசனத்தின் வெளிப்பாடு

புதிய ஏற்பாட்டிலிருந்து அறிவை உணர்த்தும் வசனத்திற்கான சில உதாரணங்களை நாம் காணலாம். இயேசுவின் ஊழியத்திலிருந்து திரும்பவும் நாம் ஆரம்பிக்கலாம். ஏனென்றால் இயேசுதான் பழுதற்ற பரிபூரணமான முன்மாதிரியானவர்.

குணநலனும் இடமும் குறித்து அறிவை உணர்த்தும் வசனம்

இந்த முதலாவது எடுத்துக்காட்டின் பின்னணியாவது, பிலிப்பு, நாத்தான் வேலை இயேசுவை சந்திக்க அழைத்தபோது பிலிப்பு இவர்தான் மேசியா என்று சொன்னான். இயேசு நாசரேத் ஊரிலிருந்து வந்தவர் என்று நாத்தான்வேல் அறிந்தபோது அவனால் எதையும் நல்லதாக எண்ணமுடியவில்லை. ஏனெனில் வாக்குரைக்கப்பட்ட மேசியா அந்த ஊரிலிருந்துதான் வருவார் என்பதாகும். எனவே நாத்தான்வேல் இயேசுவிடம் ஒரு சந்தேகமான கேள்வி எழுப்பக்கூடிய குறைகண்டு பிடிக்கும் மனநிலையோடு கொண்டு வரப்பட்டான்.

> “இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்.”
>
> *(யோவான் 1:47)*

இயேசு அவனிடம் உத்தம இஸ்ரவேலன் என்று சொன்னதை கவனியுங்கள். அவனை எந்த குணம் உத்தம இஸ்ரவேலனாக்கியது? அவனிடத்தில் வஞ்சகமும் கபடமும் இல்லை. நம்மில் அநேகர் அது ஒரு மனிதனிடத்தில் மிகவும் அரிதான காரியம் என்பதை ஒத்துக்கொள்வோம். இயேசு இந்த வாசகத்தை ஏன் சொன்னார் என்று பார்ப்போம்? இஸ்ரவேலரின் முற்பிதா இஸ்ரவேல் ஆவார். அவருடைய ஆரம்ப பெயர் யாக்கோபு. யாக்கோபு என்றால் எத்தன் என்றும், ஏமாற்றுக்காரன் என்றும் பொருள். இதுதான் யாக்கோபின் குணநலனாகும். இருப்பினும் தேவன் பலவருடங்கள் அவனை நடத்தினார். அவன் கர்த்தரிடத்தில் வாக்குவாதம் பண்ணினான். இதில்தான் அவனுடைய பெயர் இஸ்ரவேல் என்று மாற்றப்பட்டது.

இதன் அர்த்தமாவது“அவன் தேவனோடு ஒரு இளவரசனாக இருப்பான்“ என்பதாகும். யாக்கோபு குறுகிய மனப்பான்மை உடையவனாயிருந்து அடிப்படையான மாற்றம் பெற்றதால் இந்த மனப்பான்மை அவனிடத்திலிருந்து வெளியே வந்தது. ஆகவே யார் தன்னை ஒரு இஸ்ரவேலன் என்று சொல்லிக் கொள்கிறானோ அவனிடத்திலும் இந்த குறுகிய மனப்பான்மை யாக்கோபினடத்திலிருந்து பெற்றிருப்பான். ஆனால் இயேசு நாத்தான்வேலைப் பார்த்து “கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்கிறார்.”

இதன் காரணமாக நாத்தான் வேலின் என்னவென்றால் “அதற்கு நாத்தான்வேல் நீர் என்னை எப்படி அறிவீர்? என்றான். *“இயேசு அவனை நோக்கி: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே நீ அத்திமரத்தின் கீழ் இருக்கும்போது உன்னைக் கண்டேன் என்றார்”* இயேசு அவனை சாதாரண இயற்கையான பார்வையில் காணவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியின் ஒரு தரிசனத்தினாலோ அல்லது வெளிப்பாட்டினாலோதான் கண்டார். ஒருவேளை நாத்தான்வேல் அத்திமரத்தின் கீழ் ஜெபித்துக்கொண்டிருக்கலாம். அவனுடைய ஆச்சரியத்தில் அவன் நினைத்தது என்னவென்றால், அவனுக்கான ஒரு தனிப்பட்ட நேரத்தை இயேசு அறிந்திருந்தார். அவனுடைய பிரதிபலிப்பைக் குறித்துக்கொள்ளுங்கள். *“அதற்கு நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான்.”* (வசனம் 49) அவன் உடனடியான ஆழமான உணருதலை அனுபவத்தின் மூலம் பெற்றுக்கொண்டான். இந்த விளைவானது நாம் கவனித்தப்படி ஞானத்தைப் போதிக்கும் வசனத்தின் விளைவிற்கு ஒத்திருக்கின்றது.

அறிவை உணர்த்தும் வசனமானது குணமாக்குதலின் செயல்பாட்டிற்கு விசுவாசத்தைக் கொண்டுவருவதற்கு ஒரு கருவியாக உபயோகப்படுகிறது.

நான் அறிவை உணர்த்தும் வரத்தை அநேகமுறை கவனித்திருக்கிறேன். பொதுவாக அது இதே விளைவினை உண்டாக்குகிறது என்பதையும் நான் அறிந்திருக்கிறேன். இது அநேகமுறை குணமளிக்கும் ஆராதனைகளில் வெளிப்பட்டிருக்கின்றது. ஒரு போதகர் ஒரு மனிதனுக்கு, அவனுடைய வலி சரியாக எந்த பகுதியில் இருக்கிறது

என்றும் அதனுடைய தன்மை இன்னதென்றும் இயற்கையான முறையில் அறிந்து சொல்லாமல் ஆவியினால் உணர்த்தப்பட்டுச் சொல்லும்போது உடனடியாக அது உணர்வின் ஆவியைக் கொடுக்கிறது. இதுகூட அநேக முறைகளில் விசுவாசத்தை வர்த்திக்கச் செய்கிறது. ஏனெனில் ஜனங்கள், தேவன் இப்பிரச்சனை என்னவென்று தெரிந்திருக்கும்பொழுது பின்பு அவர் அதை சுகப்படுத்துவார் என்பதாகும். ஆகவே அநேக நேரங்களில் அறிவை உணர்த்தும் வசனமானது குணமாக்குதலின் செயல்பாட்டிற்கு விசுவாசத்தைக் கொண்டு வருவதற்கு ஒரு கருவியாக உபயோகப்படுகிறது.

தனிப்பட்ட வரலாற்றைப்பற்றிய அறிவை உணர்த்தும் வசனம்

அறிவை உணர்த்தும் வசனத்தைப் பற்றிய இரண்டாவது உதாரணம், இயேசு கிணற்றடியில் சமாரிய பெண்மணியைச் சந்தித்த, யாவரும் நன்கு அறிந்த ஒரு நிகழ்ச்சி. அவர் அவளிடத்தில் “தாகத்திற்குத்தா” என்று கேட்டு சம்பாஷனையைத் தொடங்குகிறார். அவள் ஆச்சரியமடைந்தாள். சம்பாஷணை தொடர்ந்தது. இயேசு அவளிடத்தில் ஜீவத்தண்ணீரைக் குறித்துப்பேசி, அதைப்பெற்றால் தொடர்ந்து கிணற்றில் தண்ணீர் இறைக்கத்தேவையில்லை என்று சொல்லி பேச ஆரம்பித்தார். இந்தக் கருத்தைப் பற்றிய அவர்களது உரையாடலை நாம் கவனிப்போம்.

> அந்த ஸ்திரீ அவரை நோக்கி: “ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டு கொள்ள வராமலிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்.” இயேசு அவளை நோக்கி: “நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்.” அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: “எனக்குப் புருஷன் இல்லை என்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில் ஐந்துபுருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார்.” அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி; “ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன்.”

இந்த பெண்மணி, இயேசு அவளுடைய கடந்த காலத்தைப் பற்றி அறிந்திருப்பது இயற்கையான சுபாவத்தால் அல்ல என்பதை நன்கு அறிந்திருந்தாள். அதைக் குறித்து அவர் பேசினபோது, அவள் தன்னைப் பாதுகாப்பதற்காகச் சொன்ன சொற்கள் தகர்ந்து போயின. அவள் சொன்னாள் “ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி” என்று.

இதற்கு சம்பந்தப்பட்ட ஒரு அனுபவம் எனக்கு ஏற்பட்டது. நான் இங்கிலாந்தின் லண்டனில் ஒரு தெருப் பிரசங்கத்தில் பிரசிங்கித்துக் கொண்டிருந்தேன். அங்கு நான் சமாரியப் பெண்மணியைப் பற்றியும் இயேசு கொடுக்கும் ஜீவத்தண்ணீரைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்தேன். இந்தக்கதையிலுள்ள கருத்தை நான் கூறிக் கொண்டிருந்தேன் நீங்கள் ஜீவத்தண்ணீரைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நீங்கள் உங்கள் வாழ்க்கையைச் சரியான முறையில் நடத்தவேண்டும் என்று நான் சொல்லி கடந்து சென்றேன். நான் இந்த சமாரியப் பெண்மணி எப்படி ஜீவத்தண்ணீரைப் பெற விரும்பினால் என்றும் ஆனால் அவள் தான் கணவனல்லாத வேறு ஒரு மனிதனோடு வாழ்ந்து கொண்டிருப்பதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை என்பதைப்பற்றிச் பேசினேன். நான் இந்தக் கருத்தை வலியுறுத்திப் பேசினேன். அப்பொழுது அங்கு இருந்த ஒரு இளம் பெண்மணி என்மேல் மிகவும் கோபம் கொண்டு என்னை அடிக்க வந்துவிட்டாள். ஏன்? ஏனென்றால் அவள் தனது கணவனை விட்டு ஓடிப்போய் மற்றொரு மனிதனோடு வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தாள். நிச்சயமாக நான் அவளது வாழ்க்கையைப்பற்றிப் பேசவில்லை ஒருகிணற்றடியில் சமாரியப் பெண்மணியிடம் இயேசு பேசியதைப் போல அதே தெளிவுடன் பேசினேன். இருப்பினும் அருகில் வரும்போது உடனடியாக அந்தப் பெண்மணியில் ஒரு உணர்தல் உண்டாகியது.

நேர்மையற்றதைப் பற்றிய அறிவை உணர்த்தும் வசனம்

ஒரு மனிதன் நிச்சயமாக அறிவை உணர்த்தும் வசனமாகிய வரத்தை வெளிப்படுத்துகிறவனாக இருந்தான். அவன்தான் அப்போஸ்தலனாகிய பேதுரு. அவன் தனது ஊழியத்தில் மிகவும் சாட்சியாக விளங்கினான். அப்போஸ்தலர் 5ஆம் அதிகாரத்தில் ஆதிசபையில் பேதுருவின் வரம் வெளிப்பட்ட ஆரம்ப நிகழ்ச்சி ஒன்றை நாம் காண்கிறோம். இதனுடைய சூழ்நிலை என்னவென்றால் அந்த காலத்தில் ஆதித்திருச்சபை விசுவாசிகளின் வாழ்வில் அவர்கள் தங்களுடைய நிலங்களையும், மற்ற உடைமைகளையும் விற்று அந்தப்பணத்தை சபையின் மற்ற பணிகளுக்கும், ஊழியங்களுக்கும் பயன்படும்படியாக, அப்போஸ்தலர்களிடம் கொண்டு வந்தார்கள்.

> அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒருபங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.
>
> *(அப்போஸ்தலர் 5:1, 2)*

நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தது அவர்களது பாவம் அல்ல. பாவம் என்னவென்றால் அவர்கள் முழுக்கிரயத்தையும் கொடுத்துவிட்டதாக நாடகம் ஆடினதேயாகும்.

> பேதுரு அவனை நோக்கி: "அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையா? அதை விற்றபின்யும் அதின் கிரயம் உன் வசனத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்திலல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்." அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனைவிட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயம் உண்டாயிற்று. வாலிபர் எழுந்து, அவனைச் சேலையில் சுற்றி, வெளியே எடுத்துக் கொண்டுபோய், அடக்கம் பண்ணினார்கள். ஏறக்குறைய மூன்றுமணி நேரத்துக்குப் பின்பு, அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல், உள்ளே வந்தாள். பேதுரு அவளை நோக்கி; "நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றான். அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்றாள்." பேதுரு அவளை நோக்கி: "கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ, உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது, உன்னையும் வெளியே கொண்டு போவார்கள் என்றான்." உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். வாலிபர் உள்ளே வந்து, அவள் மரித்துப்போனதைக் கண்டு, அவளை வெளியே எடுத்துக்கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையிலே அடக்கம் பண்ணினார்கள். சபையார் எல்லோருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும், மிகுந்த பயமுண்டாயிற்று.
>
> *(வசனம் 3-11)*

நான் அங்கிருந்திருந்தால் அதிக பயம் என்னைக்கவ்வியிருக்கும். அந்த வல்லமையைப் பற்றி நீங்கள் நினைத்துப் பாருங்கள். இந்த இரண்டு பேருக்கும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு மேலான அறிவின்

பிரசன்னத்திற்குள் வாழ முடியவில்லை. எத்தனை ஜனங்கள் இன்று தேவனை வஞ்சிக்க முயற்சி செய்கிறார்கள்? மேலும் தங்களை நல்லவர்களாகக் காட்டிக்கொண்டு, அவர்கள் உண்மையாகக் கொடுப்பதைவிட அதிகமாகக் கொடுப்பதுபோல் நடித்துக் கொண்டிருக்க முயற்சி செய்கிறார்கள்?

இது தேவனின் ஒரு எச்சரிக்கையான நியாயத்தீர்ப்பு. இதற்காக அவர் ஒவ்வொரு மாய்மாலக்காரனையும் இவ்விதமாகவே நடத்துகிறார் என்று அர்த்தம் அல்ல. ஆனால் இந்த நிகழ்வு, தேவன் மாய்மாலக்காரர்களைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதைக் காட்டுகிறது. அவர் மாய்மாலக்காரர்களை நடத்தும் முறைமை எப்பொழுதும் ஒரே மாதிரியாக இல்லாவிட்டாலும் அவர் அவர்கள்மேல் கொண்டுள்ள எண்ணம் மாறுபடுவதில்லை. சபையானது பரிசுத்ததைக் காத்துக்கொள்ளுவதற்கு இதுதான் உண்மையான ஒரே ஒரு வழியாகும். சில சபைகள் அவர்கள் அடிப்படையாக எதை நம்புகிறார்களோ அதையே சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் இவ்வாறான கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருப்பதை மற்ற மக்களும் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அனனியாவும் சப்பீராளும் எல்லாவற்றிற்கும் ஆமென் என்று சொல்லியிருக்கலாம். இருப்பினும் அவர்களால் நிலைத்து நிற்க முடியாத ஏதோ சிலகாரியங்கள் இருந்தன. அவர்கள் பொய்சொன்னார்கள். ஆனால் இயற்கைக்கு மேலான சர்வவல்ல தேவனின் அறிவானது அதை வெளிப்படுத்திவிட்டது. பேதுருவால் அறிய முடியாதவற்றை, அவருக்குள் (பேதுருவுக்குள்) இருக்கும் பரிசுத்த ஆவியானவர் அறிந்திருந்தார். இதன் விளைவாக அவன் அனனியாவிடத்தில் “நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய்'' என்றான்.

நம் ஒருவராலும் ஒருபோதும் ஏமாற்ற முடியாத ஒரு நபர் இருக்கிறார். அவர்தான் தேவன்.

நாம் உயிரோடிருக்கும் தேவனோடு இடைபடுகிறோம். வேதம் சொல்லுகிறது “*அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.*” (எபிரெயர் 4:13)

சபையின் அநேக அங்கத்தினர்களுக்கான பிரச்சனையாவது அவர்கள் தேவனோடுகூட செயல்படுகிறார்கள் என்பதை அரியாததேயாகும். அவர்கள் சபைநிர்வாகத்தினர், உதவிக்காரர்கள் அல்லது உதவிப் போதகர்கள் ஆகியோரோடு செயல்படுவதாக நினைத்துக்கொள்கிறார்கள். சிலவேளைகளில் எந்த போதகரையும் நாம் ஏமாற்ற முடியும். இருப்பினும் நம் ஒருவராலும், ஒருபோதும் ஏமாற்ற முடியாத ஒரு நபர் இருக்கிறார். அவர்தான் தேவன்.

தெரிந்துகொள்ளப்பட்ட தேவனுடைய ஊழியக்காரன் பற்றிய ஒரு அறிவை உணர்த்தும் வசனம்

நாம் அறிவை உணர்த்தும் வசனத்தைப்பற்றிய மற்றொரு உதாரணத்தை அப்போஸ்தலர் 9ஆம் அதிகாரத்தில் காணலாம். அவர்தான் தர்சுபட்டணத்தைச் சேர்ந்த சவுல். அவர் தமஸ்கு பட்டணத்திற்கு, அந்த பட்டணத்தில் இயேசுவை விசுவாசிக்கும் மக்களைச் சிறைப்பிடிக்கவும் அவர்களைத் துன்புறுத்தவும் சென்று கொண்டிருந்தார். சவுல் தமஸ்கு பட்டணத்தை நெருங்கிச் சென்று கொண்டிருக்கும்போது கர்த்தராகிய இயேசு அவரை ஒரு பிரகாசமான வெளிச்சத்தைக் காட்டி வழியில் நிறுத்தினார். அவர்தன்னை அவனுக்கு வெளிப்படுத்தினார். சவுலின் கண்கள் குருடாயின. அப்பொழுது கைலாகு கொடுத்து அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள்.

அனனியா என்றும் பேருள்ள ஒரு விசுவாசி தமஸ்குவில் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு அப்போஸ்தலனுமல்ல, அவன் ஒரு நற்செய்திப்பணியாளனுமல்ல. வேதம் "*அவனை ஒரு சீடன் என்று அழைக்கிறது*". (அப்போஸ்தலர் 9:10). போதகர்கள், சுவிசேஷகர்கள் மற்றும் கிறித்துவர்களைத்தவிர மற்றவர்களுக்கு வரங்களையும், வெளிப்பாடுகளையும் தேவன் கொடுக்கிறார் என்பதை சில மக்கள் நம்புவதில்லை. ஆனால் இங்கே நாம் காண்பது தேவன் அறிவை உணர்த்தும் வசனத்தை சீடனாகிய அனனியாவிற்குக் கொடுத்தார்.

> தமஸ்குவிலே அனனியா என்றும் பேருள்ள ஒரு சீஷன் இருந்தான். அவனுக்குக் கர்த்தர் தரிசனமாகி: ''அனனியாவே,'' என்றார். அவன்: "ஆண்டவரே, இதோ, அடியேன்" என்றான். அப்பொழுது கர்த்தர்: "நீ எழுந்து நேர்த்தெருவு என்னப்பட்ட தெருவுக்குப் போய், யூதாவின் வீட்டிலே தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனைத் தேடு; அவன்

இப்பொழுது ஜெபம்பண்ணுகிறான்; அனனியா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் தன்னிடத்தில் வரவும், தான் பார்வையடையும்படி தன்மேல் கைவைக்கவும் தரிசனங்கண்டான்" என்றார்.

(அப்போஸ்தலர் 9:10-12)

அனனியாவிற்கு சவுலுடைய சரியான பெயரும் முகவரியும் கொடுக்கப்பட்டிருந்தது. அதோடுகூட சவுல் தரிசனத்தில் என்ன பார்த்தான் என்பதையும் அனனியா அறிந்திருந்தான். அவன் பெற்ற அறிவை உணர்த்தும் வசனத்தில் நேரிடையான அறிவை உணர்த்தும் வசனமும் அடங்கியுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். அனனியா சென்று அவனது கரங்களை சவுலின் மேல் வைத்தால் அவன் பார்வையடைவான் என்பது தரிசனமாகும்.

முதலில் அனனியா போவதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. அவன் ஆண்டவரிடத்தில் எதிர்த்து நின்று, தமஸ்குவுக்கு இந்த மனிதன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்த வந்திருக்கிறான் என்றான். ஆனால் தேவன் அவனைப் போகும்படி வற்புறுத்தினார். "*அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாகளுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்.*" (அப்போஸ்தலர் 9:15) என்றார். அனனியாவின் கீழ்ப்படிதலினால் சவுல் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய முழுவிசுவாசத்திற்குள் வரும்படியான விளைவு ஏற்பட்டது. ஆதித் திருச்சபையில் தேவனின் செயல்பாடு மிகவும் கடுமையாக இருந்தது. ஏனெனில் அனனியா சவுலிடம் ஞானத்தோடும் அறிவோடும் போக முடிந்தது. "*அப்பொழுது அனனியா போய், வீட்டிற்குள் பிரவேசித்து, அவன் மேல் கையை வைத்து: சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகியக் கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான்.*" (வசனம் 17) சவுலின் இருதயம் உண்மைக்கு திறக்கப்பட்டது. சவுல், அப்போஸ்தலர் பவுலாக மாறினார். புறஜாதிகளின் உலகத்தில் அதிகமாக பவுல் சுவிசேஷம் அறிவித்தார். மேலும் அவர் புதிய ஏற்பாட்டின் பெரும்பகுதியையும் எழுதியுள்ளார்.

உறுதிபடுத்துவதற்கான அறிவை உணர்த்தும் வசனம்

முந்தின அத்தியாயத்தில் அப்போஸ்தலர் 10ஆம் அதிகாரத்திலுள்ள ஒரு

பகுதியில் ஞானத்தைப் போதிக்கும் வசனத்திற்கான எடுத்துக்காட்டைக் கண்டோம். பேதுரு ஒரு தரிசனத்தில் செசரியாவில் உள்ள புறஜாதியாருக்கு போதிக்கும்படி வழிநடத்தப்படுகிறார். இந்த ஞானத்தைத் தொடர்ந்து அறிவை உணர்த்தும் வசனமும் பின் வருகிறது. நான் சொன்னபடி இந்த இரண்டு வரங்களும் ஒன்றாக செயல்படுகிறது. பேதுருதரிசனம் கண்டபின்பு, செசரியாபட்டணத்திலுள்ள கொர்நேலியுவின் வீட்டிலிருந்து ஒரு மனிதன் வாயிலுக்கு வந்து கதவைத் தட்டிக் கொண்டிருந்தான். பேதுரு வீட்டின் மேல்தளத்தில் இருந்தான். அங்கு அவன் ஜெபித்துக் கொண்டும் கண்ட தரிசனத்தைப்பற்றுச் சிந்தித்துக் கொண்டும் இருந்தான். நாம் இவ்வாறு வாசிக்கிறோம்.

> பேதுரு அந்த தரிசனத்தைக் குறித்துச் சிந்தனை பண்ணிக்கொண்டிருக்கையில், ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். நீ எழுந்து, இறங்கி, ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போ; நானே அவர்களை அனுப்பினேன் என்று அவனுக்குச் சொன்னார். அப்பொழுது பேதுரு கொர்நேலியுவினால் தன்னிடத்தில் அனுப்பப்பட்ட மனுஷரிடத்திற்கு இறங்கிப்போய்: இதோ, நீங்கள் தேடுகிறவன் நான்தான், நீங்கள் வந்திருக்கிறகாரியம் என்ன என்றான்.
>
> *(அப்போஸ்தலர் 10:19-21)*

இயற்கையான முறையில் அறிந்து கொள்ளும் முன்பே அந்த மனிதர்கள் அங்கிருந்தார்கள். அவர்களை அனுப்பியது யார் என்று பரிசுத்த ஆவியானவர் அவனுக்குச் சொன்னார். அறிவை உணர்த்தும் வசனமானது அவன் முன்பு கண்ட தரிசனத்தை உறுதிப்படுத்தும் வகையில் செயல்பட்டது. இந்த கருத்தின்படி தேவன், பேதுருவை எழுந்து கொர்நேலியுவுக்கு பிரசங்கம்பண்ணப் போக வைப்பதற்கு அவனுக்கு அதிகமான அழுத்ததைக் கொடுக்க வேண்டியதிருந்தது. ஏனென்றால் இது அவனுடைய குணத்திற்கு முழுமையாக மாறுபட்டிருந்தது. அவனுடைய சுற்றுச் சூழலுக்கும் அது பொருத்தமானதாக இல்லை.

ஒரு புறஜாதியின் வீட்டிற்குச் செல்வதற்கு முடியாத அளவில் அவன் வளர்க்கப்பட்டிருந்தான். அதிலும் அங்கு சுவிசேஷம் சொல்லுவதும் அவனுக்குக் கடினமாக இருந்தது. ஆகவே ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனத்தோடு தொடர்ந்து வருகிறது. மேலும் அறிவை உணர்த்தும் வசனம், முதலில் வழங்கப்பட்ட ஞானத்தைப் போதிக்கும் வசனத்தின் உறுதிப்பாடாய் அமைகிறது.

எனது மனைவி லிடியா என்னைச் சந்திக்கும்முன்பு அவளுக்கு எருசலேமில் ஏற்பட்ட ஒரு விபத்தைப்பற்றிக் கூறினாள். அங்கே அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் கலகம் ஏற்பட்டது. தேவன் அவனிடம் ஒரு பெரிய ஆபத்துவரப்போகிறது என்று வெளிப்படுத்தினார். ஒரு இரவு தரிசனத்தில் அவளுடைய மாடிப்படியின் கடைசிப் படியில் இரத்தத்தைப் பார்த்தாள். அது வீட்டின் முதற்கதவிலிருந்து கீழே வடிந்து கொண்டிருந்தது. அவள் ஒரு சின்ன சிறுமியின் கையினால் பிடிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டாள். அச்சிறுமி அவளை கவனத்துடன் பார்த்துக்கொண்டாள். பின்பு இச்சிறுமி எங்களது தத்துப்புத்திரியாக மாறினாள். அவளுடைய பெயர் அன்னா அச்சிறுமி அவளை இரத்த வெள்ளத்திலிருந்து மேலே தூக்கிவிட்டாள். அங்கே ஒரு மனிதன் கொல்லப்பட்டிருந்தான். இந்த தரிசனத்தை அவள் கண்டவுடன் ஜெபிக்க ஆரம்பித்தாள். “தேவனே என்ன நடக்கப் போகின்றது என்பதை நான் அறியேன். ஆனால் நான் இந்த நிலையை அடைய வேண்டுமானால் எங்களைக் காப்பாற்றும் நீர் என்னோடுகூட இரும்” என்று ஜெபித்தாள். இரண்டு நாட்களுக்குப் பின்பு அவள் தரிசனத்தில் என்ன காட்சி கண்டாளோ அது அப்படியே நடந்தது. ஆனால் அவர்கள் பத்திரமாகக் காக்கப்பட்டார்கள். இதைப்போன்ற உறுதிப்பாடை ஒரு விசுவாசிக்கு தேவன் ஏற்கனவே இந்த சூழ்நிலையைப் பற்றி அறிந்திருந்து, தெரியப்படுத்துகிறார். அவர்களோடு அவர் கூட இருந்து அவர்களை எடுத்து நிறுத்தினார்.

ஆயத்தப்படுவதற்கான அறிவை உணர்த்தும் வசனம்

அப்போஸ்தலர் 20ஆம் அதிகாரத்தில் பரிசுத்த பவுல் எருசலேமுக்குப் போகும் வழியில் எபேசு சபையின் மூத்த உதவிப்போதகரை சந்தித்தான். அவர்களிடத்தில் அவன்

> இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபவத்திரங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்.
>
> *(அப்போஸ்தலர் 20:22, 23)*

நாம் இந்த விவரங்களை அறியோம். ஆனால் ஒவ்வொரு நகரத்திலும் பவுல் விசுவாசிகளை ஒன்றுகூடி சந்திக்கும் பொழுது எருசலேமில் அவனுக்குச் "கட்டுகளும் உபவத்திரங்களும்" காத்திருக்கிறது என்று பரிசுத்த ஆவியானவர் எச்சரித்தார் என்று சொல்லுவான்.

நாங்கள் கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்து வந்த பிறகு இதே போன்ற ஒரு அனுபவம் எனக்கும் ஏற்பட்டது. நான் டென்மார்க்கில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். தேவன் கொடுத்ததாக நான் உணர்ந்த ஒரு குறிப்பிட்ட பிரசங்கம் எனக்கு இருந்தது. அது என்னவென்றால் "அறுவடை நேரம் நமது கரங்களில் உள்ளது, அறுவடைக்கு நேரம் வந்துவிட்டது." நான் ஒரே ஒரு இறுதி சனி, ஞாயிறு நாட்களில் மூன்று அல்லது நான்கு சபையினர்க்கு அதே பிரசங்கத்தைப் பிரசங்கித்தேன். இதிலே குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால் ஒவ்வொரு சபையிலும் நான் அந்தச் செய்தியை முடித்தவுடன் அதனைத் தொடர்ந்து உடனடியாக அறியாத ஒரு பாஷை பேசபட்டு அதற்கு டேனிஷ் மொழியில் விளக்கமும் சொல்லப்பட்டது. அதன் விளக்கமாவது நான் பேசியதின் உண்மையை பரிசுத்த ஆவியானவர் சாட்சியாக விளக்கினார். அந்த சபையின் ஜனங்கள் சிறிது வேறுபட்டவர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளமாட்டார்கள். எந்த சம்பந்தமும் வைத்துக்கொள்ளவும் மாட்டார்கள். இருப்பினும் ஒவ்வொரு சபையிலும் பரிசுத்த ஆவியானவர் ஆவியின் வரங்களினால் சாட்சியாக நின்றார். இன்றைக்கும் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நிகழ்கின்றன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதை நான் விரும்புகிறேன்.

பரிசுத்த பவுல் எருசலேமுக்குத் தனது பயணத்தைத் தொடரும் பொழுது அவன் சிசெரா பட்டணத்தை அடைந்தான். இது தான் அவனுடைய பயணத்தின் இறுதிக் கட்டமாக அமைந்திருந்தது. அப்போஸ்தலர் 21ஆம் அதிகாரத்தில் பரிசுத்த பவுல் அகபு என்னும் தீர்க்கதரிசியின் மூலமாக மற்றொரு தீர்க்கதரிசனத்தைப் பெற்றுக்கொண்டான்.

நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்து, தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையுடையவனை

> எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக் கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான்.
>
> *(அப்போஸ்தலர் 21:10, 11)*

இங்கே இதோடுகூட இன்னொரு அறிவை உணர்த்தும் வசனம் இதே வரிகளில் உள்ளது. உன்னுடைய சொந்த ஜனங்களே உன்னைக் கட்டி உன்னை மறுதலித்து ரோமர்களின் கைகளில் ஒப்படைப்பார்கள். (புறஜாதிகள்) பரிசுத்த ஆவியானவர் எவ்வளவு கிருபையுள்ளவர் என்பதை நீங்கள் கவனித்தல் வேண்டும். தேவனுக்கு நாம் சிறைக்கைதிகளாக இருந்தால் நாம் அன்புக்கும் கைதிகளாவோம் பரிசுத்த ஆவியானவர் அகபுவை பவுலின் கைகளையும் கால்களையும் கட்ட விடவில்லை. ஆனால் தன்னுடைய கால்களையும் கைகளையுமே கட்டிக்கொண்டான். பவுல் இந்த துன்பத்துக்குள் காலடி எடுத்து வைக்கலாமா அல்லது வேண்டாமா என்று தீர்மானிப்பதைக் குறித்து அவனுக்கு விருப்பம் தெரிவிக்கும் உரிமை இருந்தது. அது அவனுடைய சொந்த சித்தமாயிருந்தது.

இங்கே நான் ஒரு சிலவற்றைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். ஒருவேளை நீங்கள் யூதர்களின் பண்பாட்டை அறிந்துகொள்ளாவிட்டால் இதைப்பற்றிப் புரிந்துகொள்ளமுடியாது. ஒரு யூதனுக்கு முழுமையான குற்றஞ்சுமத்துதலின் செயலாவது ஒரு யூதன் குற்றஞ்சுமத்தப்பட்டு புறஜாதிகளின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவான். இவ்வாறு முற்றிலுமாக இறுதியான, கீழ்த்தரமான செயலைச் செய்வார்கள். இதேபோலதான் இயேசுவின் மீதும் குற்றம் சுமத்தி அவரையும் பரிகசித்து புறஜாதிகளாகிய ரோமர்களின் கையில் ஒப்படைத்தார்கள்.

1947 மற்றும் 1948ஆம் ஆண்டுகளில் நானும் லிடியாவும் எருசலேமில் இருக்கும்பொழுது தீவிரவாதிகள் செயல்பட்டுக்கொண்டிருந்தனர். அவர்கள் மிகவும் மிருகத்தனமாக நடந்து கொள்வார்கள். தெருக்களில் சென்று கொண்டிருக்கும் ஜனங்களை அவர்கள் சுடுவார்கள். அவர்களுக்கு ஒருவரும் உதவி செய்யாதபடி தடுப்பார்கள். சுடப்பட்டவர்கள் இறந்து போகிறார்களா என்று கவனித்துக் கொண்டிருப்பார்கள். நான் இதைப் பற்றி ஒருதலைப்பட்சமாகப் பேசவில்லை. இவர்களில் அநேகரை மரியாதைக்குரிய யூதக் குடிமக்களுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் அதைப்பற்றி ஒன்றும்

சொல்லமாட்டார்கள். அவர்கள் ஒருபோதும் அவர்களைக் குற்றம் சுமத்தி பிரிட்டிஷாரிடமோ, அல்லது புறஜாதியாரிடமோ பிடித்துக் கொடுக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையை நீங்கள் தெரிந்து கொள்ளாவிட்டால் பவுலுக்கு நடந்ததைப்பற்றிப் பாராட்டமாட்டீர்கள். பவுலை அவருடைய சொந்த ஜனங்கள் குற்றம் சுமத்தி அவரை ரோமர்களிடம் ஒப்படைப்பார்கள் என்று கேட்பது ஒரு வெளிப்பாடாகும்.

இந்த அறிவை உணர்த்தும் வசனம் பவுலுக்குக் கொடுக்கப்பட்டதின் விளைவுகள் என்ன? அது அவனுடைய இருதயத்தை ஆயத்தப்படுத்துவதற்குரியதாகும். இதைப் போன்று எருசலேமுக்குப்போகும் வழியில் பலமுறை நடைபெற்றுள்ளது. அங்கே ஒரு பழமொழி உண்டு அது “முன்னெச்சரிக்கையானது முன்பே ஆயுதங்களைத் தரித்துக் கொள்வதற்கானதாகும்” அவனுக்கு எதிர் கொண்டு வருகிற பயங்கரமான துன்பத்திற்கு மனதளவிலும் ஆவிக்குரிய அளவிலும் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்காக ஆகும்.

அறிவை உணர்த்தும் வசனத்தின் விளைவுகள்

அறிவை உணர்த்தும் வசனத்தினால் அடிக்கடி உண்டாகும் விளைவுகளை நாம் இப்பொழுது சுருக்கமாகப் பார்போம். மிகவும் முக்கியமான விளைவு முதலாவதாக அது உண்மையை உணர்வதைக் கொண்டு வருகிறது. இரண்டாவதாக அது, மற்ற வழிகளின் மூலம் தேவன் காட்டும் சிலவற்றை உறுதிப் படுத்துவதாகும். மூன்றாவதாக ஒரு சில தருணங்களில் பின்னால் வரப்போகிற காரியங்களுக்கு நம்மை ஆயத்தப்படுத்துகின்றது.

ங்கள்

6 ஆவிகளைப் பகுத்தறிதல்

ஆவிகளைப் பகுத்தறிதல், வெளிப்பாடு என்பது வரங்களின் மூன்றாவது வகையைச் சார்ந்ததாகும். *“வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும்”* (1 கொரிந்தியர் 12:10) பகுத்தறிதல் என்பதின் அர்த்தத்தை நாம் சுருக்கமாகக் கவனிப்போம்.

பகுத்தறிதலின் விளக்கம்

பகுத்தறிதல் என்ற வார்த்தையை விளக்கும் பொழுது ‘அறிந்துகொள்ளுதல்’ மற்றும் ‘வேறுபாடுஅறிதல்’ இரண்டிற்குமிடையில், அறிவு என்பது உண்மையைக் கொடுப்பதாயிருக்கும்பொழுது பகுத்தறிதல் என்பது நேரடியான வடிவிலான வெளிப்பாடு ஆகும். இவற்றின் விளைவுகள் ஒரே வகையாக இருக்கலாம். ஆனால் அவைகளின் அர்த்தம் வேறாகும்.

பகுத்தறிதல் வித்தியாசமான வழிகளில் உண்டாகலாம். சில வேளைகளில் நீங்கள் உண்மையாக சில காரியங்களைப் பார்ப்பது போல ஒரு தரிசனமாக வரலாம். ஆனால் பார்ப்பது இயற்கையாக அங்கு இருக்காது. வேதத்திலுள்ள இரண்டு பொருத்தமான உதாரணங்களை நாம் இப்பொழுது பார்க்கலாம்.

முதலாவதாக யோவான் ஸ்நானகன் பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல இறங்குவதைப் பார்த்தார். ஆனால் அங்கே கூடியிருந்த மற்ற ஜனங்கள் சிறிதுகூட இதைக் காணவில்லை. ஆனால் யோவான் ஸ்நானகனுக்கு ஆவியானவரின் வெளிப்பாடு கொடுக்கப்பட்டது. (யோவான் 1:32-34 ஐப் பார்க்கவும்) இரண்டாவதாக வெளிப்படுத்தின விசேஷத்தில் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு ஒரு தரிசனம் கொடுக்கப்பட்டது. அதாவது மிருகத்தின் வாயிலும் வலுசர்ப்பத்தின் வாயிலும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வந்தன. (வெளிப்படுத்தின

விசேஷம் 16:13-14) அசுத்த ஆவிகளைக் கண்ணால் கண்டுள்ள அநேகமக்களை நான் சந்தித்துள்ளேன். அவர்கள் மிருகவடிவில் அதைக்கண்டுள்ளார்கள். அவைகளாவன நரிகள், எலிகள், வௌவால்கள், பாம்புகள் மற்றும் தவளைகள். இந்த மிருகங்களே அசுத்த ஆவிகள் என்று சொல்லவில்லை. ஆனால் இம்மிருகங்கள் வடிவில் அவைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஜனங்கள் இவ்வாறு தெளிவான தரிசனங்களைப் பார்த்தாலும் இயற்கையாக அவைகள் அங்கு இருப்பதில்லை என்பது சில உதாரணங்களாகும்.

இருப்பினும் நான் நினைக்கிறேன் ஆவிகளைப் பகுத்தறிதல் பொதுவாக விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. இருப்பினும் இப்படிப்பட்ட தரிசனங்கள் உண்டாகும். இவைகள் இயற்கையில் காணக்கூடியவைகள் தான். பொதுவாக வரும் இவைகளைப் பற்றி பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலால் தான் புரிந்து கொள்ள முடியும்.

அடிக்கடி, ஆவிகளைப் பகுத்தறிதலின் வரத்தை இவ்வாறுதான் பெற்று அனுபவப்பட்டுள்ளேன். நான் ஜனங்களை வெளிப்படையான தோற்றத்தில் பார்க்கிறேன். ஆனால் எப்படியாயினும் அவர்களைப்பற்றி சில முக்கியமானவற்றையும் கூட நான் பார்க்கிறேன். உதாரணமாக என்னுடைய ஒரு மிக நல்ல நண்பன். மிகவும் ஆச்சரியமான மனிதன், என்னிடத்தில் ஒரு உதவியை நாடி வந்தார். ஏனென்றால் அவர் தொடர்ச்சியாக புகை பிடிக்கும் பழக்கத்தை உடையவர். அவர் அதிலேயே மூழ்கி இருப்பவர். அவர் அதை விட்டுவிட விழைந்தார். ஆனால் அவரால் அது முடியவில்லை. அவரை புகைபிடித்தல் அடிமையாக்கியிருந்தது. நான் எல்லா வழிகளிலும் முயற்சித்து அவருக்கு உதவி புரிய நினைத்தேன். அவரை இப்பிரச்சனைக்காக ஒவ்வொரு கோணத்திலும் அணுகினேன். ஆனால் என்னுடைய உதவி ஒருபோதும் நிலைத்திருக்கவில்லை. அவர் இரண்டு வாரங்களுக்கு இப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறுவார், பின்பு திரும்பவும் பழைய பழக்கத்திற்குச் சென்று விடுவார். ஒருநாள் அவர் தொலைபேசியில் “நான் அங்கு வருகிறேன்” என்றார். அவர் பாதி தூரத்தைக் கடந்து வந்துவிட்டார். நான் அவருக்கு ஏதாவது ஒரு பதிலைச் சொல்ல வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். இதைத் தவிர அவருக்காக நான் செய்யக் கூடியது வேறு எதுவும் இல்லை. ஆகவே நான் “நாம் வெளியே சென்று பேசலாம்” என்று சொன்னேன். நாங்கள் ஒரு உணவு விடுதிக்குச் சென்று

அமர்ந்தோம். அவர் தான் சிறுவனாக இருக்கும்பொழுது நடைபெற்ற நிகழ்ச்சிகளைச் சொல்ல ஆரம்பித்தார். அவரைப்பற்றிய இந்த நிகழ்ச்சிகளை நான் அறியவில்லை. அவர் தனது தாயினுடைய மதத்தைக் குறித்து அலுப்பு அடைந்து வீட்டைவிட்டு ஓடிப் போய்விட்டார். அவர் இதைக் குறித்து என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது அவருக்குள் இருந்த சிலவற்றை வெளியரங்கமாய்ப் பார்க்க முடிந்தது. இவ்வாறு அவரிடமுள்ள ஒன்று என்னைப் பார்த்தது. “என்னைக் காண்கிறாயா?” என்று அது கேட்டது. இதுவரை நான் பார்த்திராத ஒன்றை நான் கண்டேன். அவர் தன் சுபாவத்தின்படி நன்றாய்ப் பழகக்கூடிய, மரியாதையும் இனிமையுமானவர். ஆனாலும் அவர் சிறுபருவத்திலிருந்து சிறிது எதிர்த்து நிற்கும் பிசாசை உடையவராயிருந்தார். அந்த இரவில் அப்பிசாசைத் துரத்தினோம். அதோடு புகை பிடிக்கும் பிரச்சனையும் தீர்த்து வைக்கப்பட்டது. புகைப் பிடித்தது ஒரு அடிமரத்தின் கிளைதான். அந்த அடி மரமானது அவரது எதிர்த்து நிற்கும் தன்மையே ஆகும்.

பகுத்தறிதல் என்பது ஒரு நபரின் வடிவிலே வழக்கமாக வந்து, சுபாவத்தில் என்ன இருக்கிறது என்பதைப் பார்ப்பதாகும். ஆனால் அது பரிசுத்த ஆவியின் புரிந்து கொள்ளுதலோடு காண்பதாகும்.

ஆகவே அங்கே, ஜனங்களைப் பார்க்கும்விதம் என்பது ஒரு தரிசனமாக இல்லாமல் இருந்தாலும், ஒரு பிரச்சனை அல்லது சூழ்நிலையை அறிந்து கொள்ளுதல் மிகவும் முக்கியமானதாகும். இந்த தரிசனமானது எது அவசியம் என்று பார்க்க உதவுகிறது. சிலசமயங்களில் அது பயப்படுத்துவதாக இருக்கலாம். சில சமயங்களில் நாம் விரும்புவதை அறிந்து கொள்ளுவதோ அல்லது அறிந்து கொள்ளாமலோ இருப்பது திகைப்பாக இருக்கும் எனினும் நாம் இதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும்.

பகுத்தறிதலை வளர்த்துக் கொள்ளுதல்

எபிரெயர் 5:14இல் பகுத்தறிதலைப் பற்றிய மிக முக்கியமான உண்மை காணப்படுகிறது எல்லா வரங்களைக் குறித்தும் பல வகைகளில் சொல்லப்பட்டுள்ளதும் கூட உண்மை.

> பலமான ஆகாரமானது நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களை உடையவர்களாகிய பூரணவயதுள்ளவர்களுக்கே தகும்.

முதலாவது முறை, நம்மில் மிகவும் குறைவானவர்களே இந்த வரத்தைக் குறைவில்லாமல் செயல்படுத்துகிறார்கள். இருப்பினும் நாம் பயிற்சி செய்வதின் மூலம் நம்முடைய புரிந்து கொள்ளுதலிலும் அவைகளைச் செயல்படுத்துதலிலும் பூரணப்பட முடியும். சிலமக்கள் இப்படிப்பட்ட பூரணப்பட்டவர்களாயிருப்பார்கள். முதல் முறையிலேயே அவர்கள் அதைச் சரியாகச் செய்ய முடியும் என்று அறிந்தாலொழிய அவர்கள் ஒருபோதும் எதையும் செய்யமாட்டார்கள். இந்த ஆவியின் வரங்களைப் பயிற்சி செய்வதில் இதுதான் அநேகரின் பிரச்சனையாக இருக்கிறது. அவர்கள் நினைத்துக் கொள்ளுவதாவது தங்களுக்கு எலியாவைப் போல தீர்க்கதரிசனம் சொல்லமுடியாவிட்டால் அவர்கள் ஒருபோதும் தீர்க்கதரிசனம் சொல்லமாட்டார்கள் என்பதாகும். உண்மையாக அது முட்டாள்தனமானதாகும். எலியா எப்படி ஆரம்பித்தார் என்பது யாருக்குத் தெரியும்?

பகுத்தறிதலைக் குறிப்பாக உருவாக்கிக் கொள்ள முடியும்.

பகுத்தறிதலைக் குறிப்பாக உருவாக்கிக் கொள்ள முடியும். எபிரெயர் 5:14 இதனைப் பயிற்சி செய்வதில் நன்மை எது? தீமை எது? என்று பகுத்தறிந்து கொள்வதற்கு உங்கள் ஐம்புலன்களைப் பயன்படுத்துவது அவசியம் என்று சொல்லுகிறது. உங்களுடைய கிறிஸ்தவ பயணத்தை எப்பொழுதும் தொடருவதற்கு, உங்களுடைய வழிகளில் ஒவ்வொரு வகையான கண்ணியை சாத்தான் வைக்கும்போது தவறிவிழுந்துவிடுவது தேவனுடைய மகிமைக்கானது அல்ல. உண்மையான மனிதனுக்கும் மாய்மாலக்காரனுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைப் பகுத்தறிந்து கொள்ள முடியாதவர்களாயிருக்கிறார்கள். அநேகர் தேவன் நமக்கு அருளிய பகுத்தறிதல் வரத்தை தேவனுக்காக சரியான முறையில் உபயோகிக்காமல் தவறிவிடுகிறார்கள்.

ஆவிகளைப் பகுத்தறிதலின் அர்த்தம்

ஆவியின் வரங்களில் ஒன்றாகிய பகுத்தறிதல் வரத்தைப்பற்றி

சிலவிளக்கங்கள் மூலமாக நாம் காணலாம். முதலாவதாக இந்த வரம் அசுத்த ஆவிகளை இனங்கண்டு கொள்ளுதலைப் பற்றி மட்டும் குறிக்காது. கிறிஸ்துவ வாழ்க்கையில் அங்கே பலவகையான ஆவிகள் நம்முடன் போராடுவதற்காக உள்ளன.

- பரிசுத்த ஆவியானவர் தான் தேவனுடைய ஆவியாகும்.
- நல்ல தேவ தூதர்கள்.
- எதிர்த்து நின்று விழுந்துபோன தேவதூதர்கள். (பிசாசுகள் அசுத்த ஆவிகள்)
- மனிதனின் ஆவிகள். (ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய சொந்த ஆவி உண்டு.)

இரண்டாவதாக நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல பகுத்தறிதல் பன்மையில் உள்ளது. நான் நம்புவது, இதன் பொருளாவது ஒவ்வொருமுறை பகுத்தறியும்போதும் இந்த வரம் செயல்படுகிறது. இதைப்போன்றே குணமளிக்கும் வரங்களும் அற்புதங்களைச் செய்யும் வரங்களும் ஆகியவற்றில் ‘குணமளித்தல்’ அல்லது ‘அற்புதம் செய்தல்’ வரங்களின் செயல்பாடுகளாகும்.

மூன்றாவதாக ஆவிகளைப் பகுத்தறியும் வரமும் தேவனுடைய ஆளுகையின் கீழ் மட்டுமே செயல்படுகிறது. நம்முடைய சுய விருப்பத்தின்படி அதைச் செயல்படுத்த முடியாது. போர்ட் லாடர்டேல் (Fort Lauderdale) என்னுமிடத்தில் ஒரு எழுப்புதல் கூட்டத்தின்போது கருப்புக் கண்ணாடி அணிந்து கொண்டிருந்த ஒருபெண்மணி கூட்டத்தின் முடிவில் என்னிடத்திற்கு வந்தாள். அவள் எனக்கு முன்னால் நின்று கொண்டிருந்தாள். அடுத்ததாக என்ன நடக்கப் போகிறது என்பதைக் குறித்து நான் ஆச்சரியப்பட்டேன். அவள் தன் கண்ணாடியைக் கழற்றிவிட்டு “சகோதரன் பிரின்ஸ் உங்களுக்கு ஆவிகளைப் பகுத்தறியும் வரம் உண்டு, என்னுடைய கண்களைப் பாருங்கள். எனக்கு பிசாசு பிடித்திருக்கிறதா என்று சொல்லுங்கள்” என்றாள். நான் சொன்னேன், “சகோதரியே ‘பகுத்தறிதல்’ என்பது நீங்கள் நினைக்கிற இந்த முறையில் செயல்படுவது இல்லை. என்னுடைய சுய விருப்பத்தின்படி அதைச் செயல்படுத்த முடியாது. ஆனால் நான் இந்த ஊழியத்தைச் செய்வதற்கு இத்தகைய அறிவு

எனக்குத் தேவை என்பதால் தேவன் அதை எனக்குத் தருவார்.” இது எக்ஸ்ரே எடுப்பது போன்றது என்று அந்த சகோதரி நினைத்தாள். ஆனால் அது அப்படி அல்ல. அது மனித விருப்பத்திற்கு உட்பட்டது அல்ல. இருப்பினும் இந்த வரம் செயல்பட நம்மை நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும். ஒப்புக்கொடாவிடில் இது செயல்படாது.

ஆவிகளைப் பகுத்தறிதலில் வேதத்திலுள்ள வெளிப்பாடுகள்

நாம் இப்பொழுது புதிய ஏற்பாட்டில் ஆவிகளைப் பகுத்தறிதலுக்கான சில உதாரணங்களைக் காண்போம். நான் மேலே குறிப்பிட்டுள்ளபடி பலவகையான ஆவிகளைப் பற்றிக் காணலாம்.

பரிசுத்த ஆவியைப் பகுத்தறிதல்

புறாவின் வடிவில்

முன்பு நாம் யோவான் ஸ்நானகனுக்கு ஒரு தரிசனத்தின் மூலம் ஆவியை பகுத்தறிவது பற்றிப் பேசினோம். அந்த தரிசனத்தைப் பற்றி அவர் சொல்லுவதை நாம் மேலும் காண்போம்.

> மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. “நானும் இவரை அறியாதிருந்தேன், இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும் பொருட்டாக, நான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுக்க வந்தேன் என்றான். பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி இவர்மேல் தங்கினதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான்.
>
> *(யோவான் 1:29, 31-34)*

திரும்பவும் நான் நினைக்கிறேன் யோவான்ஸ்நானகனின் வார்த்தையிலிருந்து, அவர் மட்டுமே இயேசுவின்மேல் பரிசுத்த

ஆவியானவர் புறாவைப் போல் அமர்ந்ததைப் பார்த்திருக்கிறார் என்பது தெளிவாகிறது. அங்கு கூடியிருந்த மற்ற ஜனங்கள் அந்த தரிசனத்தைக் காணவில்லை. யோவான்ஸ்நானகனுக்கு இயற்கைக்கு மேலான இந்த பகுத்தறிதலானது சிறப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது, ஏனென்றால் அது அவருக்குத் தேவையாகும். இதன் வழியாகத்தான் அவர் மேசியா யார் என்பதைக் கண்டு கொள்ள முடியும்.

அக்கினி நாவுகளாக

அப்போஸ்தலர் 2 ஆம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரை மனித புலன்களால் அக்கினி மயமான நாவுகளாக உணர்ந்து கொண்ட வெளிப்பாடு வந்தது. *"அல்லாமலும் அக்கினி மயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்."* இது பரிசுத்த ஆவியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடு ஆகும். பரிசுத்த ஆவியானவர் அக்கினிமயமான நாவுகள் போன்றவர் அல்ல. ஆனால் அவ்வாறாக தம்மை வெளிப்படுத்தினார்.

விசுவாசிகள் ஒன்றுகூடி வரும் பொழுது, பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை அறிந்து கொள்வது மிகமிக அவசியமாகும். அவர் எப்பொழுது அசைவாடுகிறார்? யார் மூலம் அசைவாடுகிறார்? எவ்வாறு அசைவாடுகிறார்? என்பதை புரிந்து கொள்வது மிகவும் முக்கியம். நாம் அவருடைய பிரசன்னத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் இத்தகைய கூட்டங்களில் கர்த்தர் செய்கிறது இன்னதென்று அறியாதிருப்போம். ஆவியானவர் ஒரு விசேஷித்த காரியத்தை வெளிப்படுத்துவார். உதாரணமாக சமீபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தின் போது ஆவியானவரின் சுகமளிக்கும் பிரசன்னம் விசேஷித்த முறையில் கடந்து வந்தது.

விசுவாசிகள் ஒன்றுகூடி வரும் பொழுது, பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை அறிந்து கொள்வது மிகமிக அவசியமாகும்.

அத்தகைய நேரத்தில் அங்கிருக்கும் யாவரும் சுகமடைய முடியும். அந்நேரத்தில் யார் யாருக்காக ஜெபித்தாலும் அவர்கள் குணமடைவார்கள். அநகே குழுக்களில் அதில் பங்கு பெறும் அனைவரும் இணைந்து ஜெபிக்கும் பொழுது பலர் குணமடைவதைக் கண்டிருக்கிறேன். மற்றும் ஒரு நேரத்தில் ஆவியானவரின் அற்புதங்களைச் செய்யும் பிரசன்னம் கடந்து வரும், அநேகர் அற்புதம் பெற்றுக் கொள்வர்.

இப்படிப்பட்ட வழிகளில் நாம் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தை உணராவிட்டால் நாம் தேவன் செய்ய விரும்பியவற்றில் பலவற்றை இழந்துவிடுவோம். ஆலயவழிபாடுகளில் மனிதர்களாகிய நமது சட்டமாவது மூன்று பாடல்கள் பாடுவது, சில பல்லவிகள் பாடுவது, அறிவிப்புகளைச் சொல்லுவது, பின்பு பிரசங்கம் செய்வது என்பதாகும். இருப்பினும் இவைகள் எல்லாவற்றிற்கும் மத்தியில் தேவனின் பரிசுத்த ஆவி அசைவாடினால் சுகம் பெறும் நேரம் எங்கே? நாம் அவரை அறியாமலிருந்தால் நாம் குணம் அடைவதை இழந்துவிடுவோம். அவர் அதைக் கொடுக்க விரும்புகிறார். பர்திமேயு குருடன், பாதை ஓரத்தில் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். அவன் ஒரு கூட்ட மக்களின் சத்தத்தைக் கேட்டு, அங்கே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று விசாரித்தான். அதற்கு அவர்கள் நசரேயனாகிய இயேசு வந்து கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள். இதுதான் அங்கு நடந்து கொண்டிருக்கிறது என்று அவன் அறிந்து கொண்டான். இப்பொழுதே செல்ல வேண்டும் இல்லாவிட்டால் ஒருபோதும் செல்ல முடியாது என்று நினைத்தான். அவன் எழுந்து தேவனிடத்தில் செல்வதை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. (மாற்கு 10:46-52 வரையிலான வசனங்களைப் பார்க்கவும்)

இவ்வண்ணமாகவே, நாம் சந்திக்கும் போதும் சிலவேளைகளில் நாம் பெற்றுக் கொள்ளும் நேரம் இதுதான் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். நாம் பரிசுத்த ஆவியை அறிந்துகொள்ள வேண்டும். மனித திட்டங்கள் எண்ணங்கள் மற்றும் முன் தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு கடைசி இடத்தைக் கொடுக்க முன் வரவேண்டும். அல்லது நாம் இழந்துவிடுவோம். பர்திமேயு சுகம் பெற விரும்பும் பொழுது, மதசம்பந்தமான அழைப்பைப் பற்றி அறிந்த எல்லா ஜனங்களும் “நிறுத்து, சத்தம் போடாதே, இயேசுவை தொந்தரவு

செய்யாதே அவர் அதிக வேலையாக இருக்கிறார்.” என்று அவனை அதட்டினார்கள். இதைப் போலவே இங்கே எப்பொழுதும் மத சம்பந்தமான அழைப்பைப்பற்றி அறிந்த ஜனங்கள் உங்களை நடக்கக் கூடிய காரியங்களின் வழியை விட்டுவிட்டு உங்களை வித்தியாசமானவர்களாகக் காட்டிக் கொள்ளாதிருங்கள் என்பார்கள். இருப்பினும் தேவன் உனக்காக என்ன வைத்திருக்கிறாரோ அதை தேவன் உனக்கு செய்யச் சொல்லும் போது அதைக் கட்டாயம் நீ செய்ய வேண்டும்.

நாம் பரிசுத்த ஆவியை அறிந்து கொள்ள வேண்டும். மனித திட்டங்கள், எண்ணங்கள், மற்றும் முன் தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு கடைசி இடத்தைக் கொடுக்க முன் வரவேண்டும்.

திட்டமாக தேவ ஆவியானவர் தாவீது ராஜாவை ஒரு வலிமையான மனிதனாக உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நடனமாடும்படி அவனுடைய வல்லமையை விளங்கப் பண்ணினார். பின்பு அவனை அவனுடைய மனைவி சந்திக்கிறாள். அவனிடம் இவ்வாறு கூறுகிறாள். “*கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்திற்குள் பிரவேசிக்கிற போது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணி வழியாய்ப் பார்த்து, தாவீதுராஜா கர்த்தருக்கு முன்பாகக் குதித்து, நடனம் பண்ணுகிறதைக் கண்டு, தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள்.*” (2 சாமுவேல் 6:14-16) ‘‘*...அற்பமனுஷரில் ஒருவன் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போடுகிறதுபோல, இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களின் கண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துபோட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று இத்தனை மகிமைப்பட்டிருந்தார் என்றாள்.*” “*...உன் தகப்பனைப்பார்க்கிலும், அவருடைய எல்லா வீட்டாரைப்பார்க்கிலும், என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்துகொண்ட கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன்.*” *என்றான்.* “அதினால் சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள்மட்டும் பிள்ளை இல்லாதிருந்தது.” (2 சாமுவேல் 6:20-23) அதைப்போலவே ஒரு குதர்க்கமான ஆவி பரிசுத்த ஆவியானவர் செயலாற்றுவதை மறுக்கிறது. அது மக்களை ஆவிக்குரிய

ஜீவியத்தில் பாழ்நிலமாய் ஆக்கி விடுகிறது. பரிசுத்த ஆவியானவர் நம்மத்தியிலே கிரியை செய்வதற்கு நாம் திறந்த வாசலை வைக்க வேண்டும்.

தேவ தூதர்களை அறிதல்

மனுஷகுமாரனிடத்திலிருந்து தேவதூதர்கள் ஏறுதலும் இறங்குதலும்

இயேசு நாத்தான் வேலைப் பார்த்துச் சொன்னார், "*இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்றாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார். பின்னும், அவர் அவனை நோக்கி; வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இது முதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்*" என்றார். (யோவான் 1:50, 51) இது தேவதூதர்கள் ஏறி இறங்குவதற்கான வசனம்.

கெத்செமனே தோட்டத்திலே

இயேசு தானே தேவ தேவதூதர்களின் பிரசன்னத்தை உணர்ந்து கொண்டார். இதனை அவர் தன்னுடைய ஊழியத்தின் முடிவிலே அதாவது அவர் கைது செய்யப்பட்டு சிலுவையில் அறையப்படுவதற்கு சிறிது முன்பு இயேசு கெத்செமனே தோட்டத்திலே ஜெபம் செய்து கொண்டிருந்தார். அவர் மிகுந்த வேதனையோடு ஜெபம் செய்யும்பொழுது தேவதூதன் அவரை பலப்படுத்தினான். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி அவரை பலப்படுத்தினான். இந்த நிகழ்ச்சியில் தோன்றிய தேவதூதனை இயேசு கிறிஸ்து மட்டுமே ஆவிக்குரிய பகுத்தறிதலின் மூலம் கண்டார் என்பது தெளிவாகிறது. மற்றவர்களும் அங்கிருந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவரும் தேவதூதனைப் பார்க்கவில்லை.

உயிர்த்தெழுதலின் போது

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு மகதலேனா மரியாள் ஒரு தேவதூதனைக்

கண்டாள். ஆனால் அப்போஸ்தலனாகிய யோவானோ அல்லது பேதுருவோ அதைக் காண முடியவில்லை.

> வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள். உடனே அவள் ஓடி, சீமோன் பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷனிடத்திலும் போய்; கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள். அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறையினடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள். பேதுருவைப் பார்க்கிலும் மற்ற சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில் வந்து, அதற்குள்ளே குனிந்து பார்த்து, சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை. சீமோன் பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்ற சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான். முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான். அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்கிற வேதவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள். பின்பு அந்த சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப் போனார்கள். மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள்; அப்படி அழுது கொண்டிருக்கையில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள்.
>
> *(யோவான் 20:1-12)*

பேதுருவும் யோவானும் சீலைகள் கிடக்கிறதை மட்டும் பார்த்தார்கள். பின்னர் தங்கள் இடத்திற்குத் திரும்பிப் போனார்கள். அவர்கள் தேவ தூதர்களைக் காணவில்லை. ஆனால் மரியாள் அவர்களை ஆவிக்குரிய பகுத்தறிதலின் மூலம் கண்டாள்.

எனது மனைவி லிடியா இஸ்ரவேலில் குழந்தைகள் இல்லத்தைப் பல ஆண்டுகள் பராமரித்து வந்தாள். இந்த சிறு குழந்தைகள் சில வேளைகளில் ஒரு தேவதூதன் வந்து பிரசன்னமாவதை நல்ல மனநிலையோடு பார்த்திருக்கிறார்கள். ஆனால் அதை மற்றவர்கள் பார்க்க முடியவில்லை. ஒருமுறை ஒரு சிறுவன் மிகவும் நோய்வாய்ப்

பட்டிருந்தான். எனது மனைவி அவனுக்கு சிகிச்சை அளித்து அவனைத் திரும்பவும் சுகம் அடைய முயற்சி செய்து கொண்டிருந்தாள். அவள் சமையலறையில் அந்தக் குழந்தைகளோடு உட்கார்ந்திருந்தாள். ஒரு நாள் அந்தப் பெண்பிள்ளைகளில் ஒரு சிறுமி தன்னுடைய தலையை உயர்த்திக் கூறினாள். “அம்மா நான் ஒரு தேவ தூதனைப் பார்த்தேன், அவன் வந்து யோசேப்பை அழைத்துச் சென்றான்” என்று கூறினாள். அடுத்தநாளே யோசேப்பு மரித்துப் போய்விட்டான். தேவன் அந்த சிறுமிக்கு, தேவதூதன் வந்து சுகவீனமான சின்ன பையனை தன்னோடுகூட அழைத்துச் செல்லப் போகிறான் என்பதைச் காட்டியுள்ளார்.

தேவதூதனைக் குறித்து விழிப்புணர்வுடன் இருந்த ஒரே ஒரு மனிதன் பவுல். அந்த தூதுனுடைய வார்த்தைகள் 100 சதவீதம் துல்லியமாக உறுதிப்படுத்தப்பட்டது.

கடினமான ஒரு கடற்பயணம்

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பவுல் ஒரு கைதியாக ஒரு கப்பலில் அழைத்துச் செல்லப்பட்டதைப் பற்றி நாம் வாசிக்கிறோம். “*மேலும் பெருங்காற்று மழையில் நாங்கள் மிகவும் அடிபட்டபடியினால், மறுநாளில் சில சரக்குகளைக் கடலில் எறிந்தார்கள்.*” (அப்போஸ்தலர் 27:18) மெலித்தா என்ற தீவுக்கு வருகையில் கப்பல் முழுவதுமாக உடைந்து சேதமடையும் நிலையில் இருந்தது. அந்த பயங்கர புயல் காற்றிற்கு மத்தியில் பவுல் எழுந்துநின்று அந்தத் தளத்தில் இருந்த மற்ற மக்களுக்கு,

> ஆகிலும், திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்கு தைரியம் சொல்லுகிறேன். கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவருக்கும் பிராணச் சேதம் வராது. ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று: பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். இதோ, உன்னுடனே கூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார் என்றான். ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன். ஆயினும் நாம் ஒரு தீவிலே விழவேண்டியதாயிருக்கும் என்றான்.
>
> *(அப்போஸ்தலர் 27:22-26)*

தேவதூதனைக் குறித்து விழிப்புணர்வுடன் இருந்த ஒரே ஒரு மனிதன் பவுல். அந்த தூதனுடைய வார்த்தைகள் 100 சதவீதம் துல்லியமாக உறுதிப்படுத்தப்பட்டது.

மனித ஆவிகளை அறிதல்

இயேசுவும் நாத்தான்வேலும்

அறிவைப் போதிக்கும் வசனத்தோடு தொடர்புடையதான மனித ஆவிகளை அறிந்துகொள்ளுவதும் இதில் அடங்கியுள்ளது. இயேசுவினுடைய, சீடன் நாத்தான் வேலுக்கு, இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாட்டைப் பற்றி நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். எனினும் திரும்பவும் நாம் அதே நிகழ்வுக்குச் செல்லலாம். இதுவே மனித ஆவிகளை அறிந்து கொள்ளுவதற்குரிய ஒரு உதாரணம் ஆகும். யோவான் 1:47 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம். *"இயேசு நாத்தான் வேலைத் தன்னிடத்தில் வரக்கண்டு அவனைக் குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்றார்."* இவன் உண்மையாகவே இஸ்ரவேலருக்குள் ஒரு கபடற்ற இஸ்ரவேலனாய் இருந்தான். இயேசு ஒரு கள்ளம் கபடற்ற ஆவியை அறிந்து கொண்டார். இது நாத்தான்வேலின் ஆவியைக் குறித்ததே அல்லாமல் வேறு மனித ஆவியைக் குறித்ததல்ல. அவனுடைய சொந்த ஆவியைப் பற்றியதே ஆகும்.

இயேசுவும் மனித இதயங்களும்

இப்பொழுது இயேசுகிறிஸ்துவைப் பற்றி வேதத்தில் யோவான் 2ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளதைக் கவனிப்போம்:

> பஸ்கா பண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனுஷர் உள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்கு சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை.
>
> *(யோவான் 2:23-25)*

இயேசு மக்களால் ஏமாற்றப்படவில்லை. அவர் கண்ணில் காணமுடியாதவற்றையும் காணக்கூடியவர். வெளிப்படையான மனுஷனில் உள்ள உள்ளான மனிதனின் உண்மையை அவர் காணுகிறவர். மற்ற சீஷர்கள் யூதாஸ்காரியோத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுக்கப்போகிறான் என்ற எண்ணமும் அவர்களிடம் இல்லாதிருந்தது. இயேசு இதை ஆரம்பித்தலிருந்தே அறிந்திருந்தார் இருப்பினும் அவனை ஒரு அப்போஸ்தலனாகத் தெரிந்துகொண்டார். ஏனென்றால் அவர் தனது பிதாவின் நோக்கத்தை நிறைவேற்றுபவராக இருந்தார். (யோவான் 6:64 ஆம் வசனத்தைப் பார்க்கவும்)

பேதுருவும் மாயவித்தைக்காரனாகிய சீமோனும்

அப்போஸ்தலர் 8ஆம் அதிகாரத்தில் பேதுரு ஆவிகளைப் பகுத்தறியும் வரத்தை மாயவித்தைக்காரனாகிய சீமோனிடத்தில் செயல்படுத்தினார். சீமோன் செய்வினை செய்யும் திறத்தினாலும் குறிசொல்லுதலினாலும் சமாரியா பட்டணத்தில் நீண்ட காலமாக அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்தான். அவன் பிலிப்பு சுவிசேஷத்தைக் குறித்துப் பிரசங்கம் செய்யும் பொழுது அதைக்கேட்டு, அற்புதங்களைக் கண்டு, அவன் செய்த அடையாளங்களையும் பார்த்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். சீஷனாகவும் மாறினான். பின்பு யோவானும் பேதுருவும் அங்கு வந்து கிறிஸ்தவர்களானவர்களுக்காக ஜெபித்தபோது அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள். இந்த அப்போஸ்தலர்கள் அவர்கள் மேல் கைகளை வைக்கும் போது வல்லமையைப் பெற்றதற்கு அத்தாட்சியாக வெளிப்பாடுகளையும் பெற்றார்கள்.

> அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்ட போது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து; நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன்பணம் உன்னோடே கூட நாசமாய்ப்போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன்

துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறாதாகக் காண்கிறேன் என்றான்.

(அப்போஸ்தலர் 8:18-20)

பேதுரு சீமோனுடைய வெளிப்படையான உறுதிப்பாட்டைக் கண்ட போதிலும் அவனுடைய உள்ளான இருதயத்தில் குறுகிய மனப்பான்மையையும் தவறான எண்ணங்களையும் கண்டான். சீமோன் பிலிப்போடு கூட இருக்கும்போது பிலிப்பு முன்பு அவனுடைய உள்ளத்தில் இருப்பதைப் பார்க்க முடியவில்லை. ஆனால் பேதுருவுக்கு அவன் உள்ளத்தில் இருப்பதைப் பற்றிய வெளிப்பாடு கிடைத்தது.

பவுலும் சப்பாணியின் விசுவாசமும்:

அப்போஸ்தலர் 14ஆம் அதிகாரத்தில் பவுல் ஒரு சப்பாணியின் விசுவாசத்தைச் கண்டறிகிறார்.

லீஸ்திராவிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்ததுமுதல் சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து, பவுல் பேசுகிறதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப் பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு: நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான். (அப்போஸ்தலர் 14:8-10)

பவுல் ஒரு பெரிய சபையினருக்குப் பேசிக் கொண்டிருந்தான். பேச்சின் மத்தியில் அந்தத் தனிப்பட்ட மனிதனிடம் விசுவாசம் இருப்பதைக் கண்டான். அவன் தன் பிரசங்கத்தை பாதியில் நிறுத்திவிட்டு "*நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில்*" என்றான். அவன் விசுவாசத்தினால் உடனே குதித்தெழுந்து நடந்தான். இந்த நிகழ்ச்சியானது பவுல் பரிசுத்த ஆவியை அறிந்து கொண்டதால் அல்ல. அல்லது அசுத்த ஆவியின் கிரியையினால் அல்ல ஆனால் பரிசுத்த ஆவியின் மேல் ஒரு மனிதனுக்கு உள்ள விசுவாசத்தினால்தான் நடந்தது. 2 கொரிந்தியர் 4 ஆம் அதிகாரம் 13 ஆம் வசனத்தில் ஆவியின் விசுவாசத்தைப் பற்றிப் பேசுகிறார். " '*விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன்' என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.*"

அசுத்த ஆவிகளை அறிதல்

நாம் இப்பொழுது அசுத்த ஆவியை அறிந்து கொள்ளுவததைப் பற்றி இயேசுவின் ஊழியத்திலிருந்து விவாதிப்போம். இந்த வரமானது அடிக்கடி குணமளிக்கும் போது சம்பந்தப்பட்டதாய் உபயோகிக்கப்படுகிறது. சுவிசேஷத்தில் அடிக்கடி சரீர வியாதிவருவதற்குக் காரணம் அசுத்த ஆவிதான் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அசுத்த ஆவியினால் உண்டான ஊமைத்தன்மையும் செவிட்டுத் தன்மையும்

முதல் உதாரணம் இயேசு ஊமையும் செவிடுமான மனிதனைக் குணப்படுத்தல்

> அவர்கள் புறப்பட்டுப் போகையில், பிசாசுபிடித்த ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். பிசாசு துரத்தப்பட்ட பின்பு ஊமையன் பேசினான். ஜனங்கள் ஆச்சரியப்பட்டு: ‘‘இஸ்ரவேலின் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை” என்றார்கள்.
>
> *(மத்தேயு 9:32, 33)*

சரீரத்திலுள்ள வியாதிக்கு சுவிசேஷத்தில் பெரும்பாலும் அசுத்த ஆவிதான் காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மனிதனின் பேச இயலாமை ஒரு அசுத்த ஆவியினால் தான் உண்டாயிருந்தது, அதுதான் அவனது குரல்வளையை உபயோகப்படுத்திப் பேச முடியாமல் தடுத்து நிறுத்தியிருந்தது என்பதை இயேசு அறிந்திருந்தார். அவர் அந்த அசுத்த ஆவியை விரட்டிய உடனே அந்த மனிதன் உடனடியாகப் பேசினான். இதனால் எல்லா ஊமைத்தன்மையும் அசுத்த ஆவியினால்தான் உண்டாகும் என்பதல்ல. ஆனால் இந்த மனிதனைப் பொறுத்தவரையில் இதற்குப் பின்னணியில் அசுத்த ஆவி இருந்தது. இயேசு அதை அறிந்திருந்தார்.

நானும் என்னுடைய மனைவி லிடியாவும், அசுத்த ஆவி வெளியேற்றப்படும்பொழுது ஊமைத்தன்மை உடனடியாகப் போய்விடுவதற்கு சாட்சிகளாகும். கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள கென்யாவிலே எப்பொழுதெல்லாம் ஒரு சுவிசேஷகர் ஒரு குறிப்பிட்ட

நகரத்தில் ஊழியம் செய்கிறாரோ அப்பொழுது ஆசியாவைச் சேர்ந்த இந்துக்கள் ஒரு கிறிஸ்தவ ஆலயத்திற்குள் வரமாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அதில் ஆர்வம் இல்லை. ஆனால் ஒரு அமெரிக்க சுவிசேஷகர் ஊழியம் செய்யவந்து குணமளிக்கும்போது அவர்கள் வரிசையில் நின்று அல்லது புல்வெளியில் அமர்ந்து பலமணிநேரம் காத்திருப்பார்கள். கூட்டம் தொடங்குவதற்கு முன்பு இவ்வாறு காத்திருப்பார்கள். ஏனென்றால் அவர்களுக்கு சுகம் கிடைக்க வேண்டும்.

ஆசியாவைச் சேர்ந்த பணக்காரனான அந்த நகரத்தின் மேயருக்கு பதினெட்டு வயதுடைய ஒரு பையன் இருந்தான், அவனுக்கு ஒருபோதும் பேச முடியாமல் இருந்தது. அவனிடத்திலிருந்து ஒரு அசுத்த ஆவி விரட்டப்பட்ட போது, அந்த வாலிபன் உடனடியாக சத்தங்களை உண்டாக்கி பேசுவதற்கு கற்றுக் கொண்டான். இந்த நிகழ்ச்சி அந்த மேயருக்கு ஒரு விளைவை உண்டாக்கியது. அது பத்து ஆண்டுகள் மிஷனரியின் செயல்பாட்டைவிட அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த காரியங்கள் யாவும் உண்மையே. ஆனால் திரும்பவும் நான், ஊமைத்தன்மை அல்லது செவிட்டுத் தன்மை அசுத்த ஆவியினால் மட்டும் உண்டாகியது என்று பரிந்துரைக்கமாட்டேன். இருந்தாலும் நாம் அவைகள் எதனால் உண்டாயின என்பதை பகுத்தறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இதைப்போன்ற மற்றொரு உதாரணம் மத்தேயு 12ஆம் அதிகாரத்திலும் காணப்படுகிறது.

> அப்பொழுது பிசாசுபிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவும் காணவுந்தக்கதாக அவனை சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: தாவீதின் குமாரன் இவர்தானோ? என்றார்கள்.
>
> *(மத்தேயு 12:22, 23)*

இந்த பகுதியிலிருந்து, இயேசு ஒரு மனிதனிடமிருந்த அசுத்த ஆவியை அவனிடமிருந்து விரட்டின பின்புதான் குணமாக்கினார் என்பது தெளிவாகிறது. ஏனென்றால் ஊமையாகவும் குருடனாகவும் இவனைக் கட்டி வைத்திருந்தது அந்த அசுத்த ஆவிதான்.

ஒருமுறை நாங்கள் ஜார்ஜியாவில் அட்லாண்டா என்னுமிடத்தில் ஊழியம் செய்து கொண்டிருக்கையில் ஒரு இளம்

பெண்ணிடத்திலிருந்து அநேக அசுத்த ஆவிகள் வெளிவந்தன. தங்கள் பெயர்களைச் சொல்லிக் கொண்டு வெளிவந்தன. ஒன்று குருட்டின் ஆவி என்று அழைத்துக் கொண்டது. இதை அவரது கணவர் கேட்ட போது அவர் குதித்தார். மேலும் அவர் சொன்னார் "மருத்துவர் அவளிடம் அவள் குருடாகவே இருப்பாள்" என்று சொல்லியிருந்தார். ஆனால் நான் சொன்னேன் ''அவள் இப்பொழுது குருடாக இருக்கப் போவதில்லை" ஒரு குருடான ஆவி அவளுக்குள் வந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவளைக் குருடாக்கியது. இது ஒரு செவிட்டு ஆவி உள்ளே வந்தது போலாகும். இது முழுமையான செவிட்டுத் தன்மையை உடனே உண்டாக்கவில்லை. ஆனால் செவிடும் தொடர்ந்து வரும். இது தேவனுடைய ஆவியானவர் அருளுகிற ஈவு.

எனக்கு நன்றாகத் தெரிந்த, முற்றிலும் காது கேட்காத ஒரு பெண்மணி லண்டனில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பங்கு பெற்றாள். அங்கு ஒரு ஊழியக்காரர், செவிட்டுத் தன்மையை உண்டாக்கும் அந்த ஆவியை விரட்டினார். உடனே, அவளால் எல்லாவற்றையும் மிகத் தெளிவாகக் கேட்க முடிந்தது. இருப்பினும் அவளுக்கு தனக்குக் கிடைத்த சுகத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் விசுவாசம் இருக்கவில்லை. இரண்டு வாரங்கள் கழிந்த பின்பு அவள் முன்பு இருந்ததுபோலவே முழுமையாக செவிடாகிவிட்டாள். அவள் அந்த அசுத்த ஆவி மீண்டும் தன்னிடத்தில் வர இடம் கொடுத்தாள். இதனாலேயே கிறிஸ்தவர்கள் தங்களை விட்டுத் துரத்தப்படட அசுத்த ஆவிகளை இனங்கண்டு கொள்வது மிகவும் அவசியம். பிசாசு ஒரு கொலைபாதகன் என்று வேதம் கூறுகின்றது. கொலைபாதகன் என்பவன் சரீரத்தைக் கொல்லுகிறவன். நாம் அவனை அனுமதித்தால் இத்தகைய காரியங்களை நமக்கு செய்வான். அவன் ஒரு ஈவு இரக்கமற்றவன், எதையும் செய்யத் துணிபவன், நமக்குக் கொடுமையான விரோதியாவான். அவனை மேற்கொள்வது எப்படி என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

இன்னொரு உதாரணத்தை மாற்கு சுவிசேஷத்தில் காணலாம்.

> அப்பொழுது ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கி: போதகரே, ஊமையான ஒரு ஆவி பிடித்த என் மகனை உம்மிடத்தில் கொண்டுவந்தேன். அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக்கழிக்கிறது; அப்பொழுது அவன் நுரைதள்ளி, பல்லைக்கடித்து, சோர்ந்துபோகிறான். அதைத் துரத்திவிடும்படி உம்முடைய சீஷரிடத்தில் கேட்டேன்; அவர்களால்

கூடாமற்போயிற்று என்றான். அவர் பிரதியுத்தரமாக: விசுவாசமில்லாத சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன். அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார். அவனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவரைக் கண்டவுடனே, அந்த ஆவி அவனை அலைக்கழித்தது; அவன் தரையில் விழுந்து, நுரைதள்ளிப் புரண்டான். அவர் அவனுடைய தகப்பனை நோக்கி: இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று என்று கேட்டார். அதற்கு அவன்: சிறுவயதுமுதற்கொண்டே உண்டாயிருக்கிறது; இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான். அப்பொழுது ஜனங்கள் கூட்டமாய் ஓடிவருகிறதை இயேசு கண்டு, அந்த அசுத்த ஆவியை நோக்கி: ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப்போ, இனி இவனுக்குள் போகாதே என்று நான் உனக்குக் கட்டளை இடுகிறேன் என்று அதை அதட்டினார். அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக்கழித்து புறப்பட்டுப் போயிற்று. அவன் செத்துப்போனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாகச் செத்தவன்போல் கிடந்தான். இயேசு அவன் கையைப் பிடித்து, அவனைத் தூக்கினார்; உடனே அவன் எழுந்திருந்தான்.

(மாற்கு 9:17-27)

இந்த பகுதியில் சில முக்கியமான உண்மைகளை நாம் குறித்துக் கொள்ள வேண்டும். இயேசு அந்த மனிதனிடத்தில் இது மிகவும் கடினம் என்று சொல்லவில்லை. அவரது கட்டளையாவது தேவனுடைய சித்தம் உன்னுடைய மகனுக்குச் செய்யப்படும். இதற்கு பதிலாக "அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்று சொன்னார்." இதுதான் ஒவ்வொரு வியாதியைப் பற்றியும் இயேசுவினுடைய விருப்பம். இதற்கு எடுத்துக்காட்டாக நூற்றுக்கதிபதி "என்னுடைய வேலைக்காரன் வீட்டில் வியாதிப் பட்டிருக்கிறான்" என்று சொன்னபொழுது இயேசு நான் வந்து சுகப்படுத்துவேன் என்கிறார். (மத்தேயு 8:5-13, மற்றும் லூக்கா 7:2-10ஐ வாசிக்கவும்) குணமளிப்பதற்கும் விடுதலையாக்குவதற்கும் இயேசுவிற்கு சித்தம் உண்டா என்ற கேள்விக்கு இடமே இல்லை. மேலும் இன்றும் அவர் குணமாக்குவதற்கும் விடுதலையாக்குவதற்கும் சித்தமுள்ளவராக இருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மீண்டும் இந்த சிறுவனின் தகப்பன் இயேசுவினிடம் சொன்னார் “இந்த அசுத்த ஆவி அவனைக் கீழே தள்ளுகிறது. வாயில் நுரை தள்ள வைக்கிறது. அவனைப் பல்லைக் கடிக்க வைக்கிறது. அவன் செத்தவனைப்போல் அசைவற்றுக் கிடக்கிறான்.'' இந்த விளக்கத்திலிருந்து அநேக மக்கள் அந்த பையனுக்கு வலிப்புநோய் இருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால் அங்கு வேறு ஏதோ நடக்கிறது. அதை அறிந்து கொள்ள பகுத்தறிதலின் ஆவி அவசியம்.

இயேசு தகப்பனிடம் கேட்டார். “இது இவனுக்கு உண்டாகி எவ்வளவு காலமாயிற்று?” அதற்கு அவன் “சிறுவயது முதற்கொண்டே உண்டாகியிருக்கிறது,” என்று பதில் உரைத்தார். பிசாசின் தன்மையையும் அவன் உட்புகுந்த விதத்தையும் அறிய குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட சம்பவங்களை ஆராய்வது மிக்க அவசியம்.

அந்த மனிதன் இயேசுவிடம் “நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால் எங்கள் மேல் மனதிரங்கி எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்” என்றான். இயேசு அவனை நோக்கி “நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்'' என்றார். அவர் இந்த பொறுப்பினை முழுவதுமாக அந்த தகப்பன் மேல் வைத்தார். அநேக கிறிஸ்தவர்கள் பெற்றோர்களுக்கான ஆவிக்குரிய பொறுப்புகளை உணர்ந்து கொள்வதில்லை. பிள்ளைகளுக்காக தேவனின்மேல் விசுவாசம் வைப்பது நம்முடைய கடமையாகும். இயேசு “உன்னுடைய மகன் விசுவாசித்தால் ஆகும்” என்று சொல்லவில்லை. “அவருடைய தந்தை விசுவாசித்தால் மகன் குணமாகிவிடுவான் என்று இயேசு சொன்னார்.” மத்தேயு 15ஆம் அதிகாரத்தில் ஒரு சீரோபேனிக்கியா பெண்மணிக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் ஒரு அசுத்த ஆவியினால் மிகவும் கொடிய வேதனைப்பட்டாள். அவள் தன் மகள் சுகம் பெறுவாள் என்று விசுவாசத்துடன் இருந்தாள். இயேசு அவளிடம் “*உன் விசுவாசம் பெரிது*” என்று சொன்னார் உடனே அவளுடைய மகள் சுகம் பெற்றாள். (மத்தேயு 15:22-28ஐ வாசிக்கவும்.)

இந்த சிறுவனையும் அவனது தந்தையையும் பொறுத்தவரையில் இயேசு அந்த அசுத்த ஆவியை விரட்டினார். “*ஊமையும் செவிடுமான ஆவியே இவனை விட்டுப் புறப்பட்டுப் போ இனி இவனுக்குள் போகாதே*” என்று அதட்டினார். அந்த ஆவி புறப்பட்டுப் போன போது, அது சத்தமிட்டு அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுபோயிற்று.

இயேசு சிறப்பாக அந்த அசுத்த ஆவியை ‘ஊமையும் செவிடுமான ஆவி’ என்று அழைத்தார். அந்த ஆவி வெளியே சென்ற போது அந்த வலிப்பு நோய் அகன்றுபோனது. இந்த எண்ணமானது எதிர்மாறானதாக இருக்கலாம். ஆனால் வலிப்புநோயை ஒரு அசுத்த ஆவியினால் உண்டாக்க முடியும். வலிப்பு நோயை உண்டாக்கும் ஒரு அசுத்த ஆவி மக்கள் கூட்டத்திலிருந்து என்னிடம் பேசியதை அறிந்தேன். ஒரு பெண் தன்னுடைய குரலில் பேசாமல் ஆணின் குரலில் என்னிடம் பேசினாள். வியாதியை உண்டாக்கும் அசுத்த ஆவியோடு நாம் செயல்படும்போது நான் அதை அறிந்துகொண்டு அதோடு எப்படி செயல்படவேண்டும் என்பதையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

குணமளிப்பதற்கும் விடுதலையாக்குவதற்கும் இயேசுவிற்கு சித்தம் உண்டா என்ற கேள்விக்கு இடமே இல்லை. மேலும் இன்றும் அவர் குணமாக்குவதற்கும் விடுதலையாக்குவதற்கும் சித்தமுள்ளவராக இருக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அசுத்த ஆவியினால் உண்டான முடக்குவாதம்

அடுத்த உதாரணமானது, ஒரு பலவீனப்படுத்தும் ஆவி ஒரு பெண்மணியை 18வருடங்களாகக் கட்டி வைத்திருந்ததை லூக்கா சுவிசேஷத்தில் காண்கிறோம்.

> அப்பொழுது பதினெட்டு வருஷமாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள். இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி, அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள். இயேசு ஓய்வுநாளிலே சொஸ்தமாக்கினபடியால், ஜெப ஆலயத்தலைவன் கோபமடைந்து, ஜனங்களை நோக்கி: வேலைசெய்கிறதற்கு ஆறுநாள் உண்டே, அந்த நாட்களிலே நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக் கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச் செய்யலாகாது என்றான். கர்த்தர் அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: மாயக்காரனே, உங்களில் எவனும் ஓய்வுநாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டுபோய், அதற்குத் தண்ணீர்

> காட்டுகிறதில்லையா? இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக்கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார். அவர் அப்படிச் சொன்னபோது, அவரை விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள். ஜனங்களெல்லாரும் அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செய்கைகளைக்குறித்தும் சந்தோஷப்பட்டார்கள்.
>
> *(லூக்கா 13:11-17)*

அந்த ஸ்திரீயின் சரீரத்தில் பிரச்சனையை உண்டாக்கியது எது? பலவீனப்படுத்தும் ஒரு ஆவி. இயேசு, இந்த ஸ்திரீயை சாத்தான் கட்டி வைத்திருந்தான் என்று சொன்னார். அசுத்த ஆவியின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்பட்டவுடனேயே அவள் சுகம் பெற்றாள் என்பதை கவனியுங்கள். அசுத்த ஆவி அவளை விட்டுச் சென்றவுடன் அவள் தன் முதுகு வளைந்து கூனியாக இருந்த நிலையிலிருந்து நிமிர்ந்து நின்றாள். இயேசு அவளது நோய்க்குரிய காரணத்தை அறிந்திருந்தார். மேலும் அதை எப்படி சரிப்படுத்த வேண்டும் என்பதையும் அறிந்திருந்தார்.

குறி சொல்லும் ஆவி

நம்முடைய இறுதி எடுத்துக்காட்டாவது பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்தில் சுவிசேஷத்தைப் பிரசிங்கிக்கும்பொழுது நடந்த நிகழ்ச்சியாகும்.

> நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள் பவுலையும் எங்களையும் பின் தொடர்ந்து வந்து: இ ந் த மனுஷனர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்து கொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று.
>
> *(அப்போஸ்தலர் 16:16-18)*

அந்த பெண்மணி கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மைதான். அவள் சுவிசேஷத்தைப் போதிக்கிறவர்களைப் பற்றி விளம்பரம் செய்தாள். ஆனால் ஒரு அசுத்த ஆவி அவள் மூலமாக இதைச் செய்தது.

பவுல் இதை அறிந்து கொண்டு அவளிடத்திலிருந்து அந்த ஆவியை விரட்டினார். நாமும் இதைப்போன்ற பகுத்திறிதலை உடையவர்களாக இருக்க வேண்டும். வருவது உரைக்கும் பிசாசுகள் சபைகளில் மலிந்து கிடக்கின்றன. நான் செல்லுமிடங்களிலெல்லாம் அதாவது சிறந்த மதிப்பிற்குரிய சபையின் அங்கத்தினர்களிடத்தில் கூட சூனியப் பிசாசு, செய்வினை உண்டாக்கும் பிசாசு, மற்றும் குறி சொல்லும் பிசாசு ஆகிய பல பிசாசுகளுக்கு நான் எதிர்த்துப் போராடியிருக்கிறேன். இவை மக்கள் மத்தியில் உள்ளன. ஜனங்கள் ஜோசியம் பார்ப்பதிலும் மற்றும் சாஸ்திரம் பார்ப்பதிலும் இதே குறிசொல்லும் பிசாசினால் கொக்கி போட்டு இழுக்கப்பட்டுள்ளனர்.

ஆவிகளைப் பகுத்தறிதலின் விளைவுகள்

கிறிஸ்துவின் சரீரமாக செயல்படுகிறவர்களுக்கு ஆவிகளைப் பகுத்தறியும் வரமானது மிகவும் அவசியமாகும். இதன் விளைவினால் விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தை உணர முடியும். கடவுள் எந்த வகையில் செயல்படுகிறார் என்பதையும் அறிய முடியும். அது மனித இதயங்களின் ஆர்வத்தையும் நடத்தையையும் வெளிப்படுத்துகிறது. அது அசுத்த ஆவியினால் உண்டாகும் நோய்களையும், சச்சரவுகளையும் இனங்கண்டு கொள்ள உதவுகிறது. ஆவிகளைப் பகுத்தறிதல் முழுஅளவில் கிறிஸ்துவின் சரீரத்தில் செயல்படும் பொழுது குறிப்பிடத்தக்க ஊழியத்தை சபைகளுக்கும் உலகத்திற்கும் கொண்டுவரும்.

கள்

பகுதி 3 + வல்லமையின் வரங்கள்

7 விசுவாசம்

நாம் இப்பொழுது வல்லமையின் வரங்களை நோக்கிச் செல்லலாம். விசுவாச வரங்கள் குணமாக்குதல், அற்புதங்கள் நடைபெறுதல் இவற்றைப்பற்றியன. நாம் விசுவாச வரங்களிலிருந்து ஆரம்பிக்கும்போது இந்த வரத்தைப் பற்றிய தன்மையை விளக்கமாகக் காண்போம். மூன்று வகையான விசுவாசங்களைப்பற்றி புதிய ஏற்பாட்டில் குறிப்பிட்டிருப்பதைப் பற்றி கவனிக்கலாம்.

பலவகையான விசுவாசம்

இரட்சிப்பிற்கான விசுவாசம்

முதலாவதாக ரோமர் 10:17 சொல்லுகிறது *"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்."* ஒரு மனிதன், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் போதிப்பதைக் கேட்பதினால் பெற்றுக்கொள்ளும் விசுவாசம் இதுதான். ஒரு மனிதன் தன் இருதயத்தைத் திறந்து இந்த வசனங்களை ஏற்றுக்கொள்ளும்போது, அது அவனுக்குள் விசுவாசத்தை உண்டு பண்ணுகிறது. இந்த வகையான விசுவாசம் இரட்சிப்பிற்கு ஏதுவாகிறது. எபேசியர் 2:8-9 வசனங்களில் பவுல் இரட்சிப்பிற்கான அவசியத்தைப் பற்றிக் கூறுகிறார். *"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல், இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;"* தேவனுடைய கிருபைதான் விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பை உண்டாக்குகிறது. நாம் அந்த விசுவாசத்தைப் பற்றி பெருமை பேசிக்கொள்ள முடியாது. எப்படியாயினும், சுவிசேஷ போதனைகளுக்கு நாம் நமது இதயக் கதவுகளைத் திறந்து வைப்பதினால் தேவன் இதை நமக்குத் தந்தருளினார்.

உண்மை என்னவென்றால் விசுவாசம் இரட்சிப்பிற்கு முழுமையாகத் தேவைப்படுகிறது. இது வேதத்தின் வேறுபகுதிகளிலும் வலியுறுத்தப்படுகின்றது. ரோமர் 4:4-5 இல் "*கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும். ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.*" நீதியைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் நமக்கு விசுவாசம் வேண்டும். சுவிசேஷத்தைக் கேட்பதினால் இயேசு கிறிஸ்துவில் உண்டாகும் நமது விசுவாசம் உள்ளே இருப்பதினால் தேவன் நமக்கு நீதியைக் கொடுக்கிறார்.

பவுல் எழுதுகிறார் ''*அல்லாமலும் எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனாகிலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்.*" (ரோமர் 12:3) பவுல் விசுவாசத்தின் அளவைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனால், தேவன் ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு விசுவாசத்தை கொடுக்கிறார். இதுவே பொதுவாக "இரட்சிக்கும் விசுவாசம்" அல்லது "இரட்சிப்பிற்கான விசுவாசம்" அல்லது "இரட்சிப்போடு தொடர்ந்து வரும் விசுவாசம்" என்று அழைக்கப்படுகிறது.

இந்த உண்மை எபிரெயர் 11:6 இல் உள்ளது "*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்.*" தேவனுடைய வார்த்தையை கேட்கிறதினால் பெற்றுக் கொள்கிற விசுவாசத்தின் நிமித்தமே தேவனைப் பிரியப்படுத்தவும், அவரை அண்டிச் சேரவும், அவர் அளிக்கிற இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளவும் கூடும்.

பரிசுத்த ஆவியின் கனியாகிய விசுவாசம்

இரண்டாவது விதமான விசுவாசமானது பரிசுத்த ஆவியின் கனியின்

பகுதியாகிய விசுவாசம். *"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை."* (கலாத்தியர் 5:22, 23) (கிங் ஜேம்ஸ் வசனம்) நாம் முன்பாகவே ஆவியின் கனியைப் பற்றிப் பார்த்திருக்கிறோம், இவை ஒன்பது ஆகும். ஆவியின் வரங்கள் ஒன்பதாக இருப்பதுபோல ஆவியின் கனியும் ஒன்பதாக இருப்பது அழகான உந்துதலைக் கொடுப்பதற்கு பரிசுத்த ஆவியின் ஒரு அடையாளமாக இருக்கிறது. பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்கள் ஒன்பது ஆவியின் கனிகள் இரண்டிற்குமிடையே நெருக்கமான தொடர்பு உள்ளது. என்னைப் பொறுத்தவரையில் ஆவியின் அனைத்துக் கனியும் அன்பில் அடங்கியுள்ளதாக நான் நம்புகிறேன். ஆனால் அன்பு தனக்குள்ளே பல வகைகளில் வெளிப்படுகிறது.

நான் தனிப்பட்ட முறையில் நம்புவது ஆவியின் எல்லா கனியும் அன்பில் அடங்கும். ஆனால் அன்பு தனக்குள்ளே பல வழிகளில் வெளிப்படுகிறது.

ஏழாவது ஆவியின் கனியானது "விசுவாசம்." (கலாத்தியர் 5:22) நாம் இரட்சிக்கப்படுவதற்கேதுவான விசுவாசம் பற்றியதல்ல. ஆவியின் கனியின் ஒன்பது தன்மைகளும் சிறப்பான குணாதிசயங்களை குறிப்பிடுகிறது. இந்த விசுவாசம் என்பது "நம்பிக்கையில் தொடர்வது," "சார்ந்து கொள்வது," "முற்றிலும் நம்பத்தகுந்ததாய்" இருப்பது. ஒரு மனிதன் தன்னுடைய நம்பிக்கையில் தொடர்ந்து செல்வானானால் எவ்வித சூழ்நிலையிலும் பதறவோ, அதிக உணர்ச்சிவசப்படவோ மாட்டான். மிகவும் குறைவான மக்களே அவர்கள் இரட்சிக்கப்பட்ட நேரத்திலிருந்து இப்படிப்பட்ட குணத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதனின்மேல் நீ உன் நம்பிக்கையை வைக்க முடியும். அவன் ஓய்வுநாள் வகுப்புகள் எடுப்பதாகச் சொன்னால் ஒவ்வொருவரும்வாரமும் ஓய்வுநாள் வகுப்பு எடுப்பதற்காக அவன் அங்கே கண்டிப்பாக இருப்பான். ஆகவே இவ்வகையான விசுவாசம் அவனுடைய நடத்தையை எடுத்துக் காட்டுகிறது.

அற்புதமான விசுவாசம்

பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்றான விசுவாசத்தின் மூன்றாவது வகையாவது அற்புதமான விசுவாசம். *"வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே விசுவாசமும்,"* (1 கொரிந்தியர் 12:9) தேவனுக்கு எல்லா ஞானமும் உண்டு என்று நான் முன்பாகவே சுட்டிக்காட்டியுள்ளேன். ஆனால் அவர் மொத்த ஞானத்தையும் நமக்கு உடனடியாகக் கொடுத்துவிட மாட்டார். நமக்குத் தேவையான சமயத்தில் அவர் பரிசுத்த ஆவியினால் ஞானத்தைப் போதிக்கும் ஒரு வசனத்தை அளிக்கிறார். அது அவருடைய ஞானத்தில் ஒரு சிறிய பகுதியேயாகும். அந்த சூழ்நிலைக்குத் தேவையானபடி அந்த ஞானம் அதை சமாளிக்கிறது. இதைப் போலவே தேவனிடத்தில் எல்லா அறிவும் இருந்தாலும் அவர் நமக்கு அவருடைய முழு அறிவையும் கொடுத்துவிடுவதில்லை. ஏனென்றால் அவ்வளவு பாரத்தை நம்மால் சுமக்க முடியாது. திரும்பவும் தேவைப்படும் சமயங்களில் அவர், பரிசுத்த ஆவியின் மூலம் அவருடைய அறிவை உணர்த்தும் வசனத்தை வழங்குகிறார். அவர் இதைப்போன்ற வழியிலே விசுவாசமாகிய வரத்தை வர்த்திக்கப்பண்ணுகிறார்.

தேவன் மிகக் கண்டிப்புடன் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்கும் குறிப்பிட்ட சில வரங்கள் உண்டு அவைகளில் நிச்சயமாக விசுவாசமும் ஒன்று ஆகும்.

தேவனாகிய கர்த்தர் விசுவாசத்திற்கான "ஒரு வார்த்தையை" கொடுக்கிறார் என்று பவுல் சொல்லவில்லை. ஆனால் அது தான் உண்மை. தேவனிடத்தில் பூரண விசுவாசம் இருக்கிறது. இந்த வரத்தின் மூலம் அவர் நமக்கு ஒருசிறிய அளவு விசுவாசத்தைக் கொடுக்கிறார். அது மனித விசுவாசமோ அல்லது வளர்க்கப்பட்ட விசுவாசமோ அல்ல. அது தெய்வீக விசுவாசம். இந்த விசுவாசமானது தேவனிடத்திலிருந்து பரிசுத்த ஆவியானவரின் மூலமாக ஒரு விசேஷித்த வார்த்தையின் வடிவில், தேவைப்படும் போது, உடனடியாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நம்மிடத்தில் கடந்து வருகிறது. இதுவரை நாம் ஆராய்ந்து பார்த்ததில் இந்த வரமும் மற்ற வரங்களைப்போல தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழாக செயல்படுகிறது. ஒருவரும் சுய சித்தத்தினால் அறிவை உணர்த்தும் வசனத்தையோ, ஞானத்தைப் போதிக்கும் வசனத்தையோ பெற்றுக் கொள்வது இல்லை. ஒருவரும் சுய

சித்தத்தினால் ஆவிகளைப் பகுத்தறிய முடியாது. இதே போல ஒருவரும் சுய சித்தத்தினால் விசுவாச வரத்தையும் பெற்றுக் கொள்ள முடியாது. இந்த வரங்கள் தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது. ஆனால் நாம் அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் இருக்கும்போது அவர் தம்முடைய சித்தத்தின்படி இந்த வரங்களை நம் மூலம் பயன்படுத்துகிறார்.

எல்லா விசுவாசிகளும் விசுவாசவரத்தை எந்த நேரத்திலும் செயல்படுத்த முடிந்தால் இந்த உலகம் தாறுமாறாகவும், குழப்பமாகவும் ஆகிவிடும். ஏனென்றால் நாம் அவற்றை நம்முடைய சொந்த மனநிலைக் கேற்றவாறும் நம்முடைய தேவைகளுக்கு ஏற்றவாறும் உபயோகப்படுத்துவோம். ஒரு மனிதன் மலையை நோக்கிக் கிழக்குத் திசைக்கு பெயர்ந்துபோ என்பான். மற்றொரு மனிதன் மலையை நோக்கி மேற்கு திசைக்குப் பெயர்ந்துபோ என்பான். தேவன் மிகக்கண்டிப்புடன் கட்டுப்பாடுடன் வைத்திருக்கும் குறிப்பிட்ட சில வரங்கள் உண்டு. அவைகளில் திட்டமாக விசுவாசமும் ஒன்றாகும்.

தேவனுடைய விசுவாசத்தின் இயல்பு

ஆகவே அதிசயிக்கும் விசுவாசமானது, மனித வர்க்கத்திற்கு தெய்வீக விசுவாசத்தைக் கற்றுத்தருவதாகும்.

தேவனுடைய விசுவாசத்தைப் பற்றிப் படிப்பது ஆச்சரியமானதாக இருக்கும். கர்த்தருடைய வார்த்தையினால் முழு உலகமும் படைக்கப்பட்டது. சங்கீதம் 33-6 ஆம் வசனம் இவ்வாறு கூறுகிறது. "*கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது.*"

தேவனுடைய சுவாசம் இன்னது என்று புரிந்து கொள்வது மிக அவசியமானதாகும். நான் உச்சரிப்பைக் குறித்துக் கற்கும் போது சில குறிப்பிடத்தக்க காரியங்களைக் கண்டு கொண்டேன். சுவாசிக்காமல் ஒரு மனிதன் பேசுவது என்பது இயலாத காரியம். ஒரு வார்த்தை உங்கள் வாயிலிருந்து புறப்படும்பொழுது, உங்களுடைய சுவாசமும் அதோடு கூட வருகிறது. முக்கியமாக இவ்வுலகிலுள்ள எல்லா மொழிகளிலும் பேச்சின் ஒவ்வொரு வடிவும் நம்முடைய வாயிலிருந்து புறப்படும் காற்றின் ஏற்றத்தாழ்வுகளே ஆகும். எண்ணிக்கைக்கு அடங்காத அநேக ஏற்றத்தாழ்வுகளைப் பற்றியும் அவைகளின் மூலம் எத்தகைய

காரியங்களைச் சாதிக்கிறோம் என்பதையும் சிந்தித்துப் பார்க்கும் பொழுது மிகவும் வியப்பாக இருக்கிறது. சங்கீதம் 33:6ஆம் வசனத்தில் "சுவாசம்" என்னும் எபிரெய வார்த்தை "ஆவி" என்றும் அர்த்தம் கொள்ளப்படுகிறது. "*கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது.*" வேறு வகையாகச் சொல்லப் போனால் சகல சிருஷ்டிகளும் தேவனுடைய வார்த்தையும், ஆவியும் இணைந்து சிருஷ்டிக்கப்பட்டவைகளாகும். அல்லது தேவனுடைய வார்த்தை தேவனுடைய ஆவியினால் கடந்து செல்கிறது. ஆதலால் தேவன் பேசும் பொழுது அவருடைய சுவாசமும் அவருடைய ஆவியும் கலந்து வருகிறது. தேவ சுவாசத்தோடு இணைந்து வந்த தேவ வார்த்தை, உருவாக்கப்பட்ட சகலத்தையும் உருவாக்கிற்று.

இந்த உண்மையை உறுதிப்படுத்தும் வேதத்தின் சில பகுதிகளைக் காணலாம். ஆதியாகமம் 1:2 ஆம் வசனத்தில் நாம் இவ்வாறு சொல்லப்படுவதைக் காணலாம். "*பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.*" இதற்கு அடுத்ததாக என்ன நடந்தது? "*தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.*" தேவனுடைய வார்த்தை அவருடைய வாயிலிருந்து வெளிவந்தபோது தேவனுடைய வார்த்தையும் தேவனுடைய ஆவியும் இணைந்து ஒளி என்று கூறப்பட்ட வார்த்தை 'ஒளி' ஆனது. எபிரெயம் கிரேக்கம் ஆகிய இரண்டு மொழிகளிலும் "வார்த்தை" என்ற பதமும் "பொருள்" என்ற பதமும் ஒன்றே. இது ஒரு விபத்தினால் உண்டாகவில்லை. ஏனென்றால் பொருட்களெல்லாம் தேவனுடைய வார்த்தை பேசப்படுவதினாலும் அவருடைய ஆவியினாலும் உண்டாகின்றன. தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது

வார்த்தையினுடைய திரளான வல்லமையை அதிகமாக மதிப்பீடு செய்வது என்பது முடியாத செயலாகும். இருப்பினும் அநேக கிறிஸ்தவர்கள் அவைகளைக் குறைவாக மதிப்பீடு செய்கிறார்கள். இது வருத்தத்தைத் தரக் கூடியதாகும்.

என்று சொன்னவுடன் வெளிச்சம் உண்டாகியது. இது தான் எல்லா படைப்பின் அடிப்படை தன்மையாகும்.

எபிரெயர் 11:3 இல் தேவனுடைய வார்த்தை பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்டது என்ற சத்தியம் மீண்டுமாக குறிப்பிடப்பட்டுள்ளது. "*விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை என்றும் அறிந்திருக்கிறோம்.*" படைக்கப்பட்ட எல்லா பொருட்களின் பின்னணியிலும் காணப்படும் அடிப்படையான சக்தி என்ன? அது தேவனாகிய பரிசுத்த ஆவியின் தேவனுடைய வார்த்தை.

நான் ஒரு முறை இயற்பியலின் தத்துவத்தைப் பற்றிப் படித்தேன். நான் அதைப் புரிந்துகொண்டவகையில் ஒரு இயற்பியல் மேதையிடம் நீங்கள் ஒரு குறிப்பிட்ட சாய்வு மேஜை எதினால் செய்யப்பட்டது என்று கேட்டால் அவர் அணுக்களைப் பற்றிய அடிப்படையில் பதில் கொடுப்பார். நீங்கள் இந்த அணுக்கள் எதினால் செய்யப்பட்டது என்று கேட்டால் அவர் புரோட்டான்கள், நியூட்டான்கள் எலெக்ட்ரான்களால் ஆனவை என்று பதில் கொடுப்பார். நீங்கள் அவரிடம் யாராவது, எப்பொழுதுதாவது இவைகளில் எதையாவது பார்த்திருக்கிறார்களா என்று கேட்டால் அதின் பதில் இல்லை என்றுதான் இருக்கும். நீங்கள் அவரிடத்தில் இதன் உண்மைத் தன்மைகளைப்பற்றி விளக்கும்படிக் கேட்டால் அவர் சிறந்த முறையில் செய்யும் காரியம் என்னவென்றால் கணிதத்தின் சில சூத்திரங்களையும், வாதங்களை நிரூபிப்பவைகளையும் கொடுப்பார் அவர் பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு உள்ள எபிரெய எழுத்தாளரோடு உடன்பாடு உள்ளவராக இருப்பார். அவர் எழுதியது. "*நாம் இப்பொழுது கண்ணால்காணுகின்ற பொருட்களெல்லாம் நாம் பார்க்கக் கூடிய பொருட்களால் உண்டானவை அல்ல.*" இப்பொழுது நாம் பார்க்கக்கூடியது, தெளிவாகத் தொட்டு உணரத்தக்கது, புலன்களால் உணரத்தக்கது ஆகியவை நாம் பார்க்கக்கூடிய பொருள்களால் உண்டானவை அல்ல.

நீங்கள் சிலவற்றை தேவனுக்காகப் பேசலாம் அல்லது தேவனிடத்தில் சில காரியங்களுக்காகப் பேசலாம்.

வார்த்தையினுடைய திரளான வல்லமையை அதிகமாக மதிப்பீடு செய்வது என்பது முடியாத செயலாகும். இருப்பினும் அநேகக் கிறிஸ்தவர்கள் அவைகளைக் குறைவாக மதிப்பீடு செய்கிறார்கள். இது வருத்தத்தைத் தரக் கூடியதாகும். எசேக்கியல் 12:25 சொல்லுகிறது. *"நான் கர்த்தர், நான் சொல்லுவேன், நான் சொல்லும் வார்த்தை நிறைவேறும்; இனித் தாமதியாது; கலக வீட்டாரே, உங்கள் நாட்களிலே நான் வார்த்தையைச் சொல்லுவேன், அதை நிறைவேறவும் பண்ணுவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல் என்றார்."* இதுதான் தேவனுடைய மாறாத நித்திய இயல்பு. நாம் உடனடியாக நடக்கக்கூடியதைப் பார்ப்போமானால் தேவ ஆவியானவரின் சுவாசம் நமக்குள்ளிருந்தால் அதே சுவாசம் ஒரு வார்த்தையை நமக்குக் கொண்டுவரும். இது தான் சரியான விசுவாச வரம்.

விசுவாசத்தில் வாத்தையைப் பேசுதல்

இது தொடர்பாக நாம் இயேசுவின் போதனைகளில் சிலவற்றைக் காணலாம். மத்தேயு 21:18-22 வில் இயேசு அத்திமரத்தைச் சபித்த நிகழ்ச்சி இடம் பெறுகிறது. நாம் இதனை இரண்டு சுவிசேஷங்களில் உள்ள வசனங்களின் மூலம் ஒத்திட்டுப் பார்க்கும் வகையில் தொடங்கலாம்.

> இப்பொழுது காலையிலே அவர் நகரத்துக்குத் திரும்பி வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது வழியருகே ஒரு அத்தி மரத்தைக் கண்டு, அதினிடத்திற்போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையும்; காணாமல் "இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார்" "உடனே அத்திமரம் பட்டுப் போயிற்று." சீஷர்கள் அதைக்கண்டு: இந்த அத்திமரம் எத்தனை சீக்கிரமாய்ப் பட்டுப்போயிற்று! என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: "நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்குச் செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்தில் எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்."

இந்தப் பகுதியிலிருந்து இரண்டு வகைகளாக வார்த்தையை உபயோகிக்கலாம் என்பது பெறப்படுகிறது. ஒரு வழியாவது சிலவற்றை சிலரோடு தேவனுக்காகப் பேசுவது. அடுத்த வழியாவது தேவனிடத்தில் சிலகாரியங்களுக்காக அல்லது சிலருக்காகப் பேசுவது ஆகும். முதலாவதாக இயேசு அத்திமரத்தைக் குறித்து ஜெபிக்கவில்லை மேலும் அவர் அத்திமரத்திடமும் ஜெபிக்கவில்லை. அப்படிச் செய்திருந்தால் அது விக்கிரக ஆராதனைக்கு ஒப்பாகும். அவர் தேவனுடைய சார்பில் அத்திமரத்திடம் பேசினார் அந்த அத்திமரத்திடம் அவர் என்ன செய்யச் சொன்னாரோ அது அதைச் செய்தது (பட்டுப் போயிற்று) இயேசு அவருடைய சீஷர்களிடம் அவர்களுக்கு விசுவாசம் இருந்தால் அத்திமரத்திற்குச் செய்ததை அவர்களும் செய்ய முடியும் என்று சொன்னார். இதைவிட அதிகமாகவும் செய்ய முடியும். அவர்கள் மலையைப் பார்த்துச் சொன்னாலும் அவைகளும் அத்திமரத்தைப் போலவே கீழ்ப்படியும். இரண்டாவதாக இயேசு தன்னுடைய சீஷர்களுக்குச் சொன்னது நீங்கள் ஜெபத்தில் எதைக் கேட்பீர்களோ அதைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசித்து ஜெபித்தால் அதை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள் என்பதாகும் இந்த இரண்டு வழிகளையும் குறித்து அதிகமான வசனங்களால், அதிக விளக்கமாக பின்னால் வரும் அத்தியாயத்தில் காணலாம். ஆனால் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலின் படி நீங்கள் சிலவற்றை தேவனுக்காகப் பேசலாம் அல்லது தேவனிடத்தில் சில காரியங்களுக்காகப் பேசலாம்.

நாம் இப்பொழுது இதே நிகழ்ச்சியை மாற்கு சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி நோக்கலாம். இந்தப் பேச்சில் இயேசு இன்னும் சிலவற்றை அதிகமாகச் சொன்னது சேர்க்கப்பட்டுள்ளது. அதனால் அவற்றைப் புரிந்து கொள்வதற்கு உண்மையாகவே இது ஒரு திறவுகோல் போல் உதவும்.

> மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்க வந்தார். அத்திப்பழக் காலமாயிராதபடியால், அவர் அதினிடத்தில் வந்தபோது, அதில் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை. அப்பொழுது இயேசு அதைப் பார்த்து; “இது முதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் என்றார்;” அதை

> அவருடைய சீஷர்கள் கேட்டார்கள்... மறுநாள் காலையிலே அவர்கள் அவ்வழியாய்ப் போகும்போது, அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயிருக்கிறதைக் கண்டார்கள். பேதுரு நினைவு கூர்ந்து, அவரை நோக்கி: "ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று" என்றான். இயேசு அவர்களை நோக்கி: ''தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்."
>
> *(மாற்கு 11: 12-14, 20-22)*

இயேசுவின் இந்த வாசகத்திற்குச் சரியான மொழிபெயர்ப்பு ''தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்'' என்பதாகும். மீண்டும் தேவனுடைய விசுவாசம் மனிதர்களுடைய வார்த்தைகளின் வழியாக வெளிப்படுகிறது. அவைகள் தேவனே பேசுவது போன்ற அதிகாரத்தையுடையனவாக இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட வகையில் அவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் சுவாசிப்பதினால் அவர்கள் தேவனால் கொடுக்கப்பட்ட பாத்திரங்கள். இயேசு சொல்லிக் கொண்டே போகிறார்.

> எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: "நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ" என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.
>
> *(மாற்கு 11:23, 24)*

23ஆம் வசனத்தின் ஆரம்பம், முடிவுகளைப் பார்க்கும்போது மிகவும் குறிப்பிடத்தக்க உண்மையைக் காண்கிறோம். "*கேட்டுக்கொள்பவர்கள் யாராயிருந்தாலும்... கேட்டுக் கொள்வது எதுவாக இருந்தாலும்*" என்று சொல்கிறார். இது யாரையும் எதையும் விட்டுவிடவில்லை. அது யாராக இருந்தாலும், எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. இதன் கட்டளை என்னவென்றால் தெய்வீக விசுவாசம் இருக்க வேண்டும்-தேவனிடத்தில் விசுவாசம். இதன் பரிந்துரையாவது, தேவன் அந்த விசுவாசத்தை நமக்குக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். நம்மில் அதைப் பெற்றுக் கொள்ள அநேகர் ஆயத்தமாய் இருப்பதைவிட... "*நீங்கள் சந்தேகப்பட வேண்டாம். உங்களால் செய்ய முடியும். தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்று இயேசு சொல்கிறார்.*"

1 கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தில் பவுல் அநேக ஆவிக்குரிய வரங்களைப்பட்டியலிடுகிறார் அதில் விசுவாசமும் அடங்கும். அதாவது மலைகளைப் பெயர்க்கத்தக்க விசுவாசம்.

> நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பெயர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.
>
> *(வசனம் 1, 2)*

நீங்கள் மலைகளின் மேல் கை வைக்க வேண்டிய அவசியமில்லை. அதன்மேல் நீங்கள் ஒரு அற்புதத்தைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. நீங்கள் தெய்வீக விசுவாசத்தோடே பேசினால் நீ என்ன சொல்லுகிறாயோ அதை அது செய்ய வேண்டும்.

ஜெபத்தைக் குறித்து இயேசு சொன்ன மொழியை கவனத்தில் கொள்ளுங்கள். "*ஆதலால் நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.*" (மாற்கு11:24) நான் அடிக்கடி ஜனங்களிடத்தில் கேட்பேன். "நீங்கள் எப்பொழுது பெற்றுக்கொள்வீர்களென்று." அதற்கு பதில் - "நீங்கள் ஜெபிக்கும்பொழுது" நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். அது தாமதமாகக் கூடக் கிடைக்கலாம். ஆனால் நீங்கள் ஜெபிக்கும்பொழுது பதில் வரும். இது தான் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்வதற்கான பெரிய ரகசியம். ஆனால் பிசாசுக்கு மட்டும் எல்லாம் நாளைக்குத் தான் அவனுடைய நாளைக்கு என்பதற்கு நீங்கள் அவனுக்கு வழி வகுத்தீர்களானால் தேவன் உங்களுக்காக வைத்திருப்பதை நீங்கள் ஒரு நாளும் பெற்றுக் கொள்ள மாட்டீர்கள். தேவனைப் பொருத்தவரை வேதம் சொல்லுகிறது "*இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்.*" (2 கொரிந்தியர் 6:2) தேவன் இப்பொழுது நித்திய வாழ்வு உடையவர்.

கடுகுவிதையளவு தெய்வீக விசுவாசம்

மத்தேயு சுவிசேஷத்தில் நாம் சீஷர்களால் வலிப்பு நோய் உள்ள ஒரு சிறுவனிடத்திலிருந்த பிசாசைத் துரத்த முடியாத நிலையைப் பற்றி வாசிக்கிறோம். அவர்கள் மட்டும் இயேசுவோடு தனித்து இருக்கும்போது அவரிடத்தில் கேட்டார்கள். "*அப்பொழுது சீஷர்கள் இயேசுவினிடத்தில் தனித்து வந்து; அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று கேட்டார்கள்.*" (மத்தேயு 17:19) இயேசு ஒரு எளிய பதிலைச் சொன்னார். ஏனென்றால் உங்களுடைய அவிசுவாசத்தால்தான்.(வசனம் 20) பின்பு அவர் தொடர்ந்து சொன்னனார்.

நீங்கள் ஜெபித்த அந்தத் தருணத்திலேயே பெற்றுக் கொள்வீர்கள். அது தாமதமாகக் கூட கிடைக்கலாம். ஆனால் நீங்கள் ஜெபிக்கும் பொழுது பதில் வரும்.

> அதற்கு இயேசு உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, "இவ்விடம் விட்டு அப்புறம் போ" என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார்.
>
> *(வசனம் 20, 21)*

நாம் இச்சம்பவத்தினை லூக்கா 17:6ஆம் வசனத்தோடு ஒத்திட்டுப் பார்ப்போம்.

> அதற்குக் கர்த்தர் கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்தி மரத்தை நோக்கி; "நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக" என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்.

கவனியுங்கள், இந்த மரமானது கடலுக்குள் பெயர்ந்து போவதில்லை. ஆனால் கடலுக்குள் முளைக்கும். இந்த இரண்டு பகுதிகளிலும் கர்த்தர் சொல்கிறார். உங்களுக்குத் தேவையானது கடுகளவு விசுவாசம்தான். இவ்வகையான விசுவாசம் வலிமையுள்ளதாக இருக்கும். ஒரு சிறிய

கடுகுவிதை அளவு விசுவாசம் மலையைப் பெயர்ப்பதற்குப் போதுமானது. அது தேவனின் விசுவாசமாக இருந்ததானால் ஒரு பெரிய கரண்டி அளவு விசுவாசம் தேவையில்லை. ஒவ்வொரு விதமான விசுவாசத்திலும் இது உண்மையாகாது. ஆனால் இது தெய்வீக விசுவாசம். இது விசுவாசத்தின் அளவைக் குறிப்பதல்ல, ஆனால் விசுவாசத்தின் தன்மையைக் குறிக்கிறதென்று இயேசு இதைப் பற்றி சொல்கிறார்.

அது தேவனுடைய விசுவாசமாக இருந்தால் ஒரு பெரிய அளவில் ஒரு கரண்டி நிறைய தேவைப்படுவதில்லை. அது ஒவ்வொரு வகையிலான விசுவாசத்திலும் உண்மை அல்ல. ஆனால் அது தெய்வீக விசுவாசமாகும்.

நான் என்னுடைய மனைவியாகிய லிடியாவைத் திருமணம் செய்ய ஆலோசிக்கும்பொழுது நான் ஒலிவ மலையில் நடந்துகொண்டு தியானம் செய்து கொண்டிருந்தேன். அதாவது இஸ்ரவேல் தேசத்தில் ஒரு விசுவாச மிஷனரியாக இருப்பதற்கு எனக்கு எது ஈடுபாடு உண்டாக்கிது என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். லிடியா எனக்கு “நடுஇராத்திரியிலே எழும்பி குழந்தைகளுக்கான மறுநாள் காலை உணவு கிடைக்கும்படி ஜெபம் செய்வதாக” சில கதைகளைச் சொன்னாள். நான் கர்த்தரிடத்தில் ஒருபோதும் அந்த வரைக்கோடுக்குள்ளான நிலைமைக்குள் என்னைக் கொண்டுபோகக் கூடாது என்று விசுவாசித்து ஜெபித்து இந்தக் காரியத்தைக் கர்த்தரிடத்தில் முடித்துக் கொண்டேன். எந்தக் காரியமும் என்னை அந்த நிலைக்குள் கொண்டு செல்லாது என்பது எனக்குத் தெரியும். அப்பொழுது நான் ஜெபித்த ஜெபத்தை இப்பொழுது பின்னிட்டுப் பார்க்கும்போது இது என் விசுவாசத்தினால் கிடைத்தது என்பதை அப்பொழுது நான் ஜெபித்த வேளையைப் பின்னிட்டுப் பார்க்கும்பொழுது அறிந்துக் கொண்டேன். இது ஒரு போராட்டம் அல்ல. இது ஒரு முயற்சியும் அல்ல. இது இப்படித்தான் அமையும் என்பது எனக்குத் தெரியும். முப்பது வருட திருமண வாழ்க்கையில் இவ்வாறே நடந்தது. இந்தக் காரியத்தைக் குறித்து நான் மேன்மை பாராட்ட என்னிடத்தில் ஒன்றுமில்லை. நான் இதைச் சொல்வதற்குறிய காரணம் என்னவென்றால், தேவன் கடுகளவான

தெய்வீக விசுவாசத்தை, உங்கள் இருதயத்தில் விதைக்கும் பொழுது பிரச்சனைகள் தீர்ந்துவிடும் தருணம் உண்டாகும் என்பதை நான் காண விளைகின்றேன்.

இருதயத்திலும் வாயிலும் அந்த வார்த்தைகள்

எரேமியா தீர்க்கதரிசியின் அழைப்பில் தேவனுடைய விசுவாசத்தைப் பற்றியும் அதன் வல்லமையைப் பற்றியும் மிகவும் அழகான நாடக வடிவிலான எடுத்துக்காட்டுடன் விளக்கப்பட்டுள்ளது. *"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்."* (எரேமியா 1:5). அதற்கு எரேமியா "நான் சிறுபிள்ளையாய் இருக்கிறேன்" என்றான். அதற்கு கர்த்தர்: "நான் சிறுபிள்ளை என்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய் நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக. நீ அவர்களுக்கு பயப்படவேண்டாம். உன்னைக் காக்கும்படிக்கு உன்னுடனே இருக்கிறேன்" என்று கர்த்தர் சொல்லி (வசனம் 7, 8) 9ஆம், 10ஆம் வசனமும் பார்க்க.

> கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு; இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன். பார், பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்றைய தினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின் மேலும் ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார்.

எரேமியா தான் ஒரு தீர்க்கதரிசி ஆவதற்கு மிகவும் இளைமையானவன் என்று நினைத்தான். ஆனால் கர்த்தர் அவனிடத்தில் சொன்னார் "இன்றைய தினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின் மேலும் ஏற்படுத்தினேன்" பார் பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் ஏற்படுத்தினேன் என்றார் (எரேமியா 1:9) மேலும் *"கர்த்தருடைய வார்த்தை எரேமியாவின் வாய்க்குள் பரிசுத்த ஆவியினால் வைக்கப்பட்டபொழுது"* அது தேவன்தாமே பேசியதுபோல் வலிமைமிக்கதாக இருந்தது. நீங்கள் எரேமியாவின் தீர்க்கதரிசனங்களை

வாசிக்கும் பொழுது, கடந்த 2500 ஆண்டுகளாக அநேக இராஜ்யங்களின் முடிவுகளையும், நிலைப்படுதலையும் அவருடைய தீர்க்கதரிசனங்களால் அறியமுடியும். அவைகள் சரியாக நிறைவேறியது. அதுதான் பரிசுத்த ஆவியின் மூலமாக மனிதனின் வாயின் வழியாக பேசப்பட்ட தேவனுடைய வார்த்தையின் வல்லமையாகும்.

தேவனின் வாயாக இருப்பதற்கான நிபந்தனைகள் எரேமியா 15ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. *"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது."* (வசனம் 16). தேவனுடைய வார்த்தையை சொல்ல வேண்டுமானால், முதலில் நாம் தேவனுடைய வார்த்தையை முற்றிலுமாக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். இதுபோல் கர்த்தர் எசேக்கியாவை அழைத்தபோது, அவர் தனது கையில் ஒரு புத்தக சுருளை நீட்டி, *"உன் வாயைத்திறந்து, நான் உனக்குக் கொடுக்கிறதைப் புசி"* என்றார் (எசேக்கியேல் 2:8) பின்னர் எசேக்கியேலை தீர்க்கதரிசனம் சொல்லக் கூறினார்.

தீர்க்கதரிசனமும், ஆவிக்குரிய வரங்களும் ஜென்மசுபாவ மனதிலிருந்து வராது என்பதை நாம் முழுமையாக அறிந்து கொள்ளவேண்டும். நமது மனதிற்குள் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு வருவது மட்டுமன்றி, நமது ஆவிகளில் அவைகளை உட்கொள்ள வேண்டும். வார்த்தை அங்கே உட்கொள்ளப்பட்டு, நமது இருதயங்களில் வைத்து வைக்கப்படும்போது, அது பரிசுத்த ஆவியானவர் அவர் விரும்பும்வண்ணம், தாவீது சொன்னது போல் (சங்கீதம் 119:11) அவர் வெளிக்கொண்டு வருவார். தேவனுடைய வார்த்தைகளைப் பெற்றவுடன், அவற்றை உட்கொண்டு, அதன் படி ஜீவித்தார். இதே போன்று யோபுவின் சாட்சியைப் பாருங்கள். *"அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய் காத்துக் கொண்டேன்."* (யோபு 23:12).

நான் புதிதாக இரட்சிக்கப்பட்டு வட ஆப்பிரிக்காவில் ஆங்கிலேயப் பட்டாளத்தில் ஒரு போர் வீரனாகப் பணிபுரியும்போது, இதுவே என் சாட்சியுமானது. எனது உணவைப்பார்க்கிலும் தேவனுடைய வார்த்தைக்கே நான் முன்னுரிமை அளித்தேன். காலை உணவை

சாப்பிடுவதா அல்லது வேதத்தைப் படிப்பதா என்று தீர்மானம் செய்யவேண்டியதிருப்பின், நான் வேதத்தைப் படிப்பதற்கே நேரத்தை எடுத்துக்கொள்வேன். பாலைவனத்தில் மூன்று ஆண்டுகளாக தேவனுடைய வார்த்தையினாலே நான் வாழ்ந்தேன். அங்கே ஆலயங்களோ, போதகர்களோஅல்லது பிரசங்கிமாரோ இல்லை. என்னிடத்தில் இரண்டு இருந்தன, தேவனுடைய வார்த்தையும், தேவனுடைய ஆவியும். அந்த அனுபவம் என்னில் மிக முக்கியமான மற்றும் நிரந்தரமான மாறுதல்களை உண்டுபண்ணின.

இறுதியாக எரேமியா 15:19 இல் கூறுகிறார். *"இதினிமித்தம், நீ திரும்பினால் நான் உன்னைத் திரும்பச் சீர்படுத்துவேன்; என் முகத்துக்கு முன்பாக நிலைத்துமிருப்பாய்; நீ தீழ்ப்பானதினின்று விலையேறப்பெற்றதைப் பிரித்தெடுத்தால், என் வாய் போலிருப்பாய்; நீ அவர்களிடத்தில் திரும்பாமல், அவர்கள் உன்னிடத்தில் திரும்புவார்களாக என்று கர்த்தர் சொல்லுகிறார்."* எரேமியா தேவனுக்கு முன்பு நின்று, அவர் வார்த்தையைக் கேட்டு, அதைச் சொல்லவேண்டும். தேவன் சொல்லுகிறதை அதே வண்ணம் சொல்லுகிற ஒரு வாயை அவர் விரும்புகிறார். தேவன் ஒன்றினைக் குறித்து விரும்புகிற நிலையை நாம் ஒருபோதும் குறைக்கக் கூடாது. தேவன் நிபந்தனைகளை ஏற்படுத்தும்போது, அவைகளை மாற்ற நமக்கு உரிமை இல்லை. நாம் மனிதனின் நிலைக்குக் கீழே செல்ல முடியாது. தேவன் நம்மை வைத்திருக்கும் நிலையில் நாம் நிற்க வேண்டும். மனிதர்கள் தேவன் விரும்புகின்ற நிலைக்குத் திரும்ப வேண்டும். நாம் அவர்களின் நிலைக்குச் செல்ல இயலாது.

விசுவாச வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் இரு வழிகள்

விசுவாசத்தை நடைமுறைப்படுத்துவதில், வார்த்தைகளை இரண்டு விதமான வழிகளில் உபயோகிப்பதை முன்பு குறிப்பிட்டிருந்தேன். முதல் வழி தேவன் சார்பாக, ஒரு மனிதனிடம் பொருள் அல்லது சூழ்நிலையில் வார்த்தைகளைப் பேசுவது. இந்த விசுவாச அறிவிப்புக்கு இறையியலில் பெயர் இல்லை. ஆனால் நான் சொல்லுவேன் அது விசுவாசியின் அறிவிப்பே ஆகும்.

இரண்டாம் வழி தேவனிடம், ஒரு மனிதன், பொருள் அல்லது சூழ்நிலை சார்பாக பேசுவதாகும். இந்த விசுவாச அறிவிப்பை ஜெபம் என்று நாம் அழைக்கிறோம்.

எலியாவின் முன்மாதிரி

எனக்கு மிகவும் பிடித்தமான வேதாகமப்பாத்திரம் எலியா. இந்த இரண்டு வகையான வார்த்தைகளை உபயோகித்து விசுவாசத்தை நடைமுறைப்படுத்தினார். இஸ்ரவேல் முழுவதுமாக பின்மாற்றம் அடைந்து, பொல்லாப்பும், குழப்பமும் நிறைந்து ஆகாப் என்னும் பொல்லாத அரசன் அரசாட்சி செய்யும்போது, எலியா ஒரு தீர்க்கதரிசியாக எழும்பினார். எலியா இந்த உணர்ச்சியான வார்த்தைகளை, தேவனின் சார்பாகப் பேசினார்.

> கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி; என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்.
> *(1 இராஜாக்கள் 17:1)*

இது மிகவும் வல்லமையான வாசகம். அப்படித்தானே? இந்த அதிகாரத்தினால் மழையையும் பனியையும் கட்டுப்படுத்த முடியும்பொழுது 3 1/2 வருடங்களாக அங்கு மழை பெய்யவும் இல்லை, பனி பெய்யவும் இல்லை என்று வேதம் காட்டுகிறது. இது எலியாவின் வார்த்தையின்படியே நடந்தது. ஆகாப் எலியாவைத் தேடி ஒவ்வொரு இராஜ்யத்திற்கும் ஒவ்வொரு தேசத்திற்கும் ஆட்களை அனுப்பினான். (1 இராஜாக்கள் 18:10ஐ வாசிக்கவும்) ஆகாப், எலியாவைப் பிடிக்க முடிந்தால் அவனை எப்படியாவது கொடுமைப்படுத்தி அவன் வாயிலிருந்து சரியான காரியத்தை வரவழைத்தால் திரும்பவும் மழைபெய்யும் என்று அப்பட்டமாக நினைத்தான். இறுதியாக அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்பொழுது ஆகாப் அவனை நோக்கி “*இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீ அல்லவா?*” (1 இராஜாக்கள் 18:17). அதற்கு எலியா “இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல; கர்த்தரின்

எலியா செய்ததுபோல ஒரு வார்த்தை பேசுவது ஒரு பொறுப்பான தன்மையாகும்.

கட்டளைகளைவிட்டு பாகால்களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன்வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள். மழையும் பனியும் பெய்யாததற்கு நீயே காரணம். விளைச்சல் இல்லாமற்போனதற்கும் மிருகங்கள் இறப்பதற்கும் நீயே காரணம் என்றான்."

எலியா செய்ததுபோல ஒரு வார்த்தை பேசுவது ஒரு பொறுப்பான தன்மையாகும். சீதோஷ்ணநிலை தேவனுடைய வார்த்தைக்கல்ல, எலியாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டது. ஏனென்றால் அவன் இஸ்ரவேலுக்கு தேவனுடைய பிரத்தியட்சமான பிரதிநிதியாக இருந்தான் என்பது நிச்சயம். *"அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி, நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார்."* (1 இராஜாக்கள் 18:1) எலியா இந்த செய்தியை மட்டும் ஆகாபுக்கு எடுத்துச்செல்லவில்லை. அவனே அந்த செய்தியாகவும் இருந்தான். ''*உன்னைக் காண்பி நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன்*" என்பதுதான் செய்தி.

இருப்பினும் எலியா மழையை மீண்டும் வருவிக்கும்பொழுது அதற்காக அவன் அதிகமாக மீண்டும் மீண்டும் ஜெபிக்க வேண்டியதிருந்தது என்பதைக் கவனிக்க வேண்டும். அவனே மழையை நிறுத்தி வைத்த பொழுதும் அவன் அதிகம் ஜெபிக்க வேண்டியது அவசியமாயிற்று.

> பின்பு எலியா ஆகாபை நோக்கி: ''நீர் போம், போஜனம் பண்ணும்; பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது என்றான். ஆகாப் போஜனபானம் பண்ணப்போனான்; பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில்பட குனிந்து.
>
> *(1 இராஜாக்கள் 18:41, 42)*

நீங்கள் எப்பொழுதாவது இப்படிப்பட்ட நிலையில் இருந்திருக்கிறீர்களா? எனக்கு இப்படிப்பட்ட தருணங்கள் ஏற்பட்டுள்ளன. இப்படி முகம் முழங்காலில்படும்படிக் குனிந்து ஜெபிக்கும்படி தேவன் செய்ததை உணர்ந்திருக்கிறேன். எலியா ஜெபம்பண்ணினான் என்று மட்டும் நான் சொல்லமாட்டேன். எலியாவே ஜெபம் தான். எலியாவாகிய உருவம் முழுவதும் ஜெபம் தான். அவனது

ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதுமாக. அவன் முழுவதும் அவனது ஜெபத்தினால் அடையாளப்படுத்தப்பட்டான். அவன் சிறிய கையளவு மேகம் வரும்வரை ஜெபித்தான். அவன் தேவனிடத்தில் பேசிய வார்த்தைகளினிமித்தம் அவர் மழையைப் பெய்யச் செய்தார் (வசனம் 43-45)

இதைத்தான் யாக்கோபு “*விசுவாசமுள்ள ஜெபம்*” என்று அழைக்கிறார் (யாக்கோபு 5:15). யாக்கோபு, எலியாவை ஒரு எடுத்துக்காட்டாக உபயோகிக்கிறார். எலியா ஒரு சிறப்பான மனிதனல்ல. அவனும் உங்களைப்போல என்னைப்போல சாதாரண மனிதன்தான். வேறுவகையாகச் சொல்லப்போனால் நாமும் இதைப்போல செய்ய முடியும்.

> அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. எலியா என்பவன் நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம் பண்ணிணான், அப்பொழுது மூன்று வருஷமும் ஆறு மாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம் பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.
>
> *(யாக்கோபு 5:15-18).*

இதே வல்லமை உங்களுக்கும் எனக்கும் காத்திருக்கிறது.

மேலே குறிப்பிடப்பட்ட வேதபகுதியானது எலியா தொடர்ந்து ஜெபம்பண்ணி, தேவனுடைய சார்பில் வார்த்தைகளைப் பேசினார் என்பதை நமக்குச் சொல்லுகிறது. அங்கே இரண்டு வழிகள் நமக்கு உள்ளன. விசுவாசத்தை பயிற்சி செய்யும்பொழுது விசுவாசமும் விசுவாச வார்த்தைகளும் ஒன்றையொன்று நெருங்கிய தொடர்புடையதாக இருக்கின்றது. நாம் தேவனுடைய சார்பாக வார்த்தைகளைப் பேசும்பொழுது அவைகள் தற்காலிகமானதல்ல. நாம் விசுவாசத்தில் பேசும் வார்த்தைகள் நாம் தேவனுடன் கொண்டுள்ள உறவை அடிப்படையாகக் கொண்டும் நம்முடைய அறிவைப் பொறுத்தும், அவருடைய சித்தத்தையும் வல்லமையையும் பொறுத்து அமையும்.

யோசுவாவின் முன்மாதிரி

தேவனுடைய சார்பில் பேசப்பட்ட வார்த்தைக்கான மற்றொரு எடுத்துக்காட்டாக யோசுவாவின் வாழ்க்கையைக் காணலாம். இது அவனும் இஸ்ரவேலரும் அவர்களுடைய எதிரிகளோடு யுத்தம் செய்த போது யுத்தத்தின் நடுவில் பேசியதாகும்.

> கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிற அந்நாளிலே, யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக: சூரியனே, நீ கிபியோன் மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின்மேலும், தரித்து நில்லுங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா; அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல்முழுதும் நடுவானத்தில் நின்றது. இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார்.
>
> *(யோசுவா 10:12-14)*

இந்தப் பகுதியில் யோசுவா கர்த்தரிடத்தில் பேசியதாக குறிப்பிட்டாலும், யோசுவாதான் சூரியனுக்கும் சந்திரனுக்கும் செயல்படாமல் அமைதியாக நிற்கும்படிக் கட்டளை கொடுத்தவராவார். ஒரு மனிதன் பேசிய வார்த்தையினிமித்தம் வானுலக பொருட்களின் சுழற்சிகள் பாதிக்கப்பட்டன. இது மிகவும் வியக்கத்தக்கதாகும். என்னுடைய தனிப்பட்ட உணர்வு என்னவென்றால் இதைப்போலொத்த சலுகை உங்களுக்கும் எனக்கும் இன்றைக்கும் உண்டு.

புதிய ஏற்பாட்டில் அற்புத விசுவாசத்தின் வெளிப்பாடுகள்.

அற்புத விசுவாசத்திற்கான சில உதாரணங்களை புதிய ஏற்பாட்டில் காணப்படும் அற்புத விசுவாச வார்த்தைகளின் மூலம் நாம் இப்பொழுது காணலாம்.

தெய்வீக அதிகாரத்தினாலே ஒரு புயல்காற்றை அமைதிப்படுத்துவது

நாம் விசுவாசத்தில் பேசும் வார்த்தைகள், நாம் தேவனுடன் கொண்டுள்ள உறவை அடிப்படையாகக் கொண்டும், நம்முடைய அறிவைப் பொருத்தும் அவருடைய சித்தத்தையும் வல்லமையையும் பொருத்தும் அமையும்.

முதலாவது உதாரணத்திலே, ஒரு பயங்கரமான புயல்காற்று உருவாகிய போது இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஒரு சிறிய படகிலே இருந்தனர்.

> அன்று சாயங்காலத்தில், அவர் அவர்களை நோக்கி: அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார். அவர்கள் ஜனங்களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்தபடியே அவரைக்கொண்டு போனார்கள். வேறே படவுகளும் அவரோடேகூட இருந்தது. அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி; போதகரே, நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். அவர்கள் மிகவும் பயந்து: இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.
> (மாற்கு 4:35-41)

இயேசு தன் கரங்களைக் கடலின் மேல் வைக்கவில்லை. அவர் அதனோடு பேசமட்டும் செய்தார். இது விசுவாச வார்த்தையின் மூலம் வந்த தெய்வீக அதிகாரத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும். கிரேக்கத்தில் இதன் சரியான அர்த்தமானது 'அமைதியாயிரு' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது 'வாயை மூடிவிடு' என்பதாகும். எனக்குத் தோன்றுவது, இந்த திடீரென்று ஏற்பட்ட அசாதாராணமான, நாடகம் நடிப்பது போன்ற புயல் ஏற்பட்டதில் இயேசு சாத்தானின் செயல் இருப்பதைப் பார்த்தார். இயேசு கதரேனருடைய நாட்டைச் சேர்ந்த அசுத்த ஆவிபிடித்த மனிதனைச் சந்திக்க அக்கரைக்குச் சென்று

கொண்டிருந்தார். அவனை விடுவிப்பது மிகக்கடினம் என்று நான் கருதினேன். என்னால் நம்ப முடியாவிட்டாலும் நான் நம்புவது யாதெனில் எல்லா சாத்தானின் கும்பல்கள் அனைத்தும் ஒன்றுகூடி அவருக்கு விரோதமாக அவர் அந்த மனிதனை இரட்சிக்கும் காட்சியைக் காணவிடாமல் இருக்க அவரைப்போகவிடாமல் தடை செய்தது. சில வேளைகளில் நாம் குறிப்பிட்ட சில காரியங்களில் அவைகள் தேவனுடைய இராஜ்யத்திற்கு மகிமையுடையதாக இருந்தால், சாத்தான் தன்னுடைய கூட்டாளிகளை ஒவ்வொரு நிலைமையிலும் சூழ்நிலையிலும் நம்முடைய வழிகளில் நம்மைத் தடை செய்ய விதை விதைப்பான். நாம் நமது வழியில் நம்பிக்கையை இழக்காமலும், வெற்றியை இழக்காமலும் இருக்கும்பொழுது தேவன் நமக்குச்சிறப்பான காரியங்களைச் செய்வார் என்பதற்கு இதுவே நல்ல அடையாளமாகும்.

நமக்கு விசுவாசம் இருந்தால் தேவனால் எதையும் அமைதிப்படுத்த முடியும்.

இயேசு தெய்வீக அதிகாரத்தோடு பேசும்பொழுது புயல்காற்று உடனடியாக அடங்கியது. அதனால் அடுத்து இரைச்சலை உண்டாக்க முடியவில்லை. அல்லது அதிகமான சேதத்தையும் உண்டாக்க முடியவில்லை. தலைச்சன் சங்காராம் உண்டான இரவில் எகிப்திலிருந்து இஸ்ரவேலர் புறப்பட்டபொழுது வேதம் சொல்லுகிறது ஒரு இஸ்ரவேலைரைப் பார்த்தாவது நாய்கூட தன்னுடைய நாவை அசைக்கவில்லை (யாத்திராகமம் 11:7 ஐப் பார்க்கவும்) நமக்கு விசுவாசம் இருந்தால் தேவன் எதையும் அமைதிப்படுத்த முடியும்.

ஒரு விசுவாச வார்த்தையினால் மரித்தோரை உயிர்ப்பித்தல்

வேதாகமத்தில் ஒரு விசுவாச வார்த்தையினாலே இயேசு மூன்று சந்தர்ப்பங்களில் மரித்தவர்களை உயிரோடு எழும்பச்செய்துள்ளார். நாயீனூர் விதவையின் மகனை உயிர்ப்பித்தது முதலாவது சம்பவமாகும்.

> அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்த போது, மரித்துப் போன ஒருவனை அடக்கம்பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான்; அவளோ கைம்பெண்ணாயிருந்தாள். ஊராரில் பெறு

ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள். கர்த்தர் அவளைப்பார்த்து, அவர் மேல் மனதுருகி; அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான்; அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்.
(லூக்கா 7:12-15)

இயேசு அந்தப் பெண்மணியின் வியாகுலமான நிலைமையினால் வருத்தப்பட்டார். அவளை அழ வேண்டாம் என்று சொன்னார். இது ஒரு தெய்வீக உருக்கம். தேவன் சில காரியங்களைச் செய்வதற்கு தெய்வீக உருக்கத்தால் நீங்கள் தொடப்படும்பொழுது ஒரு திட்டமான அத்தாட்சி கிடைக்கிறது. இயேசு விசுவாச வார்த்தை பேசி அந்த இளம் வாலிபனை எழுந்திருக்கும்படி சொன்னார்.

இயேசு மரித்தோரை உயிர்த்தெழும்படிச் செய்த ஒவ்வொரு நேரமும் அவர் அதிக திட்டவட்டமாக இருந்தார். யாரை உயிரோடு எழுந்திருக்கச் செய்ய வேண்டுமோ அந்த மனிதனையே அவர் எப்பொழுதும் பெயர் சொல்லி கூப்பிட்டார். சில மக்கள் விசுவாசிப்பது என்னவென்றால் அவர் குறிப்பிட்ட மனிதனை வரையறுத்து அழைக்காவிட்டால் மரித்த எல்லோரும் உயிரோடு எழும்பிவிடுவார்கள் என்பதாகும். ஏனென்றால் அவருக்கு மரித்த அனைவரையும் கல்லறையிலிருந்து வெளியே வரும்படி அழைக்க வல்லமை இருந்தது.

இரண்டாவது சம்பவம் யவீருவின் மகளைப் பற்றியதாகும்

எல்லாரும் அழுது அவளைக் குறித்துத் துக்கங்கொண்டாடுகிறதைக் கண்டு: அழாதேயுங்கள், அவன் மரித்துப்போகவில்லை, நித்திரையாயிருக்கிறான் என்றார். அவள் மரித்துப்போனளென்று அவர்கள் அறிந்ததினால், அவரைப் பார்த்து நகைத்தார்கள். எல்லாரையும் அவர் வெளியே போகப்பண்ணி, அவளுடைய கையைப் பிடித்து: பிள்ளையே எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது; உடனே அவள் எழுந்திருந்தாள்; அவளுக்கு ஆகாரங்கொடுக்க கட்டளையிட்டார்.
(லூக்கா 8:52-55)

இயேசு விசுவாச வார்த்தையைப் பேசி அந்தச் சிறுபெண்ணை உயிரோட எழும்படிச் சொன்னார். சிலர், மரித்தோரை எழுப்புவது இப்போது நடைபெறுவதில்லை என்று உறுதியாகச் சொல்லுகின்றனர்.

எனினும் கிழக்கு ஆப்பிரிக்காவில் எனது மனைவியான லீதியாளும், நானும் மிஷனரிகளாக பணிபுரிந்தபோது, மக்கள் உயிரோடு எழுப்பபப்பட்ட உண்மையான நிகழ்வுகள் நடந்தன. நாங்கள் அங்கே பணிபுரிந்த காலத்தில், இரண்டு முறை மரணத்திலிருந்து திரும்பினவர்களைக் கொண்டு வந்தார்கள். ஒன்று எங்களுடைய மரித்துப்போன மாணவி. அவள் உறவினர்கள் யாவரும் அவள் சரீரத்தின் பக்கத்தில் இருந்தார்கள். அவர் சரீரம் படுக்கையில் படுக்கவைக்கப்பட்டிருந்தது. அவர்கள் அழுதுகொண்டும், ஒப்பாரி வைத்துக்ொண்டும், ஜெபித்துக்கொண்டும் இருந்தனர். நாங்கள் ஜெபிக்கலாமா என்று கேட்டபோது, சரி என்று சொன்னார்கள். நாங்கள் எல்லோரையும் வெளியே போகச் சொல்லிவிட்டோம். நாங்கள் எதையும் முன்னதைாக திட்டம் செய்யவில்லை. நாங்கள் படுக்கையின் இருபுறமும் அப்படியே ஜெபித்தோம். கிறிது நேரத்தில் ஜெபத்தின் உறுதியை நாங்கள் இருவரும் பெற்றோம். அந்தப் பெண் எழுந்து உட்கார்ந்தாள்.

முதலாவதாக அவள் சொன்னது, 'யாரிடமாவது வேதாகமம் இருக்கிறதா? நான் 'ஆம்' என்றேன். அவள் 41ஆம் சங்கீதத்தை வாசிக்கச் சொன்னாள். அந்தச் சங்கீதத்தை வாசித்த பின்பு, அவளை எங்களுடன் வீட்டிற்கு அழைத்த வந்தோம். ஓரிரு நாட்களில் அவள் பூரண சுகம் அடைந்தாள். "41ஆம் சங்கீதத்தை ஏன் வாசிக்கச் சொன்னாய்?" என்று கேட்டேன். அந்த நேரத்தில் வெண்ணுடை தரித்த இரண்டு மனிதர்கள் என் பக்கம் நின்றனர் நான் அவர்கள் என் பக்கம் நடக்க மிக நிண்ட பாதை வழியாக நடந்து சென்றோம். வெளிச்சம் பிரகாசித்தது. வெண்ணுடை தரித்தோர் பாடிக்கொண்டிருக்கும் இடத்திற்கு வந்தோம். ஒரு மிகப்பெரிய புத்தகத்திலிருந்து ஒரு மனிதன் வாசித்துக்கொண்டிருந்தான். அவன் 41ம் சங்கீதத்தை வாசித்துக்கொண்டிருந்தான். அதில் என்ன இருக்கிறது என்பதை அறிய ஆவலாய் இருந்தேன்'. இந்தச் சங்கீதத்தின் வார்த்தைகளினால் தேவனுடைய வார்த்தைகக்கம், தற்புத விசுவாசத்திற்கும் உள்ள தொடர்பின் ஒரு உதாரணத்தைக் காணலாம்.

> கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்கிறன் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர். படுக்கையின்மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை

முழுவதையும் மாற்றிப்போடுவீர். கர்த்தாவே, என்மேல் இரக்கமாயிரும்; உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தேன்; என் ஆத்தமாவைக் குணமாக்கும் என்று நான் சொன்னேன். அவன் எப்பொழுது சாவான், அவன் பேர் எப்பொழுத அழியும்? என்று என் சத்தருக்கள் எனக்கு விரோதமாய்ச் சொல்லுகிறார்க்.ள என் பகைஞரெல்லாரும் என்மேல் ஏகமாய் முணுமணுத்து, எனக்கு விரோதமாயிருந்த, எனக்குப் பொல்லாங்கு நினைத்து, தீராவியாதி அவனைப் பிடித்துக்கொண்டது; படுக்கையில் கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள். கர்த்தாவே, நீர் எனக்கு இரங்கி, நான் அவர்களுக்குச் சரிக்கட்ட என்னை எழுந்திருக்கப்பண்ணும்.
(சங்கீதம் 41:2-5, 7-8, 10)

மரித்த லாசருவை இயேசு உயிரோடு எழுப்புதல் மூன்றாவது சம்பவமாகும்.

அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப்போட்டார்கள்; இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார். இவைகளைச் சொன்னபின்பு : லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுத, மரித்தவன் வெளியே வந்தான்; அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்து, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார். (யோவான் 11:41-44)

இது என்ன அற்புதமான வேளை! ஒவ்வொரு நிகழ்விலும் இயேசு பேசி குறிப்பிட்ட நபரை எழும்பச் சொன்னால்ர. இதைப்போல் மரித்து சரீரம் கழுவப்பட்டு, கிடத்தப்பட்டு புதைப்பதற்கு ஆயத்தமாக்கப்பட்ட வேளையில் பேதுரு தொற்காளை உயிரோடு எழுப்பினார்.

பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான்; அவன் போய்ச் சேர்ந்தபொழுத, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுத விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்துநின்றார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான்; அப்பொழுத

> அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப் பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான். (அப்போஸ்தலர் 9:39-41)

இயேசு செய்ததுபோலவே பேதுருவும் குறிப்பிட்டு அவளுடைய பெயரைச் சொல்லி அழைத்தார் என்பதைக் கவனியுங்கள். ஜெபித்த விசுவாச வார்த்தையைப் பெற்ற பின்பு 'தபீத்தாளே எழுந்திரு' என்று சொல்லவே அவள் உயிரோடு எழுந்தாள்.

விசுவாச வார்த்தையின் வழியாக நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பேசுதல்

நம்முடைய இறுதி உதாரணமாவத அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் ஆகும். மாயவித்தைக்காரனாகிய எலிமா என்பவன் (ஒரு பொய்யான தீர்க்கதரிசி) பவுலும் பர்னபாவும் சீப்புருதீவில் செய்த போதனைகளை எதிர்த்தான்.

> அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்பார்த்து: எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ? இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சில காலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்றான். உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது; அவன் தடுமாறி கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான்.
> (அப்போஸ்தலர் 13:9-11)

பவுல் எலிமாவின் மேல் உள்ள நியாயத்தீர்ப்பை பேசப்பட்ட வல்லமையான வார்த்தையினால் தீர்ப்புக் கூறினார். பவுல் *"பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு,"* ஒரு தெய்வீக வார்த்தையின் மூலமாக வந்த நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்துவதைக் கவனியுங்கள்.

அற்புத விசுவாசத்தின் முடிவுகள்

தேவன் மனித வர்க்கத்திற்கு தெய்வீக விசுவாசத்தை வழங்கும்பொழுது, மனிதர்கள் பேசும்பொழுது, தேவன் நேரிடையாகப் பேசும்

வார்த்தைகளைப் போன்று அதே விளைவுகள் உண்டாகின்றன. யார் யாருக்கெல்லாம் தெய்வீக விசுவாசம் வருகிறதோ அவர்களுக்கெல்லாம் அது அவர்களுடைய மனதிற்குள் பரவி, அவர்களுடைய ஆவிக்குள்ளும் இருதயத்திற்குள்ளும் பரவுவதனால் அற்புதமான விசுவாச வார்த்தைகள் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினால் சிருஷ்டிப்பு, மரணம், எல்லாவிதமான சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய பிரகாரமான சாத்தானின் தீய வழிகாட்டும் அதிகாரங்களின் மேல் வல்லமை உண்டாகிறது. அவைகள் பிசாசை கிழித்துப்போட்டு தேவன் கொடுக்கும் விசுவாசத்தினால் நல்லவற்றையும் நீதியானவற்றையும் கட்ட முடியும்.

8 குணமாக்கும் வரங்கள்

பின்வரும் இரண்டு அத்தியாயங்களில் நாம் குணமாக்கம் வரங்களைக் குறித்தும் அற்புதங்கள் நடக்கும் முறைகளைக் குறித்தும் ஆய்வு செய்வோம். இந்த இரண்டு வரங்களின் எல்லாவற்றையும் உள்ளடக்கிய முழுஉளக்காட்சியை அறிந்துகொள்ள குணமாக்குதலுக்கம் அற்புதங்களுக்கும் இடையிலான தனித்தன்மைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

குணமாக்குதலுக்கும் அற்புதங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள்

குணமாக்குதல் என்பது உடம்பை நோயிலிருந்தம் காயத்திலிருந்தும் விடுதலை செய்கிறது என்பது இன்றியமையாதது. பெரும்பாலும் புலன்களால் உணரலாம். இது உடனடியாகவோ அல்லது குறுகிய காலத்திலோ நிகழ வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. மாறாக ஒரு அற்புதம் புலன்களால் உணரப்பட்டும் உடனடியாக நிகழ்ந்தும் மற்றும் குணமாக்குதலைவிட அதிகமான மாற்றங்களை உண்டாக்குகிறதுமாய் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, உங்களால் ஒரு காலைவிட வளர்ச்சி குன்றியிருக்கும் மற்றொரு காலை குணமாக்க முடியாது. ஆனால் தேவனால் அந்தக் காலை வளரச் செய்ய முடியும். நான் ஆயிரக்கணக்கான மக்களின் வளர்ச்சி குன்றிய கால்கள் ஜெபத்திற்குப் பின் உடனடியாக வளர்வதைக் கண்கூடாகக் கண்டுள்ளேன்.

நான் ஒரு காது தனது கேட்கும் தன்மையையும் உறுப்பையும் மீண்டும் பெற்றுக்கொண்டதனால் உண்டானதை சாட்சியாகக் கண்டுள்ளேன். ஒரு மனிதன் தன் காது கேட்கும்படி சுகம் கிடைக்க ஜெபிக்குமாறு கேட்டுக்கொண்டான். அவனது உட்காது அறுவை சிகிச்சையின் மூலம் எடுக்கப்பட்டுவிட்டதைப்பற்றி பின்னால் கூறினான். அவன் மீண்டும் தனது காதைப் பரிசோதிக்கும்படி மருத்துவரிடம் சென்றபோது அவர்

பரிசோதனை செய்துவிட்டு உன்னுடைய காது முழுமையாக சரியாக இருக்கிறது என்றார். இது ஒரு குணம்பெறுதல் மட்டுமல்ல ஏனென்றால் அங்கே ஒன்றுமே இல்லாததை சுகப்படுத்த முடியாது. இது ஒரு சிருஷ்டிப்பு அல்லது மீண்டும் பெறுதலாகிய அற்புதமாகும்.

நிச்சயமாக குணமளித்தலும் அற்புதங்களும் ஒன்றையொன்று பின்னிப்பிணைந்து செல்லும். ஒரு உடனடியாக - குணமடைதல் என்பது, கண்கூடாகக் காணும்போது அது ஒரு அற்புதம் என்று விளக்கப்படுகிறது. நான் இப்படிப்பட்ட பல எண்ணிக்கையிலான குணம்பெறுதலுக்கு நான் சாட்சியாக இருக்கிறேன். ஒரு முறை நான் முகப்பருக்கள் உள்ள ஒரு சிறுமிக்காக ஜெபித்தேன். நான் அதிகமாக ஒன்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அடுத்த பத்து நிமிடங்களில் அவளுடைய முகமானது பிரகாசமனா ரோஸ் நிறத்தில் மாறியது. அது முழுமையாக இயற்கைக்கு அப்பாற்பட்ட செயலாகும். பருக்கள் நிறைந்த பகுதியில் மட்டும் மங்கலான நிழல் போன்றது மட்டும் தெரிந்தது. அது ஒரு குணமடைதலாகும். ஆனால் அத பார்க்கக்கூடியதாகவும் உடனடியானதாகவும் காணப்பட்டது. அதனை நீங்கள் ஒரு அற்புதம் என்றம் அழைக்கலாம்.

குணமளிக்கும் வரங்களின் தன்மை

நாம் இப்பொழுது குணமளிக்கும் வரங்களைப்பற்றிய மிக ஆழமான சத்தியங்களைக் காணப்போகிறோம். "*வேறு ஒருவனுக்கு அந்த ஆவியினாலே குணமாக்கம் வரங்களும்*" (1 கொரிந்தியர் 12:9) மீண்டும் இந்த வரத்தைப் பொறுத்தவரையில் இரண்டு வரங்களும் அதாவது அற்புதங்களும் குணமளித்தலும் பன்மையில் உள்ளன. ஒவ்வொரு முறையும் குணமடைதலைப் பெறும்போதும் அதை நான் இவ்வாறு விவரித்து அர்த்தங்கொள்ளுகிறேன். அது ஒரு மனிதனின் வழியாக அதாவது அந்த வரம் யாருக்குக் கொடுக்கப்பட்டதோ அவரின் மூலமாக வெளிப்படும்.

தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழ்

ஆவியானவரின் மற்ற வரங்களோடு கூட குணமளிக்கும் வரமும் தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழேயே செயல்படுகிறது. யாராவது

குணமளிக்கும் வரம்பெற்ற மக்களை சுய சித்தத்தோடு எங்கேயாவது, எப்பொழுதாவத நாடிச் செல்வதை நான் நம்புவதில்லை. நீங்கள் குணமளிக்ம் வரங்களைப் பிரயோகிக்கும்பொழுது சில மதியீனமான மனிதன் உங்களிடம் இவ்வாறு கூறலாம். “மருத்துவமனைக்குச் சென்று அங்குள்ள ஒவ்வொருவரையும் குணப்படுத்துங்கள்” என்று. இது உண்மையாக வேதத்திற்குப் புறம்பானது. எடுத்துக்காட்டாக, ஒரு நிகழ்ச்சியைக் காணலாம். அதில் இயேசு பெதஸ்தா குளத்தில் வியாதியாயிருந்த, நடக்க முடியாமல் இருந்த ஒரு மனிதனைக் குணப்படுத்தினார்.

> எபிரெய பாஷையிலே ‘பெதஸ்தா’ என்னப்பட்ட குளம் எருசலேமில் ஆட்டு வாசலினருகே இருக்கிறது. அதற்கு ஐந்து மண்டபங்களுண்ட. அவகைளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலாக வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்த தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக்கொண்டிருப்பார்கள். முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷன் அங்கே இருந்தான். படுத்திருந்த அவனை இயேசு கண்டு அவன் வெகு காலமாய் வியாதியஸ்தனென்று அறிந்து அவனை நோக்கிச் சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார். அதற்கு வியாதியஸ்தன் ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்னைக் குளத்தில் கொண்டு போய் விடுகிறதற்கு ஒருவருமில்லை நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு முந்தி இறங்கிவிடுகிறான் என்றான். இயேசு அவனை நோக்கி, எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்துபோனான். அந்த நாள் ஓய்வு நாளாயிருந்தது.
>
> *(யோவான் 5:2-3, 5-9)*

ஆவியானவரின் வரங்களோடுகூட குணமளிக்கும் வரங்களும், தேவனுடைய ஆளுகையின் கீழ் செயல்படுகிறது.

முப்பத்தி எட்டு வருடங்களாகக் குணமடைய வேண்டும் என்று ஏங்கிக்கொண்டிருந்த ஒரு மனிதனைப் பார்த்து நீ சொஸ்தமாக விரும்புகிறாயா என்ற கேள்வியைக் கேட்பது விசித்திரமாகத் தோன்றலாம். இருப்பினும் குணமடைவதற்குரிய தேவனுடைய சித்தத்தைப் பயன்படுத்துவது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

அந்தக் குளத்தில் திரளான கூட்டமான மக்கள் சுகவீனமாயிருந்தார்கள் என்று கருத்தில் கொள்ளவேண்டும். இயேசு உள்ளே சென்று ஒரு மனிதனை மட்டும் குணப்படுத்திவிட்டு வெளியே சென்றுவிட்டார். இந்த குணமாக்குதலைக் குறித்து இயேசுவிடம் கேள்விகள் கேட்கப்பட்டபோது அவர் “*அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். பிதாவானவர் செய்யக் குமாரன் காண்பதெதுவோ அதையேயன்றி வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.*” (வசனம் 19) இயேசு தானே எல்லாவற்றையும் செய்யும் வல்லமையை உரிமையாக்கிக்கொள்ளாமல் பிதாவின் சித்தத்தின்படி செய்தார். மற்றொரு இடத்தில் அவர் “*நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்*” (யோவான் 14:10) என்று சொன்னார். மற்றொரு வகையில் சொன்னால், இயேசு தானாகவே வெளியே சென்று தன்னுடைய சொந்த சித்தத்தின்படி அல்லது அவருடைய தீர்மானத்தின்படி செய்ய முடியாது. பிதாவின் சித்தப்படி வெளிப்பாடு இல்லாவிட்டால் அதைச் செய்யமாட்டார். அந்த வழியில் இயேசு செயல்படவில்லை. எனவே நாமும் அப்படிச் செய்ய முடியாது.

இயேசு தானே எல்லாவற்றையும் செய்யும் வல்லமையை உரிமையாக்கிக்கொள்ளாமல் பிதாவின் சித்தத்தின்படி செய்தார்.

இந்தக் காரியங்களில் நாம் தேவனால் வழிநடத்தப்பட வேண்டும். ஒரு கூட்டத்தில் ஐம்பதுவேர் சுகமடைய முன்னுக்கு வரும்பொழுது, பொதுவாக அவர்களை வரிசையில் நிற்கவைப்பது அவர்களுக்கு அதிருப்தியைத் தரும். அவர்களுக்கு எண்களைக் கொடுத்து முதலாவது எண்ணிலிருந்து தொடங்கலாம். வரிசையில் நிற்கும் முதல் மனிதன் விசுவாசம் இல்லாதவனாயிருக்கலாம். எனவே நீங்கள் ஜெபிக்கும் போது ஒன்றும் நடைபெறவில்லை. இரண்டாவது மனிதன்கூட விசுவாசமில்லாதவனாயிருக்கலாம். அவனுக்கும் ஜெபிக்கும் வேளையில் ஒன்றும் நடைபெறவில்லை. ஒருவருக்கும் எந்த விசுவாசமும் இல்லை.

ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் அவிசுவாசத்தோடு நீங்கள் போராடிக்கொண்டிருக்கிறீர்கள். யாரிடமிருந்து ஆரம்பிக்க வேண்டுமோ அவரை தேவனே தெரிந்தெடுக்கும்படி அனுமதிப்போம். இதை நாங்கள் அனுபவத்தின் மூலம் கற்றுக்கொண்டோம். நாம் இவைகளை, இதுவரை தேவன் எங்களை வழிநடத்துவதுபோல், அதாவது அவர் இயேசுவின் மூலமும் அப்போஸ்தலர்களின் மூலமும் செயல்பட்டதுபோல் நாங்களும் செயல்படுகிறோம்.

விசுவாசிகளின் சரீரத்திற்கான ஆவியானவரின் வல்லமை

குணமளிக்கும் வல்லமை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை. இது விசுவாசிகளின் சரீரத்திற்காக உண்டாக்கப்பட்டது. ரோமர் 8:11ஆம் வசனத்தில் பரிசுத்த பவுல் "*அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்*" என்கிறார். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள்ளே வாசமாயிருக்கிறார். இதே வல்லமையினால் மரித்த இயேசு உயிரோடே எழுந்தார். இந்த சாட்சியைக் கொடுக்கும்பொழுது பவுல் இதே எண்ணத்தை வெளிப்படுத்துகிறார்.

> கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம். எப்படியெனில் சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு உயிரோடிருக்கிற நாங்கள் எப்பொழுதும் இயேசுவினிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம். இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது. (2 கொரிந்தியர் 4:10-12)

நாம் இன்றும் உயிர்த்தெழுந்த சரீரத்தைப் பெறவில்லை. ஆனால் நாம் பெற்றிருப்பது பெற்றுக்கொள்ள உரிமைகொள்வது ஒரு சரீரத்தில் உயிர்த்தெழுந்த வாழ்வைப் பெறுவதாகும். பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசியின் சரீரத்திற்குள் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வாழ்க்கையை நம்பிக்கையின் மூலமாக அருளுகிறார். பவுல் கூறினார். "சாவுக்கினமான எங்கள் மாம்சத்திலே இயேசுவினுடைய ஜீவனும் விளங்கும்படிக்கு" வாழ்க்கை வாழ்வதோடு நின்றுவிடாமல், அது

வெளிப்படத்தப்படவும் வேண்டும். இதைத்தான் தெய்வீக சுகம் பெறுதல் என்றும் தெய்வீக ஆரோக்கியமான வாழ்வு என்றும் அழைக்கிறேன். தேவனுடைய ஆவியின் பிரசன்னமே கல்லறையிலிருந்து இயேசுவின் சரீரத்தை எழுப்பிற்று. மேலும் அதைப் பிறர் காணும்படி வெளிப்படுத்தி, நீங்கள் அது பிரசன்னமாய் இருப்பதைக் கண்டு, அது செய்வதைப் பார்க்கும்படிக் கிரியை செய்தது. யாக்கோபு எழுதுகிறார் *". . .உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடை நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள்."* (யாக்கோபு 5:14) பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் சரீரத்தில் உயிர்த்தெழுந்த வாழ்வைக்கொடுக்கிறார் என்பதற்கு எண்ணெய் மாதிரியாக அமைகிறது.

உயிர்த்தெழுந்த வாழ்வு சுகம் பெறுவதைக் கடந்து சென்று ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது. கிறிஸ்துவின் விசுவாசிக்கு குணமடைதல் மட்டும் தேவனுடைய சித்தமல்ல. ஆனால் ஆரோக்கியமாக இருப்பதே. விசுவாசிக்குரிய அவரது சித்தம் 3 யோவான் 2ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ளது. *"பிரியமானவனே உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்."* நான் எனது அனுபவத்தால் கற்றுக்கொண்டது, சுகமாயிருப்பது சுகமடைதலைவிட மிகவும் எளிது. சுகம் பெறுவது நல்லது அதைவிட சுகமாயிருப்பது மிகச்சிறந்தது. சுகவீனம் அடையமாட்டோம் என்ற விசுவாசம், நீ ஏற்கனவே சுகவீனமாயிருந்த விசுவாசத்தினால் சுகம் பெறுவதைவிட அதிக எளிது என்பதையும் கூட நான் கற்றுக்கொண்டேன்.

விசுவாசிகளின் உடலில் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மேலும் ஒரு நன்மையுண்டு. *"கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது."* (சங்கீதம் 103:5) உயிர்த்தெழுந்த வாழ்வானது சுகவீனம் மற்றும் வியாதியின் கொடுமையைவிட மேலானது. மூப்பின் செயல்பாடுகளைக் கூட அது மாற்றிவிடும். வேதம் கூறுகிறது, "மோசே மரிக்கிற போது நூற்றிருபது வயதாயிருந்தான் அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை. (உபாகமம் 34:7) தேவனுடைய பிரசன்னத்தில் மோசே அதிக நேரம் செலவழித்ததால் அவன் மற்ற இஸ்ரவேலர்களைவிட ஒரு மாறுபட்ட சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருந்தான்.

நாம் வாழும் சூழ்நிலை ஒரு குறிப்பிட்ட மாற்றத்தை உண்டாக்குகிறது. என்னிடம் ஒரு பெண்மணியும் அவரது கணவரும் “விடுமுறைக்காகத் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள் என்றும் ஆவியினால் ஞானஸ்நானம் பெறாத பிற குடும்ப அங்கத்தினர்களோடு சந்திப்பு ஏற்பட்டது. அவர்கள் யாவரும் சுகமாய் வந்தார்கள். ஆனால் அவர்கள் தங்களின் வியாதிளைப் பற்றிப்பேச ஆரம்பித்தார்கள். அவளும் அவர் கணவரும் அந்த சூழலில் இருந்து வெளியேறியதால் மகிழ்ச்சியடைந்தோம்” என்றார்கள். நீங்கள் வாழும் சூழல், உங்கள் அனுபவத்தைப் பாதிக்கும். ஆவி நிறைந்த விசுவாசி, ஆக்கப்பூர்வமான விசுவாசம், நம்பிக்கை மற்றும் துதித்தல் போன்ற சூழ்நிலையைத் தன்னைச் சுற்றி ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

வல்லமையான சூழ்நிலையினால் குணமடைதல்

யோர்தான் நதியில் இயேசு ஞானஸ்நானம் பெற்றபொழுதே குணமளிக்கும் பரிசுத்த ஆவியின் வல்லமை அவருக்குள் இருந்தது. குறிப்பிட்ட ஒரு சூழ்நிலையில் இந்த வல்லமை சில சமயங்களில் அவர் மூலமாகப் பாய்ந்தது. இதற்கு எடுத்துக்காட்டு, பெரும்பாடுள்ள ஸ்திரீ, கூட்டத்தில் அவருக்குப் பின்னால் வந்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.

கிறிஸ்துவின் விசுவாசிக்கு குணமடைதல் மட்டும் தேவனுடைய சித்தமல்ல. ஆனால் ஆரோக்கியமாக இருப்பதே.

> அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும் சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது இயேசுவைக் குறித்துக்கேள்விப்பட்டு நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவருடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று. அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள். உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து ஜனக்கூட்டத்திற்குள்ளே திரும்பி என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார்.
>
> *(மாற்கு 5:25-30)*

அந்தப்பெண்மணி சுகம்பெற்றபோது, அவரிடத்திலிருந்து சுகமாக்கும் வல்லமை புறப்பட்டுச்சென்றதை அவர் உணர்ந்தார். மற்றொரு உதாரணத்தையும் பார்ப்போம்.

> பின்பு ஒரு நாள் அவர் உபதேசித்துக்கொண்டிருக்கிறபோது, கலிலேயா யூதேயா நாடுகளிலுள்ள சகல கிராமங்களிலும், எருசலேம் நகரத்திலுமிருந்த வந்த பரிசேயரும் நியாயசாஸ்திரிகளும் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாக கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று.
>
> *(லூக்கா 5:17)*

இயேசுவின் குணமாக்கும் வல்லமை அந்தச் சூழ்நிலையில் முழுமையாகத் தானாகவே நிறைந்திருந்தது. லூக்கா 6:19இல் இதே போன்ற சூழ்நிலை பெரும்பாடுள்ள ஸ்திரீ குணமடைந்த மாத்திரத்தில் இருந்தது. "*அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகை தேடினார்கள்*" நம்முடைய சொந்த வாழ்விலும் ஊழியத்திலும் இதைப் போன்ற அனுபவத்தைப் பெறலாம். குணமளிக்கும் ஆவி அல்லது அற்புதம் ஒரு கூட்டத்தில் அசைவாடத் தொடங்கினால் பெரும்பாலும் ஒவ்வொருவரும் தேவனின் இயற்கைக்கு மேற்பட்ட வல்லமையினால் தொடப்படுவர். இதை நான் ஒரு சிறிய அளவில் பார்த்திருக்கிறேன். மேலும் அது அதிகரிக்க எதிர்பார்க்கிறேன்.

இதே இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை பேதுருவின் ஊழியத்திலும் இருந்தது. இதனால் அவனுடைய நிழல்பட்டாலே சுகம் கிடைத்தது.

> பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின் மேலும் கிடத்தி பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர் சிலர் மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள். அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்.
> (அப்போஸ்தலர் 5:15-16)

இவ்விதமான குணமளித்தால் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் ஊழியத்தில் வரையறுக்கப்படவில்லை. எனக்குத் தெரிந்த கர்த்தருக்குள்

அன்பான ஒரு சகோதரர், அர்ஜெண்டினாவில் இவ்விதமாக ஊழியம் செய்தார். கூட்டத்தின் உச்சக்கட்டத்தில் முடித்துவிட்டார். அவர் தன்னுடைய நிழல் வியாதியஸ்தர் மேல் படும்படி நடந்தார் உடனே அவர்கள் குணமடைந்தார்கள். அர்ஜெண்டினாவின் இக்கூட்டங்கள் ஒரு முனை தொடங்கி மறு முனை மட்டும் முழு தேசத்தையும் அசைத்தது. முந்தின எல்லா மிஷனரிகளின் முயற்சிகளினாலும் முழுமையாகப் பெற முடியாததை இது செய்தது. ஒரு சில வாரங்களுக்கு முன்பாக இது நடந்தது. இதன் விளைவுகளை நாம் அளவிடமுடியாது.

தனி நபர்களுக்கான குறிப்பிட்ட குணமடைதல்

சென்ற பகுதியில் உள்ள உதாரணங்கள் பொதுவாக வல்லமையான சூழ்நிலையில் மொத்தமாக சுகம்பெறுதலைப் பற்றியது. நாம் இப்பொழுது சில தனிப்பட்டவர்கள் சுகம் அடைந்ததைப் பற்றி வேதத்தின் வழியாகக் காணலாம். நாம் இயேசுவின் ஊழியத்திலிருந்து ஆரம்பிக்கலாம்.

> சூரியன் அஸ்தமித்தபோது, ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.
> (லூக்கா 4:40)

இங்கு இயேசு ஒவ்வொருவர் மேலும் கையை வைத்து சொஸ்தமாக்கினதைக் காண்கிறோம். இதிலிருந்து நாம் தேவன் எப்பொழுதும் ஒரே விதமாக சுகமளிக்கவில்லை. சில சமயங்களில் ஜனங்கள் இயேசுவை தொட்டமாத்திரத்தில் கணமடைந்தார்க்ள. மற்ற நேரங்களில் அவர் ஒவ்வொருவர் மேலும் கைகளை வைத்தார்.

இதனை குஷ்டரோகி சுகமடைந்ததில் காணலாம்.

> அவர் (இயேசு) மலையிலிருந்து இறங்கனிபோது, திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள். அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம்

> நீங்கி அவன் சுத்தமானான்.
> (மத்தேயு 8:1-3)

குஷ்டரோகத்திலிருந்து சுகம் பெறுவதைக் கண்கூடாகக் காண்பதை உண்மையாக ஒரு அற்புதமாகக் கொள்ளலாம். இயேசு தொட்டவுடனே அவன் சுகம் பெற்றாள். நிச்சயமாக இதற்குரிய காரணம் மற்றவர்கள் குஷ்டரோகியைத் தொடமாட்டார்கள். ஆனால் இயேசு தொட்டார். அவர் வேறு முறையில் அவனை சுகமாக்கியிருக்கலாம். அவர் தன் வழியிலிருந்து சென்று அவனைத் தொட்டது அவருடைய மன உருக்கத்தைக் காட்டுகிறது.

சில வேளைகளில் இயேசு சுகப்படுத்த உபயோகித்த முறைகள் திட்டவட்டமாக வழக்கத்திற்கு மாறானது. சுகம் ஆக்குவதில் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலில் முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டும் என இது காட்டுகிறது.

> அங்கே கொன்னை வாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அப்பொழுது, அவர் அவனை ஜனக் கூட்டத்தை விட்டுத் தனியே அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு, எப்பத்தா என்றார்; அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம். உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டுஇ அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான்.
> (மாற்கு 7:32-35)

பின்பு மற்றொரு குறிப்பிடத்தக்கது குருடன் சுகமடைந்தது பற்றியதாகும்.

> பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார். அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவனைத் தொடும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர் குருடனுடைய கையைப்பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக்கொண்டுபோய் . . .
> (மாற்கு 8:22-23)

ஏன் இயேசு அவனைக் கிராமத்திற்கு வெளியே அழைத்துச் சென்றார்? ஒரு வேளை அங்கே அவிசுவாசம் நிறைந்த சூழலாய் இருந்திருக்கலாம்.

அவ்விடத்தில் அவன் சுகமடைவதற்கு உரிய விசுவாசத்தைப் பெற்றிருக்கவே முடியாது.

குணப்படுத்துதலில் நாம் முழுவதுமாக பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலைச் சார்ந்திருக்க வேண்டும்.

"அவர் குருடனுடைய கையைப் பிடித்து அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக்கொண்டு போய் அவன் கண்களில் உமிழ்ந்து அவன் மேல் கைகளை வைத்து எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். அவன் ஏறிட்டுப் பார்த்து நடக்கிற மனுஷரை மரங்களைப் போலக் காண்கிறேன் என்றான்." (வசனம் 23, 24) அவனால் பார்க்க முடிந்தது ஆனால் தெளிவாக அல்ல. சில மனிதர்கள் சொல்லுகிறார்கள் இயேசுவின் அனைத்துக் குணமளித்தலும் உடனடியானதும் முழுமையானதுமாகும். ஒரு அளவாக, இயேசு தான் சுகமாகவிருக்கும் மனிதனின் விசுவாசத்திற்கு அவன் தரும் பதிலையே சார்ந்திருந்தார். *"பின்பு அவர் மறுபடியும் அவன் கண்களின் மேல் கைகளை வைத்த, அவனை ஏறிட்டுப்பார்க்கும்படி செய்தார். அப்பொழுது அவன் சொஸ்தமடைந்து, யாவரையும் தெளிவாகக் கண்டான். பின்பு அவர் அவனை நோக்கி நீ கிராமத்தில் பிரவேசியாமலும் கிராமத்தில் இதை ஒருவருக்கும் சொல்லாமலும் இரு என்று சொல்லி, அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்."* (வசனம் 25, 26)

அந்த கிராமத்திலுள்ள சூழலில் இயேசு நிற்க முடியவில்லை. அது அவிசுவாசம் நிறைந்த சூழ்நிலையாக இருந்தது. ஒருவேளை அவனுடைய உறவினரே பிரச்சனைக்குரியவர்களாக இருந்திருக்கலாம். சில வேளைகளில் கடின இருதயமுள்ள ஜனங்கள் உங்களுடைய உறவினர்களுக்கு முன்பு விசுவாசம் உள்ளவர்கள் போலக் காண்பிக்கலாம். ஒருவனை உங்களது எல்லா உறவினர்களும் அவிசுவாசிகளாக இருந்தால் நீங்கள் வேறு இடத்தில் விசுவாசத்தை உடையவர்களாக இருக்க வேண்டும். இந்த மனிதன் அந்தக் குறிப்பிட்ட கிராமத்தில் சுகமடையக் கூடாதவனாக இருந்தான். அவன் சுகம்பெற்றபொழுதுகூட அவன் திரும்பவும் அவ்விடத்திற்குப் போயிருந்தால் அவன் பெற்ற சுகத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியாது.

ஆதி சபைகளின் ஊழியத்திலும் தனிப்பட்ட சுகம்பெறுதலும் செயல்பட்டுள்ளது. அப்போஸ்தலர் நடபடிகளில் பவுலும் அவனுடைய கூட்டாளிகளும் மெலித்தா தீவிலே பலத்த புயல் காற்றினால் கப்பல்

குணமாக்கும் வரத்தின் விளைவாகக்கூட விசுவாசத்தை உண்டாக்கும் சூழலை உருவாக்கி கூடுதல் சுகம் பெற உதவும். மேலும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஒரு திறந்த மனதை ஏற்படுத்தும் ஒரு விசுவாச சூழ்நிலையையும் உண்டாக்குகிறது.

சேதத்தைச் சந்தித்தனர். அவர்கள் கரை சேர்ந்தபொழுது அத்தீவினர் அவர்களை ஏற்றுக்கொண்டு தங்கள் வீட்டைத் திறந்து கொடுத்தனர். அங்கே ஒரு முக்கிய சுகமடைதலை தேவன் கட்டளையிட்டு அத்தீவினரின் முழு கவனத்தையும் பெற்றனர்

தீவுக்கு முதலாளியாகிய புபிலியு என்னும் பேர் கொண்டவனுடைய நிலங்கள் அந்த இடத்திற்கு சமீபமாயிருந்தது. அவன் எங்களை ஏற்றுக்கொண்டு மூன்று நாள் பட்சமாய் விசாரித்தான். புபிலியுவினுடைய தகப்பன் ஜீரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக்கிடந்தான்; பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம் பண்ணி, அவன் மேல் கைகளை வைத்து, அவனைக் குணமாக்கினான். இது நடந்தபின்பு தீவிலே இருந்த மற்ற வியாதிக்காரரும் வந்து, குணமாக்கப்பட்டார்கள்.
(அப்போஸ்தலர் 28:7-9)

இந்தப் பகுதியில் பவுல் குணமாக்கினான் என்று கூறுவதைக் கவனிக்கவும். நிச்சயமாக நாம் யாரையும் இயேசு மற்றும் பரிசுத்த ஆவியின் வல்லமை இல்லாமல் குணப்படுத்த முடியாது. ஆனால் நாம் அவரோடு அடையாளப்படுத்தப்பட்டு ஜனங்களை சுகப்படுத்தும் சில நேரங்களும் உண்டு. இயேசு சொன்னார் "*என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான். இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்*" (யோவான் 14:12) இயேசு தன்னுடைய பன்னிரு சீடர்களையும் பின்பு எழுபது சீடர்களையும் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் ஊழியம் செய்ய அனுப்பும்போது ''*பிணியாளிகளைச் சொஸ்தமாக்குங்கள்*'' (லூக்கா 10:9) நாம் அறிந்து கொள்ள விரும்புவதைவிட வேதம் விசுவாசிகளின் மேல் இன்னும் அதிகப் பொறுப்புகளை வைக்கிறது.

குணமாக்கும் வரங்களின் விளைவுகள்

குணமாக்கும் வரங்கள் இயற்கைக்கு மேலான நிலையில் மக்கள் சரீரப்பிரகாரமாக முழுமையடைகிறார்கள் சுகம் திரும்பப் பெறுகிறார்கள். இப்படிப்பட்ட மீண்டும் பெறுதல் வரும்போது அது ஒரு வரம். அது எந்த மனிதனால் வெளிப்படுகிறதோ அந்த மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட வரம். குணமளிக்கும் வரங்கள், பரிசுத்த ஆவியின் உயிர்த்தெழுந்த வல்லமையின் வழியாக வெளிப்படும். அது ஒரு குணமளிக்கும் சூழலில் வெளிப்பட்டு, இதன் மூலம் அநேகர் முழுமையாக சுகம்பெறுகின்றனர். இதேபோன்று குறிப்பிட்ட தனிமனிதன் சுகமடைவதும் ஆவியானவரின் வழிநடத்துதலினால் வரும். குணமளிக்கும் வல்லமை கூடுதலான சும் பெறுவதற்கான விசுவாச சூழலை உருவாக்கும். இது இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க திறந்த வாசலை உண்டாக்கும்.

9 அற்புதங்களைச் செய்யும் சக்தி

அற்புதங்களைச் செய்யும் சக்தியின் இயல்பு

1 கொரிந்தியர் 12:10இல் நாம் வாசிக்கிறோம் “வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும்'' இந்த வரம் தேவனுடைய கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. தன்னுடைய சொந்த சித்தப்படி ஒருவரும் அற்புதத்தை எளிதாகச் செய்ய முடியாது.

நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல இந்த வரம் சரியாக இரண்டு பன்மைகளைக் கொண்டுள்ளது. “அற்புதங்களைச் செய்யும் சக்தியைப் பற்றி மூன்று முறை கூறுகிறார். 1 கொரிந்தியர் 12:10 மற்றும் 28 கலாத்தியர் 3:5ம் ஆகும். அற்புதங்களுக்கான கிரேக்க வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ள விதம் பன்மை வடிவிலமைந்த ‘டுனாமிஸ்’ என்பதாகும். டுனாமிஸ் என்பதற்கு வல்லமை என்று பொருள். ஆகவே துல்லியமாக மொழிபெயர்க்கப்பட்டு இந்த வரம் வல்லமையினால் செயல்படுவதாகம். இந்த செயல்பாடுகள் தேவனால் கொடுக்கப்பட்ட திறமையினால் செயல்பட்டு பரிசுத்த ஆவியின இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் நடைபெறுகிறது. ஒவ்வொரு அற்புதமும் செயல்படுகிறது - குறிப்பிட்ட விதத்தில் . திட்டமான வெளிப்பாட்டினால் வரமாக வழங்கப்படுகிறது.

வேதத்தில் உள்ள அற்புதங்களுக்கு பொதுவான மேற்கோள்கள்

வேதத்தில் டுனாமிஸ் என்ற வார்த்தை பன்மையில் உபயோகிக்கப்படும் சில சம்பவங்களை குறிப்பிட்ட அதிசய நடத்தை குறிப்பிடப்படாமல் இருப்பவற்றைக் காணலாம்.

மத்தேயு 13:54இல் நாசரேத்து ஜனங்கள் இயேசு தனது ஊழியத்தை முதன் முதலில் தொடங்கிய போது அவரைப் பற்றி விமர்சித்தார்கள்.

"*தாம் வளர்ந்த ஊரிலே வந்து அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம் பண்ணினார். அவர்கள் ஆச்சரியப்பட்டு, இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது'* இந்த பகுதியில் 'டுனாமிஸ்' என்ற வார்த்தை அதிசயமான செய்கைகள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மற்ற வேத வார்த்தைகள் அதிசயமான வல்லமை என்று உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த ஜனங்கள் இயேசுவின் ஞானத்தையும் அற்புதங்களையும் கண்டு அதிசயித்தார்கள். "*இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவர் அல்லவா? யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர்கள் அல்லவா? இவன் சகோதரிகளெல்லாம் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது என்று சொல்லி,"* (வசனம் 55, 56ஐப் பார்க்கவும்)

அப்போஸ்தலர் 2:22இல் பேதுரு இயேசுவை இவ்வாறு குறிப்பிடுகிறான். "*இஸ்ரவேலரே நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள். நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்*" சர்வ வல்ல தேவன், இயேசுவின் வாழ்விலும் ஊழியத்திலும் மூன்று காரியங்களில் இயற்கைக்கு மேலான சாட்சியாக வைத்தார். அவைகள் அற்புதங்கள், அதிசயங்கள் மற்றும் அடையாளங்களாகும். இயேசு தேவனால் ஒப்புவிக்கப்பட்டவர். இந்த உண்மையை பேதுருவின் யூத ஜனக்கூட்டங்கள் புரிந்து கொள்ளுவது முக்கியமானதாகும். பவுல் எழுதுகிறார் "*யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள். கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்"* (1 கொரிந்தியர் 1:22) யூதர்கள் ஒரு தீர்க்கதரிசி இயற்கைக்கு மேலான அடையாளத்தைக் காட்டாவிட்டால் ஒருபோதும் அவனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இது அவர்களுக்குள் விதைக்கப்பட்டிருந்தது. அவர்களது முழுமையான பக்திவிருத்திக்கான பின்னணியாவது மனிதர்கள் தேவனிடத்திலிருந்து ஒரு செய்தியைக் கொண்டுவரும்போது அதை நிரூபிக்க வேண்டும்.

நாம் இயற்கைக்கு மேலான அத்தாட்சிகளைக் கொண்டு வராவிடில் அல்லது அது தேவனால் ஒப்பளிக்கப்பட்டது நிரூபிக்கப்படாவிட்டால் நாம் உண்மையாக ஜனங்களிடத்தில் செல்ல முடியாத. நான் இரண்டு நாடுகளில் மிஷனரியாக இருந்தேன். ஆயினும் நான் என் சொந்த

தேசத்தை விட்டு சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு அடியெடுத்து வைக்கவில்லை. தேவன் எனக்குக் கொடுக்கும் செய்திகளை இயற்கைக்கு மேலாக சாட்சிகளாக வைப்பார். அப்படியில்லாவிட்டால் நாம் வீட்டில் தரித்திருந்து இலக்கியங்களை அனுப்பலாம். நாம் வசனங்களுக்கு மேலான சிலவற்றை ஜனங்களுக்குக் கொடுக்க முடியாவிட்டால் அந்த இலக்கிய பிரசுரங்கள் இதைவிட மேலான காரியங்களைச் செய்யும். அது தான் அற்புதங்களைச் செய்வதற்குரிய வல்லமையாகும்.

நாம் இயற்கைக்கு மேலான அத்தாட்சிகளைக் கொண்டுவராவிடில் அல்லது அது தேவனால் ஒப்பளிக்கப்பட்டது என்பதை நிரூபிக்காவிட்டால் நாம் உண்மையாக ஜனங்களிடத்தில் செல்ல முடியாது.

தன்னுடைய சொந்த அப்போஸ்தலத்துவத்தைப் பற்றி பவுல் எழுதுகிறார். “அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், வல்லமைகளோடும் உங்களுக்குள் நடப்பிக்கப்பட்டதே”. (2 கொரிந்தியர் 12:12) ‘டுனாமிஸ்’ என்பது இங்கு வல்லமையான செயல்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வல்லமையான செயல்கள் என்பது அற்புதங்களைச் செய்தல் ஆகும் என்று மற்ற மொழிபெயர்ப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மீண்டுமாக பவுல் அப்போஸ்தலனானவன் தனது அப்போஸ்தலத்துவத்தை வெளிக்காட்டவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். அவன் இயற்கைக்கு மேலான ஒப்பளிப்பைப் பெற்றிருக்க வேண்டும். இதோடுகூட அடையாளங்கள் தொடர்ந்து வருவதும் அப்போஸ்தலனுக்குரிய ஒரு குணமாகும். விடாமுயற்சியோடு, சோர்ந்துபோகாமல் அல்லது எல்லாவற்றையும் விட்டுவிடாமல் திறமையோடு இருக்க வேண்டும். அப்போஸ்தலர் 2:22இல் இயேசுவால் உபயோகிக்கப்பட்ட அடையாளங்கள், அதிசயங்கள், வல்லமையான செயல்கள் அல்லது அற்புதங்கள் ஆகிய அதே மூன்றும் இங்கும் உபயோகிக்கப்பட்டதைக் கவனிக்க வேண்டும்.

டுனாமிஸ்ஸின் மற்றொரு உதாரணம் பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் காணப்படுகிறது. அங்கே விசுவாசிகள் தேவனின் கிருபையாலும் வல்லமையாலும் இரட்சிப்பை அறிந்தவர்கள். பரிசுத்த

ஆவியின் ஞானஸ்நானத்தை அனுபவித்தவர்கள். ஆனால் அதிசயங்களைப் பார்த்து திரும்பவும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குப்பின்னாகச் செல்லுகிறார்கள். யூதமயமாக்கும் போதகர்களின் தாக்கத்தினால் அவர்கள் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தனர். இது மிகவும் ஆர்வமிக்கது. பவுல் கொரிந்தியரைவிட கலாத்தியரின் செய்கையால் மிகவும் பாதிக்கப்பட்டார். கொரிந்தியர்களின் பிரச்சனையானது எல்லாவிதமான மாம்சீகமான பாவங்கள். பவுல் தனது முதல் கடிதத்தின் ஆரம்பத்தில் தேவனின் கிருபையினால் இப்பாவங்களை தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தினதினால் நன்றி கூறி எழுதுகிறார். ஆனால் கலாத்தியருக்கு எழுதிய கடிதத்தில் அவர்களுக்காக நன்றி செலுத்த வழியில்லை. அவர் சொல்லுகிறார். ‘‘உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். (கலாத்தியர் 1:6) பவுல் அதிகமாகப் பாதிக்கப்பட்டவராகக் காணப்பட்டார். ஏனென்றால் விபச்சாரத்தைப் பார்க்கிலும் சட்டங்களுக்கு அடிமையாவது அதிகக் கொடுமையாக இருந்தது. இருப்பினும் அவர் இந்த இரண்டு தவறுகளையும் சரிப்படுத்தினார். ஆனால் சட்டங்களுக்கு அடிமையாவது அநேக கிறிஸ்தவர்களுக்கு மிக அதிக ஆபத்தாக உள்ளது.

பவுல் அற்புதங்கள் நடப்பதை பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுவதற்கு ஒப்பாக வகைப்படுத்துகிறார். அவைகள் விசுவாசத்தின் கேள்வியினால் உண்டாகின்றன.

பவுல் கலாத்தியரைக் கடிந்துகொள்வதைக் கவனிக்க வேண்டும்.

> ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்போழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தினீரா? இத்தனை பாடுகளையும் வீணாய்ப்பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப்போயிற்றே. அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின்

கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்?
(கலாத்தியர் 3:2-5)

அப்போஸ்தலர் சொல்லுகிறார் ''நீங்கள் விருத்தசேதனம் செய்துகொண்டதினாலேயா அல்லது மோசேயின் திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதினாலேயோ பரிசுத்த ஆவியைப் பெற்றீர்கள்? இல்லை நீங்கள் போதிக்கப்பட்ட சுவிசேஷத்தை விசுவாசித்ததினால் பரிசுத்த ஆவியைப் பெற்றீர்கள். சிலர் உங்கள் மேல் கைகளை வைத்து ஜெபித்தபோது பல பாஷைகளைப் பேச ஆரம்பித்தீர்கள். நீங்கள் திரும்பவும் மாம்சீகத்திற்கும் சட்டதிட்டங்களுக்கும் திரும்பப் போகிறீர்களா? நீங்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையையும் சுதந்தரத்தையும் ருசிபார்த்திருந்தும் பழையவற்றிற்குத் திரும்பப் போகிறீர்களா?

“*அவர் உங்களுக்கு ஆவியை அளித்துள்ளார்*” (வசனம்5) அதாவது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் எடுப்பதற்கு ஜனங்களை அழைத்து வருவதாகும். இது விருத்தசேதனத்தினாலோ அல்லது மோசேயின் திருச்சட்டத்தினாலே உண்டாகாமல், இரட்சிப்பு விசுவாசத்தினால் உண்டாவதுபோல விசுவாசத்தினாலேயே உண்டாகியது. ஆகவே பவுல் அற்புதங்கள் நடப்பதை பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு சமமாகக் கருதுகிறார். அவைகள் விசுவாசக் கேள்வியினால் வருகின்றன. தேவனுடைய வார்த்தைய ஒருவர் போதிப்பதை நீங்கள் கேட்கிறீர்கள். பின்னர் ஒரு சாதாரண கிரியையாக உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறீர்கள். அப்பொழுது அவைகள் நடைபெறுகின்றன. அதற்காக வேதனைப்படுவதோ அல்லது சத்தமிடுவதோ தேவையில்லை. இது உணர்வுகளை வெளிப்படுத்துவது அல்ல. தேவனுடைய வார்த்தையை விசுவாசத்தோடு கேட்பதேயாகும்.

அற்புதங்களுக்கான மற்றொரு உதாரணம், வேதாகமத்தில் எபிரெயரில் சாதாரண வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்

குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்.
(எபிரெயர் 2:3-4)

இங்கே தேவனின் வல்லமை நான்கு வெளிபர்டுகளாகக் குறிக்கப்பட்டுள்ளது. அடையாளங்கள், அதிசயங்கள், பலவகையான அற்புதங்கள் மற்றும் பரிசுத்த ஆவியின் வரங்கள். இதிலுள்ள 'வரங்கள்' என்ற வார்த்தை 'பகிர்ந்தளித்தல்' என்று மொழிபெயர்த்தால் சிறப்பாக அமையும். தேவனின் சாட்சியான சுவிசேஷ செய்தி இயற்கைக்கு மேலானது. அது இன்றும் அப்படியே இருக்கும்.

அற்புதங்களும் விடுதலையும்

குறிப்பிட்ட அற்புதங்களை விவாதிக்கும் முன்பு நான் அற்புதம் செய்யும் வரங்களுக்கும் அசுத்த ஆவிகளை விரட்டுவதற்கும் இடையிலான தொடர்பை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'டுனாமிஸ்' என்ற வார்த்தை உபயோகிக்கப்படும் ஒவ்வொரு இடத்திலும் அங்கே பிசாசுகளைத் துரத்தும் குறிப்பு இருக்கும். எடுத்துக்காட்டாக மாற்கு சுவிசேஷத்தில் நாம் வாசிக்கிறோம்.

அப்பொழுது யோவான் அவரை நோக்கி: போதகரே, நம்மைப் பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்பற்றாதவனானதால், அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயேசு: அவனைத் தடுக்க வேண்டாம்; என் நாமத்தினாலே அற்புதஞ்செய்கிறவன் எளிதாய் என்னைக்குறித்துத் தீங்கு சொல்லமாட்டான்.
(மாற்கு 9:38-39)

அசுத்த ஆவியை அவருடைய நாமத்தினாலே துரத்துவது அற்புதங்களைச் செய்வதாகும் என இயேசு குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும்.

சமாரியாவில் பிலிப்பின் ஊழியத்தில் இதைப்போன்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை நாம் காண்கிறோம்.

பிலிப்பு செய்த அற்புதங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு, கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டு கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப்புறப்பட்டது. அநேகத் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும்

குணமாக்கப்பட்டார்கள்....... அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று பிலிப்பைப் பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான்.

(அப்போஸ்தலர் 8:6-7, 13)

'டுனாமிஸ்' என்ற வார்த்தை உபயோகிக்கப்படும் ஒவ்வொரு இடத்திலும் அங்கே பிசாசுகளைத் துரத்தும் குறிப்பு இருக்கும்.

கிரேக்கத்தில் சரியான மொழிபெயர்ப்பாவது "அடையாளங்களைக் காண்பதும் நடைபெற்ற அற்புதங்களைக் காண்பதுமாகும்". சீமோன் பார்த்த பெரிய அற்புதங்கள் திமிர்வாதக்காரர்களும், சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களைவிட்டுப் புறப்பட்டது. இதைப்போன்ற விளைவுகளை நான் என்னுடைய ஊழியத்திலும் பார்த்துள்ளேன். தேவன் எங்களுக்கு, நாங்கள் பிசாசுகளைத் துரத்துவதைத் தொடரவேண்டுமானால் அதை எங்களுக்குத் தெரியப்படுத்துவார். அற்புதமான சுகம்பெறுதலும் தொடர்ந்துவரும். திமிர்வாதக்காரர்களும் சப்பாணிகளும் குணமடைந்ததை நான் பார்த்திருக்கிறேன். வேதம் எப்படி சரியானது என்பது குறிப்பிடத்தக்கது. நாம் தொடர்ந்து சென்றால் நமக்கு முன்பாகப் பெரிய காரியங்கள் உள்ளன. சிறந்தவைகள் இன்னும் காத்திருக்கின்றன.

அற்புதங்களுக்கும், விடுதலை பெறுவதற்கும் இடையிலான தொடர்பை மற்றொரு உதாரணமாக அப்போஸ்தலர் 19ஆம் வசனத்தில் காண்கிறோம். "*பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உருமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப்பு புறப்பட்டன."* (வசனம் 11,12) அசாதாரண அல்லது சிறப்பான என்ற வார்த்தை ஆதித்திருச்சபையில் அற்புதங்கள் வழக்கமாக நடைபெற்றது என்று கூறுகிறது. ஆனால் இங்கே சாதாரணவற்றைவிட அதிகமாகக் காணப்பட்டது.

வேத பகுதியில் நடைபெற்ற அற்புதங்கள் குறிப்பிடப்படும்பொழுது, பொதுவாக அசுத்த ஆவிகள் புறப்பட்டுச்செல்வதும் காணப்படுகின்றது.

இதுதான் தேவனின் வல்லமையைக் குறித்து வெளிக்காட்டப்படும் வெளிப்பாடாகும்.

குறிப்பிட்ட அற்புதங்களின் வெளிப்பாடுகள்

தண்ணீர் திராட்சரசமாகியது

புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அற்புதங்களைப் பற்றிய சில உதாரணங்களை நாம் இப்போது காணலாம்.

> மூன்றாம் நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது. இயேசுவின் தாயும் அங்கிருந்தாள். இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். திராட்சரசங் குறைவுபட்டபோது இயேசுவின் தாய் அவரை நோக்கி அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை என்றாள். அதற்கு இயேசு ஸ்திரீயே எனக்கும் உனக்கும் என்ன, என் வேறை இன்னும் வரவில்லை என்றார். அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் என்றாள். யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கும் முறைமையின்படியே ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது. இயேசு வேலைக்காரரை நோக்கி ஜாடிகளில் தண்ணீர் நிரப்புங்கள் என்றார். அவர்கள் அவைகளைக நிறைய நிரப்பினார்கள். அவர் அவர்களை நோக்கி, நீங்கள் இப்பொழுது மொண்டு பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போங்கள் என்றார். அவர்கள் கொண்டு போனார்கள்.
>
> *(யோவான் 2:1-8)*

இயேசு வேலைக்காரரை நோக்கி 6 ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார். இதுதான் விசுவாசம். அவர் அவர்களை நோக்கி நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்தி விசாரிப்புக்காரரிடத்தில் கொண்டுபோங்கள் என்றார். அவர்கள் கொண்டுபோனார்கள். அவர்கள் அதை மொண்டு கொண்டுபோய் பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோனதற்கு இடையில் அந்தத் தண்ணீர் திராட்சரசமாக மா◌றியது. அது ஒரு அற்புதம் (யோவான் 2:9-11ஆம் வசனத்தைப் பார்க்கவும்) நீங்கள் இதை ஒரு அடையாளம் என்று அழைக்கலாம் அல்லது நீங்கள் இதை ஒரு அதிசயம் என்று அழைக்கலாம். ஆனால் அது அற்புதத்தின் வகையைச் சேர்ந்ததாகும்.

ஐயாயிரம் பேரைப் போஷித்தல்

மற்றொரு அற்புதமாவது இயேசு அப்பங்களையும் மீன்களையும் வர்த்திக்கப்பண்ணி ஆயிரக்கணக்கான ஜனங்களைப் போஷித்தல்:

> இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்ட, பிலிப்புவை நோக்கி: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார். தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி இப்படிக்கேட்டார். பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தரமாக: இவர்கிகளில் ஒவ்வொருவனும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான். அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும், சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி: இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான். இயேசு: ஜனங்களை உட்காரவையுங்கள் என்றார். அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது. பந்தியிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிரந்தார்கள். இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படியே மீன்களையும் அற்வர் எடுத்து அவர்களுக்கு வேண்டியமட்டம் கொடுத்தார். அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார். அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள். இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்.
>
> *(யோவான் 6:5-14)*

இயேசு பெண்களையும் குழந்தைகளையும் தவிர ஐயாயிரம் புருஷர்களைப் போஷிக்க வேண்டும் விரும்பினார். அவரிடத்தில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் மட்டுமே இருந்தன. அவர் என்ன செய்தார்? அவர் ஒர எளிய காரியத்தைச் செய்தார். அவர் கர்த்தரிடத்தில் நன்றி சொல்லி பின்பு அந்த உணவைப் பரிமாறும்படிச் செய்தார். அதில் எல்லோரும் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளும் மீதமிருந்தன. இறுதியில் எத்தனை கூடைகள் உணவு மீதமிருந்தன என்று உங்களுக்குத் தெரியுமா? இந்த பகுதி சொல்லுகின்றத 12 கூடைகள்

என்று. மற்றொர வேளையில் இயேசு 4000 பேரை ஏழு அப்பங்களையும் ஒரு சில மீன்களையும் கொண்டு போஷித்தார். இதில் 7 கூடைகள் மீதியாயிரந்தன. 2 ஆம் முறை எடுக்கப்பட்ட துணிக்கைகளின் கூடைகள் மிகவும் பெரியன. ஜனங்கள் சாப்பிட்டது மட்டுமின்றி ஏராளமானவைகள் மீதமிருந்தன. (மாற்கு 8:1-9ஐப் பார்க்கவும்)

இயேசு இந்த அற்புதத்தை ஒழுங்காகவும் கிரமமாகவுமான வழியில் செய்ததைக் கவனியுங்கள். மாற்கு 6ஆம் அதிகாரத்தில் 5000 பேரைப் போஷித்ததைப் பற்றி விவரிக்கும்பொழுது இயேசு தன் சீஷர்களிடம் ஜனங்களை வரிசையாக உட்காரும்படிச் சொன்னார் என்பதை வாசிக்கிறோம். அவர்கள் அந்தப் புல் தரையில் ஐம்பது ஐம்பது பேராக நூறு வரிசைகளாக உட்கார்ந்தனர். இயேசு ஜனங்களைப் போஷிக்கும் முன்பு அவருடைய அதிகாரத்திற்கு ஒழுங்கும் அர்ப்பணிப்பும் அவசியம் என்று உணர்ந்தார். இதுவே ஆவிக்குரிய வகையில் நமக்கும் உண்மையாகிறது. சில மக்கள் யாரோடு சேருவையும் விரும்பமாட்டார்கள் அல்லத வேறு யாருடைய அதிகாரத்தின் கீழ் இருக்கவும் விரும்பமாட்டார்கள். இதனால்தான் அவர்கள் ஆவிக்குரிய ஆகாரத்தால் போஷிக்கப்படுவதில்லை.

ஒரு பிறவிக் குருடனுக்கு உண்டாக்கின அற்புதம்

பின்பு, இயேசு பிறவிக்குருடனாகிய ஒரு மனிதனை சுகமாக்கினதைக் குறிப்பிடத்தக்க அற்புதமாகக் காண்கிறோம்.

> அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்க்ள், இயேசு பிரதியுத்தரமாக: இது அவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டு இப்படிப் பிறந்தான். இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடை கண்களின்மேல் பூசி: நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம் அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான்.
>
> *(யோவான் 9:1-3, 6-7)*

இயேசு ஜனங்களைப் போஷிக்கும் முன்பு அவருடைய அதிகாரத்திற்கு ஒழுங்கும் அர்ப்பணிப்பும் அவசியம் என்று எண்ணினார். இதுவே ஆவிக்குரிய வகையில் நமக்கும் உண்மையாகிறது.

இயேசு ஒரு குருடனின் கண்களில் களிமண்ணைப் பூசி, சீலோவாம் குளத்திலே கழுவும்படிச் செய்து சுகமாக்கினார். அவன் சென்று கழுவினான், அவனால் பார்க்க முடிந்தது. அநத் மனிதனைக் களிமண் மட்டும் குணமாக்கவில்லை. இருப்பினும் அவன் இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து விசுவாசத்துடன் குளத்தில் கழுவினதினால்தான். அவனுடைய கீழ்ப்படிதலுக்குப் பரிசுத்த ஆவியானவர் பதில் கொடுத்து ஒரு மனிதனாலும் செய்ய முடியாததைச் செய்தார். பரிசுத்த ஆவியின் வல்லைமயினால் களிமண் கண்களாக மாற்றப்பட்டது. இயேசு அந்த மனிதனின் கண்களில் களிமண்ணைப் பூசியது விளம்பரத்திற்காகவே என்று நான் நம்புகிறேன். அவரே சிருஷ்டி கர்த்தா, எந்த நேரத்திலும் அவருடைய பிதாவின் சித்தப்படி அவரால் களிமண்ணை தசைகளாக மாற்ற முடியும். ஆதியாகமம் 2:7ல் “தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்”. அவனுக்கு ஆவி, ஆத்துமா, சரீரம் உண்டாகியது. ஆகவே இது ஒரு உன்னதமான அற்புதமாகும். இயேசு நித்திய நித்தியமான சிருஷ்டி கர்த்தா என்பதற்கு இதுவே நிரூபணமாகும். அவர் மனிதர்களோடு வாழ வந்தார்.

பிறவிச் சப்பாணியாயிருந்த ஒரு மனிதனைக் குணமாக்குதல்

அப்போஸ்தலர்களின் ஊழியத்தில் ஒருபோதும் நடக்காத ஒரு பிறவிச் சப்பாணியைக் குணமாக்கிய அற்புதம் நடந்தது.

> “அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனை சுமந்து கொண்ட வந்தார்கள். தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சை கேட்கும்படி, நாடோறும் அவனை அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள். தேவாலயத்திலே பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான். பேதுருவும் யோவானும் அவனை உற்றுபார்த்து: எங்களை நோக்கிப்பார் என்றார்கள். அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும்

ஒரு அற்புதத்தில் கடுமையான கருத்தாவது, ஒரு மனிதனை ஒரு சிறிய செயல் செய்யச் சொல்வதாகும். இது அவனுடைய விசுவாசத்தைத் தொடங்கி முன்னேறச் செய்கிறது.

கிடைக்குமென்று எண்ணி, அவர்களை நோக்கிப்பார்த்தான். அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிட்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என் று சொல்லி; வலதுகையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பென்கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்.

(அப்போஸ்தலர் 3:2-8)

இந்த மனிதன் தேவாலயத்தின் அலங்கார வாசலண்டை உட்கார்ந்திருந்தான். அவன் பேதுருவும் யோவானும் வருவதைப் பார்த்தான். அவன் ஏதாவது காசு கிடைக்கும் என்று கையை நீட்டினான். அப்பொழுது பேதுரு "*வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்*" என்றான். உன்னிடத்தில் இல்லாத ஒன்றை நீ மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாது. நம்மில் அநேகருடைய கஷ்டம் என்னவென்றால் நாம் ஆவிக்குரிய பிரகாரமாய் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு நம்மிடத்தில் ஒன்றுமில்லை. ஆனால் பேதுரு சொன்னார் "*வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை. நசரேயனாகிய இயேசுவின் நாமத்தினால் எழுந்து நட.*"

அந்த மனிதன் இன்னும் அங்கேயே உட்கார்ந்துகொண்டிருந்தபொழுது பேதுரு தனத கையை நீட்டி அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான். அவன் குணமடைந்தான். ஜனங்கள் சும்மா உட்கார்ந்து கொண்டு எதையாவது மிகவும் அரிதாகப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பத அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உங்களது விசுவாசத்தை வெளிப்படுத்த நீங்கள் எதையாவது செய்ய வேண்டும். "கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது" (யாக்கோபு 2:20, 26ஐ வாசிக்கவும்) ஒரு அற்புதத்தில் கடுமையான கருத்தாவத ஒரு மனிதனை ஒரு சிறிய காலம் செய்யச்சொல்வதாகும். இது அவனது விசுவாசத்தைத் தொடங்கி முன்னேறச் செய்கிறது என்பதை நான்

கற்றுக்கொண்டேன். அது எப்படிப்பட்டது என்பதைப் பற்றி முக்கியமல்ல. ஆனால் மக்கள் ஒன்றைச் செய்ய ஆரம்பிக்கும்பொழுது செயல்களும் நடைபெற ஆரம்பிக்கின்றன. பேதுரு அந்த மனிதனைத் தூக்கிவிட ஆரம்பித்தபோது அவன் எழுந்தான். இந்த செயலின் பொழுத தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை அவனுடைய கரடுகளையும் கால்களையும் நேராக்கியது.

நான் தனிப்பட்ட முறையில் அநேகரது கால்கள் நேராவதை சாட்சியாகப் பேசுகிறேன். நான் வளைந்த கால்களை உடையவர்களைப் பார்த்திருக்கிறேன். அது எனது கண்களுக்கு முன்பாக இரண்டு கால்களும் நேரானதைக் கண்டுள்ளேன். இதோடுகூட என்னுடைய நண்பர் ஒருவர் ஒரு உயர்நிலைப்பள்ளி ஆசிரியருக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் முடக்குவாதத்தினால் கோணலான கால்களையுடையவராக இருந்தார். எனது நண்பர் அவருக்காக ஜெபித்து அவரை எழுந்து நடக்கும்படிக் கட்டளையிட்டார். அவரைத் தூக்கிவிட்டார். அடுத்தநாள் அவர் சக்கரவண்டியில் வருவதற்குப் பதிலாக நடந்து வகுப்பறைக்குச் சென்றார். எனது நண்பர் கூறினார். அந்த மாணவர்கள் நூறு பிரசங்கங்களைக் கேட்பதைவிட அதிகமாக, தேவன் உயிரோடிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தினர். நம்முடைய சந்ததியினருக்கு நாம் தேவன் உண்மையாகவே வாழ்கிறார் என்பதை செயல்கள் மூலம் காட்டுவது நமது கடமையாகும். ஓட்டிக்கொண்டுபோய் மோதுபவர்கள் எனது தேவன் மரிக்கவில்லை என்று சொல்வார்கள் அது நல்லதுதான். ஆனால், நாம் ஒர விளக்கத்தைக் காணலாம். இதைத்தான் இந்த உலகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அதை அவர்கள் பார்க்கும்பொழுத, இதற்கு யார் பதிலளிப்பார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கும். அதிகக் கடின இருதயமுள்ளவர்களும் அவ நம்பிக்கையுடையவர்களும் உற்சாகமுடையவர்களாக மாறுவார்கள்.

மரித்த ஐத்திகு உயிரோடெழுதல்

ஐத்திகு என்ற மரித்துப்போன மனிதனை அப்போஸ்தலர் பவுல் உயிரோடெழுப்பியது இந்த அற்புதமாகும்.

> வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கயில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து,

> நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான். அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டிலே அநேக விளக்குகள் வைத்திருந்தது. அப்பொழுது ஐத்திகு என்னும் பேர் கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயக்கத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்த, மரித்தவனாய் எடுக்கப்பட்டான். உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக்கொண்டு:கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான்..... அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள்.
> *(அப்போஸ்தலர் 20:7-10; 12)*

சில மக்கள் தாங்கள் பிரசங்கித்துக்கொண்டிருக்கும்போது இடையில் இப்படி நடந்திருந்தால் தங்களின் சமச்சீர் நிலையினை இழந்திருப்பார்கள். இருப்பினும் பவுல் இதை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. பவுலின் மூலமாக பரிசுத்த ஆவியின் வல்லமை செயல் புரிந்த ஐத்திகு மீண்டும் உயிர்பெற்ற அற்புதம் நடந்தது.

அற்புதங்களும் விசுவாசத்தின் செயல்களும்

வேதத்திலுள்ள அற்புதங்களை நீங்கள் படித்தால் கிட்டத்தட்ட ஒவ்வொரு முறையும் விசுவாசக் கிரியையே அவர்களைத் தூண்டிவிட்டது. சில சமயங்களில் அது மிகவும் எளிதான செயலாயிருக்கும்.

வேதத்திலுள்ள அற்புதங்களை நீங்கள் படித்தால் ஒவ்வொரு முறையும் விசுவாசக் கிரியையே அவர்களைத் தூண்டிவிட்டது.

உதாரணமாக மோசேயும் இஸ்ரவேல் ஜனங்களும் மாராவை அடைந்தபொழுது, தண்ணீர் கசப்பாக இருந்ததால் அத்தண்ணீரை அவர்களால் குடிக்க முடியவில்லை. மோசே கர்த்தரை நோக்கிக் கதறினார், கர்த்தர் அவனுக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார். அவன் அந்த மரத்தைத் தண்ணீருக்குள் எறிந்தபோது தண்ணீர் மதுரமாக மாறியது. (யாத்திராகமம் 15:23-25) அந்த மரத்திற்கு இனிப்பாக்கம் தன்மை கிடையாது. அது தேவனுடைய வல்லமை. எனினும் மோசே அந்த மரத்தை உள்ளே போட வேண்டியதிருந்தது. அவர் அதை அமைதியாக

மெதுவாக உள்ளே விடவில்லை, அதைத் தண்ணீருக்குள் எறிந்தார். அதை அவர் தண்ணீருக்குள் வீசி எறிந்தார். மற்ற வகையில் சொல்லப்போனால் அவர் தன்னை அர்ப்பணித்தார். விசுவாசம் என்பது ஒரு பரிசோதனை அல்ல அது ஒரு அர்ப்பணமாகும்.

இயேசு தானாக அற்புதங்களைச் செய்யும்போது வெளித்தோற்றத்தில் சில விநோதமான காரியங்களைச் செய்தார். குருடனின் கண்களில், துப்பிக் களிமண்ணைப் பூதுவது ஒரு செவிடனின் நாவைத் தொடுவது ஆகும். மேலும் மற்ற ஜனங்களிடத்தில் அறிவு நிறைந்த, இயற்கையான சில காரியங்களைச் செய்யச் சொன்னார். அதாவது ஒரு குறிப்பிட்ட குளத்தில் கழுவச் சொன்னார். அந்தச் சின்ன செயல்கள் தேவனின் குணமளிக்கும் வல்லலமையை வெளிப்படச் செய்தது.

அற்புதங்களும் குணமடைதலும்

ஒரு வழியில் குணமாக்குதலும் அற்புதங்களும் இணைகின்றன. உடனடியாகப் பார்க்கக்கூடிய வகையில் குணமடைதல் அற்புதமாகும். மற்றொர வகையில் அற்புதங்கள் விசுவாசத்தோடு இணைகின்றன.

ஆனால் வல்லமையின் வரங்கள் அற்புதம் செய்யும் ஊழியம் ஆகியவை குணமளிக்கும் ஊழியங்களுக்கு முன்னானவை. ‘‘தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்”. (1 கொரிந்தியர் 12:28) ஆரம்பத்தில் நாம் வாசித்தோம், இயேசு தனது சொந்த ஊராகிய நாசரேத்திற்குச் சென்றபோது அவரை ஏற்றுக்கொள்ளவில்லை, ஏனென்றால் அவர்களுடைய அவிசுவாசத்தினால். “அங்கே அவர் சில நோயாளிகள் மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமற்போயிற்று” (மாற்கு 6:5). மீண்டும் கிரேக்க மொழியில் ‘‘வல்லமையான செயல்’’ என்ற வார்த்தை ‘‘டுனாமிஸ்’’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதே வார்த்தைக்கு அற்புதங்கள் என்றும் கொள்ளலாம். இயேசு நாசரேத்தில் அற்புதங்களைச் செய்யமுடியவில்லை என்று பார்க்கிறோம்.

ள்ா

பகுதி 4 + வாய்மொழி வரங்கள்

10 பல பாஷைகளின் வரங்களும், பல பாஷைகளின் விளக்கமும்

இப்போது ஆவியின் வரங்களின் மூன்றாம் தொகுதிக்கு வந்துள்ளோம். மனித வாய்மொழி சப்தங்கள் மூலம் அவைகள் கிரியை செய்வதால், அவ்வாறு அழைக்கப்படகின்றன. வாய்மொழி வரங்களில் பலவிதமான பாஷைகளும், அவைகளை விளங்கிக்கொள்ளுதல், மற்றும் தீர்க்கதரிசனமும் அடங்கும்.

வாய்மொழி வரங்கள்

வரங்களின் அடிப்படை விளக்கத்தோடு நாம் ஆரம்பிப்போம். இந்த விளக்கங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக அமையாவிட்டாலும், அவை நடைமுறை முன்னுரைகளாக இருக்கும். “பேசுவதற்கு” என்ற வார்த்தையே ஒவ்வொன்றுக்கும் மையமாக அமைகிறது.

பாஷைகளின் பற்பலவிதம் என்பது பரிசுத்தஆவியானவர் பாஷை பேசுபவர் அறிந்துகொள்ள முடியாத ஒரு மொழியில் பேசும் திறனை கொடுப்பதாகும்.

பாஷைகளை அறிந்துகொள்ளுதல் என்பது, பேசுபவர்தான் புரிந்துகொள்ளும் மொழியில் பேசும் திறனைக் குறிக்கும். அதாவது முன்பு, தெரியாத மொழியில் பேசும் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள ஆவியானவர் திறனைத் தருவதாகும்.

தீர்க்கதரிசனம் என்பது, துயூ ஆவியானவர் தரும் வார்த்தைகளைப் பேசுபவர் அறிந்து பேசுவது ஆகும்.

முன்பு கூறப்பட்ட வரங்களின் தொகுப்பு-வெளிப்படுத்தும் வரம், வல்லமையின் வரம் - தேவனின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. தனது சொந்த சித்தத்தின்படி ஒருவர் சுகமாக்கம் வரத்தையோ, அற்புதங்களை

நடப்பிக்கும் வரத்தையோ, ஞானத்தைப் போதிக்கும் வசனம் அல்லது அறிவை உணர்த்தும் வசனத்தையோ இயக்க முடியாது. இந்த வரங்களைப் பிரயோகிப்பதில் மனித சித்தத்திற்கு இடமே இல்லை என்று சொல்லுவதாக, அர்த்தங்கொள்ளக்கூடாது. மனித சித்தம் பரிசுத்த ஆவிக்குக் கீழ்ப்படியாவிட்டால், வரங்கள் கிரியை செய்யாது. எனினும், இவ்வாறு வரங்களின் செயல்பாடு தேவனிடமே உள்ளது.

வாய்மொழி வரங்கள் மனிதனின் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப் பட்டிருக்கின்றன.

வாய்மொழி வரங்களைப் பார்க்கும்போது, அவை, சில அளவில் மனிதர்களுக்கு மனிதர்களிடம் வேறுவிதமாய் அமைகிறது. கட்டுப்பாட்டிற்குள் அவை வைக்கப்படுகின்றன. என்து தனிப்பட்ட அனுபவத்திலிருந்த பேசும்போது, நான் நினைக்கும்போதெல்லாம் நான் அறியாத மொழியிலே, எவ்வித தடையுமின்றி பேசமுடியும். நான் அடிக்கடி வியாக்கியானமும் சொல்ல முடியும். எத்தனை தடவை தரிசனம் கூறவேண்டும் என்று எனக்குத் தெரியாவிட்டாலும், நான் விரும்பினால் எக்கூட்டத்திலும் என்னால் உரைக்கமுடியும். அந்தத் திறனை அநேக ஆண்டுகளுக்கு முன் தேவன் எனக்குக் கொடுத்தார். அதை நான் ஒரு போதும் இழந்ததில்லை.

ஆனால் நான் எக்கூட்டத்திலும் நினைத்த மாதிரி தீர்க்கதரிசனம் கூறுவதில்லை. இவ்வகை வரங்கள் நமது கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டாலும், அவற்றை நாம் எப்படி உபயோகிக்கிறோம் என்பதற்கும் நாம் பொறுப்பாளிகளாக இருக்கிறோம். வாய்மொழி வரங்களின் செய்ல எல்லையில், நாம் செய்யவேண்டிய முதற்காரியங்கள் - கர்த்தருடைய வார்த்தையிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அவைகள் கொடுக்கப்பட்டதின் நோக்கங்கள் எவை, அவைகளை சரியாக பயன்படுத்தும் முறை மற்றும் எவ்வகைகளில் அவற்றை உபயோகிக்கக் கூடாது என்பவைகளே ஆகும்.

1 கொரிந்தியர் 14ஆம் அதிகாரத்தில் வரங்களை எவ்வாறு, எப்போது உபயோகிக்க வேண்டும் என்றும், எங்ஙனம் உபயோகிக்கக்கூடாது என்றும் அநேக ஆலோசனைகளைக் கொடுத்துள்ளார். உதாரணமாக, ஒரு கூட்டத்தில், சாதாரணமாக, இருவர் அல்லது மூவரே அந்நிய

பாஷையில் பேச வேண்டும். அதற்கு மேற்பட்டவர்கள் அல்ல. நிச்சயமாக, அநேகர் பற்பல பாஷைகளில் பேசும் திறனை பெற்றிருந்தாலும், ஒழுங்கின் நிமித்தமாக தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். அதைப் போன்றே, ஒரு கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று தீர்க்கதரிசிகளே பேசலாம். தெரியாத மொழியில் ஒருவர் சத்தமாகப் பேச இருந்தால், அங்கே ஒரு விளக்குபவர் இருக்க வேண்டும். (பேசுபவரோ அல்லது மற்றவரோ) அல்லது அதைப்பேசக் கூடாது.

பவுல் சொன்ன உதாரணங்களிலிருந்த, மக்கள் இந்த வரத்தை உபயோகிக்கவோ அல்லது உபயோகியாமல் இருக்கவோ வலிமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆவியானவரின் வாய்மொழி வரங்களைக் கட்டுப்படுத்த தவறியதால், ஏற்பட்ட தவறுகளையும், அழிவுகளையும் கணக்கிட வழி இல்லை.

பாஷைகளின் விதங்கள்

பவுல் எழுதினார் "*வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும் வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது*". (1 கொரிந்தியர் 12:10) இவ்வசனம், அறியாத பாஷைகளில் பேசும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் போது கொடுக்கப்படுவதைக் குறிப்பிடவில்லை. இவ்வரத்தைக் குறித்துப் பவுல் எழுதினார். "*ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்*" (1 கொரிந்தியர் 14:2) ஒவ்வொரு விசுவாசியும் இப்பேர்பட்ட பாஷை வரத்தை தேவனோடு தனிமையான ஐக்கியத்தில் உபயோகிக்கலாம். அவர் மனதால் புரிந்துகொள்ள முடியாத 'இரகசியங்களைப்' பேசி அவனின் சொந்த ஆவிக்குரிய வாழ்க்கையை வளமாக்குவார். இப்பேர்பட்ட பாஷைகளின் வரம் பன்மையில் உள்ளது. பொது சபையில், அந்த குறிப்பிட்ட சபையில் ஊழியம் செய்கிறது. இந்து பாஷைகள் தனிப்பட்ட ஆவிக்குரிய முன்னேற்றத்திற்காக அல்ல.

ஒரு உள்ளூர் சபையில் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கு உபயோகமாகிறது.

பொதுநலம் மற்றும் தனிமையான பாஷைகள்

பாஷைகளின் பொது நல வரங்களை விளக்கமாக அறிந்து கொள்வதற்கு, பவுல் பொது சபைக்கு தேவன் அருளின வித்தியாசமான வரங்களைப் பற்றி பேசும் 1 கொரிந்தியர் 12:28ஐப் பார்ப்போம். “தேவனானவர் சபையிலே முதலாவத அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும், ஏற்படுத்தினார்.” இந்த வசனத்தில் பவுல் சபையைப் பற்றி பேசும்போது, எங்கும் வியாபித்திருக்கும் சபையைப் பற்றி பேசவில்லை. தேவனின் மக்கள் பொதுவாக ஓரிடத்தில் கூடி, வரங்களை உபயோகித்து ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யும் சபையையே குறிப்பிட்டுப் பேசுகிறார்.

மேற்கூறிய வசனத்தில், வரங்கள் கிட்டதட்ட முதுமையின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வுண்மைய அற்புதங்கள் கிரியை செய்யும் விதம் என்ற அத்தியாயத்தில் பார்த்தோம். சுகம் பெறுவதைவிட, அற்புதங்கள் உயர்நிலையில் வைக்கப்பட்டதைப் பார்த்தோம். எனினும் இப்படி சொல்வது வழக்கத்திற்கு விரோதமானதுதான். அநேக சந்தர்ப்பங்களில் பவுல் இப்பேர்பட்ட வரங்களின் உயர்வு/தாழ்வு நிலையைக் குறிப்பிடவில்லை. உதாரணமாக, 1 கொரிந்தியர் 12:8-10இல் தான் அதிக முக்கியமான வரங்களை, இப்புத்தகத்தில் நாம் படிக்கும் ஆவிக்குரிய வரங்களை, வரிசைப்படுத்தினார் என்று சொல்லுவதற்கில்லை. தீர்க்கதரிசமனே, விலையுயர்ந்த வரம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு பவுல் எழுதினாலும், அது வரங்களின் வரிசையில் கடைசியில் வைக்கப்பட்டுள்ளது என்றாலும் திட்டவட்டமான ஓர் வரிசையை நாம் பெற்றிருக்கிறோம். “*முதலாவது அப்போஸ்தலர்கள், இரண்டாவது தீர்க்கதரிசிகள், மூன்றாவத போதகர்கள் பின்னர் அற்புதங்கள், சுகமாக்கும் வரங்கள்*’ என முதல் ஐந்தும், மூப்பு முறையாக பட்டியலிடப்பட்டுள்ளன.

வார்த்தையைப் பிரசங்கிப்பது மற்றவிதமான ஊழியங்களுக்கு முன்னானது. ஏனெனில் அதுவே இறுதி அதிகாரம் உடையதாகும்.

வார்த்தையைப் பிரசங்கிக்கும் ஊழியமே மற்ற ஊழியங்களைவிட முன்னுரிமை பெற்றது. ஏனெனில் அதற்கே இறுதி அதிகாரம் உண்டு. அதனால்தான் வார்த்தை ஊழியம் செய்வோர் முதலில் குறிப்பிடப்படுகின்றனர். பிரசங்க ஊழியத்தைத் தொடர்ந்த, அற்புதங்கள் மற்றும் சுகம் பெறும் வரங்களை உபயோகிக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஊழியங்கள் தொடர்கின்றன. பின்னர் உதவியாளர்கள், நிர்வகித்தல் அல்லது ஒரு கூட்டம் அல்லது குழு போக வேண்டிய வழியை நடத்துதல் போன்றவரை வருகின்றன. பின்னர் பாஷைகளின் பல விதங்களைக் காண்கிறோம்.

கிரேக்க மொழியில் 1 கொரி. 12:28இல் உபயோகப்படுத்தப்பட்டுள்ள அதே சொற்றொடர் 1 கொரிந்தியர் 12:10லும் பல வகையான பாஷைகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. அதனால் 28ஆம் வசனத்தைப் பலவிதமான பாஷைகள் என மொழி பெயர்க்க விரும்புகிறேன். மேலும் 'வகைகள்' என்று நாம் மொழி பெயர்க்கும் கிரேக்க வார்த்தை 'ஜீனஸ் என்று ஆங்கிலத்தில் அதே அர்த்தம் கொள்ளும் வார்த்தையாக அமைகிறது. இந்த வரத்தைப் பற்றி நாம் பேசுவதெல்லாம் ஒன்றுக்கொன்று தொடர்புடைய வரம் அல்லது பல்வகையான வரங்களே.

1 கொரிந்தியர் 12இல் உள்ள நிலைமையின்படி, தேவனோடு தனிமையில் தொடர்புகொள்ளும் ஒரு பாஷையைப் பற்றி, நாம் சிந்திக்கவில்லை. முன்பு எழுதியது போல் அது தனிமையான ஒரு வரம். ஆனால், இது பொதவான வரம் ஆகும். இந்த வேற்றுமையை, நாம் துல்லியமாக அறிந்த கொள்ளாவிடில், இவ்வகையான பாஷைகளைப் பற்றிய வித்தியாசமான பவுல் கூறின கருத்துக்களை அறிந்துகொள்ள இயலாது. வித்தியாசமான அநேக வரங்கள் கொடுக்கப்படுவதின் நோக்கம் சபையில் பொது ஊழியம் செய்யப்படுவதே ஆகும். அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசகிள், போதகர்கள், அற்புதங்கள், சுகமாக்கும் வரங்கள், உதவிக்காரர்கள் மற்றும் நிர்வாகங்கள். அதே குறிக்கோள்களுடன்தான் செயல்படுகின்றனர். நாம் நமது மனதில்,

தனிப்பட்ட ஒரு பாஷையை உபயோகிப்பதிலிருந்து, பொதுவான பாஷைகளின் பல்வகைகளை வித்தியாசப்படுத்தி அறிந்து கொள்ளவேண்டும்.

நமது மனதில் பாஷைகளில் பலவிதங்களை, ஒரு பாஷையின் தனிப்பட்ட உபயோகத்திலிருந்து முழுவதுமாக வித்தியாசப்படுத்த அறிந்துகொள்ள வேண்டும்.

1 கொரிந்தியர் 12:28இல் பவுல் கூறின வரங்களின் பட்டியலைத் தொடர்ந்து, பொதுச் சபையில் பாஷைகளின் ஊழியம் எல்லா விசுவாசகிளுக்கும் கொடுக்கப்படவில்லை என்பதை உணர்த்துகிறார். அவர் எழுதினார். எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களையுடையவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? (வசனங்கள் 29-30). பவுல் இந்த சொல்வன்மை மிக்க வினாக்களைக் கேட்டார். வினாக்கள் கேட்கப்பட்ட விதத்தை எல்லாரும் ஒத்துக்கொள்வார்கள் என நம்புகிறேன். ஒவ்வொரு கேள்விக்கும் பதில் இல்லை என்பதே.

எல்லாருக்கும் பல பாஷைகளின் வரம் இல்லாததால், சிலர் பாஷைகள், பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெறும்போது, நிச்சயமாக நடக்கவேண்டும் என்பதில்லை என்று ஊகிக்கலாம். எனினும், பவுல் கேட்ட கேள்வி ‘பொது சபையில் எல்லாரும் பல பாஷைகள் பேசுகிறார்களா?’ என்பதே, பதில் ‘இல்லை’ என்பதே. அநேகர் பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெற்று, தேவனோடு தனிமையில் தெரியாத பாஷையில் பேசுகிறதை நான் அறிவேன். ஆனால் பொது சபையில் அவர்களுக்கு பாஷைகளின் ஊழியம் இல்லை. எனவே பவுல் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவதின் விளைவுகளைப் பற்றிச் சொல்லவில்லை. அவர் விசுவாசிகள் கூடியுள்ள பொதுசபையில் பல வகையான ஊழியங்களைப் பற்றிப் பேசுகிறார்.

பொதுவான கூடுகையில் பலவகையான பல பாஷைகள்

நான் இப்பொழுது, பவுல் பல பாஷைகளைப் பற்றி என்ன அர்த்தம் கொள்ளுகிறார் என்பதை நான் புரிந்துகொண்டவகையில் உங்களுக்குக் கொடுக்கிறேன். பல வருட படிப்பு, தியானம் மற்றும் ஜெபத்தின் மூலம் நான் ஒரு முடிவுக்கு வந்துள்ளேன். இது போலவே பல தேசங்களில் அநேக வித்தியாசமான குழுக்களையும் கண்காணித்தல் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் இந்த முடிவுக்கு வந்தேன். என்றாலும் அது என்னுடைய கணிப்பாகவே இருந்து வருகிறது. ஆனால் பிறர் வேறு விதமாக நினைக்கலாம்.

அது பலவகையான மொழிகளைக் குறிக்கும் என்று நான் நம்பவில்லை. எடுத்துக்காட்டாக சில வேளைகளில் கிரேக்கம், சில வேளைகளில் பிரெஞ்ச், சில வேளைகளில் சமஸ்கிருதம் மற்றும் பல. நான் நியூசிலாந்தில், பரிசுத்த ஆவியின் செயல்களைக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தேன். என்னுடைய வரிசைக் கிரமமான செய்திகளில் பல வகையான பாஷைகளைப் பற்றிக் கற்றுக்கொடுத்து செய்திகளைச் சமர்ப்பிக்க நேர்ந்தத. இந்த இரண்ட பகுதிகளான வரமும் பன்மையில் சொல்லப்பட்ட அது பலவகையான மொழிகளைக் குறிக்கவில்லை என்ற உண்மையை நான் ஏற்கனவே பார்த்தேன். ஒர நாள் காலை நான் எழும்பும்பொழுத ஒரு வாசகம் என் மனதில், மற்ற காரியங்களைப் போல திட்டமும் தெளிவுமாக பலவகையான பாஷைகள் என்பது துதித்தல், விண்ணப்பித்தல், கண்டித்துணர்த்துதல், அறிவுரை வழங்குதல் என்பதாகும். நான் பரிசுத்த ஆவியானவர் குறைந்தது பல பாஷைகளின் ஒரு பகுதியான அர்த்தத்தைக் காட்டுவதாக நான் உணர்ந்தேன். பல பாஷைகளில் விதவிதமான ஜெபங்கள் கொடுக்கப்படுகின்றன. எனவே, ஜெபத்தின் வகைகளுக்கு இது பொருந்தும். அது அறிவுரை வழங்குதல் அல்லது விளக்கமளித்தல் என்பதையும் குறிக்கும். நான் எந்த வழியிலம் இந்த நான்கு வகைகளில் நடக்கலாம் என்று பரிந்துரைக்கவில்லை.

பல வகையான வார்த்தையின், பலவகையான, பல பாஷைகள் என்பது ஆங்கில வார்த்தை 'ஜீனஸ்' என்ற வார்த்தையோடு தொடர்புடையது என்று நான் குறிப்பிட்டுள்ளேன். ஆகவே, பலவகையான பல பாஷைகள் சிறப்பானவை. இவைகள் எந்த நோக்கத்திற்காக

வழங்கப்படுகின்றன என்ற அடிப்படையில் சிறப்புபெறும். இதற்கு ஆதாரமாக பவுல் எழுதுவதை 1 தீமோத்தேயுவில் குறிப்பிடுவதைக் காணலாம்.

> நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனாகில் தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது
> *(1 தீமோத்தேயு 3:14, 15)*

தீமோத்தேயுவுக்கு எழுதியதின் அடிப்படையான நோக்கம், தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறி ஸ்தல சபையில் சரியாக நடக்க வேண்டும் என்பதை நாம் காண்கிறோம். இதை மனதிற்கொண்டு நாம் ஒரு முக்கியமான கருத்தை வலியுறுத்த வேண்டும். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதல் கடிதத்தில் ஜெபத்தின் வகைகளை அவர் எழுதியுள்ளார்.

> நான் பிரதானமாய்ச சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும், விண்ணப்பங்களையும் ஜெபங்களையும், வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்.
> *(1 தீமோத்தேயு 2:1)*

மற்றொரு வகையில் ஸ்தல சபைகளின் ஆரம்ப நோக்கம் ஜெபமே. இதை நாம் பார்க்காவிட்டால் வேதத்தின் மற்ற உண்மைகளைப் புரிந்துகொள்வதில் தவறிவிடுவோம். மேலும் நாம், தேவன் நமக்கு என்ன வைத்திருக்கிறார் என்ற முழு அனுபவத்திற்குள் நுழைய முடியாது. நாம் ஜெபத்தைத் தள்ளிப் போட்டோமானால் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள விளைவுகளை நாம் பெறமுடியாது. ஜெபம்தான் ஒரு ஜெனரேட்டர். அது சபை கூடுதலில் வல்லமையை உண்டாக்கி வாழ்க்கையின் மற்ற காரியங்களையும் செயல்படுத்துகிறது.

உதாரணமாக நீங்கள் ஜெபம் செய்யாவிட்டால் உடனடியாக ஒரு சபை நிகழ்ச்சியை நடத்த விரும்பினால் அதை நன்கு நடத்துவதற்குரிய வல்லமை உங்களுக்குக் கிடைக்காது. அது ஒரு கட்டிடத்தில் வெளிச்சத்திற்காகவும் உஷ்ணத்திற்காகவும் மின்சாரத்தை கொண்டு வருவதற்காகவும் ஒயர்கள் எல்லாம் மாட்டி ஒலிக்கான கருவிகளையும் பதித்த ஒரு ஜெனரேட்டரோடு தொடர்பு கொடுக்காமல்

விட்டுவிடுவதைப் போன்றதாகும். அவகைளில் அங்கு மின்சாரம் இல்லாததால் ஒன்றுமே செயல்படாது. இப்படித்தான் நான் புரிந்து கொண்டுள்ளேன். இதுதான் ஸ்தல சபை கூடுதலில் ஜெபத்தின் முக்கியத்துவம்.

ஜெபம் மற்றும் பல பாஷைகளின் முழுமையான, நிறைவான பாடங்களாகும். மக்கள் பல பாஷைகளை அது சிறியத முக்கியமில்லாதது என்று குறிப்பிடும்பொழுது அது எப்பொழுதும் எனக்கு வருத்தத்தை உண்டாக்குகிறது. அது ஒரு பயங்கரமான பாடம் அது கிறிஸ்தவ வாழ்க்கையில் வித்தியாசமான வழிகளில் சென்றடைகின்றது. பல வருடங்களாக இதைக் குறித்து நன்கு படித்து தியானித்தம் கூட இதன் ஆழத்தின் அருகில் நான் இன்னும் வரவில்லை.

ஜெபம்தான் ஒரு ஜெனரேட்டர். அது சபை கூடுதலில் வல்லமையை உண்டாக்கி, வாழ்க்கையின் மற்ற காரியங்களையும் செயல்படுத்துகிறது.

அநேக வழிகளில், பல பாஷையான வரம் புரிந்துகொள்வதற்கும், அதன் உள்ளே புகவும் மிகவும் கடினமானதாக உள்ளது. அதை சரியான முறையில் செய்லபடுத்தினால் அது முழுமையாக பலனளிக்கிறது.

நான்கு வகையான பல பாஷைகள்

நாம் இப்பொழுது பலவிதமான பல பாஷைகளுக்கும் பலவிதமான ஜெபங்களுக்கும் உள்ள தொடர்பைக் காணலாம்.

துதி

ஒரு பொதுவான பிரார்த்தனையில் பல வகையான பல பாஷைகளைப் பேசுவதைப் பற்றிப் பேசுவதாக இருந்தாலும் பிரார்த்தனைகளில் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. "ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்றார். (மத்தேயு 18:20) அநேக காலங்களில், ஒரு வெகு சிறிய ஜெபக்குழு, ஜெபத்தில் தேவனிடம்

உறுதியாய் நின்று, அவரோடு உறவாடும் போது, வல்லமையாக கிரியை செய்யும் குழுவாக மாறிவிடுகிறது. ஆவிக்குரிய விளையாட்டுகளை விளையாடுவதைக் காட்டிலும் அல்லது ஆவிக்குரிய கிளர்ச்சி நிலையை அடைவதைவிட அது சாலச் சிறந்ததாகும். சில வேளையில் ஜெபக் குழுக்கள் பெரிதாகும்போது, அதிலுள்ள சில மக்களின் குறிக்கோள்கள் கேள்விக்குரியதாய் மாறிவிடுகிறது. முன்னிருந்த ஒற்றுமை, வல்லமை, மற்றும் ஆவிக்குரிய பயனடைதல் குறைந்தவிடுகிறது. மக்கள் தங்கள் ஜெபக்குழுக்கள் பெரிதாக வேண்டும் என்று விரும்பும்போது, ஜெபக்குழு அங்கத்தினர்கள் எண்ணிக்கை பெரிதல்ல. ஜெபக்குழுவின் ஒற்றுமையும், நோக்கமுமே ஜெபத்தை வல்லமையுள்ளதாக்குகிறது.

ஜெபக்குழு அங்கத்தினர்கள் எண்ணிக்கை பெரிதல்ல. ஜெபக்குழுவின் ஒற்றுமையும், நோக்கமுமே ஜெபத்தை வல்லமையுள்ளதாக்குகிறது.

இரண்டு, பதினைந்து, ஐம்பது அல்லது ஐநூறு பேர் அடங்கிய குழு, தேவனின் சமூகத்தில் அவருக்கு ஊழியம் செய்து தேவனுக்கு ஊழியம் செய்யும் கொள்கை முக்கியமானதொன்றாகும். அநேக கிறிஸ்தவர்கள் ஜெபம் என்பது நமக்கு வேண்டியவைகளின் ஒரு பட்டியலை வைத்துக்கொண்டு, தேவன் நமக்கு அவற்றை செய்ய வேண்டும் என்று எண்ணுவதாகும். ஆனால் அனுபவத்தில் நாம் தேவனுக்கு ஊழியம் செய்யும்போது, அவர், தம் வேளையில் நமது தேவைகளை சீக்கிரமாய் சந்திப்பார் என்பதாகவே இருக்கிறது. நாம் தேவனிடம் அதிகமாக பிச்சைக் கேட்கவோ அல்லது வழக்காடவோ வேண்டாம்.

நான் விவரித்த இதே போன்ற குழுவில், அது சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் யாருக்காவது பல பாஷையில் துதிப்பது அருளப்படலாம். நீங்கள் இதைக் கேட்கும்பொழுது ஒரு மனிதனின் ஆவி சிருஷ்டி கர்த்தாவைப் போற்றுகிறது, உயர்த்துகிறது, ஆராதிக்கின்றது என்பதை அறிய முடிகிறத. இது ஒரு திடுக்கிடக்கூடிய அனுபவமாகும். இதன் விளைவு இந்தக் குழுவில் உள்ள மற்றவர்களுக்கும் அது வெளிப்படும். தேவனைத் துதிப்பதில் அவர்களும் சேர்ந்துகொள்வார்கள். பல பாஷைகளால் துதிக்கும் நோக்கம் இந்த முழு குழுவையும் ஆராதிப்பதற்கும் துதிப்பதற்கும் வழிநடத்துவதாகும்.

இதனை விளக்குதல் தேவையில்லாமலே இதன் நோக்கம் நிறைவாகிறத. இருப்பினும் சில வேளைகளில் பல பாஷையை விளக்குவதிலும் துதித்தலும் ஆராதனை செய்தலம் உண்டாகும். அது மிகவும் அழகானதாகும்.

மன்றாட்டு ஜெபம்:

மன்றாட்டு ஜெபத்தின் வகையின் அடிப்படையில் மற்றொரு நிலைமையைக் கவனிக்கலாம். ஒரு குழு ஒரு தனிப்பட்ட மனிதனுக்காகவோ ஒரு நிலைமைக்காகவோ ஜெபித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அவர்கள் முழு வெற்றியையும் அடைவதாகக் காண முடியாது. அல்லது அவர்கள் எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்று அறியாமலிருக்கலாம் அல்லத இந்தக் கூட்டம் எப்படி நடத்தப்பட வேண்டும் என்றும் தெரியாமலிருக்கலாம். இப்படிப்பட்ட நிலைமைகளில் தேவனாகிய பரிசுத்த ஆவியானவர் யாருக்காவதுய மன்றாடுகிற பல பாஷையைக் கொடுக்கலாம். இதுதான் தனிப்பட்ட மனிதனுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற ஜெபமாக அமையும். இந்தக் குழு முழுவதுமாக சரியாக வழிநடத்தப்பட்டு தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ள முடியும்.

அடிக்கடி நான் கவனிப்பது, மன்றாட்ட பலபாஷை என்று நான் அழைப்பதில் அங்கே தீர்க்கதரிசனமும் இருக்க வேண்டும். இருப்பினும் இந்த இரண்டும் பல பாஷையும், வியாக்கியானமும் நேரடியாக இணைக்கப்படவில்லை. மேலும் மன்றாட்டு பல பாஷையினால் தேவன் வெளிக்குக் கொண்டுவர விரும்புகிற தீர்க்கதரிசனம் உண்டாகும். இவ்வாறு அநேக முறை நடந்தள்ளதை நான் பார்த்திருக்கின்றேன். நாம், பல பாஷைகள் வியாக்கியானம், தீர்க்கதரிசன்தைத் தொடர்ந்து வரும் பல பாஷைகள் இவைகளுக்குள் உள்ள வித்தியாசத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

கடிந்து கொள்ளுதல்

மற்றொரு வகையான பல பாஷையினால் சில வேளைகளில் அவர்கள் ஆச்சரியப்படக்கூடியதாகவும் அதிர்ச்சியடையக் கூடியதாகவும் இருக்கும். அதாவது கடிந்து கொள்ளுவதினால். சுவிசேஷங்களில் இயேசுவும்

கடிந்துகொள்ளும் நிலையை பலமுறை வாசிக்கிறோம். அவர் பேதுருவின் மாமியைப் பார்த்து ஜீரத்தைக் கடிந்து கொண்டார். (லூக்கா 4:38-39ஐப் பார்க்கவும்) நீங்கள் சில காரியங்களைக் கடிந்து கொள்ளாவிடில் அது மாம்சீகமாயிருக்கும். நீங்கள் சிலவற்றைக் கடிந்துகொள்ளும்போது, அங்கே ஒரு மனிதன் அல்லத ஒரு மனிதனின் குணாதிசயங்கள் பின்னால் காணப்படலாம். அது அசுத்த ஆவியினால் உண்டாகியிருக்கலாம். ஆரம்பத்தில் இயேசுவும் சீஷர்களும் கலிலேயா கடலைக் கடந்து செல்லும்போது படகு அமிழத்தக்கதாக புயல் வீசியபோது, இயேசு எழுந்து நின்று காற்றையும் அலைகளையும் அதட்டினார். (மாற்கு 4:35-41ஐ வாசிக்கவும்) கிரேக்கத்தில் இதன் சரியான அர்த்தம் அமைதியாயிரு (வசனம் 39) என்ற வார்த்தைக்கு “இரையாதே” “சும்மாயிரு” என்பதாகும்.

பரிசுத்த ஆவியானவர், சில வேளைகளில் கிறிஸ்தவர்களுக்குள் இதைப்போலவே கிரியை செய்வார். ஒரு குறிப்பிட்ட சரீரப்பிரகாரமான அல்லது மனரீதியான தேவைகளுக்காக நாம் ஜெபிக்க ஆரம்பிக்கும்போது உதாரணமாக பரிசுத்த ஆவியானவர் யாருக்குள்ளேயாவது வந்து கோபத்துடன் இருக்கலாம். நான் இவ்வாறு அநேக முறை கார்த்திருக்கிறேன். அது ஒரு பாயும் நீரோட்டம், அணையை உடைத்தது போலவும், ஒரு ஆறு கீழாகப் பாய்ந்தோடி கற்களையும், கழிவுப்பொருட்களையும் அள்ளிக்கொண்டு ஓடுவதுபோலவும், பரிசுத்தஆவியானவர் வெளி வருவார். பிசாசுக்கும், அவன் கிரியைகளுக்கும் எதிர்த்து நின்று ஆவியானவர் ஏதாவதொரு வடிவத்தில் போரிடுவார். இப்பேர்பட்ட வெளிப்பாட்டை அறியாதவர்கள், ஆவியானவர் ஏன் இப்படி செயலாற்றுகிறார் என்பர். ஆவியானவர் தேவனின் முடிவில்லா அறிவை உடையவர். நாம் ஜெபிக்கிற காரியங்களின் பின்னணியை அவர் அறிந்த தமது வல்லமை அந்த சூழ்நிலையில் பிசாசிற்கு விரோதமாக பிரயோகிக்கிறார்.

இதைப்போலவே என்னுடைய மனைவி லிடியா வியாதியஸ்தருக்காக அநேக முறை ஜெபித்திருக்கிறாள். சப்தம் கெர்ஜிக்கிறதைப் போல வெளி வந்தது. நான் நினைப்பது அந்த மனிதனுக்கு என்ன நடந்ததோ அவன் சுகம் பெற்றான். மற்றொரு எடுத்துக்காட்டு, நாங்கள் ஓகியோவில் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தோம். அது மிகவும் அமைதியாக இருந்தத. ஏனென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியில் ஆழமானவர்களல்ல. ஒரு மனிதன் “எனக்கு முடக்குவாதம் உள்ளது. எனக்காக ஜெபிப்பீர்களா?”

என்றான். நானும் என் மனைவியும் அவருக்குப் பின்னால் நின்றுகொண்டு லிடியா அவரது முதுகில் கைகளை வைத்தாள். திடீரென்று அவள் மிகவும் சத்தமிட்டுக் கத்தினாள். இந்த மனிதன் 2 அங்குலத்திற்கு மேல் காற்றில் மேலே சென்று கீழே வந்தான். “ஏன் என்னை பயமுறுத்தினீர்கள்? எனது முடக்குவாதம் குணமாகிவிட்டது” என்றார்.

பல பாஷையின் மூலம் கடிந்துகொள்ளுதலுக்கு இது ஒரு உதாரணம். அங்கே வியாக்கியானத்திற்கு இடமில்லை. அங்கு வியாக்கியானம் செய்வதற்கு அது பொருத்தமான இடமல்ல. சில வேளைகளில் இப்படிப்பட்ட பாஷைகள் ஆச்சரியமாக அமையும். நீங்கள் இந்த ஆச்சரியத்தை அடக்கிவைத்தால் நீங்கள் அந்த வரத்தையும் அடக்கி வைக்கிறீர்கள். இந்த வரமுள்ள ஒரு நபரை எனக்குத் தெரியும். அவருக்கு இந்த வரம் உண்டு. அவர் ஜனங்களிடத்தில் ஊழியம் செய்யும்போது டஜன் கணக்கில் நூற்றுக்கணக்கில் பரிசுத்த ஆவியினால் நிறைந்து கீழே விழுவார்கள். அவர் ஊழியம் செய்யும்போது ஆப்பிரிக்காவில் நான் ஒரே சமயத்தில் 200 பேர் கீழே விழுந்ததைப் பார்த்திருக்கிறேன். ஒரு நாள் அவர் என்னிடத்தில் “நான் தேவனிடத்தில் இந்த ஊழியத்தை ஜனங்கள் கீழே விழாமல் செய்யக்கூடுமா? ஏனெனில் அதினால் மற்றவர்களின் விமரிசனத்தையும் எதிர்ப்பையும் சந்திக்க வேண்டியதிருந்தது” என்று கூறினார். இதன் பின்பு மக்கள் கீழே விழவில்லை ஆனால் அவர்களில் யாரும் சுகமும் பெறவில்லை. பின்பு அவர் தேவனிடத்தில் ‘‘நீங்கள் ஜனங்களை எந்த வழியில் சுகப்படுத்தவேண்டுமோ அந்த வகையில் சுகப்படுத்துங்கள்’’ என்று ஜெபித்தார். நாம் பரிசுத்த ஆவியானவருக்கு சட்டதிட்டங்களை வரையறுக்கக் கூடாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் நம்மை சீராக்கிக்கொண்டு அவரோடு ஒத்துழைக்க வேண்டும்.

நாம் பரிசுத்த ஆவியானவருக்கு சட்டதிட்டங்களை வரையறுக்கக் கூடாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் நம்மை சீராக்கிக்கொண்டு அவரோடு ஒத்துழைக்க வேண்டும்.

சமய சொற்பொழிவு

பொதுவான பிரார்த்தனையில் நான்காவது வகையான பலபாஷையாவது அறிவுரை கூறல். விசுவாசிகள் கூடியிருக்கும் குழுவில் பரிசுத்த ஆவியானவர் ஒரு குறிப்பிட்ட வார்த்தையைப் பேசுவார். திட்டவட்டமாக அது கொடுக்கப்பட்ட பல பாஷையாகும். அந்தக் குழுவினர் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் பல பாஷையைத் தொடர்ந்து அதற்குரிய விளக்கம் சொல்லப்படாவிட்டால் அதன் நோக்கம் நிறைவேறாமல் போகும்.

பல பாஷைகளுக்கு விளக்கம் கூறுதல்

நாம் இப்பொழுது பல பாஷைகளுக்கு விளக்கம் சொல்லும் வரத்தைப் பற்றிக்காணலாம். இந்தத் திறமை பரிசுத்த ஆவியானவரால் பேசும்படி கொடுக்கப்பட்டதாகும் என்று நாம் நிர்ணயித்துள்ளோம். இது பேசுபவர் புரிந்துகொள்ளக்கூடிய மொழியாக இருக்கும். முன்னால் பேசிய வார்த்தைகளின் மொழி அறியாத மொழியாகும்.

பரிசுத்த பவுல் "நீங்களெல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன். ஆகிலும் அந்நிய பாஷையில் பேசுகிறவன் சபைக்கு பக்தி விருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன். ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்'' என்கிறார். (1 கொரிந்தியர் 14:5) அப்போஸ்தலர், அறியாத மொழியில் பேசும்போது அதற்குரிய விளக்கம் சொல்லாவிட்டால் சபையின் பக்திவிருத்திக்கு ஏதுவாகாது. இதைப் பொறுத்தவரையில் அறிவுரைகூறும் பாஷையோடு விளக்கம் தொடரும்போது அது தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கு சமமாகும். அதே நோக்கத்தை அதை நிறைவேற்றுகிறதாக அமைகிறது. அதனால் அது அளவுகோலால் நிதானிக்கப்பட வேண்டும். நாம் மீண்டுமாக 1

அர்த்தஞ்சொல்லுதல் என்பதற்கு, பார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்துப் புரிந்துகொள்ளவைக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

கொரிந்தியர் 14:2இல் பவுல் சொல்வதைக் காணலாம். அறியாத பாஷையில் பேசுகிறவன் மனிதரோடு பேசாமல் தேவனோடு பேசுகிறான். 1 கொரிந்தியர் 14:5இல் பொது ஜெபக்கூட்டத்தில் அந்நிய பாஷை பேசுகிறவன் அதன் அர்த்தத்தையும் சொல்லாவிட்டால் அது மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியாத மறைபொருளாக இருக்கும். அதை விளக்க முடியாது.

பவுல் சொல்கிறார் “*உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன். இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அப்படியிருந்தும் நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்*” (1 கொரிந்தியர் 14:18-19) அந்நிய பாஷையைப் பற்றிக் குறைகூறுபவர்கள் 19ஆம் வசனத்தை நன்கு அறிவார்கள். ஆனால் அவர்கள் 18ஆம் வசனத்தை வாசிக்க மாட்டார்க்ள. அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும் தெரிந்த பாஷையில் ஐந்து வார்த்தைகள் பேசுவதே எனக்கு விருப்பம் என்று பவுல் சொல்லவில்லையா? ஆம்! கொரிந்து சபை விசுவாசிகள் அனைவரிலும் “நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன். இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்” என்று பவுல் சொல்கிறார்.

அறிவுரைகூறும் அந்நிய பாஷையோடு விளக்கம் கூறுதலும் தொடர்ந்த வந்தால் அது தீர்க்கதரிசனத்திற்கு ஒப்பாகும்.

பவுலின் நிருபங்களிலிருந்த கொரிந்த சபையினர் எவ்வளவாய்ப் பல பாஷைகளைப் பேசினார்கள் என்று நாம் படம் பிடித்துப் பார்க்கும்போது, பவுலும் அதிகமாகப் பேசினார் என்பது நமக்குத் தெளிவாகிறது. அதே நேரத்தில் அவர் சபையில் பொதுவாக அந்நிய பாஷையில் அதிகமாய்ப் பேசவில்லை. அப்படியானால் பவுல் எவ்விடத்தில் அந்நிய பாஷைகளைப் பேசினார்? அவர் தனது சொந்த தியானம் செய்யும்போதுதான் தேவனோடு பேசினார் என்பது தெளிவாகிறது. மீண்டும் இது நமக்கு இந்த இரண்டு வகையான அந்நிய பாஷைகளும் முதன்மையானவைகள் என்று காண்பிக்கிறது. பவுல் முக்கியமாகக் கூறுவது பொதுப் பிரார்த்தனையில் எழுந்து நின்று புரியாத

பாஷையை ஒரு மணிநேரம் பேசுவது அவனுக்கு நல்லதல்ல என்கிறார். அது பொருத்தமான இடமல்ல ஏனெனில் அது யாருக்கும் பக்திவிருத்தியை உண்டாக்காது அல்லது உதவியாகவும் இருக்காது. ஆனால் பொது சபையில் நமது குறிக்கோளாவது, உடன் விசுவாசிகளோடு பேசி அவர்களை ஆசீர்வதித்து அவர்களுக்கு உழியம் செய்ய வேண்டும்.

இந்த அடிப்படையில் நாம் இவைகளை உபயோகிப்பது அவசியம். அது அவர்களிடம் சென்று அதை அவர்கள் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். இதைப் போன்ற நிலைமையை நான் கண்டுள்ளேன். யாராவது ஒருவர் புரியாத பாஷையில் சத்தமிட்டுப் பேசுவார். அதற்குரிய விளக்கம் இருக்காது. அது எந்த செயல்பாட்டையும் எந்த ஊழியத்தையும் நிறைவேற்றாது. அது குழப்பத்தையும், இடைஞ்சலையும் உண்டாக்கும். சில வேளைகளில் புரியாதவர்களுக்கு அது பயத்தையும் உண்டாக்கும். இது அந்நிய பாஷையைத் தவறாக உபயோகிப்பதாகும். திரும்பவும் பொதுக்கூட்டத்தில் ஒவ்வொன்றும் உடன் விசுவாசகிளுக்கு ஆசீர்வாதத்தையும் பக்திவிருத்தியையும் உண்டாக்கும் வகையில் அமைய வேண்டும். இதனால்தான் பொது ஊழியத்தில் நன்மதி கூறும் அந்நிய பாஷைக்கு விளக்கமும் கூற வேண்டும்.

விளக்கம் சொல்லுதல் வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் சொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை.

1 கொரிந்தியர் 14:28இல் பவுல் ‘‘அர்த்தஞ்சொல்லுகிறவன் இல்லாவிட்டடால், சபையிலே பேசாமல் தனக்கம் தேவனுக்கும் தெரிய பேசக்கடவன்” என்கிறார். ஒரு வேளை நீங்கள் பொது சபையில் அந்நிய பாஷையில் ஜெபிக்க வேண்டும் என்று உணர்ந்தால் அதற்க அர்த்தம் சொல்லப் போவதில்லை என்று அறிந்தால், நீங்கள் என்ன செய்வீர்கள்? அது மிகவும் எளிது. நீங்கள் உங்கள் மனதிற்குள்ளேயே பேசலாம். உங்களுக்கும் தேவனுக்கும் இடையில் பேசலாம். அநேக ஆண்டுகளாக பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றும் அமைதியாக மனதில் அந்நிய பாஷை பேசி ஜெபிக்க முடியாதவர்களை நான் அறிவேன். இருப்பினும் மேலே குறிப்பிட்ட வசனத்தில், அர்த்தஞ்சொல்லுதல் குறைவுபடும் பிரச்சனைக்குத் தீர்வாக பவுல் மேற்குறிப்பிட்டவாறு கூறுகிறார்.

வியாக்கியானம் பண்ணுதலின் தன்மை

தீர்க்கதரிசனத்திற்கு, அந்நிய பாஷைக்கு அர்த்தஞ்சொல்லும் வரம் பழக்கப்படுத்துவதற்கு நாம் அதன் தன்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். விளக்கம் சொல்லுதல் வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் சொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. அந்நிய பாஷையில் பேசப்பட்டதின் பொதுவான உணர்வைக் கொடுக்க வேண்டும். இதை எனது சொந்த அனுபவத்திலிருந்து ஒரு வெளிநாட்டு மொழியின் விளக்கவுரையாளர் வழியாக பிரசங்கித்ததை உதாரணமாகக் கூறுகிறேன்.

ஒரு விரிவுரையாளரை உபயோகித்து முக்கியத்துவமற்றவற்றை பிரசங்கிக்கும்போது அவற்றைக் கூர்மையாக்கவும், நேரத்தை வீணடிப்பதைத் தவிர்க்கவும் நான் கற்றுக்கொண்டேன். உதாரணமாக வேடிக்கைப் பேச்சைப் பேசுவது உபயோகமற்றது ஏனெனில் அவற்றை மொழிபெயர்ப்பது கடினம் என்பதை அறிந்துகொண்டேன். அதைப் போன்று கொச்சை வார்த்தைகளையும் பேச முடியாது. அவைகளை மொழி பெயர்க்கும்போது உண்மையான அர்த்தத்தை இழந்துவிடுகிறோம். அதைப்போன்று ஆரவார ஒலியுடைய வார்த்தைகளை அடுக்குவதிலும் பயன் இல்லை. அது விரிவுரையாளரைத் திகைக்க வைக்கும். நம்மால் புரிந்துகொள்ளமுடியாது. நீங்கள் விரிவுரையாளரை வைத்துப் பிரசங்கிக்கும்போது சரியான ஊனைக் கொடுக்க வேண்டும். இறகு நுனியை அல்ல. எனவே உண்மையான அர்த்தமுள்ளவைகளையே பிரசங்கிக்க வேண்டும். அதுவே பயனுள்ளதாய் இருக்கும்.

நான் மற்றொரு உதாரணம் தருகிறேன். நான் கிழக்கு ஆப்பிரிக்காவில் ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்யும்போது அங்கே உள்ள பொதுவான மொழியாகிய “ஸ்வாகிலி” மொழியில் விரிவுரை செய்யப்பட்டது. அந்த நாட்டின் சிறந்த மொழிபெயர்ப்பாளர்கள் இருவர் எனக்குக் கிடைத்தார்கள். அவர்கள் இரவரும் ஒருவருக்கொருவர் முற்றிலுமாக வேறுபட்டவர்கள். ஒருவர் அநேக வார்த்தைகளை இரண்டு முறைகள் சொல்வார். முதலாவது நபர் சுருக்கமாகவும், கருத்துக்களை சரியாகவும் பேசுவார். எனினும் சில வழிகளில் செய்தியை சிறப்பான முறையில் செய்வார்.

நான் வீட்டிற்கு வந்த போதும் இந்த அனுபவங்கள் விரிவுரை செய்வது துல்லியமாக மொழிபெயர்ப்பதல்ல. அது ஏதாவது ஒரு வழியில் அர்த்தத்தைக் கொண்டுவருவதாகும்.

எனவே அந்நிய பாஷைகளுக்கு அர்த்தம் சொல்லுவது என்பது அந்த வார்த்தைகளுக்குரிய பொதுவான கருத்தைச் சொல்லுவதாகும். வியாக்கியானம் சில வேளைகளில் அதன், அதே மொழிபெயர்ப்பாகக் கூட அமையலாம். தான் அறியாத பாஷையில் மற்றொருவரான பேசப்பட்ட பாஷையை பல தடவை வியாக்கியானம் பண்ணின ஒருவரைப் பார்த்திருக்கிறேன். அம்மொழியை அறிந்த ஒரு வார்த்தைக்கு வார்த்தை அவர் மொழி பெயர்த்ததை சரி பார்த்தார். இந்த உதாரணங்கள் அதிக நேரமாயும், குறைவாகவும் அல்லது பல பாஷையின் அதே நேரத்தை எடுத்துக்கொள்வதாகவும் இருக்கிறது.

மேலும், வியாக்கியானம் செய்வோருடன் எனது அனுபவம், அவர்கள் தங்கள் தனி ஆள்தத்துவத்தை வெளிப்படுத்துகிறதைக் காண்பித்தது. இது மேலும் வியாக்கியானம் செய்யும்வரத்தை உடையவர்கள் யாவருக்கும் இது பொருந்தம் என நம்புகிறேன். அவர்கள் தங்கள் வரத்தை உபயோகிக்கும்போது, அவர்களின் தனித்தன்மையைக் காணலாம். ஏன் சிலர், வேதாகம மூல மொழிபெயர்ப்பான ஜேம்ஸ் மன்னர் ஆங்கிலத்தை உபயோகிக்கிறார்கள் எனக்கேட்டேன். அந்த வேதாகமத்தோடே ஒருவன் வளர்ந்து, தனது இதயத்திலிருந்த பேசியிருப்பான். மற்றொருவர் தற்கால ஆங்கிலத்தில் வியாக்கியானம் செய்திருப்பார். பலவிதமான வியாக்கியானங்கள் உண்டு. அவர் தம் ஆள்தத்துவத்தின்படி வரங்கள் கிரியை செய்யும்.

நான் நியூசிலாந்தில் இருந்தபோது, தேவன் ஜெபத்திற்காக பாஷைகளைப் பற்றி கற்றுத் தந்தார். ஒரு தொலைக்காட்சி வரிசையில் நமது ஆராதனை வேளை காட்டப்பட்டது. அதை படமாக்கினவர் பாஷைகளைப் பேசுவதைப்பற்றி ஆர்வம் கொண்டவர். ஆனால் அவர் கிறிஸ்தவர் அல்ல. நான் பல பாஷைகளைப் பற்றி பேசிய பின்பு, ஆராதித்துப் பல பாஷையில் துதித்தோம். அவர்கள் இருபரு நிமிடங்களுக்கு, பிரதான செய்தி நேரத்தில் இதை வெளியிட்டனர். அவ்வருடத்தின் இறுதியில் அதை மீண்டும், அவ்வருட சிறந்த வெளியீடு என காட்டினர் என்று எனது நண்பர்கள் கூறினர். பட்டணத்திலுள்ள

கிறிஸ்தவர்கள் அடங்கிய குழு, தொலைக்காட்சி நிகழ்வைப் பார்த்த பின்னர் இது உண்மையாய் இருக்காது. ஏனெனில் திரு. பிரின்ஸ் அவர்களின் தொனியையும், நடையையும் கேட்க முடிந்தது என்றனர். அவர்களுக்கு ஆவியின் வரங்களை உபயோகிக்கும்போது, ஒரு மனிதனின் ஆள்தத்துவமும், அவன் பேச்சின் தொனியும் மாறுவதில்லை என்பது தெரியாது இருந்தது. அதனால்தான், மக்கள் வியாக்கியானம் செய்யும்போது, ஒவ்வொருவரும் தனது பாணியிலேயே பேசுகிறார்கள்.

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் பேச்சுக்களை ஒப்பிட்டுப் பாருங்கள். உதாரணமாக ஆமோஸ், ஓசியா மேலும் ஏசாயாவை - கிட்டத்தட்ட ஒரே காலத்தில் வாழ்ந்தவர்களின் வார்த்தைகளைப் பாருங்கள். ஒருவர் சொன்ன வார்த்தையை, மற்றவர் ொசன்னார் என்ற தப்பிதத்தை நாம் செய்யமாட்டோம். எனினும் அவகைள் யாவும் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டவை. பரிசுத்த ஆவி மனித ஆள்தத்துவத்தை நேசித்து, களிகூறுகிறார். ஒரு மனிதனை ஒரு ரப்பர் ஸ்டாம்பாக அவர் உண்டுபண்ணவில்லை. அதே போல் ஆள்தத்துவத்தை தள்ளிவைத்துவிட்டு, அவனை ஒரு இயந்திர மனிதனாகவோ அல்லது இயந்திரமாகவோ பயன்படுத்துவதில்லை. ஒரு கெட்ட ஆவியே அதைச் செய்யும் தேவனின் ஆவிக்கும், சாத்தானின் ஆவிக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. தேவனே மனிதனின் ஆள்தத்துவத்தை உருவாக்கி, பெரிதாக எண்ணி, போற்றி உபயோகிக்கிறார். ஆனால் பிசாசு இதையும் மேற்கொண்டு, காலின் கீழ் போட்டு மிதிக்கிறான். இதை வைத்து தேவனின் ஆவி வேலை செய்கிறதா அல்லது வேறு எந்தவிதமான ஆவி வேலை செய்கிறதா என்பதைக் கண்டுகொள்ளலாம். சுபாவமான மனித தன்மையை அடிமைப்படுத்தி, தள்ளிவைப்பது தேவனின் ஆவியாக இருக்க முடியாது.

தேவன் மனித ஆள்தத்துவத்தை சிருஷ்டித்தபோது, அதை மதித்தார், மேன்மைப்படுத்தி, உபயோகித்தார். ஆனால், சாத்தான் மேற்கோண்டு அதைக் காலின் கீழே போடப் பார்க்கிறான்.

வியாக்கியானம் பண்ணும் வார்த்தை உபயோகித்தல்

வியாக்கியானம்பண்ணும் வரம் எப்படி கிரியை செய்கிறது என்பதைக்

கவனிப்போம். 1 கொரிந்தியர் 12:6இல் உள்ள ஒரு பொதுக் கோட்பாடை முதலில் காண்போம். "கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு. எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே" உதாரணமாக இரண்டு மனிதர்களுக்கு ஒரே விதமான வரம் இருந்தாலும், அவர்கள் வாழ்க்கையில் அது மிக வித்தியாசமாக கிரியை செய்யும். இரண்டு தெரிந்த உதாரணங்களை எடுத்துக்கொள்வோம். சுவிசேஷகராக பில்லி கிரஹாம் அவர்களுக்கும் ஓரல் ராபர்ட்ஸ் அவர்களுக்கும் ஒரே விதமான ஊழியம் உண்டு. ஆனாலும் எளிதில் அறிந்துகொள்கிற பிரகாரமாக ஒரு திட்டமான வித்தியாசம் உண்டு. ஊழியம் ஒன்றாய் இருந்தாலும், வேறுபட்ட முறையில் கிரியைகள் செயலாற்றுகின்றன. வரங்களுக்கும் இது உண்மையாகும். குணமாக்கும் வரத்தைப் பெற்ற ஒருவர் ஒருவிதத்திலும், அதே வார்த்தை பெற்ற மற்றொருவர் வேறு வகையிலும் ஊழியம் செய்வர்.

இரண்டு மனிதர்களுக்கு ஒரே விதமான ஊழியம் இருந்தாலும் அவர்தம் வாழ்வில் அது வித்தியாசமாகக் கிரியை செய்யும்.

வியாக்கியான வரத்தைப் பெற்றுக்கொள்ளும் விதங்கள் பின்வருமாறு: இதற்கு மக்களின் ஒப்புதலைக் கேட்டிருக்கிறேன்.

ஒரு ஆரம்ப சொற்றொடர் அல்லது வாக்கியம்

ஆள்தத்துவம் மற்றும் வித்தியாசமான முறைகளைத் தொடர்ந்து, வியாக்கியான வரம் ஒருவரில் ஒரே விதமாக கிரியை செய்வதில்லை. எனது அனுபவத்தில், ஒருவருக்கு ஒர ஆரம்ப சொற்றொடர் கொடுக்கப்படலாம், பின்னர் அவர் விசுவாசத்தில் முன்னேறிச் செல்ல வேண்டும். அதுதான் எனக்கு நடக்கிறது. நான் வியாக்கியானத்தைப்பெற்றுக்கொள்ளும்போது முதல் வாக்கியம் தெளிவாக, ஆணித்தரமாக எனது மனதில் கொடுக்கப்படும். எனது முதல் வாக்கியத்தை விசுவாசத்தோடும், அதிகாரத்தோடும் பேச ஆரம்பிக்கும்போது, மற்றவை தானாய் வரும். நான் நிறுத்திவிட்டால், வேறொன்றும் வராது. 'ஆண்டவரே, எனக்கு முழுச்செய்தியையும் தாரும், அப்போது பேசுவேன்' என்று நான் சொன்னால் வேறொன்றும் வராது. இதே வாக்கியத்தை மீண்டும் பேசினால், முட்டாள்தனமாகத்தான்

இருக்கும்! விசுவாசம் என்னும் கோட்படை விலக்கிவைத்தால், முழுச்செய்தியையும் ஒரு போதும் பெற முடியாது! என்று எபிரெயர் 11:6ம் வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்! நாம் தேவனுக்காகச் செய்கிற ஒவ்வொன்றும் விசுவாசத்தில் செய்யப்படவேண்டும்.

அநேகர் பின்வாங்கி, அவர்கள் உரைக்க வேண்டிய வியாக்கியானத்தை பெற்றுக்கொள்வதில்லை. "தேவன் எனக்கு வியாக்கியனானம் தந்தார் என்று நினைக்கிறேன். அனால் என்னால் ஒரு வாக்கியம்தான் பேச முடிந்தது''. ''உனக்குக் கிடைத்த அந்த ஒர வாக்கியத்தை உபயோகிக்காவிட்டால், உனக்கு ஒன்றும் கூட கிடைக்காது' என்று அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அதைப் போன்று சிலர், 'நான் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றிருக்கிறேன் என்று நினைக்கிறேன். ஆனால் ஒரு வார்த்தைதான் பேசுகிறேன்' என சிலர் கூறுகின்றனர். 'அந்த வார்த்தையை தொடர்ந்து பேசி, நன்றியுடன் இருங்கள். வேதன் அதிகம் தருவார்' என்று அவர்களுக்குச் சொல்லுவேன். உனக்கு உள்ளதை உபயோகித்த மேலும் பெற்றுக்கொள்வது பொதுவான வேதாகம கோட்பாடு. அது வியாக்கியானம் செய்வதற்கும் பொருந்துகிறது.

வார்த்தைகள் அல்லது வேத வாக்கியங்களுடன் அழுத்தமான ஓர் எண்ணம்

அறியப்படாத ஒரு மொழியில் பேச ஆரம்பித்தவுடன், ஒருவர் தன் வயிற்றில் வண்ணத்துப் பூச்சி இருப்பதுபோல் உற்சாகமடைந்து தேவன் ஒன்றைச் செய்ய விரும்புகிறார் என்று உணர்ந்த, ஒரு வேத வாக்கியம் மனதிற்கு வரும். இது உனக்கு ஏற்பட்டால், நீ அந்த வேத வாக்கியத்தை அல்லது வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். அப்போதுதான் முழு வியாக்கியானத்தோடு முன்னேறுவீர்கள். அதற்குப்பின், நீங்கள் திட்டமிடாததும், நினைத்துப் பார்க்காததும் நடக்கும். நீங்கள் பேசுவதை நீங்களே கேட்கும்போது, ஆச்சரியப்படுவீர்கள்.

ஒரு பொதுவான எண்ணம் அல்லது கருத்து

வேறொரு மனிதனுக்கு ஒரு பொதுவான எண்ணம் கொடுக்கப்படலாம்.

அவர் தனது சொந்த வார்த்தைகளில் அவ்வெண்ணத்தை வெளிப்படுத்தலாம். பரிசுத்த ஆவியானவர் பேச வேண்டிய அதே வார்த்தைகளைக் கொடுக்காமல், சில எண்ணங்களை அருளி அதை அவர் தம் சொந்த வார்த்தைகளில் விவரிக்க விட்டுவிடுகிறார்.

வார்த்தைகளைக்கேட்டல், பார்த்தல், ஒரு காட்சி படத்தைப் பார்த்தல்

வியாக்கியானத்தை, மக்கள் வார்த்தைகளின் மூலம் கேட்கலாம். அல்லது ஒரு சுருளில் எழுதியிருக்கப் பார்க்கலாம். பிறர் ஒரு தரிசனத்தை அல்லது மனதளவிலான படத்தைப் பார்த்து அறிந்துகொள்ளலாம். ஒரு லுத்தரன் போதகர், 'எங்கள் சபையில் பரிசுத்த ஆவியின் ஊற்றப்படுதலைப் பெற்றோம்' என்று ஒரு விசை கூறினார். சபையின் கிராதியில் ஐம்பது அல்லது அறுபது பேர், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றனர். எங்களிடத்திலே வியாக்கியானமும் உண்டு. ஆனால் இவ்விதமாய் வேறெங்கும் நடந்ததாக நான் கேள்விப்படவில்லை. ஒருவர் ஒரு பாஷையில் பேசுவார். மற்றொருவர் மனரீதியில் ஒரு படமாகவோ அல்லது தரிசனமாகவோ பெறுவார். தாங்கள் படத்தில் பார்த்ததை விவரிப்பதாகப் பேசிக்கொள்வார்கள். இது பல பாஷையை வியாக்கியானம் செய்வது போலிருக்கிறது. ஆச்சரியமான காரியம் என்னவெனில் எனது சபையில் உள்ள அனைவரும் இவ்விதமாய்ப் பெற்றுக்கொள்கிறார்கள். இது என்ன?

'சிலவற்றை என்னால் விவரிக்க முடியாது' என்று நான் பதில் சொன்னேன். அவர்கள் நடப்பதைப் பார்க்கிறார்கள். விசுவாசமாயிருக்கிறார்கள். அவைகள் நடக்கின்றன. 'உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது' (மத்தேயு 9:29) நீங்கள் அதை ஒரு வழியில் பெற்றுக்கொள்வீர்கள் என்று விசுவாசித்தால் பொதுவாக அதே வழியில் நீங்கள் அதைப் பெற்றுக்கொள்வீர்கள். இதனால்தான் மக்களுக்கு ஆவியின் வரங்களைக் குறித்துப் போதிப்பத மிகவும் அவசியமாகும். அநேகர் தாங்கள் கண்கூடாகப் பார்க்குமட்டும் விஷயங்களை நம்பமாட்டார்கள். அது நடைபெறுவதைப் பார்த்த மா்திரத்தில் அது நடைபெறும் என்று அவர்கள் நம்புவார்கள். ஒரு குறிப்பிட்ட வரையறையில் நாம் சிந்திக்கம் வழியில் தீர்மானித்தபடி அனுபவத்தையும் அடைவோம்.

அந்நிய பாஷைகளுக்கு அர்த்தஞ்சொல்லுவதற்காக ஜெபித்தல்

இப்பொழுது, ஒரு அந்நிய பாஷைக்கான அர்த்தஞ்சொல்லுவதற்காக நாம் ஜெபிக்கலாமா? அல்லது கூடாதா? என்ற கேள்விக்கு வந்திருக்கிறோம். பவுல் எழுதுகிறார்.

> நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால் சபைக்கு பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள். அந்தப்படி அந்நிய பாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்.
>
> *(1 கொரிந்தியர் 14:12-13)*

எல்லா வரங்களும் செயல்படுத்தப்படும்போது, அதன் நோக்கமாவது கிறிஸ்துவின் அவயவமாகிய விசுவாசிகளுக்கு பக்திவிருத்தியை உண்டுபண்ணும் ஆவலுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

எல்லா வரங்களும் செயல்படுத்தப்படும்போது அதன் நோக்கமாவது கிறிஸ்துவின் அவயவமாகிய விசுவாசிகளுக்கு பக்திவிருத்தியை உண்டுபண்ணும் ஆவலுடன்கூடியதாக இருக்க வேண்டும். பவுல் குறிப்பிடுவது பொது சபையில் அந்நிய பாஷை பேசும்போது அதனைத் தொடர்ந்த அர்த்தம் சொல்லுதலுமிருந்தால் அதிக பக்தி விருத்தியை உண்டாக்கும். நீங்கள் அந்நிய பாஷை பேசும்போது நீங்கள் அதற்கு அர்த்தஞ்சொல்ல வேண்டுமென்று ஜெபிக்க வேண்டும். நான் அனுபவத்தின் மூலமாகக் கற்றுக்கொண்டதாவது நீங்கள் மக்களுக்கு, இதுதான் தேவனுடைய சித்தம் என்று சொல்லி, அதன்படி நடக்க வேண்டும் என்று சொல்லும்போது, அவர்கள் தொடர்ந்து அர்த்தம் சொல்லுவதையும் பெற்றுக்கொள்வார்கள்.

பிதாவினிடத்தில் நன்மையான சிலவற்றை நாம் கேட்கும்போது இயேசு சொன்னதை மனதில் கொள்ள வேண்டும்.

> உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால் அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது,

பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா என்றார்.

(லூக்கா 11:11-13)

நீ தேவனின் பிள்ளையாக இருந்து வழி நடத்தப்பட்டு, தூண்டிவிடப்பட்டு பரிசுத்த ஆவியின் ஒரு குறிப்பிட்ட வரத்தைக் கேட்க விரும்பினால் நீ அதைக் கேட்க வேண்டும். நீ கேட்டதை நீ பெற்றுக்கொள்வாய். இந்த உறுதிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நீ அந்நிய பாஷையில் பேசினால் நீ அதற்கு விளக்கம் சொல்லவும் விருப்பமுடையவனாயிருக்க வேண்டும். நீ அர்த்த்ஞ்சொல்லுதலுக்காக ஜெபித்திருக்கிறாய். நீ அடுத்ததாக என்ன செய்ய வேண்டும்? நீ அர்த்தஞ் சொல்ல வேண்டும். நீ சரியான பொருளைச் சொல்லுகிறாய் என்பது உனக்கு எப்படித் தெரியும்? நீ சரியான பொருளைக் கேட்டால் நீ தவறான பொருளைப் பெற்றுக் கொள்ள மாட்டாய் என்று திரும்பவும் தேவன் உறுதியளிக்கிறார். இதுதான் விசுவாசம். இது தேவனுடைய சித்தத்தின்படி அவருடைய ஜனங்களுக்கு அந்நிய பாஷையைப் பேசுவதும் விளக்குவதுமாகிய இரண்டையும் வெளிப்படுத்துகிறார்.

விசுவாசிகளின் சபையில் கட்டளையும் பல வகைகளும்

முடிவாக நாம் பவுல் அந்நிய பாஷையில் பேசி அதற்கு விளக்கம் சொல்லும் வரத்தைப்பற்றி வழிகாட்டுவதற்காக சொல்லும் எண்ணத்தைப்பற்றி மீள்பார்வையாகக் காண்போமாக!

அர்த்தஞ்சொல்லுகிறவன் இல்லாவிட்டால் சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன். அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு எதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக்கடவன்.

(1 கொரிந்தியர் 14:27, 28)

தீர்க்கதரிசனம் இரண்டுபேராவது மூன்றுபேராவது மட்டுமே பேச வேண்டும் என்பது போல விளக்கஞ் சொல்லுதலோடு கூடிய பல பாஷையும் எந்தக்கூட்டத்திலும் அளவுக்கு அதிகமாக இருக்கக்கூடாது, எந்த ஒரு தனிப்பட்ட கூட்டமும் கூட்டப்பட்டு எதாவது குறிப்பிட்ட

வரத்திற்காக மட்டும் அதை உபயோகிக்கக்கூடாது. தேவன் தனது பிள்ளைகளுக்கு மேஜையின் மேல் ஒரே தடவை உணவை மட்டும் கொடுக்க விரும்பமாட்டார். அவர் பலவகையான ஊட்டச் சத்துள்ள ஆகாரத்தை அவருடைய சரீரமாகிய உறுப்பினர்களுக்குப் பெலம் கொடுக்கும்படி வழங்குகிறார்.

ıரங்கள்

11 தீர்க்கதரிசனம்

இந்த அத்தியாயத்தில் நாம் தீர்க்கதரிசனவரம் அல்லது தீர்க்கதரிசனம் சொல்லும் வரம் ஆகிய வாய்மொழி வரத்தைப் பற்றிக்காணலாம். முதலாவது 1 கொரிந்தியர் 12:10 சொல்லுகிறது, "*வேறு ஒருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும்*" இந்த வரத்தைப்பற்றி, விசுவாசிகள் அறிந்த மொழியில் பேசும் திறமை என்று நாம் நிர்ணயிக்கலாம். இந்த வார்த்தைகள் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டவையாகும். தீர்க்கதரிசனம் பிரசங்கம் செய்வதற்காக அருளப்பட்டதல்ல. அது மனித அறிவினாலோ, கல்வி கற்பதினாலே அல்லது வேதாகமக் கல்லூரி பயிற்சியினாலோ வருவதில்லை. மற்ற எல்லா வரங்களைப் போல இதுவும் பரிசுத்த ஆவியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயலினால் மட்டும் வரும்.

தீர்க்கதரிசனத்தை நாடுங்கள் தேடுங்கள்

அப்போஸ்தலனாகிய பவுல் (1 கொரிந்தியர் 12:31இல்) "*முக்கியமான வரங்களை நாடுங்கள்" எனக்கூறிவிட்ட, "விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்*" (1 கொரிந்தியர் 14:1) எனக்கூறியதிலிருந் சிறப்பான வரம் எது என்பது தெளிவாகிறது. ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் இந்த சிறப்பான தீர்க்கதரிசன வரம் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறது. இந்தச் சிறப்பான வரம் சூழ்நிலையையும் தேவையையும் கருதி செயற்படுகிறது. எனினும் மற்ற வரங்கள் எல்லாவற்றிலும் சிறப்பான ஒரு வரத்தைத் தெரிந்தெடுக்க வேண்டுமானால் அது தீர்க்கதரிசன வசனமாயிருக்கும். சிறப்பாக தீர்க்கதரிசன வரத்தை நாடும்படி வேதம் அறிவுறுத்துகிறது. (1கொரிந்தியர் 14:39). ஏதாவது ஒரு விசுவாசி இந்தத் தீர்க்கதரிசன வசனத்தின்மேல் வாஞ்சைகொள்ளவில்லையானால் வசனம் அறிவுறுத்தவதை உதாசினப்படுத்தினதாகும்.

வேதத்தின் அடிப்படையில்

பெந்தேகோஸ்தே நாளிலே ஜனக்கூட்டத்தினிடத்தில் சொன்னார்,

> தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடி இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தீர்க்கதரிசனங்களை அடைவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்.
>
> *(அப்போஸ்தலர் 2:16, 17)*

இன்று இளைஞர்கள் உண்மையை விரும்புகிறார்கள். தேவன் அவர்களுக்காக சேமித்து வைத்திருப்பது தீர்க்கதரிசனஞ்சொல்லுதல், தரிசனங்களைக் காணுதல் மற்றும் வெளிப்பாடுகளைப் பெறுதல் என்பதாகும் என்கிறார்.

தேவன் தான் சொன்னதைச் சரியாக செய்கிறார். அதைக் கடைசி காலங்களில் செய்வார். அவர் எல்லா ஜனங்களுக்கும் பரிசுத்த ஆவியை ஊற்றுகிறார். சபையில் எல்லா பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் சேராதவர்களும் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமா? யூதர்கள் வந்து ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமா? மொகமதியர்கள் வந்து ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமா? தேவன் சொன்னார் மனித வர்க்கத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தவிர்ப்பு இல்லாமல் கடைசி காலங்களில் பரிசுத்த ஆவியின் பொழிவை அனுபவிக்கப் போகிறார்கள்.

பரிசுத்த ஆவி ஊற்றப்படும்பொழுது யோவேல் சொன்னது நிறைவேறும்.

> கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தீர்க்கதரிசனங்களை அடைவார்கள் உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்.
>
> என்னுடைய ஊழியக்காரர் மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள். (அப்போஸ்தலர் 2:17, 18)

இந்தப் பந்தியில் குறிப்பாக தீர்க்கதரிசனம் அழுத்தமாகக் கூறப்படுகிறது. எல்லா இடத்திலும் தேவனுடைய ஜனங்கள், அவர்களுக்குள், வைக்கப்பட்டுள்ள இந்த அழகான அல்லது அருமையான ஆவிக்குரிய வெளிப்பாடாகிய தீர்க்கதரிசனஞ் சொல்லுதலைப் பெறப்போகிறார்கள். இன்று பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதை நாம் பார்க்கிறோம்.

17ஆம் வசனத்தில் நான்கு வகையான குழுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் ஒன்று முதியோர். அடுத்த மூன்றும் இளைஞர்கள், குமாரர்கள், குமாரத்திகள் மற்றும் வாலிபர்கள். அமெரிக்காவிலும் மற்றும் உலகம் முழுவதும் தேவனின் வல்லமை வாலிபர்களுக்கு ஊற்றப்படுவதை நாம் காணுவோம். அவர்கள் ஒரு பகுதியான சுவிசேஷத்தை மட்டும் பெற்றுக் கொள்வதில்லை. அவர்கள் இறையியல் கருத்துக்களை மட்டும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. இன்று இளைஞர்கள் உண்மையை விரும்புகிறார்கள். தேவன் அவர்களுக்காக சேமித்து வைத்திருப்பது தீர்க்கதரிசனஞ் சொல்லுதல், தரிசனங்களைக் காணுதல் சொப்பனங்களைக் காணுதல் மற்றும் வெளிப்பாடுகளைப் பெறுதல் எனவாகும் என்கிறார்.

பெண்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் இதில் அடங்கியுள்ளது என்பதை கவனியுங்கள்.

> உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். (அப்போஸ்தலர் 2:17) மேலும்
>
> என்னுடைய ஊழியக்காரர்மேலும் என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள் (வசனம் 18)

அப்போஸ்தலர் முதலாம் அதிகாரத்திலிருந்து மேலறையில் சீஷர்களோடு இயேசுவின் தாயாகிய மரியாளும் மற்ற பெண்களும் காத்திருந்தார்கள் என்று அறிகிறோம். அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள். அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் எழுதப்பட்ட அனைத்தும் அவர்களுக்கும் பொருந்தும்.

தீர்க்கதரிசனம் சொல்லும் ஊழியம் ஆண்களுக்கு எந்த அளவு உரியதோ அதே அளவு பெண்களுக்கும் உரியதாகும். அப்போஸ்தலரில் நாம் வாசிப்பது

> மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியா பட்டணத்துக்கு வந்து ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து அவனிடத்தில் தங்கினோம்.
>
> தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள். (வசனம் 8, 9)

அவர்கள் அனைவரும் பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள். அநேகர் பதினைந்து வயதில் அல்லது பதினாலு வயதில் திருமணம் செய்து கொள்வார்கள். பிலிப்புவின் சில குமாரத்திகள் ஒரு வேளை இளம் வாலிபரின் வயதைவிட குறைவான வயதையுடையவர்களாக இருந்திருக்கலாம். சிறு பிள்ளைகள் தீர்க்கதரிசனஞ்சொன்னார்கள் என்பதற்கு இது ஒரு திட்டவட்டமான அடையாளமாகும். இது நடைபெறுவதை நான் பார்த்திருக்கிறேன்.

அநேக நேரங்களில் நானும் என் மனைவி லீதியாளும் சிறுபிள்ளைகள் தீர்க்கதரிசனத்தின் அழகான ஊழியத்தைப் பெற்றதையும் வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டதையும் கண்டுள்ளோம்.

1 கொரிந்தியர் 11:5இல் பவுல் பெண்களும் தீர்க்கதரிசன ஊழியத்தைச் செய்யலாம் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜெபம்பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள். அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்கும்.

எனவே பவுல், ஒரு பெண் தீர்க்கதரிசனம் சொல்லும்போது தலையை முக்காடிட்டுக்கொள்வது அவசியம் என்கிறார். ஆகவே அவர் பெண்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவதை எதிர்பார்த்தார்.

தீர்க்கதரிசனத்தின் இயல்பு

1 கொரிந்தியர் 14:3-4இல் பவுல் தீர்க்கதரிசன வரத்தின் அடிப்படை நோக்கங்களையும் செயல்பாடுகளையும் குறிப்பிடுகிறார்.

> தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ மனுஷரக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான். அந்நிய பாஷையில்

பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான். தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.

எனவே தீர்க்கதரிசனஞ்சொல்லதற்கும் அந்நியபாஷை பேசுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசங்களை மூன்று வகைகளில் நாம் தொகுத்துக் காணுவோம்.

தீர்க்கதரிசனம்

1. மக்களிடத்தில் பேசுவது
2. பேசுபவர்களும் கேட்பவர்களும் புரிந்துகொள்ளும் வார்த்தைகளைப் பேசுவது
3. சபைக்கு பக்திவிருத்தி உண்டாகிறது.

அந்நிய பாஷை

1. தேவனிடத்தில் பேசுவது
2. இரகசியங்ளைப் பேசுவது
3. தனிப்பட்ட விசுவாசிகளுக்குப் பக்திவிருத்தி உண்டாகிறது.

இதனைப் புரிந்தகொள்ளத் தவறும்பொழுது இந்த நோக்கங்கள் அநேக மக்களை தீர்க்கதரிசனஞ்சொல்லுதலை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு இந்த வரத்தினை துர்ப்பிரயோகம் செய்ய வழிநடத்துகிறது. புதிய ஏற்பாட்டுச் சபையில் பொதுவான உண்மையான தீர்க்கதரிசனஞ்சொல்லுதலின் தன்மையையும் பின்வருவன குறிப்பிடுகிறது.

மக்களுக்காகக் கொடுக்கப்பட்டது

தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன் மக்களுக்காகச் சொல்கிறான் (1 கொரிந்தியர் 14:3) என்று பவுல் கூறுகிறார். அவர் முன்பு சொன்னது போலவே அந்நிய பாஷை பேசுவதற்கும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவதற்கும் உள்ள வித்தியாசத்தை வேறுபடுத்திக் காட்டுகிறார்.

“அந்நிய பாஷையில் பேசுகிறவன் மனுஷனிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான்” (வசனம் 2) தீர்க்கதரிசனத்தின் ஆரம்ப நோக்கமாவது தேவனுடைய வார்த்தைகளைப் பெற்று மனிதனிடத்தில் பேசுவதாகும்.

விசுவாசிகளை வழிநடத்துவதற்காக

பொதுவாக எந்த ஜனங்களிடத்தில் பேசப்படுகிறது? சபைக்கா? அல்லது விசுவாசிகளின் கூட்டத்திற்கா? பின்பு 1 கொரிந்தியர் 14இல் பவுல் ‘‘அப்படியிருக்க அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது. தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் விசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது” (வசனம் 22)

இந்த வசனத்தின் முதல் பகுதியில் பவுல் அந்நிய பாஷையின் குறிப்பிட்ட செயல்பாடுகள், அவிசுவாசிகளுக்கு இயற்கைக்கு மேலான ஒரு அடையாளமாயிருக்கிறதென்றும் எங்கே ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியினால் நிறைந்து அந்நிய பாஷை பேசும்பொழுத அவன் அதைப் புரிந்துகொள்வதில்லை, ஆனால் அங்கே இருக்கிற ஒரு அவிசுவாசியினால் அது புரிந்துகொள்ளப்படுகிறது. இவ்வாறாக அவிசுவாசிக்கு தேவன் இயற்கைக்கு மேலான உணர்தலைக் கொண்டு வருகிறார். மேலும் இது அந்நிய பாஷைகளை உபயோகிப்பதில் வழக்கமான உபயோகமாக இல்லை. இது சமயத்திற்கேற்ற விலக்களிக்கப்பட்ட உபயோகம் ஆகும் என்கிறார். இந்த வசனத்தின் இரண்டாவது பகுதியில், பவுல், தீர்க்கதரிசனமானது அவிசுவாசிகளிடத்தில் பேசுவதற்காக தேவனால் உபயோகிக்கப்படவில்லை. விசுவாசிகளுக்கு ஊழியம் செய்ய உபயோகிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமான அடிப்படையான உண்மையாகும். தேவன் அவிசுவாசிகளிடத்தில் பேசும் விதமாக விசுவாசிகளிடத்தில் பேசுவதில்லை.

இதன் அடிப்படையில் புதிய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனஞ்சொல்லுதலுக்கும் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனஞ்சொல்லுதற்கும் வேறுபாடுகள் உண்டு. தேவன் அங்கே

தன்னுடைய தீர்க்கதரிசிகளை, அவிசுவாசிகளாகிய ஜனங்களுக்குப் பேச உபயோகித்தார். உதாரணமாக, எலியா உண்மையான விசுவாசனம் இல்லாத மக்களுக்குத்தான் செய்திகளைச் சொன்னார். எரேமியா இஸ்ரவேலைச் சுற்றியுள்ள எல்லா புறஜாதிகளின் தேசத்திற்குச் சென்று செய்திகளைக் கூறினார். ஆகவே நாம், கிறிஸ்துவின் அவயவங்களாகிய சபையிலே பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களுக்கும் புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் தேவனுடைய இரட்சிப்பைப் பெற்ற மக்களுக்கு உரைக்கப்பட்டது. அதனுடைய போக்கானது எப்பொழுதும் தேவ ஜனங்களுக்குப் பொருத்தமானதாகும்.

பவுல் 1 கொரிந்தியர் 14:24-25ஆம் வசனத்தில் சொல்வதை நாம் கவனிக்க வேண்டும். ‘‘எல்லாரும் தீர்க்கதரிசனஞ்சொல்லுகையில், அவிசுவாசியொருவன் அல்லது கல்லாதவனொரவன் உள்ளே பிரவேசித்தால் அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும் எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான். அவனுடைய இருதயத்தின அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும், அவன் முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்துகொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்” இந்த வசனம் விளக்குவது, அங்கே தீர்க்கதரிசனம் சொல்லுவதன் மூலம் ஒரு குழுவான விசுவாசிகள் ஒரவருக்கொருவர் ஊழியம் செய்கிறார்கள். ஒரு அவிசுவாசி உள்ளே பிரவேசித்தால் அவன் எல்லாராலும் உணர்த்தப்பட்டு வெளிப்பாடு வரும்பொழுது அவன் தொடப்பட்டு, நான் என்னைத் தெரிந்துகொண்டதைவிட தேவன் என்னைப் பற்றி அதிகம் அறிந்துள்ளார் என்பதைப் புரிந்துகொள்வான். இதனால் அவன் உணர்த்தப்பட்டு தேவன் அங்கே இருக்கிறார் என்று அறிக்கையிடுவான். இருப்பினும் இது ஒரு விதிவிலக்கானதாகும். பொதுவாக தீர்க்கதரிசனம் விசுவாசிகளுக்கு ஊழியம் செய்யக் கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக தீர்க்கதரிசனம் விசுவாசிகளுக்கு ஊழியம் செய்யக் கொடுக்கப்பட்டுள்ளது.

பக்திவிருத்திக்கும், உற்சாகப்படுத்துவதற்கும் ஆறுதலுக்கும்

சபைக்குத் தீர்க்கதரிசனம் சொல்லும் ஒரு மனிதன் என்ன செய்கிறான்? "தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான். அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான். தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்" (1 கொரிந்தியர் 14:3-4) தீர்க்கதரிசனம் பக்திவிருத்திக்கும், உற்சாகப்படுத்துவதற்கும் ஆறுதலுக்கும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் தேவன் விசுவாசிகளை அதைரியப்படுத்தவும் தள்ளவும் மாட்டார். நான் மேலே குறிப்பிட்டதுபோல அவர் விசுவாசிகளுக்கு எதிராக நியாயத்தீர்ப்பின் எச்சரிக்கையை ஊற்றமாட்டார். ஆனால் அவிசுவாசிகளுக்கு எதிராகத்தான்!

நாம் இன்னும் சிறிது ஆழமாக, தீர்க்கதரிசனஞ்சொல்லுதலைப் பற்றிய இந்த மூன்று அடிப்படையானவற்றைக் காணலாம்.

முதலாவது நோக்கம் பக்திவிருத்தி உண்டாக்குவது. இந்த வார்த்தை அநேகருக்கு சிறிது பழமை வாய்ந்ததாகக் காணப்படும், பிரசங்கியின் சத்தம் போலவும் காணப்படும்.

எனினும் அநேகர் பக்திவிருத்தி என்ற வார்த்தைக்க அறிமுகமானவர்கள். அது ஒரு கட்டிடம் போன்றது. பக்திவிருத்தி என்பதற்குக் கட்டுவது அல்லது பலப்படுத்துவது என்று பொருள் ஆகும். கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாகிய அங்கத்தினர்களை அவர்கள் குறிப்பிடப்பட்ட எந்த ஊழியத்தில் இருந்தாலும் அவர்களை அதிக வலிமையானவர்களாக ஆக்குகிறது. நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லும் வரத்தைப் பெற்றால் அது பின்பு உங்களைச் சிறந்தவர்களாக மாற்ற வேண்டும்.

நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லும் வரத்தைப் பெற்றால் அது பின்பு உங்களைச் சிறந்தவர்களாக மாற்ற வேண்டும். தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் சேவை செய்ய வேண்டும்.

தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் சேவை செய்ய வேண்டும்.

இரண்டாவது நோக்கமாவது உற்சாகப்படுத்துவது. அதாவத ஊக்கப்படுத்துவது, ஆதரவிவளிப்பது, கண்டிப்பது மற்றும் தூண்டிவிடுவது ஆகும். கண்டிப்பதில் எச்சரிப்பதும் கடிந்துகொள்ளுதலும்கூட அடங்கும். எனினும் உற்சாகப்படுத்துவதில் ஆக்கினைத்தீர்ப்பு அடங்காது.

‘‘ஆனபடியால் கிறிஸ்து இயேசுவுட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை” ரோமர் 8:1

மூன்றாவது நோக்கமாவது ஆறுதல்படுத்துவது சமயத்திற்கேற்ற வார்த்தைகளால் பேசுவது அதாவது மகிழ்ச்சியூட்டுவதாகும்.

உண்மையான தீர்க்கதரிசனம் ஒரு போதும் ஆக்கினைத் தீர்ப்பை உண்டாக்காது.

உண்மையான தீர்க்கதரிசனம் மற்றும் உற்சாகமூட்டுதல் ஒருபோதும் ஆக்கினைத் தீர்ப்பை உண்டாக்காது என்று நான் மேலே குறிப்பிட்டுள்ளேன். நான் இந்த கருத்தைத் திரும்பவும் ஆணித்தரமாகக் கூற விரும்புகிறேன். ஏனெனில் பல வருடங்களாக நான் அநேக செயல்களைக் கேட்டிருக்கிறேன். ஜனங்கள் தீர்க்கதரிசனம் சொல்ல விரும்புகிறார்கள். இருப்பினும் இதன் மொத்த விளைவுகளைச் சுருக்கிச் சொன்னால் குழப்பமும் ஆக்கினைத் தீர்ப்பும் ஆகும். இது பரிசுத்த ஆவியானவரின் உண்மையான வெளிப்பாடாக இருக்காது. தேவன் எப்பொழுதம் குழப்பத்திற்குக் காரணமாக இருக்கமாட்டார். தேவ மனிதர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் ஆக்கினைத் தீர்ப்பைக் கொடுக்கமாட்டார். தீர்க்கதரிசனம் என்று அழைக்கப்படுவதும் தீர்க்கதரிசனம் சொல்லுவதும் சில விசுவாசகிளின் மத்தியில் உண்மையான விஷயமல்ல. இது ஆரம்ப நோக்கங்களான பக்திவிருத்தி உண்டாக்குதல், உற்சாகப்படுத்துதல், ஆறுதல்படுத்துதல் ஆகியவற்றைக் கொண்டுவராது.

துரதிர்ஷ்டவசமாக சிலர், எவ்வளவு அதிகமாக ஜனங்களை வீழ்த்தி அவர்களை பிரயோஜனமற்றவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும்,

ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டவர்களாகவும் உணரச்செய்த தங்களையும் அவ்வாறே கருதி அவர்களை அவ்வளவு பக்தியுள்ளவர்களாகக் காண்பிக்கிறார்கள். இதன் உண்மையானது முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகிறது. சில வருடங்களுக்கு முன்பு நான் நினைப்பதாவது அதாவது சில ஆண்டுகளுக்கு முன்னர், மக்கள் எவ்வளவு மோசமானவர்கள் என்று ஒவ்வொருவரையும் உணரச்செய்தால் நான் பெரியதொரு பிரசங்கத்தைச் செய்துவிட்டதாகக் கருதுவேன். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் என்னை ஆட்கொண்டு நீ பிரசங்கியார் பணியில் ஒரு தோல்விதான் கண்டாய் என்று எனக்குக் காண்பித்தார். பரிசுத்த ஆவியானவர் மக்களை மோசமானவர்களாக விட்டுவிடுவதில்லை. அது பிரசங்கமோ அல்லது ஊழியத்தின் நோக்கமோ இல்லை.

உண்மையான தீர்க்கதரிசனம் பிசாசின் நோக்கத்தை நிறைவேற்றாது. தீர்க்கதரிசனம் உரைத்தலின் மூலம் பிறரை ஆக்கினைக்குட்படுத்தி உற்சாகமிழக்கச் செய்தால், அது பிசாசின் வேலையைத்தான் செய்கிறது. தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக சாத்தான் அதிசயமாக உபயோகிக்கும் இரண்டு ஆயுதங்களாவன, ஆக்கினைக்குட்படுத்துவதும் உற்சாகமிழக்கச் செய்வதுமேயாகும். பில்லி கிரஹாம், தேவன் உற்சாகமற்றவனை ஒருபோதும் உபயோகிக்கமாட்டார்" என்று பிறர் கூறியதை மேற்கோள் காட்டினார்.

நான் அதை நம்புகிறேன். ஏனெனில் உற்சாகமற்றவன் பரிசுத்த ஆவியின் வல்லமையில் இருக்கமுடியாது. பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை உற்சாகமிழக்கச் செய்பவர் அல்ல. இதை அறிந்துகொள்வது மிக முக்கியமானதாகும். ஒரு மாற்றும் உணர்வு, பிரோணை அல்லது செய்தி உங்களை உங்கள் வாழ்வில் உற்சாகமிழக்கச் செய்யுமானால், அதற்கு காரணம் பரிசுத்த ஆவியே என்று ஒருபோதும் சொல்லாதிருங்கள்.

ஒரு முக்கிய பிரச்சனையாவது அநேக கிறிஸ்தவர்கள் தாங்கள் ஆக்கினைத்தீர்ப்பிற்கு உட்பட்டவர்கள் என்று உணரும்போது தாங்கள் தாழ்மையுள்ளவர்கள் என்று உணருகிறார்கள். மேலும் சுற்றித்திரிந்து அவர்கள் மிகவும் மோசமானவர்கள் என்று சொல்லுகிறார்கள். இருப்பினும் நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள் ஒரு புது

சிருஷ்டியாயிருக்கிறீர்கள். தேவனின் கைவேலையாயுமிருக்கிறீர்கள். ஒவ்வொரு முறையும் நீங்கள் உங்களை விமர்சிக்கும்பொழுது நீங்கள் தேவனின் வேலையை விமர்சிக்கிறீர்கள். நீங்கள் தேவனை மகிமைப்படுத்தவில்லை. நீங்கள் தேவனை மகிமைப்படுத்தவில்லை. நீங்கள் பிசாசையே மகிமைப்படுத்துகிறீர்கள்.

மக்களைக் குற்றவுணர்வுடையவர்களாக நினைக்கச் செய்வது பிசாசின் செயலேயாகும். நான் 2 கொரிந்தியர் 5:19ஆம் வசனத்தில் “அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்” என்று கூறப்பட்டுள்ளது. தேவன் நமக்கு ஒப்புரவாகுதலின் உபதேசத்தைக் கொடுத்துள்ளார், ஆக்கினைத்தீர்ப்பையல்ல. சுற்றித்திரிந்த ஒவ்வொருவரையும் எப்படிப்பட்ட பாவிகள் என்று உணரச்செய்வது ஆவிக்குரிய செயலல்ல. இது அவர்களுக்கு எந்த நல்லதையும் செய்யாது. நாம் மக்களிடத்தில் சென்று தேவன் அவர்களுக்கு உதவி செய்ய விரும்புகிறார் என்று அவர்களைப் புரிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டும். அவர் உங்களை நேசிக்கிறார். அவர் உங்கள் பட்சத்தில் இருக்கிறார் என்று சொல்ல வேண்டும். தேவன் ஒருவருக்கும் எதிர்த்து நிற்பவர் அல்ல. அவர் சீனர்கள், ரஷ்யர்கள், அரேபியர்கள். ஐரோப்பியர்கள் அல்லது அமெரிக்கரிக்கர்கள் ஆகிய யாருக்கும் எதிராளி அல்ல. அவர் மனிதவர்க்கத்திற்கே உரியவர். இதுதான் சுவிசேஷத்தின் செய்தி. இதுதான் நற்செய்தி.

கிறிஸ்துவுக்குள் ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என்ற கொள்கையை நாம் புரிந்துகொள்வத முக்கியமானதாகும். (ரோமர் 8:1ஐப் பார்க்கவும்) இது தீர்க்கதரிசனத்திற்கும் பொருந்தும். விசுவாசிகள் ஆக்கினைத்தீர்ப்பு இல்லாத இந்த இடத்தில் வாழும்போது சபையே பெரிய பட்டாளம் பிசாசினால் வெற்றிகொள்ளமுடியாது. நான் முன்பு சொன்னது போல, விசுவாசிகளுக்கு விரோதமாக பிசாசு உபயோகிக்கும் மிகப்பெரிய எளிய ஆயுதமாவது ஆக்கினைத்தீர்ப்பின் உணர்வு, தகுதியற்ற நிலை, தோல்விகள், தைரியமின்மை ஆகியனவாகும். இருப்பினும் விசுவாசிகள் இந்தக் காரியத்தில் வெற்றிபெற தேவன் வைத்துள்ள மிகப்பெரிய ஆயுதமாவது தீர்க்கதரிசன வரமாகும். இது நம்மை உற்சாகப்படுத்தி கட்டப்படச் செய்கிறது.

நம்முடைய தேற்றரவாளரிடமிருந்து தீர்க்கதரிசனம் வருகிறது

இயேசு பரிசுத்த ஆவியை தேற்றரவாளர் என்று அழைக்கிறார். (யோவான் 14:16,26) பரிசுத்த ஆவியின் உறவு தேவனால் மீட்கப்பட்டவர்களாகிய நமக்கு நம்முடைய தேற்றரவாளராக இருக்கிறது என்பதை மனதிற்கொள்ள வேண்டும். கிரேக்க வார்த்தையான "பராகிளீட்டாஸ்" என்பதற்கு தேற்றரவாளர், உதவியாளர், ஆலோசகர் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆலோசகர் என்ற வார்த்தை உற்சாகப்படுத்துபவர் என்றதோடு நெருக்கமான தொடர்புடையது. (1கொரிந்தியர்14) ''பராக்ளீட்டாஸ்'' என்பதற்கு ''உன்னோடுகூட இருப்பதற்கு அழைக்கப்பட்டவர்" என்று அர்த்தம். பரிசுத்த ஆவியின் செயல்பாட உற்சாகப்படுத்துவதாகும்.

ஒவ்வொரு முறையும் நீங்கள் உங்களை விமர்சிக்கும்பொழுது நீங்கள் தேவனின் வேலையை விமர்சிக்கிறீர்கள். நீங்கள் தேவனை மகிமைப்படுத்தவில்லை.

தூண்டுதல், ஊக்கப்படுத்ததல், மகிழ்ச்சியூட்டுதல், உதவிசெய்தல் மற்றும் ஆலோசனை கூறுதலாகும். இது மிகவும் துல்லியமாக ஆங்கிலத்தில் "அட்வகேட்" என்ற ஆங்கிலச் சொல் லத்தீனிலிருந்து பெறப்பட்டது என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு அழைக்கப்பட்ட ஒருவன் என்பது பொருளாகும்.

ஒரு வழக்கறிஞரையோ அல்லது ஒரு சட்ட வல்லுநரையோ உங்களைக் குற்றப்படுத்துவதற்காக நீங்கள் அழைக்கமாட்டீர்கள். அதற்காக அவருக்கு நீங்கள் பணம் கொடுத்தால், நீங்கள் முட்டாள்தனமாகத்தான் நடந்திருப்பீர்கள். உங்களுக்காக அவர் பரிந்துரை செய்து வாதாட வேண்டும். நீதிமன்றத்தில் நீங்கள் குற்றவாளி என்று நிரூபிப்பதற்கு அவர் முயற்சி எடுத்தால் அவரை நியமித்ததில் என்ன பலன்? அவர் தன் வேலையைச் செய்கிறார் என்று நீங்கள் நினைக்கவேமாட்டீர்கள்.

இதைப்போலவே தேவனால் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவி உள்ளே வருவது உங்களுக்கு உதவி செய்வதற்கேயாகும். அவர் வந்து

கிறிஸ்துவுக்குள் உங்களது இரட்சிப்பின் அடிப்படையில் நியாயப்படுத்துவார். உங்களை ஆக்கினைக்குட்படுத்துவதற்கல்ல. பரிசுத்தஆவியானவர்தான் சிறந்த அதிகாரமுடையவர். அவர் மிகவும் சிறந்த இடத்திலிருந்து வருகிறார். அவர் நமது சிறந்த நண்பராகப் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். ஆகவே ஆக்கினைத்தீர்ப்பையோ அல்லது அதைரியப்படுவதையோ ஏற்றுக்கொள்ளக்கூடாது. மீண்டும் உங்களை பயப்படுகிறவர்களாகவும், உபயோகமற்றவர்களாகவும் ஏதாவத நினைவுகள் வந்தால் அது பரிசுத்த ஆவியின் சத்தமல்ல.

தீர்க்கதரிசனம் அந்தந்த சமயத்திற்கேற்ற ஒரு வார்த்தையைக் கொடுப்பதாகும்

யார் ஆவிக்குரியவற்றில், உணர்ச்சிவசப்படுதில், சரீரப்பிரகாரமான வகையில் இளைப்படைந்திருக்கிறவர்களுக்கு தீர்க்கதரிசனமானது சமயத்திற்கேற்ற ஒரு வார்த்தை கொடுக்க முடியும். தீர்க்கதரிசனத்தைப் பற்றிய இந்த கருத்தோடு தொடர்புடைய இரண்டு அழகான வேதபகுதிகளை நாம் காண்போம். நீதிமொழிகள் 15:23 இவ்வாறு சொல்லுகிறது. ‘‘மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும்; ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது” பழைய ஏற்பாட்டில் ஏசாயா புத்தகத்தில் இயேசு கிறிஸ்துவின் மிகவும் அழகான ஒரு காட்சியைக் காண்கிறோம். இதுவே இயேசு தீர்க்கதரிசியின் மூலமாகத் தீர்க்கதரிசனமாக உரைத்ததாகும்.

உண்மையான படிப்பின் ஒரு நல்ல அடையாளமாவது இளைப்படைந்த ஒருவருக்கு சமயத்திற்குரிய ஒரு வார்த்தை சொல்வதாகும்.

“இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நாங்கள் அறியும்படிக்குக் கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலை தோறும் என்னை எழுப்புகிறார். கற்றுக்கொள்ளுகிறவர்களைப் போல நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார். (ஏசாயா 50:4)

உண்மையான படிப்பின் ஒரு நல்ல அடையாளமாவது இளைப்படைந்த ஒருவருக்கு சமயத்திற்குரிய ஒரு வார்த்தை

சொல்வதாகும். அநேக மக்களாகிய கல்விமான்களை நான் அறிவேன். ஆனால் அவர்கள் ஞானவான்களல்ல. நிச்சயமாக அவர்களால் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடியாது. உண்மையில் அநேக கல்வியாளர்கள் எப்படியாவது மற்றவர்களை அதைரியப்படுத்துகிறார்கள். அவர்கள்: உங்களையும் பார்த்து விமர்சித்து உங்களைத் தாழ்வு மனப்பான்மையுடையவர்கள் என்று உணரச்செய்கிறார்கள். அவர்கள் இதைப்பற்றிய எல்ல அறிவையும் உடையவர்களாக இருக்கிறார்கள். பொல்லாத காரியங்கள் எப்படியிருக்கின்றது என்று எல்லாவற்றையும் அவர்கள் அறிவார்கள். அவர்கள் இது எப்படி இன்றும் அதிகம் மோசமாகும் என்பதையும் அறிவார்கள். அவர்கள் இது எப்படி இன்றும் அதிகம் மோசமாகும் என்பதையும் அறிவார்கள். பரிசுத்தஆவி இதைப் போன்றதல்ல. இயேசுவின் மூலமாக அவர் இளைப்படைந்தவனுக்கு ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை சொல்லும் இந்த அருமையான திறமையை அவர் செவிகொடுக்கிறார்.

செவிகொடுக்கிறவர்களுக்கு தீர்க்கதரிசனம் வரும்

ஏசாயா 50:4ஆம் வசனத்தின் இரண்டாவது பகுதியில் “காலைதோறும் என்னை எழுப்புகிறார், கற்றுக்கொள்கிறவர்களைப் போல நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச்செய்கிறார்'' என்று கூறப்பட்டுள்ளது. நீங்கள் கேட்காவிட்டால் உங்களால் பேசமுடியாது. தேவன் உங்களை அதிகாலையில் எழுப்பி கேட்கச்செய்யாவிட்டால் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யவோ அல்லது பேசவோ உங்களுக்கு ஒன்றும் இருக்காது. இயேசுவின் ஊழியத்தின் பல இரசசியங்களில் பெரிய இரகசியமாவது இந்த வார்த்தையில் வெளிப்படுவது ஒவ்வொரு காலை தோறும் என்பதாகும். அவர் தேனாகிய பிதாவினிடத்தில் ஒவ்வொரு நாளும் தொடர்பு கொண்டார். அவர் தேவன் தன்னிடம் பேசும் சத்தத்தைக் கேட்டார். அவருடைய ஆறுதலான வார்த்தைகளையும் உற்சாகப்படுத்தும் வார்த்தைகளையும் கொடுத்தார். அவரால் மற்றவர்களடிமும் பேச முடியும்.

இதே கருத்து நீதிமொழிகள் 21:28லும் உள்ளது. “பொய்ச்சாட்சிக்காரன் கெட்டுப்போவான்; செவிகொடுக்கிறவனோ எப்பொழுதும் பேசத்தக்கவன்” நீங்கள் எதையாவது சொல்லவேண்டுமானால் அது

தகுதியுடையதாயிருக்க வேண்டுமானால் பேசும் முன்பு நீங்கள் தேவனிடத்தில் கேட்க வேண்டும். சமயத்திற்கேற்ற வார்த்தையை நீ பேசும் முன்னால் உன்னுடைய செவிகள் திறந்திருக்க வேண்டும். எந்த தீர்க்கதரிசியும் முதலாவத தேவனிடத்தில் கேட்கும் முன் எப்போதாவத ஊழியம் செய்துள்ளாரா? எசேக்கியேல் தீர்க்கதரிசிக்குத் தேவனால் சொல்லப்பட்டதாவது "இந்தச் சுருளை நீ புசி" என்று கொடுத்து பின் இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் போய் அவர்களிடம் பேசு" என்பதாகும். இது இன்றைய தீர்க்கதரிசன வரத்திற்கம் பொருந்தும். ஆவியினால் ஊழியம் செய்வத உங்களத தலையின் மேற்பகுதியில் இருந்த புறப்படுவதில்லை. நீங்கள் வார்த்தையை உங்கள் ஆவியில் பெற்றுக்கொண்டால், நீங்கள் உங்களுடைய ஆவியின் வழியாக ஊழியம் செய்ய முடியும். ஒரு மனிதன் தன்னுடைய ஆவியில் ஒன்றும் பெற்றுக்கொள்ளாவிட்டால், அவனுடைய ஆவியிலிருந்து ஊழியம் செய்வதற்கு ஒன்றுமே இருக்காது.

சுயவெறுப்பின் மூலம் தீர்க்கதரிசனம் உண்டாகிறது

2 கொரிந்தியர் 4:12இல் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. "இப்படி மரணமானது எங்களிடத்திலும் ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது''. மற்றவர்களுக்கு ஜீவன் பெறத்தக்க ஊழியம் செய்யப்போகும்போது மரணமும் நம்மிடத்தில் வேலை செய்ய அனுமதிக்க வேண்டும். நாம் நம்முடைய சொந்த சித்தத்திற்கும், சொந்த எண்ணங்களுக்கும், சொந்த தீர்மானங்களுக்கும் சாக வேண்டும். பரிசுத்த ஆவியாகிய தேவன் செயல்பட ஒரு வழியைத் திறந்துவைக்கவேண்டும்.

2கொரிந்தியரின் ஆச்சரியமான கருத்துக்களில் ஒன்றாவது, நாம் பார்ப்பதுபோல 'தேற்றுதல்' என்னும் வார்த்தையானது பரிசுத்த ஆவியானவரோடும் தீர்க்கதரிசனத்தோடும் இணையும் பெரிய வார்த்தையாகும். இந்த நிருபத்தின் ஆரம்பத்தில் பவுல் இந்த அழகான வார்த்தைகளை எழுதியுள்ளார். "நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்'' (2கொரிந்தியர்1:3) ஆறுதல்படுத்துவதாக பவுல், உற்சாகப்படுத்துவதாகவும்,

மேன்மைப்படுத்துவதாகவும் ஏதாவத அமைந்தால் அது தேவனுடைய ஆதாரத்தில் இருந்து தோன்றுவதாகும். அவரே எல்லா ஆறுதல்களுக்கும் தேவனாயிருக்கிறார்."

மேலும் பவுல் தானும் தன்னுடைய கூட்டாளிகளும் அனுபவித்த பயங்கரமான உபத்திரவங்கள், பாடுகள், விசாரணைகள் பற்றி ஆறுதல், ஆறுதல்படுத்தப்படுவது, தேற்றுதல் என்ற வார்த்தைகளை 5 முறைகள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்.

> தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். எப்படியெனில் கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.
>
> *(2 கொரிந்தியர் 1:4-5)*

அவருக்கு விரோதமாக உண்டான எதிர்ப்புகள் மிகவும் பயப்படத்தக்கதாய் இருந்தால் அதனை அளவிடவே முடியாது. அதை எதிர்த்து நிற்கக்கூடிய பலம் எங்களுக்கு இல்லாதிருந்தது. பிழைப்போம் என்ற நம்பிக்கையற்றவர்களாகும்படி அழுத்தம் அதிகமாயிருந்தது. ''ஆகையால் சகோதரரே ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில் பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று" (வசனம் 8)

பின்பு பவுல் இந்த அழகான வார்த்தையைக் கூறுகிறார், "நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல் மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்றும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம். பவுல் தப்புவித்தலைக் குறிப்பிடும்போது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது. இதுதான் ஆறுதலின் செய்தி.

இதுபோல நம்மில் மரணம் வருகிறது என்ற நிலைக்க நாம் வரும்வரைக்கும் மற்றவர்களுக்கு ஆறுதலின் ஊழியம் செய்யும் திறமை நமக்கு வராது. ஒருவன் உண்மையாகவே ஆறுதலின் ஊழியம் செய்தால் அவன் தனது சுயநலம், தான் என்ற தற்பெருமை ஆகியவற்றிற்கு மரித்த அனுபவத்தைப் பெறவேண்டும். இதன்வழியாக சிறந்த ஆசீர்வாதமான முன்னுரிமை இருக்கும். இதுதான் மனித ஆவிக்குள்ளாக செயல்படும் தீர்க்கதரிசனம் என்று நான் புரிந்துகொண்டேன்.

> **தீர்க்கதரிசனத்தின் நோக்கமாவது உங்களை சர்வாதிகளாக ஆக்குவதற்காக அல்ல... அது ஜனங்களுக்கு ஆறுதலின் ஊழியத்தைச் செய்வதற்காகும்.**

நான் இதை அழுத்தமாகக் கூறுகின்றேன். ஏனென்றால் திரும்பவும் நான் தீர்க்கதரிசனத்தை அதிகமாக துர்ப்பிரயோகம் பண்ணுவதையும் அதை மலிவாக்குவதையும் நான் பார்த்திருக்கிறேன். அது தேவையுள்ள மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதைப் பார்க்கிலும், மனிதனுடைய தனித்தன்மையை வெளிப்படுத்துவதாகவே பெரும்பாலும் இருக்கும். தீர்க்கதரிசனத்தின் நோக்கமாவது உங்களை சர்வாதிகளாக ஆக்குவதற்காக அல்ல. நீங்கள் சுற்றித்திரிந்த உங்கள் விரல்களை ஜனங்களுக்கு நேராக நீட்டி "கர்த்தர் இவ்வாறு சொல்லுகிறார்" என்று செய்வதற்கல்ல அது ஜனங்களுக்கு ஆறுதலின் ஊழியத்தைச் செய்வதற்காகும். அது பக்திவிருத்தியை உண்டாக்குவதற்காகவும், கட்டுவதற்காகவும், விசுவாசிகளை மேலும் வளரச்செய்வதற்காகவும் அவர்கள் தரத்தை நிறைவேற்றுவதற்காகவும் கிறிஸ்துவின் சரீரமாக செயல்படுவதற்காகவுமேயாகும்.

தீர்க்கதரிசனமும் ஆவியின் பிற வரங்களும்

நாம் இப்பொழுது தீர்க்கதரிசனத்திற்கும் பிற வாய்மொழியான மற்றும் வெளிப்பாட்டின் வரங்களுக்கும் இடையிலான தொடர்பைக் காணலாம்.

தீர்க்கதரிசனமும் பல பாஷை பேசுதலும்

முதலாவதாக நான் முன்பு எழுதியதுபோல் அடிக்கடி பல

பாஷைகளைப் பேசும்பொழுது அது தீர்க்கதரிசனம் சொல்லுதலுக்கும் வழிவகுக்கும். அப்போஸ்தலர் 19:6இல் எபேசுவின் சீடர்களுக்குப் பவுல் ஊழியம் செய்தார். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். “அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது; பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ்சொன்னார்கள்”. அடிக்கடி அந்நிய பாஷையில் பேசுவது தீர்க்கதரிசனம் உரைத்தலுக்கு வழிவகுக்கும். இது பெந்தெகொஸ்தே நாளில் நடைபெற்றது. எபேசுவிலும் நடைபெற்றது என்று நான் உறுதியளிக்கிறேன்.

தீர்க்கதரிசனமும், ஞானத்தைப் போதிக்கும் வரமும், அறிவை உணர்த்தும் வரமும்

தீர்க்கதரிசனம்கூட மற்ற தொடர்புடைய வரங்களுக்கு வாகனமாக இருக்கலாம். இந்த வரங்கள் வானவில்லின் நிறங்களைப் போன்றது என்பதை நாம் அறிவோம். நாம் வேறு வேறான நிறங்களை வித்தியாசப்படுத்த முடிந்தாலும் ஒரு நிறம் எங்கே முடிகிறது அடுத்து எங்கே ஆரம்பிக்கிற என்று ஒரு குறிப்பிட்ட இடத்தை மையப்படுத்தமுடியாது. இதுபோலவே தீர்க்கதரிசனமும் மற்ற வரங்களுக்கு வழிநடத்திச் செல்ல முடியும். ஞானத்தைப் போதிக்கும் வரம், அறிவை உணர்த்தும் வசனம் தீர்க்கதரிசனம் உரைத்தலின் வழியாக வெளிப்படும். இப்படிப்பட்ட சமயங்களில் ஒரு வரத்திற்குப் பதிலாக ஒரே நேரத்தில் பல வரங்கள் செயல்படும்.

உதாரணமாக, காப்பிக்கொட்டையினால் தயாரிக்கப்பட்ட கருப்புநிற பானத்தை ஒரு கோப்பையில் ஊற்றி இது ஒரு கோப்பை காப்பி என்று சொல்லுகிறோம். அது உண்மைதான். ஒருவேறை நீங்கள் அந்த காபியை ஒருவருக்குக் கொடுத்து உங்களுக்கு சர்க்கரையும் கிரீமும் போடட்டுமா என்று கேட்டு அவர் சரி என்று சொன்னால் அவற்றைச் சேர்த்துக் கொடுத்தால் அதையும் காபி என்றுதான் அழைக்கிறோம். இதன் நிறத்தை மாற்றுவதற்கு சர்க்கரையும் கிரீமும் ஒரு சாதனமாகப் பயன்பட்டன. இதேபோல தீர்க்கதரிசனம் சில வேளைகளில் தனித்து வரும். சில வேளைகளில் ஞானத்தைப் போதிக்கும் வசனமும் அறிவை உணர்த்தும்

வசனமும் அதில் அடங்கியிருக்கும். அதை நாம் இன்னும் தீர்க்கதரிசனம் என்றழைக்கிறோம். ஆனால் அதில் மற்றொரு வரமும் அடங்கியிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலர் 13:1-2இல் “அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவும், நீகர் எனப்பட்ட சிமியோனும், சிரேனே ஊரானாகிய லூகியும், காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதுடனே கூட வளர்க்கப்பட்ட மனாயீனும், சவுலும் தீர்க்கதரிசகிளாயும் போதகர்களாயும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்கொண்டிருக்கிறபோது பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம் பற்றினார். “பரிசுத்தஆவியானவர் இந்த வாசகத்தை எப்படி அறிவித்தார் என்று நமக்குச் சொல்லப்படவில்லை. தீர்க்கதரிசனம் மூலம் அது சொல்லப்பட்டிருக்கலாம் என்பது சாத்தியமாகிறது. இந்த தீர்க்கதரிசனம் பர்னபா மூலமாகவோ சவுல் மூலமாகவோ அருளப்படவில்லை ஏனென்றால் அவர்கள் மூன்றாவது மனிதனைப்போல் குறிப்பிடப்படுகிறார்கள். மீதியுள்ள 3 மனிதர்களில் ஒருவரால் தீர்க்கதரிசனம் மூலமாக வெளிப்பட்டிருக்கும். அது வந்தது தீர்க்கதரிசனத்தைவிட மேலானது, என்பது உண்மையானது என்பதை நாம் குறித்துக்கொள்ளவேண்டும். அது நேரடியான ஞானத்தைப் போதிக்கும் வசனமாகும். இது தேவனுடைய சித்தத்தையும் திட்டத்தையும் வெளிப்படுத்தி யார் முன்னே செல்லவேண்டும் என்பதைக் காட்டுகிறது.

அப்போஸ்தலர் 20இல் எருசலேமுக்குப் பயணம் செய்யும்போது நடந்தவற்றைப் பவுல் சாட்சியாக உரைப்பதை நாம் பார்க்கிறோம். எபேசு சபையின் மூப்பர்களுக்கு அவர் மெலித்தா துறைமுகத்தில் அழைத்திருந்தபோது “இப்பொழுதும் என் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன். அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன். (வசனங்கள் 22-23) பவுல் விசுவாசிகளுடன் ஐக்கியம் கொள்ளும் ஒவ்வொரு இடத்திலும் பரிசுத்த ஆவியானவர் வரப்போகிற காரியங்களை வெளிப்படுத்தினார்.

பவுலுக்கு ஒவ்வொரு நகரத்திலும் பரிசுத்தஆவியானவர் எப்படி சாட்சி பகர்ந்தார் என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. எனினும் அவர்

'சொல்கிறார்' என்ற வார்த்தையை உபயோகிக்கிறார். இது மிகவும் அதிகமாக பொருத்தமானதாகவும் சரியானதாகவும் உள்ளது. ஒவ்வொரு நகரத்திலும் இந்த வெளிப்பாடுகள் ஒரு பல பாஷை பேசுதலின் மூலமாகவோ, அதை வியாக்கியானம் செய்தல் மூலமாகவோ அல்லது தீர்க்கதரிசனம் மூலமாகவோ வரலாம். பவுல், எருசலேமுக்குச் செல்லும் வழியாகப் பயணம் செய்யும்பொழுது சில சகோதரர்கள் அல்லது சகோதரிகளுக்கு தீர்க்கதரிசனம் மூலம் வெளிப்பாடு வந்திருக்கலாம். அதற்கு விளக்கமும் வந்திருக்கலாம். எருசலேமில் பவுலுக்குக் கட்டுகளும் உபத்திரவங்களும் காத்திருந்தன. இவைகள் அறிவை உணர்த்தும் வசனம் என்ற அனுபவத்தைப் பவுலுக்கு உண்டாக்கியிருக்கலாம்.

மெலித்தா தீவிலிருந்து பயணத்தைத் தொடரும்பொழுது அநேக வெளிப்பாடுகள் வந்தன. பவுலும் அவனது கூட்டாளிகளும் தீரு துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். "அவ்விடத்திலுள்ள சீஷரைக் கண்டுபிடித்து, பவுலை நோக்கி நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள். (அப்போஸ்தலர் 21:4)

ஆவியின் ஏவுதலினாலே சொன்னார்கள் என்ற வார்த்தை ஞானத்தைப் போதிக்கும் வசனம் என்று பொருள்படும் அல்லது அறிவை உணர்த்தும் வசனம் அடங்கிய தீர்க்கதரிசனம் என்று பொருள்படும். சரியான வரம் எதுவாக இருந்தாலும் அதன் விளைவாவது பவுல் எருசலேமுக்குப் போவது நிறுத்திவைக்கப்பட்டது. அந்த நாட்கள் நிறைவேறின பின்பு பயணத்தைத் தொடர்ந்தார்.

தீரு பட்டணத்திலிருந்து பவுல் செசரியாவுக்குக்ச் சென்றார். அங்கே அகபு என்ற தீர்க்கதரிசி யூதாவிலிருந்து வந்து அவரைக் காணவந்தார். "அவன் எங்களிடத்தில் வந்து பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன்னுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டி புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான்'' (அப்போஸ்தலர் 21:11)

எருசலேமுக்குப் பவுலின் பயணமாவது வரிசையான போக்குவரத்து விளக்குகளின் வழியாகச் செல்வது போன்றதாகும். ஒரு இடத்திலிருந்து

மற்றொரு இடத்திற்குச் செல்லும்பொழுத சிகப்புவிளக்கு எரிந்தால் நிறுத்த வேண்டும். அங்கே நின்று காத்திருப்பார். பச்சை விளக்காக மாறும்பொழுது அவர் அடுத்த இடத்திற்குச் செல்வார். திரும்பவும் சிகப்பு விளக்கு எரிந்தால் அவர் காத்திருப்பார், பச்சைவிளக்காக மாறும்பொழுது போவார். பவுலின் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் இந்த பகுதியில் மற்ற விசுவாசிகளின் வழியாக ஆவியானவர் சாட்சியாகக் கிரியை செய்தார். இதில் தீர்க்கதரிசனமும் மற்ற வரங்களும் கலந்து பின்னால் நிகழப்போவது அறியப்பட்டது. தேவன் விசுவாசிகளின் மூலமாகச் செயல்பட்டார். ஆனால் அவர்களின் பெயர் கொடுக்கப்படவில்லை. சபையில் உள்ள இவர்களைப் பற்றி நாம் மிகக் குறைவாகத்தான் அறிகிறோம். இருப்பினும் ஆவியானவரின் இந்த அழகிய வரங்கள் பவுலின் ஊழியத்தில் உதவியாக இருந்து அவனை வழிநடத்தியது.

பவுலின் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் இந்த பகுதியில் மற்ற விசுவாசிகளின் வழியாக ஆவியானவர் சாட்சியாகக் கிரியை செய்தார். இதில் தீர்க்கதரிசனமும் மற்ற வரங்களும் கலந்து பின்னால் நிகழப்போவது அறியப்பட்டது. தேவன் விசுவாசிகளின் மூலமாகச் செயல்பட்டார்.

தீர்க்கதரிசனமும் அதனோடு தொடர்புடைய வேறு வரங்களும் தீமோத்தேயுவின் ஊழியத்திலும் முக்கியமான பங்கு வகித்தன. தீமோத்தேயுவுக்கு எபேசு சபையில் தேவனால் கொடுக்கப்பட்ட ஊழியத்தை அவன் நிறைவேற்றிக்கொண்டிருந்தான்.

‘‘குமாரனாகிய தீமோத்தேயுபே, உன்னைக் குறித்து முன் உண்டான தீர்க்கதரிசனங்களின்படியே, நீ அவைகளை முன்னிட்டு நல்ல போராட்டம் பண்ணும்படி இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புவிக்கிறேன். நீ விசுவாசமும் நல்மனச்சாட்சியும் உடையவனாயிரு.” (1 தீமோத்தேயு 1:18) கடந்த காலங்களில் பல இடங்களில், முக்கியமாக அவனுடையதாய் சபையாகிய லீஸ்திராவில் தீமோத்தேயுவுக்குரிய தீர்க்கதரிசனங்க்கள் கொடுக்கப்பட்டன. இந்தத் தீர்க்கதரிசனங்கள் அவன் ஒரு குறிப்பிட்ட

ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கூறின. இவை அவன் எதிர்ப்புகளையும் பாடுகளையும் சந்திப்பான் என்று எச்சரித்தன. இருப்பினும் அவன் இவைகளைக் கடந்துசென்று முன்னேற வேண்டுமெனக் கூறின. அவன் ஊழியத்திற்குள் சென்றபோது இந்த பாடுகளோடு போராடினான். இத்தீர்க்கதரிசனங்களைக் குறித்த நினைவுடன் அவன் பலப்பட்டதால் அவைகள் அவனைவிட்டு நீங்கின.

இவ்வகையான உற்சாகப்படுத்துதலும் பலப்படுத்துதலும் தீர்க்கதரிசனத்தின் ஒரு விதமான செயல்பாடாகும். ஒரு வேளை நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி வெளிப்பாட்டைப் பெற்றால் அவருடைய சித்தத்தின்படி நீங்கள் அதில் அடியெடுத்துவைக்க வேண்டும். பின்பு அது மிகக்கடினமாக இருக்கும். ஏனெனில் எதிர்ப்புகள் பலமாக வெளிவரும். ஒரு வேளை நான் தவறான இடத்தில் இருக்கிறேனோ என்று தோன்றும். நான் இதன் வழியாகக் கடந்துசெல்லமாட்டேன் எனலாம். பின்பு நீங்கள் இல்லை! இந்த தீர்க்கதரிசன வார்த்தை எனக்கு வந்தது என்றும் நினைக்கலாம். நான் இந்த வழியாகச் செல்ல வேண்டும் என்றும் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டும் என்றும் அது எனக்கு உரைத்தது. கர்த்தருடைய சித்தத்தில் எது முக்கியம் என்று நான் இப்பொழுது அனுபவித்துக்கொண்டிருக்கிறேன்.

இதைப்போன்றவற்றை பவுல் 1 தீமோத்தேயு 4:14இல் எழுதுகிறார். ‘‘மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது, தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே” என்கிறார். கிரேக்க வார்த்தை வரம் என்பதற்கு “கரிஷ்மா” என்று மொழிபெயர்க்கப்படுகின்றது. நான் முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டது போல இந்த வார்த்தைக்குப் பல வித்தியாசமான அர்த்தங்கள் உண்டு. அதனை ‘ஆவியின் வரம்’ என்று பொருள் கொள்ளலாம். அல்லது ‘ஊழியம்’ என்று பொருள் கொள்ளலாம். இது குறிப்பாக அப்போஸ்தல ஊழியத்தையும் குறிக்கிறது. ஏனென்றால் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளபடி சபையினரை ஊழியத்திற்கு அனுப்பும்போது மூப்பர்கள் தலையில் கைவைத்து அனுப்புவதாகும். தீமோத்தேயு எதிர்ப்புகளையும் கஷ்டங்களையும் எதிர்கொண்டபோது பவுல் அவனுக்கு “மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்துத் தீர்க்கதரிசனம் உரைத்து ஊழியத்திற்கு அனுப்பியதை ஞாபகப்படுத்தினார். இந்த நிருபத்தின் மத்தியில், பவுல் தொடர்ந்து

தீமோத்தேயுவை உற்சாகப்படுத்துவதின் சாராம்சத்தை நாம் காணலாம். அதைரியப்படாதே, ஊழியத்தை விட்டுவிடாதே, உன்னிடத்திலுள்ள வரங்களை உதாசினப்படுத்தாதே, பயத்திற்கு இடங்கொடாதே என்கிறார். தேவன் உன்னை இந்த ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். அவர் தனது சித்தத்தை வெளிப்படுத்தியுள்ளார். அதைக் கடைப்பிடித்து அதை நிறைவேற்று என்கிறார். தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டு நிருபங்களிலும் உள்ள பல கருத்துக்களில் இதுவும் ஒரு கருத்தாகும்.

வேறொரு புத்தகத்தில் ஒரு வரத்திற்காகக் கைகளை வைத்தலைப் பற்றிக் குறிப்பிட்டு நான் எழுதியுள்ளேன். இந்த அதிகாரத்தில் நாம் கலந்துரையாடினவற்றை நான் கோடிட்டு அந்நூலில் காட்டியுள்ளேன். தங்கள் எதிர்கால வாழ்க்கை செல்லும் பாதையையும் துன்பகாலத்தையும் காட்டும் தீர்க்கதரிசனங்களை மக்கள் பெறுவர். அவர்களை உற்சாகமூட்டும் வகையிலும் பெலப்படுத்தும் விதமாகவும் அந்தத் தீர்க்கதரிசனங்களைக் குறித்து அவர்களை ஞாபகப்படுத்தவேண்டும். இப்புத்தகத்தை அச்சடித்தபின்னர் இதைப்படித்த நியூசிலாந்திலுள்ள ஒரு போதகர் தனக்கு நேர்ந்ததைக் கூறினார். “நான் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வேதாகமப்பள்ளியில் இருக்கும்போது, ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைப் பெறுவேன் என்றும் ஒரு தனிப்பட்ட வேலையை நிறைவேற்றுவேன் என்றும் தரிசனங்கள் கொடுக்கப்பட்டன. இங்கு நியூசிலாந்திற்கு வந்த பின்னர் தடையை எழுப்புகிற நிலையே உண்டான்படியால் உற்சாகம் இழந்தேன். ஒன்றும் நடக்கவில்லை. உங்கள் புத்தகத்தைப் படித்த பின்னர் தீமோத்தேயுவுக்கு முன்பு கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களையும் அவன் எப்படி தன் ஊழியத்தை நிறைவேற்ற அனல் பெற்றான் என்ற பகுதியையும் வாசித்தேன். அப்புத்தகத்தில் அதை வாசித்தவுடன் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் என்னைப்பற்றிக்கூறப்பட்ட தீர்க்கதரிசனங்கைளை நினைவுகூர்ந்தேன். பின்னர் எனது ஊழியத்தை நிறைவேற்றாத நிலையில் இருந்த நான் அதைச் செய்யத் தூண்டிவிடப்பட்டேன்.

அதன்பின்பு அவர் விசுவாசத்தில் ஒரு அடி எடுத்து வைத்தபோது தேவன் அவரை அதிசயிக்கத்தக்கவிதமாக ஆசீர்வதித்தார். மேலும் அவர் தனக்கு உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களினபட்டி முழுமையாக ஊழியத்தில் இறங்கினார். தீர்க்கதரிசனமானது அவரது வாழ்வில் பொருத்தமில்லாத, முக்கியமில்லாததாக இருக்கவில்லை என்பதை நாம்

அறிகிறோம். ஆனால் அவர் இதைக் கண்டுபிடித்து தனது ஊழியத்தை நிறைவேற்ற அது முக்கிய பங்கு வகித்தது.

ஒரு ஸ்தல சபையில் தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தல்

ஒரு ஸ்தல சபையில் தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தும்போது, ஒவ்வொருவராக வரிசைக்கிரமமாக சொல்லும்போது அதனால் எல்லாரும் பயன்பெற முடியும் என்ற முடிவை நாம் பார்க்கலாம்.

அனைவரும் தீர்க்கதரிசனம் சொல்லுவது தேவனுடைய சித்தமாகும்

முதல் அத்தியாயத்தில் நாம் ஒரு தீர்க்கதரிசியின் ஊழியத்திற்கும் தீர்க்கதரிசன வரத்திற்குமுள்ள வித்தியாசத்தைப் பற்றிக்கண்டோம். அனைவரும் தீர்க்கதரிசனம் சொல்லலாம் என்று வேதம் சொல்லுகிறது. குறிப்பிட்ட தீர்க்கதரிசன ஊழியத்தை அனைவரும் செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. “எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும் நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனம் சொல்லலாம்” (1 கொரிந்தியர் 14:31) எல்லா விசுவாசிகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவது தேவனுடைய சித்தம் என்று தெளிவாக வெளிப்படுத்தப்படுகிறது. நாம் தீர்க்கதரிசனம் சொல்லாவிட்டால் அது கர்த்தருடைய சித்தம் இல்லை என்பதினாலல்ல. அது ஏனென்றால் நாம் கர்த்தருடைய சித்தத்திற்குள்ளாகப் போகவில்லை என்பதாகும்.

தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கவேண்டும்.

“எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும் நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனம் சொல்லலாம்.” (1கொரிந்தியர் 14:31) ஒரு கூட்டத்தில் எல்லாரும் ஒரே சமயத்தில் தீர்க்கதரிசனம் சொல்லக்கூடாது, ஏனென்றால் அது குழப்பத்தை உண்டுபண்ணும். நாம் ஒவ்வொருவராகச் சொல்லும் போது அனைவரும் கற்றுக்கொள்ளலாம். இதனால் ஆவியின் வரங்களைச் செயல்படுத்தலாம். சில மக்களே பூரணமாகத் தீர்க்கதரிசனம்

உரைத்தலை ஆரம்பிக்கிறார்கள். பவுல் நமக்குத் தீர்க்கதரிசனம் சொல்லும் வரம் உண்டென்று சொல்லுகிறார். நம்மில் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கே ஏற்றதாகச் சொல்லக்கடவன். நாம் நம்முடைய விசுவாசத்திற்கேற்ற வகையில் சொல்லி நிறுத்தவேண்டிய நேரத்தில் முடிக்கவேண்டும். இந்த வரத்தை உபயோகிக்கும்போதுதான் நாம் வளர்ந்து பக்குவப்படுவோம். நாம் ஒருபோதும் ஆரம்பிக்காவிட்டால் ஒருபோதும் பக்குவமடையமாட்டோம்.

சில மக்களே பூரணமாகத் தீர்க்கதரிசனம் உரைத்தலை ஆரம்பிக்கிறார்கள்... இந்த வரத்தை உபயோகிக்கும் போதுதான் நாம் வளர்ந்து பக்குவப்படுவோம்.

பவுல் “தீர்க்கதரிசிகள் இரண்டுபேராவது மூன்று பேராவது பேசலாம். மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள். அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்தி பேசினவன் பேசாமலிருக்கக்கடவன்” (1 கொரிந்தியர் 14:29-30) அங்கே பேசுவதற்கு ஒரு காலமுண்டு, பேசுவதை நிறுத்துவதற்கும் ஒரு காலமுண்டு. கிழக்கு ஆப்பிரிக்காவில் போதகர் பயிற்சிக் கல்லூரியில் உள்ள வாலிபர்களோடு நானும் எனது மனைவி லிடியாவும் இருந்தபோது இத்தகைய அனுபவம் எங்களுக்குக் கிடைத்தது. எங்களுடைய ஞாயிறு இரவு ஆராதனையில் ஒரு மணிநேரம் நான் தேவ வசனத்தைப் போதித்தேன். தேவ சித்தத்திற்காக துதி ஆராதனை செய்தோம். நாங்கள் தேவனைத் துதிக்கும்போது ஒருவேளை தீர்க்கதரிசனத்தோடு விளக்கம் சொல்லுதலும் வரும். அப்பொழுது மாணவர்களில் ஒருவன் தன் கைகளை உயர்த்தி ‘ஐயா தேவன் இப்பொழுது எனக்கு சில காரியங்களைச் சொன்னார். அதை நான் கூறட்டுமா? என்றான்.” நல்லது, தேவன் உனக்குச் சொன்னதை உனக்குள் வைத்துக்கொள்ளதே, எல்லோருக்கும் அதைச் சொல்” என்றேன். மற்றவர்களிடம் நான் அருகிலுள்ள வேறொருவருக்கு வெளிப்பட்டால் முதலாமவர் அமைதியாக இருக்க வேண்டும். அமைதியாயிருந்து மற்றொருவர் சொல்வதைக் கேட்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது.

இவ்வாறாக சில ஆச்சரியமான காரியங்கள் நடைபெற்றன. அவர்களில் ஒரு வாலிபன் எதிர்ப்பாளியாகவும் தொல்லை கொடுக்கக்கூடியவனாகவும் இருந்தான். ஆப்பிரிக்க போதகர்கள்கூட அவனைப் படிப்பிலிருந்து நீக்கம் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் தேவன் அவனை ஆட்கொண்டதால் அவன் மனந்திருந்தினான். அதன்பின் ஒருவாரம் கழித்த அவன் இக்கூட்டத்திற்கு வந்து தயவுசெய்து ஐயா என்றான். “அது என்ன?” என்று பதில் கூறினேன். தேவன் இப்போது, இன்றைய சாலைப்போக்குவரத்தைப் பற்றிய வசனம் ஒன்று வேதாகமத்தில் இருப்பதாகச் சொன்னான். நான் ஆம் அதை நாகூமில் 2ஆம் அதிகாரத்தில் காணலாம் என்றேன். 4ஆம் வசனத்தைல் “இரதங்கள் தெருக்களில் கடகடவென்றோடி என்றுள்ளது. இதை அவன் கண்டபோது தனத இருக்கையில் இருந்து ஆச்சரியத்தினால் கீழே விழுந்தான். இந்த இடத்தில் கர்த்தர் எப்படிக் கடந்து சென்றார் என்பதைச் சிந்திக்க வேண்டும். கர்த்தர் அந்த வார்த்தை எங்கே இருக்கிறது என்று சொல்லவில்லை. அங்கே ஒரு வார்த்தை இருக்கிறது என்று அவர் சொன்னபடியால் அந்த வசனம் எங்கேயிருக்கிறது என்று என்னிடத்தில் கேட்கவேண்டியதாயிற்று. மாணவர்களிடத்தில் இத்தகைய செயல்கள் அடிக்கடி நடைபெறும். வசனம் தனது அர்த்தத்தை விளக்கக்கூடிய இப்பேர்பட்ட உண்மையான வேறொரு சூழ்நிலையில் நான் ஒருபோதும் இருந்ததே இல்லை. “அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்தி பேசினவன் பேசாமலிருக்கக்கடவன்” (1கொரிந்தியர் 14:30) சரீரத்தின் உறுப்பினர்களுக்கு இதுதான் ஊழியம்.

நான் முன்பு குறிப்பிட்டதுபோல் முழுக் கூட்டத்திலும் ஒரே ஒரு வெளிப்பாட்டையே கூறிக்கொண்டிருப்பது சரியல்ல. அது பல பாஷையாகவோ, விளக்கம் சொல்லுவதாகவோ தீர்க்கதரிசனம் சொல்லுவதாகவோ அல்லது வேறொன்றாகவோ இருக்கலாம். ஒரே வகையான வெளிப்பாட்டையே சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம். சில சமயங்களில் பல பாஷை பேசினால் அதையே பேசிக்கொண்டிருக்க விரும்புவார்கள். அதேபோல தீர்க்கதரிசனம் சொல்ல விரும்புகிறவர்கள் அதையே சொல்லிக்கொண்டிருப்பார்கள். நாம் கட்டுபாட்டுடன் இருக்க வேண்டுமே ஒழிய அசுத்தத்திற்குள் விழக்கூடாது. தேவன் கடந்து செல்வதற்கும் பேசுவதற்கும் வித்தியாசமான வழிகளுண்டு. தேவன் செய்ய விரும்புவதற்கு நாம் திறந்த வாசலை வைப்போம்.

தீர்க்கதரிசனத்தைக் குறித்த மற்றொரு முக்கியமான கொள்கை உள்ளது. அடுத்த அத்தியாயத்தில் இதைப்பற்றிக் காணலாம். 1 கொரிந்தியர் 14:32இல் ‘‘தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறது. என்று உள்ளது. ஒரு உண்மையான தீர்க்கதரிசி தனது கட்டுப்பாட்டை இழக்கமாட்டான். அவன் பேசுவதற்கும் செய்வதற்கும் ஆனவற்றிற்கு வேதத்திற்கும், கிறிஸ்துவுக்கும் கணக்குக் கொடுக்கவேண்டும். அவன் தேவனைக் குற்றப்படுத்தி “என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை, நீங்கள் என்னைச் செய்யும்படி உதவுங்கள்”என்று கூறுவது பக்திவிருத்திக்குரியதல்ல. தங்களது மதியீனத்தை நியாயப்படுத்துவதற்காக பலமுறை மன்னிப்புக்கோருவதை நான் கேட்டிருக்கிறேன். ஆவியின் ஊழியத்தைச் செய்யும்போது நாம் பேசுவதற்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். தேவன் நம்முடைய சித்தப்படி ஆளுகை செய்யமாட்டார். நம்மைக் கட்டாயப்படுத்தவும் மாட்டார். தீர்க்கதரிசனம் சொல்லும்போது பரிசுத்த ஆவியினிடத்திலும் சரீரமாகிய விசுவாசிகளிடத்திலும் எப்படி நடந்துகொள்வது என்ற பொறுப்பை நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

12 தீர்க்கதரிசனத்தைப் பகுத்தறிதல் எப்படி?

சென்ற அத்தியாயத்தில் விசுவாசிகளின் கூடுகையில் தீர்க்கதரிசனம் சொல்ல அனுமதிக்கும்போது அது வேதத்தின் அடிப்படையிலும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையினாலும் பகுத்தறியப்பட வேண்டும். இத்தனை ஆண்டுகளாக நான் அறிந்துகொண்ட அடிப்படைக் கருத்தாவது தீர்க்கதரிசனம் சொல்லுதல் வேதத்தின் அடிப்படையில் பரிசோதிக்கப்படாவிட்டால் தீர்க்கதரிசனம் சொல்லாமலிருப்பதே நல்லதாகும். இந்த அத்தியாயத்தில் புதிய ஏற்பாட்டில் இந்த நோக்கத்தைக் குறித்த நியாயத்தீர்ப்பின் பலதரங்களைப்பற்றி உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

> "தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்று பேராவது பேசலாம். மற்றவர்கள் நிதானிக்கக்கடவர்கள்." (1 கொரிந்தியர் 14:29)

இந்த வசனத்தில் தீர்க்கதரிசிகள் என்ற வார்த்தை தீர்க்கதரிசன ஊழியத்தையோ அல்லது விசுவாசிகள் தீர்க்கதரிசன வரத்தை செயல்படுத்துவதையோ குறிக்கும். பின்னே சொல்லப்படும் கருத்துக்கள் இந்த இரண்டு சூழ்நிலைகளுக்கும் பொருந்தும். மற்றவர்கள் என்பது அந்த சபையில் வந்துள்ள தீர்க்கதரிசனத்தை பகுத்தறியும் தகுதியைப் பெற்றவர்களைக் குறிக்கும் என்று நான் நம்புகிறேன்.

தீர்க்கதரிசிகள் தனிப்பட்ட முறையில் செயல்படக்கூடாது.

புதிய உடன்படிக்கையின்படி தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களின் ஒரு முக்கிற உண்மையாவது அவர்கள் தனிப்பட்ட முறையில் பொதுவாக சொந்தமாக செயல்படக்கூடாது. புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசி என்னும்

வார்த்தை எப்பொழுதும் ஒரே ஒரு இடத்தைத் தவிர பன்மையிலேயே உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள்

1. கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு பகுதி.

2. சரீரத்தில் அங்கத்தினர்களாக செயல்படுபவர்கள்.

3. மற்ற அங்கத்தினர்களின் சரீரத்தோடு உறவு கொள்பவர்கள்.

இது பழைய ஏற்பாட்டிற்கு கொஞ்சம் முரண்பாடானது. பழைய ஏற்பாட்டில் எலியா போன்ற தீர்க்கதரிசிகள் தனிமையாக தைரியமாக கடவுளற்ற நிலையையும் பொல்லாப்பையும் எதிர்த்துப் போராடும் பிண்னணியத்தில் காண்கிறோம்.

கர்த்தர் எலியாவுக்கு, இஸ்ரவேலில் மீதியானவர்களில் விசுவாசமுள்ளவன் அவன் மட்டுமல்ல என்பதைக் காட்டினார். இருப்பினும் அச்சமயத்தில் இஸ்ரவேல் தேசத்திற்கு கர்த்தரின் வாயாக முக்கியமாக செயல்பட்டான். ஆனால் புதிய ஏற்பாட்டின் கருத்தாவத, அநேக அங்கத்தினர்கள் உள்ள ஒரு சரீரமாகவும், எல்லாரும் ஒருவருக்கொருவர் ஒரு அங்கத்தினனும் தன் சுய சித்தமாக சிறப்பாக செயல்பட முடியாது.

எனவே சபையில் உள்ள தீர்க்கதரிசிகள் குழுக்களுக்குள்ளாகவே ஊழியம் செய்கிறார்கள். ஒருவர் தீர்க்கதரிசனம் சொல்லும்போது மற்றவர்கள் அதனைப்பகுத்தறிந்நது விளக்க வேண்டும். ஒரு கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று பேர் பேசலாம் எல்லோரும் ஒரே சமயத்தில் என்று பவுல் சொல்கிறார். அவர்கள் சொல்லுவதை மற்ற தீர்க்கதரிசிகள் பகுத்தறிவதற்கு இடமளிக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் இந்த தீர்க்கதரிசன ஊழியத்திற்கு ஒரு சரியான உதாரணத்தை அப்போஸ்தலர் 11:27-28ஆம் வசனங்களில் காணலாம்.

> அந்நாட்களிலே எருசலேமிலிருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.
>
> அவர்களில் ஒருவனாகிய அகபு என்பவன் எழுந்து உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான். அது அப்படியே கிலவுதியுராயனுடைய நாட்களிலே உண்டாயிற்று.

இறுதி அத்தியாயத்தில் அகபு சம்பந்தப்பட்ட மற்றொரு நிகழ்ச்சியைப் படிக்கிறோம். எருசலேமில் பவுலுக்கு என்ன நேரிடும் என்று அவன் தீர்க்கதரிசனம் உரைத்தான். இங்கே தீர்க்கதரிசிகள் குழுவாக வந்தார்கள். “தீர்க்கதரிசிகள் எருசலேமிலிருந்து வந்தார்கள்.” (அப்போஸ்தலர் 11:27) அகபுவுக்கு உரைப்பதற்கு ஒரு தருணம் கிடைத்தது. அவன் தேவன் வெளிப்படுத்திய செய்தியைக் கொடுத்தான். ஆனால் அவன் தனது சொந்த சித்தத்தின்படி அதனைச் சொல்லவில்லை.

அநேக விசுவாசிகள் தங்கள் சுய சித்தத்தின்படி தீர்க்கதரிசன ஊழியத்தை செய்ததால் கெட்டுப்போய்விட்டார்கள். அநேகருக்கு இப்படி நடப்பதை நான் பார்த்திருக்கிறேன். அதிகமாகவோ குறைவாகவோ இவர்கள் சில கூட்டங்களிலோ, சபைகளிலோ, ஜெபக்குழுக்களிலோ தாங்கள்தான் தேவனின் வாயாக செயல்படுவதாக முன்வருகிறார்கள்.

இது சரியானதல்ல என்பது மட்டுமில்லாமல், இது முழுமையும் பரிசுத்த ஆவிக்கும் புதிய ஏற்பாட்டின் நோக்கங்களுக்கும் முற்றிலும் முரணானது. நான் ஒரு குறிப்பிட்ட சபையை அறிவேன். அங்கே ஒவ்வொரு சபையிலும் ஒருசில தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்களாக நியமிக்கப்பட்டவர்கள் என்ற இரு பிரிவினர்களே இந்த சபைகளை நடத்துகின்றனர்.

அங்கே கிறிஸ்துவின் சரீரத்தில் சர்வாதிகாரிகள் யாருமில்லை

திரும்பவும் அங்கே கிறிஸ்துவின் சரீரத்தில் சர்வாதிகாரிகள் யாருமில்லை. இப்படிப்பட்ட சர்வாதிகாரிகளால் ஒரு வரமும் அல்லது ஒரு ஊழியமும் நடைபெறும்படி உருவாக்கமுடியாது. அங்கே, அந்த ஊழியத்திற்கும் அந்த ஊழியத்தின் பொறுப்பிற்கும் அனைவரும் ஒன்று சேர்ந்து பகிர்ந்துகொள்ள வேண்டும்.

தீர்க்கதரிசனத்தைப் பகுத்தறியும் தன்மை

ஆகவே தீர்க்கதரிசனம் பகுத்தறிதலுக்கு உட்பட்டது. இதனால் தீர்க்கதரிசனத்தை பகுதிபகுதியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற அர்த்தத்தில் நான் குறிப்பிடவில்லை. ஆனால் அது தேவனிடத்திலிருந்து வந்ததா? அது உண்மையானதா? நாம் முன்னேறுவதற்கு அது எதையாவது

கொடுக்கிறதா? என்றெல்லாம் பகுத்தறிய வேண்டும். பவுல் இதே கருத்தை மீண்டும் 1 தெசசலோனிக்கேயர் 5:19-21இல் எடுத்துரைக்கிறார்.

> ஆவியை அவித்துப்போடாதிருங்கள், தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

எல்லா தீர்க்கதரிசனங்களும் தேவனிடமிருந்தே வந்தது என்று எண்ணாமல் அவை சரியானதா? உண்மையானதா? அதிகாரபூர்வமானதா? என்று சோதித்துப் பார்க்காமல் அப்படியே ஏற்றுக் கொள்ளாதீர்கள்.

சில மனிதர்கள் செய்வதைப் போல பரிசுத்த ஆவியானவரின் வரங்களையும் வெளிப்பாடுகளையும் நாம் உதாசீனப்படுத்துவதின் மூலமாக பரிசுத்த ஆவியை அவித்துப்போடக்கூடாது. இது பொதுவாக ஆவியின் வரங்களை எங்கே துர்ப்பிரயோகம் செய்கிறார்களோ அங்கே இவ்வாறு நடைபெறும் உதாரணமாக பிரிட்டனிலுள்ள ஒரு ஆலயத்தை நான் அறிவேன். முக்கிய அரங்கத்தின் சுவற்றில் ஒரு குறிப்பு காணப்பட்டது. அது இவ்வாறு சொல்கிறது. “அடித்தளத்தைத் தவிர மற்ற இடங்களில் நவமான பாஷைகளைப் பேசக்கூடாது” என்பதாகும். பலபாஷை பேசுவதில் துர்ப்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. அவர்களால் இந்தப்பிரச்சனையோடு ஒத்துழைக்க முடியவில்லை. எனவே அவர்கள் அதனைக் கீழ்த்தளத்திற்குத் தள்ளிவிட்டார்கள். இதைப்போலவே அமெரிக்காவிலுள்ள மற்றொரு சபையையும் அறிவேன். அவர்கள் வியாழக்கிழமைகளில் மட்டும் பல பாஷை பேசி செய்தி கொடுக்க அனுமதிக்கிறார்கள். ஆனால் இதுதான் உண்மையாக மிகப்பெரிய முக்கிய சபைகளின் பழக்கமாக உள்ளது. இந்தப் பிரச்சனை ஒரு உண்மையான பிரச்சனையாக சொல்லப்பட்டாலும் இதற்கு வேதத்தின் வழியாக தீர்பு இல்லை. இதற்கு பதிலாவது ஆவியை அவித்துப்போடாதிருங்கள் என்பதே ஆகும். விசுவாசிகளின் கூட்டத்தில் ஆவியின் வரங்களை ஒழுங்கான முறையில் உபயோகிப்பதற்கு வேதத்தின் வழிநடத்துதலைக் கண்டுபிடிக்க வேண்டும்.

பவுல் சொல்கிறார் “தீர்க்கதரிசனத்தை அற்பமாயெண்ணாதிருங்கள்.” (1 தெசலோனிக்கேயர் 5:20) பொதுவான கருத்துப்படி ஜனங்கள் தீர்க்கதரிசனத்தை அற்பமாயெண்ணும் சூழ்நிலைகள் இருக்கலாம். தீர்க்கதரிசனத்தை அற்பமாய் எண்ணாதிருங்கள் என்று வேதாகமம் சொல்லியிருக்காவிட்டால், நான் சில வேளைகளில் அதையே செய்திருப்பேன் என உண்மையாக சொல்லுகிறேன். ஏனெனில் தீர்க்கதரிசனம் உரைக்கிறோம் என்ற வேடத்தில் அரைகுறையாகவும் பிரயோஜனமற்ற வார்த்தைகளையும் கேட்கிறோம். பவுல் ஏன் இப்படிச் சொன்னார் என்பதை நான் அறிகிறேன். இப்பிரச்சனைக்கு தீர்வு பொதுவாக தீர்க்கதரிசனத்தை அற்பமாக நினைப்பதிலோ அல்லது பரிசுத்த ஆவியை அவித்துப் போடுவதிலோ இல்லை. எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். (வசனம் 21) என்பதில் தான் தீர்வு உள்ளது. எல்லா தீர்க்கதரிசனங்களும் தேவனிடமிருந்தே வந்தது என்று எண்ணாமல் அவை சரியானதா? உண்மையானதா? அதிகாரபூர்வமானதா? என்று சோதித்துப் பார்க்காமல் அப்படியே ஏற்றுக் கொள்ளாதீர்கள். நீங்கள் மீன் சாப்பிடும்போது சதையை மட்டும் சாப்பிட்டுவிட்டு முட்களை தவிர்த்துப்போடுகிறீர்கள். தீர்க்கதரிசனம் சொல்லுதலையும் இதைப்போலவே செய்யுங்கள். மாம்சத்தை சாப்பிடுங்கள். ஆனால் எலும்பையும் விழுங்க முயற்சி செய்து அஜீரணத்தை வருவித்துக் கொள்ளாதிருங்கள்.

தீர்க்கதரிசனத்தை சோதித்துப் பார்ப்பதைப் பற்றி அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுகிறார். “பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங்கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.” (1 யோவான் 4:1) கிரேக்கவார்த்தை ‘Test’ ‘சோதனை’ என்பது எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து என்ற அர்த்தத்தில் காணப்படுகிறது. (1 தெசலோனிக்கேயர் 5:21) கள்ள தீர்க்கதரிசி என்பவன் பொய்யான ஆவியை உடையவன் என்பதைக் கவனிக்க வேண்டும். நீங்கள் தீர்க்கதரிசனத்தைச் சோதித்துப் பார்க்கும்பொழுது தீர்க்கதரிசியின் தனித்தன்மையை சோதிப்பது என்பதல்ல, ஆனால் அவன் மூலமாகப் பேசும் ஆவியையே சோதித்தறிய வேண்டும். இவ்வுலகத்திலே அநேக கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றி பொய்யான ஆவிகள் அவர்கள் மூலமாக

கிரியை செய்வதால் நாம் அவைகளைக் குறித்து எச்சரிக்கப்படுகிறோம். 1 யோவான் 4:6இல் "சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும்" அறிந்திருக்கிறோம் என்று இரண்டிற்குமுள்ள வேறுபாட்டைக் கூறுகிறார். வஞ்சக ஆவி ஒன்றுள்ளது. சிலவேளைகளில் அது தீர்க்கதரிசனம் என்ற மாறு வேடத்தில் வரும். உண்மையில் தவறான கருத்துக்களை தக்கவைத்துக் கொண்டு தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்துவதை நான் கேட்டிருக்கிறேன். தீர்க்கதரிசனம் சொல்லுதலின் அவர்களுடைய முழுநோக்கமாவது அவர்கள் சொல்லவேண்டிய ஒரு கொள்கையைத் திணிப்பதற்கே என்பது திட்டந்தெளிவாகத் தெரிகிறது.

தீர்க்கதரிசனத்தை சோதிப்பதற்கு செயல் முறையான கருத்துக்கள்

நாம் இப்பொழுது தீர்க்கதரிசனத்தைப் பகுத்தறிவதற்கான ஒன்பது செயல்முறைக் கருத்துக்களைக் காண்போம். இன்று நீங்கள் மருத்துவர்களிடம் நோயைக் கண்டறியப்போகும்பொழுது பழைய காலங்களிலுள்ள காலங்களிலுள்ள முறையைப் பயன்படுத்துவதில்லை. அவர்கள் உங்களுடைய நாடித்துடிப்பையும் சரீர வெப்ப நிலையையும் சோதித்து உங்களது நாக்கை நீட்டச்சொல்லி அது ரோஸ் கலரில் இருந்தால் நீங்கள் சுகதேகி என்பார்கள். பதிலாக எல்லா உறுப்புக்களையும் பலவித சோதனைகளுக்குட்படுத்தி ஒவ்வொன்றையும் கவனித்துப் பார்த்து உங்களுடைய நிலையை அறிந்து கூறுவார்கள். இதே போன்ற அணுகுமுறை தீர்க்கதரிசனத்தைப் பகுத்தறிதலிலும் கடைப்பிடிக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு சோதனைகளை வைத்து ஏற்றுக் கொள்ளக்கூடாது. நீங்கள் உண்மையாக நிச்சயப்படுத்த வேண்டுமானால் அதை முழுமையாக சோதித்து அறிய வேண்டும்.

சோதனை எண்1. அது உருவாக்குகிறதா அல்லது ஆக்கினைத் தீர்ப்பளிக்கிறதா?

தீர்க்கதரிசனத்தின் நோக்கத்தைக் குறித்த முதல் சோதனையைப்பற்றி முந்தின அத்தியாயத்தில் பார்த்தோம். 1 கொரிந்தியர் 14:3 சொல்லுகிறது.

“தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்” எங்கெங்கே நான் செய்தி கேட்கிறேனோ அது ஆக்கினைத் தீர்ப்பைப் பற்றியோ எதிர்மறையாகவோ, அழிவுக்குரியதாகவோ இருந்தால் அதனை நான் உண்மையான தீர்க்கதரிசனம் என்று ஒத்துக்கொள்ள மாட்டேன். ஏனெனில் அது வேதத்தில் சொல்லப்பட்ட அளவுகோலை நிறைவேற்றுவதாக இல்லை.

ஒரு ஞாயிறு அன்று சிகாகோவில் உள்ள ஒரு சபையில் நான் பேச வேண்டியதாயிருந்தது. ஆராதனையில் அவர்கள் துதி செலுத்தும் பகுதியில் இருந்ததால் நான் பேசுவதற்காக மேடையில் காத்தூக கொண்டிருந்தேன். ஒரு பாடல் பாட ஆரம்பிக்கும் போது, பின்புறமிருந்து ஒரு மனிதன் எழுந்து நின்று தான் பேசபோவது ஒரு தீர்க்கதரிசனம் என நாங்கள் நம்பும்படி கடினமான தொனியில் பேச தொடங்கினான். அவன் கொண்டுவந்த செய்தி உண்மையான அர்த்தமற்றது ஆகும். நான் அறிந்து கொண்டது என்னவென்றால் பிறனை ஆக்கினைக்குள் தீர்ப்பதும், மக்கள் தலைமேல் வரம் நியாயத்தீர்ப்பை பற்றி எச்சரித்தலாகவும் அது அமைந்தது. நான் அங்கே மேசையின் மேல் அமர்ந்து, கோபப்பட்டுக் கொண்டு, அதைப்பற்றி ஒன்றும் செய்யாமல் இருந்தேன். இரண்டு பாடல்கள் பாடின பின்னர் அந்த மனிதனை எழுந்து நின்று, அதையே செய்தான். இப்போது, என்னால் அமைதியாய் இருக்க முடியாமல், அவன் பேசிக்கொண்டிருக்கும்போதே ஒலிபரப்பியிடம் சென்று ‘இந்த சகோதரன் பேசுவதை உண்மையான தீர்க்கதரிசனமாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏன் எனில் தீர்க்கதரிசனம் பேசுபவன் மனிதர்களின் அறிவு விருத்திக்கும், படிப்பினைக்கும் ஆறுதலுக்குமே பேசுகிறான். நமது சகோதரன் பேசினதெல்லாம் குறைகூறுதலும், குழப்பமுமே. அது தீர்க்கதரிசனத்திற்கு விநோதமானது.

குறை கூறுவதும் எதிர்மறையானதும் அழிக்கும் தன்மை உடையதை உண்மையான தீர்க்கதரிசனம் கூறுதலாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

நீங்கள் கற்பனை செய்யக்கூடிய ஒரு அதிர்வை அது ஏற்படுத்தியது. தீர்க்கதரிசன வரத்தை பெற்றிராத இன்னொரு சகோதரன் நான் ஒன்றை

சொல்ல விரும்புகிறேன். நான் சகோதரன் பிரின்சோடு சம்மதிக்கிறேன். இது உண்மையான தீர்க்கதரிசனம் அல்ல. மூன்றாவதாக ஒரு சகோதரன் எழுந்து நின்று அதையே கூறினார். ஆம். இந்த சூழ்நிலையை ஒரு ஆவிக்குரிய விதமாக தீர்த்தோம். பிறரும் நிதானித்து அவர்களின் ஏக மனதான முடிவைக் கொடுத்துள்ளனர்.

அந்த மனிதன் வாயடைத்துப் போனார். அவர் திரும்ப கூட்டத்திற்கு வர மாட்டார் என்று எண்ணினேன். ஆனால் அந்த ஞாயிறு திரும்ப வந்து மரியாதையாகவும், கண்ணியமாகவும் நடந்து கொண்டார். அந்த நாளிலே, எல்லாம் ஒழுங்கான பின்பு அம்மக்களிடம் நான் சொன்னேன். 'நான் செய்ததை ஏன் செய்தேன் என்று உங்களிடம் சொல்ல விரும்புகிறேன். முதல் வரிசைகளில் இரண்டு வரிசைகளும் இளமையான மக்கள் (இளம் வாலிபர் மற்றும் கல்லூரி மாணவர்கள்) அமர்ந்திருந்தனர். அந்த மனிதன் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, அவர்கள் முகங்களைப் பார்த்தேன். அவர்கள் முகங்கள் ஒன்றை காட்டியது. இது போலியானது. அந்த இளம் மக்களைப் பார்த்து, உங்களோடு சம்மதிக்கிறேன் என சொல்ல விரும்புகிறேன். மூப்பர்களும், முக்கியஸ்தர்களும் தவறானதை சரி என்று எண்ணி, சபையில் மதிப்பையும் அந்தஸ்தையும் பெற விரும்புவதால், அநேக இளைஞர்கள் பரிசுத்த ஆவியைப் பற்றியும், அவரின் வரங்களைப் பற்றியும் அறிய முடியாமல் போய்விடுகிறது.

தேவன் நடாத நாற்றை வேரோடு பிடுங்கிப் போட ஒரு காலம் உண்டு எனினும் இறுதி நோக்கம் நடுவதற்கே ஆகும்...

பொதுவாக கூறின் அந்த சூழ்நிலையில் நான் சரியானதைச் செய்தேன் என நம்புகிறேன். பொதுவாக, ஒரு மனிதனை பல்லவிகள் பாடி தாழ்த்திவிடவோ அல்லது ஆமென் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று பாராட்டவோதான் நமது சமயம் எல்லாம் சரியாக இல்லாதபோது, எல்லாம் சரிதான் என்று முடிவாக சொல்ல முயற்சிக்கிறது. அதனால் தேவன் பிரியப்படுத்தப்படுவதில்லை. நாம் தீர்க்கதரிசனம் சொல்லும் முறையை கடைப்பிடித்தோமெனில், வேதம் கற்பிக்கும் தீர்ப்பளிப்பதையோ அல்லது அதை பகுத்தறிவு சொய்வதையோ

பின்பற்ற வேண்டும். அதை சோதிக்காமல், தீர்க்கதரிசனம் சொல்லுவது அது ஒரு ஆபத்தானது.

விளையாட்டுப் போட்டி காரில் அதன் ஓட்டும் மற்றும் நிறுத்தும் கருவிகளை சோதனை செய்யாமல் அவனை துரிதமாக காரை ஓட்டச் செய்வதுபோல அமையும். அவன் ஒரு அழிவை சந்திக்க நேரிடும். தீர்க்கதரிசன வரத்தை தவறாக உபயோகித்து, குடும்பங்கள் உடைக்கப்படுவதையும், சபைகள் பிரிவினைப்படுவதையும் மக்கள் பொருளாதார அழிவை சந்திப்பதையும் அதிக அதிகமாய் பார்த்திருக்கிறேன். தீர்க்கதரிசனம் மிகவும் வல்லமையுள்ள கருவி. அதை தவறாக உபயோகித்தால், மக்கள் அழிக்கப்பட தவறாக பயன்படுத்தப்படலாம்.

தேவன் தமது மக்களை கண்டித்து சிட்சிக்கும் ஒரு காலம் உண்டு. அதற்கு ஒரு இடம் உண்டு ஆனால் அது அவரது கடைசி வார்த்தை இல்லை. எரேமியாவின் உதாரணத்தைப் பார்ப்போம். கடவுள் அவனை ஒரு தீர்க்கதரிசியாக அனுப்பினார். 'நான் உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்... இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன். பார், பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்றையதினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின் மேலும் ஏற்படுத்தினேன். (எரேமியா 1:5, 9-10). தேவன் நடாததை வேரோடே பிடுங்கி எறிவதற்கு ஒரு காலம் உண்டு. இயேசு சொன்னார். 'என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் (மத்தேயு 15:23) என்றாலும் இறுதி நோக்கம் நடுதலே. இதைப் போன்றே கீழே விழத்தள்ளுவதற்கும், அழித்துப் போடுவதற்கும் ஒரு இடம் உண்டு. ஆனால் இறுதியான நோக்கம் கட்டுவதற்கே ஆகும். நாம் நேர் அளவை அடையாவிடில், பரிசுத்த ஆவியுடன் நாம் நடைபோடவில்லை. தேவ மக்களோடு அவரின் செய்கைகள் யாவும் நலமானதும், பெற்றுக் கொள்வதாய் இருந்து, கட்டி எழுப்ப வேண்டியதாக இருக்கும்.

2 கொரிந்தியரில் பவுல் இந்த கோட்பாடை பிரதிபலிக்கிறார். கொரிந்து சபையை சீர்படுத்த கடினமான வார்த்தைகளை உபயோகிக்கிறார். தனது அதிகாரத்தையும் அவர் நிலைநாட்டி சந்தேகத்தை போக்குகிறார். இதை செய்து முடித்து அவர் சொல்லுகிறார். 'மேலும் உங்களை நிர்மூலமாக்குகிறதற்கல்ல, உங்களை ஊன்றக்

கட்டுகிறதற்குக் கர்த்தர் எங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தை குறித்து, நான் இன்னும் சற்றே அதிகமாய் மேன்மை பாராட்டினாலும் நான் வெட்கப்படுவதில்லை. (2 கொரிந்தியர் 10:8) ஒரு அப்போஸ்தலனாக பவுலுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம், அழிப்பதற்கல்ல, நல் ஒழுக்க போதனை கொடுப்பதற்கே ஆகும். இதே பாணியில் தான் பின்வரும் ஒரு அதிகாரத்தில் பவுல் எழுதுகிறார். “ஆனதால் இடித்துப்போடவல்ல, ஊன்றக் கட்டவே கர்த்தர் என்குக் கொடுத்த அதிகாரத்தின் படி நான் உங்களிடத்தில் வந்திருக்கும் போது, கண்டிதம் பண்ணாதபடிக்கு, நான் தூரமாயிருந்து இவைகளை எழுதுகிறேன்.” (2 கொரிந்தியர் 13:10)

பரிசுத்த ஆவியானவர் நம்மை சீரடைய நாம் உண்மையை உணரச் செய்வார். கடிந்துரைத்தலுக்கும், மெய்பிப்பிக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. மெய்ப்பிப்பு அல்லது குற்ற உணர்வு செய்தல் திட்டவட்டமானது. நீ ஒரு பொய் சொன்னால் அல்லது பணத்தை களவு செய்தால் அவர் உன்னை உணர்த்தி, நீ சரி செய்தாக வேண்டும் அல்லது திருப்பிக் கொடுத்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்பார். உணர்த்தப்படுதல் ஒரு போதும் திட்டமிட்தாகவோ அல்லது தெளிவாக இல்லாமலோ இருப்பதில்லை. நீ குறிப்பாக செய்ய வேண்டியதற்கு அது எப்போதும் வழிநடத்தும். கண்டனம் செய்வது தெளிவற்றதாய் இருக்கும். பிசாசின் ஒரு குற்றச்சாட்டை நீ ஆணியடித்தால், அவன் மேலும் நான்கு குற்றச்சாட்டுகளைக் கொண்டு வருவான். கண்டனப் படுத்தும் பகுதிக்குள் நீ செல்லும் போது, நீ பரிசுத்த ஆவியின் செயல்பாட்டிற்கு வெளியே இருக்கிறாய். ஒரு எலியிடம் பூனை விளையாடுது போல், சாத்தான் உன்னிடம் விளையாடுவான். துர் அதிர்ஷ்டவசமாக பிரசங்கிமார்கள் அல்லது ஊழியம் செய்கிறோம் என்று கூறுபவர் பிசாசின் வேலையை அவனுக்காக செய்கிறார்கள்.

சோதனை 2 இது வேத வாக்கியங்களுக்கு பொருந்துகிறதா?

இரண்டாம் சோதனை யாதெனில் தீர்க்கதரிசனம் வேத வாக்கியங்களோடு ஒத்துப்போகிறதா என்பதாகும். “தீமோத்தேயு 3:16 கூறுகிறது. ‘வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும்,

எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும், பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.'' எல்லா வேத வாக்கியங்களுக்கும் பின் உள்ள அதிகாரம் பரிசுத்த ஆவியானவரே ஆகும். அவர் ஒருபோதும் தன்னை மறுத்து பேசுகிறவர் அல்ல. தீர்க்கதரிசனத்தில் கொடுக்கப்பட்டவை, வேதத்தின் எழுத்துக்கோ அல்லது ஆவிக்கோ, எதிர் மறையாக இருக்காது. கடவுளின் வார்த்தையின் ஒரே நிலையைக் குறித்துப் பவுல் எழுதுகிறார்.

> 'இப்படி நான் யோசித்தது வீணாக யோசித்தேனோ? அல்லது ஆம் ஆம் என்கிறதும், அல்ல அல்ல என்கிறதும், என்னிடத்திலே இருக்கத்தக்கதாக, நான் யோசிக்கிறவைகளை மாம்சத்தின்படி யோசிக்கிறேனோ? நாங்கள் உங்களுக்குச் சொன்ன வார்த்தை ஆம் அல்ல என்று இருக்கவில்லை. அதற்கு உண்மையுள்ள தேவனே சாட்சி. என்னாலும், சில்வாவினாலும், தீமோத்தேயுவினாலும், உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஆம் என்றும் அல்ல என்றும் இராமல் ஆம் என்றே இருக்கிறார். எங்கள் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.
>
> *(2 கொரிந்தியர் 1:1720)*

தீர்க்கதரிசனத்தில் கொடுக்கப்பட்டவை, வேதத்தின் எழுத்துக்கோ அல்லது ஆவிக்கோ, எதிர் மறையாக இருக்காது.

தீர்க்கதரிசனத்தில் கொடுக்கப்பட்ட எதுவும் வேதவாக்கியங்களின் எழுத்துக்கோ அல்லது ஆவிக்கோ எதிர்மறையாக ஒரு போதும் இருக்காது.

ஏசாயாவின் வார்த்தைகளும், இந்த தீர்க்கதரிசனத்தின் வேதவசன சோதனையில் மிகவும் பொருந்துவதாகக் காணப்படுகிறது. 'அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டியதல்லவோ? உருயிள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ?' (ஏசாயா 8:19). உங்களுக்கு ஒரு பதில்

வேண்டுமானால் கடவுளிடம் தவிர, வேறு எவரிடமும் செல்ல வேண்டியதில்லை. உயிருடன் இருப்போரை காண, செத்துப்போனவரிடம் ஏன் செல்லவேண்டும்? இறந்துபோனவருடன் முயற்சித்த ஐக்கியத்தை குறித்து இப்பாகம் பேசுகிறது. இது புதிதான ஓர் வழக்கம் அல்ல. இது தன்னை வெளிகாட்டின நாளிலிருந்து சர்வ வல்ல தேவனின் சாபத்தின் கீழேயே இருந்தது. இது தான் கடவுளின் பதில். 'வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும். (கடவுளின் எழுதப்பட்ட வார்த்தை). இந்த வார்த்தையின்படி சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.' (வசனம் 20). வேத வசனங்களின்படி அவர்கள் பேசாவிட்டால், அவர்களில் இருந்து அவர்கள் மூலமாய் பேசுவது பரிசுத்த ஆவியானவர் இல்லை. உண்மையான எல்லா தீர்க்கதரிசனத்தின் ஆவி பரிசுத்த ஆவியானவரே.

சோதனை 3. கிறிஸ்துவோடு தீர்க்கதரிசியின் உறவு என்ன?

மூன்றாம் சோதனை யாதெனில் இயேசுகிறிஸ்துவோடு தீர்க்கதரிசி வைத்துக் கொள்ளும் தொடர்பைப்பற்றியதாகும். யோவான் 16:13-14 கூறுகிறது. 'சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.' பரிசுத்த ஆவியின் தனி சிறந்த குணம் யாதெனில் அவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையே எப்போதும் மகிமைப்படுத்துவார். வரப்போகும் காரியங்களை நமக்கு வெளிப்படுத்தப் போகிறது உண்மை தான். ஆனால் இயேசுவை மகிமைப்படுத்தும் வகையிலே இதை எப்போதும் செய்வார். எந்த ஒரு வெளிப்பாடு, கொள்கை அல்லது தீர்க்கதரிசனத்தோடு யாராவது உங்களிடத்தில் இவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து எந்த நோக்கம் வைத்திருக்கிறார் என்பதை நீங்கள் உங்களைத் தானே கேட்டுக் கொள்ள வேண்டும். அவர் உண்மையாகவே உயர்த்தி மகிமை செலுத்துகிறார்? அவருக்கு மட்டுமே உள்ளதான முக்கியத்துவத்தைக் கொடுக்கிறாரா?

வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் அப்போஸ்தலர் எழுதினார். 'அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப்பார்; உன்னோடும் இயேசுவை குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்க கூட, நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனை தொழுதுகொள். இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான். (வெளிப்படுத்தின விசேஷம் 19:10) எல்லா உண்மையான தீர்க்கதரிசனத்தின் ஆவி-முதலாவதாக கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனத்திலிருந்து கடைசியாக கொடுக்கப்படும் தீர்க்கதரிசனம் வரை - இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுப்பதையே மையமாகக் கொண்டுள்ளது. சாட்சி கொடுப்பதிலிருந்து வேறுபட்டு, இயேசுகிறிஸ்துவை உயர்த்தாமல் இருப்பவை, பரிசுத்த ஆவியால் கொடுக்கப்பட்டவை அல்ல.

இயேசுவுக்கு தங்கள் வாழ்க்கையில் முதலிடம் கொடுப்பதற்கு பதில், மக்கள் அநேக பதிலாட்களை வைத்திருக்கிறார்கள். சிலர், ஒரு மனிதனை ஒரு ஆசிரியர் அல்லது பிரசங்கியாரை அவருக்கு மேல் வைக்கிறார்கள். பிறர் ஒரு சபை பிரிவுக்கோ, அல்லது ஒரு சபைக்கோ அல்லது ஒரு கூட்டத்தாருக்கோ முதலிடம் கொடுப்பார்கள். 'நீங்கள் சரியாக இருக்க வேண்டுமானால் எங்களுடன் சேருங்கள்' என்பர். அவர்களோடு சேர்ந்த பின், நீங்கள் செய்தது தவறு என்று உணர்வீர்கள். இப்பேர்பட்ட ஆவி உடைய எந்தப் பிரிவும் தவறானதே.

கொலோசெயர் 1:18 இல் நாம் வாசிக்கிறோம். அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். எல்லாவற்றிலும் **என்பது தீர்க்கதரிசனத்தையும் உள்ளடக்கியது.**

சோதனை 4: தீர்க்கதரிசியும், தீர்க்கதரிசனமும் நல்ல கனி தருகிறதா?

தீர்க்கதரிசனத்தின் நான்காவது சோதனை அதின் கனியே. கலாத்தியர் 5:22-23 ஆவியின் ஒன்பது வகையான கனியின் வரிசையை கொண்டுள்ளது. அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். **எனவே நாம் இந்தக்**

கேள்வியைக் கேட்க வேண்டும்: தீர்க்கதரிசியும், தீர்க்கதரிசனமும் ஆவியின் இந்த பண்புகளுக்கு ஒத்திருக்கிறதா?

ரோமர் 14:7ல் தேவனுடைய இராஜ்யமும், சுவிசேஷமும் எதைப் பற்றியது என்பதை மிகத்தெளிவான கூற்றும் நமக்கு இருக்கிறது. "*தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.*" தேவனுடைய இராஜ்யம் என்பது நீ எதை சாப்பிட வேண்டும், எதை அணிய வேண்டும், எதை அணியக் கூடாது, எங்கு செல்லலாம், எங்கு செல்லக் கூடாது என்ற ஸ்தாபன சட்டங்கள் அல்ல. அது மூன்று பொருட்கள் அடங்கியது - பரிசுத்த ஆவியில் நீதி, சமாதானம் மற்றும் மகிழ்ச்சி என்பதே.

மகிழ்ச்சி அடையவும், கைகளைக் கொட்டி தேவனை துதித்து சந்தோஷமாக நேரத்தை செலவழிக்கும் மக்களோடு நான் இருந்திருக்கிறேன். ஆனால் முடிவில் அவை நம்மை நாமே ஏமாற்றுவதாகவே அமைந்துள்ளது. இத்தகைய குழுக்களில் நடைபெறுவதெல்லாம் தன் இஷ்டபட்டவைகளே. தேவனின் நீதியைப் பற்றிய தேவைகளை அவை சந்திப்பதில்லை. பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அதிகம் பேசுகிறோம். ஆனால் அவர் பரிசுத்தமானவர் என்பதை மறந்து விடுகிறோம். அவர் பரிசுத்தத்தின் ஆவியானவர்.

தேவனுடைய வார்த்தையின்படி வாழ வேண்டும் என்று கூறாமல் பிறரை மகிழ்ச்சியாக்க விரும்பும் போலி மக்களை நான் சந்தித்திருக்கிறேன். இது தேவன் வாக்குப் பண்ணின விளைவுகளை உண்டாக்காது. அவர் வழி நீதி, சமாதானம் மற்றும் பரிசுத்த ஆவியில் மகிழ்ச்சியாகும்.

கெட்ட கனிகளைக் குறித்து இயேசு மத்தேயு 7:15 இல் குறிப்பாக எச்சரித்துள்ளார். கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். ஆடு கிறிஸ்தவ சீஷனைக் குறிக்கிறது. ஓநாய் ஆடுகளின் சுபாவ விரோதி. அவைகளை அழிக்கவே அது வருகிறது. ஓநாய் ஆட்டுத் தோலை போர்த்திக் கொள்வதின் நோக்கமென்ன? ஒரு ஆட்டைப் போல் கடந்து சென்று, ஆடுகளை அழிப்பதே அதன் நோக்கமாகும். ஓநாய் வேஷம் மாறாமல் வந்திருக்குமானால், அவ்வளவு பயங்கரமாய் இருந்திருக்காது.

ஆனால் ஆட்டின் தோலை போர்த்துக் கொண்டு வருமானால், அது பயங்கரமாய் இருக்கும். இது அநேக கள்ளத் தீர்க்கதரிசிகளின் சுபாவமே. அவர்கள் எவற்றை நம்புகிறார்கள் என்று சொல்ல மாட்டார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு அவர்கள் வருவார்கள். சுவிசேஷத்தின் செய்தியை சொல்வதாகவும், மேலான வெளிப்பாட்டைப் பெற்றுள்ளதாகவும், உங்களை நீங்கள் இதுவரை பெற்றிராத புதிய அனுபவத்துக்குள் வழி நடத்துவதாகவும் தங்களைக் காட்டிக் கொள்வார்கள்.

ஒரு ஆட்டு மேய்ப்பனால்தான் ஆடுகள் மத்தியில் வந்துள்ள ஓநாயை கண்டுகொள்ள முடியும். ஆட்டை பாதுகாக்கும் தாய், தன் பார்வையினால் அல்ல, மோப்பத்தால் அதை கண்டுவிடும். வேதாகமத்தில் இப்பேற்பட்ட வாசனையின் அறிவு, பரிசுத்த ஆவியின் பகுத்தறிவை குறிப்பிடுகிறது. தேவனின் மந்தைக்கு பொறுப்பாய் இருப்போர், அழகான வெள்ளை ஆட்டுத்தோலை போர்த்து அலைகிற ஓநாய்களை இனம் கண்டுகொள்ள கூடுதல் ஞான அறிவு பெற்றிருக்க வேண்டும். இந்த பகுத்தறிவைத் தவிர, ஒரு தீர்க்கதரிசி உண்மையானவரா அல்லது பொய்யானவரா என்று அறிந்து கொள்ள இயேசு ஒரு வெளிப்படையான வழியைக் காண்பித்தார். கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறித்து, எச்சரித்துவிட்டு அவர் கூறினார் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? (மத்தேயு 7:16). நீங்கள் ஒரு பழத்தை பறிக்க செல்லும்போது, ஒரு முள் குத்துமானால், ஒரு திராட்சை பழத்தை எதிர்பாராதிருங்கள். அதை திராட்சை செடி என்று அழைக்காதிருங்கள். ஏனெனில், திராட்சை செடி முட்களை உண்டுபண்ணாது.

தேவனின் மந்தைக்கு பொறுப்பாய் இருப்போர் ஓநாய்களை இனம் கண்டு கொள்ள கூடுதல் ஞான அறிவு பெற்றிருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியின் கனியாய் இராமல், பொதுவான கனியின் வெளிப்பாடாக பின்வரும் பட்டியல் அமைகிறது. இவைகளை நாம் பகுத்தறிய கற்றுக் கொள்ள வேண்டும். தங்களை பிரசங்கிமார்,

சுவிசேஷகர்கள், இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அல்லது தீர்க்கதரிசிகள் என்று அழைத்து கொள்வோரின் வாழ்க்கையில் இவைகளைக் கண்டுள்ளேன்: பெருமை, அகங்காரம், தற்புகழ்ச்சியடைதல், மிகைப்படக் கூறுதல் அல்லது நேர்மையின்மை, இச்சித்தல், பொருளாதார பொறுப்பின்மை, பசி ஆர்வத்திற்கு அடிமையாகுதல், வேசித்தனம், திருமண வாக்குறுதிகளை மீறுதல் மற்றும் உடைப்பட்ட குடும்பங்கள் முதலியன. ஒரு பட்டணத்திற்கு ஒரு விருந்தினர் பிரசங்கியார் வரும்போது, அவர் பிறர் வாகனத்தையோ, மனைவியையோ எடுத்துக் கொண்டு போவாரோ என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். தான் செலுத்த வேண்டிய தொகையை தானே செலுத்துகிறாரோ அல்லது பிறர் அதை கொடுக்கும்படி செய்கிறாரோ? விருந்து ஊழியர்களைப் பற்றி அநேக முக்கியமான கேள்விகளை கேட்க வேண்டியதுள்ளது. நீங்கள் கேட்காவிடில், ஒரு நாள் நீங்கள் கவலைப்பட நேரிடும்.

கள்ளத் தீர்க்கதரிசிகளையும், பொய்யான கனியைப் பற்றியும் அவர் எச்சரித்து மருளற்ற வார்த்தைகளைப் பேசினார்.

> பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.
>
> *(மத்தேயு 7:21-23)*

ஒரு மனிதன் தீர்க்கதரிசனம் கூறுவதால், பிரசங்கிப்பதால், பிசாசுகளை விரட்டுவதால் மேலும் அற்புதங்களைச் செய்வதால், அவன் சரியாகத்தான் வாழ்கிறான் என்பதை நிரூபிக்க முடியாது.

வரங்களுக்கும், கனிக்கும் உள்ள வித்தியாசத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள் - ஒரு வரத்தைப்

பெற்றுக்கொண்டு, மேலும் கிறிஸ்துவின் குணநலன்களை தொடர்பாக விருத்தி செய்துகொள்வது போலாகும். இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்திவிட்டு, தவறாக வாழ முடியும். தீர்க்கதரிசனம் கூறி, தவறாக வாழ முடியும். அற்புதங்களைச் செய்துகொண்டு, பிறர் மனைவியோடு வாழ்ந்துகொண்டு, பணத்தைத் திருடி அல்லது பொய் சொல்லலாம். இப்படி செய்தவர்களை அல்லது செய்துகொண்டிருப்பவர்களை நான் அறிவேன். இதற்கான அதிகாரம் இயேசுவின் நாமத்திலும், விசுவாசத்திலும் அடங்கியிருக்கிறது. விசுவாசத்தில் இயேசுவின் நாமத்தில் எவரும் காரியத்தைச் செய்யும்போது, தேவன் கிரியை செய்ய வாக்குக் கொடுத்திருக்கிறார். அதனால் ஒருவர் தீர்க்கதரிசனம் சொல்லுவது, பிரசங்கிப்பது, பிசாசுகளை துரத்துவது, மேலும் அற்புதங்களைச் செய்வது, அவர் சரியாக வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்பதற்கு ஒரே ஒரு திட்டமான சாட்சி உண்டு. அவர் உண்மையாகவே அப்படியே வாழ வேண்டும். சரியாக வாழாதவர்கள் பரலோகத்திற்குச் செல்ல முடியாது. இது எளிமையானதுதான். நாம் அதிக உணர்ச்சி, ஈடுபாடு, மேலும் சோம்பலான நினைவுகளினால் இழ்ன் முக்கியத்துவத்தை குறைத்துவிட்டோம்.

தனது இரண்டாவது நிருபத்தில் பேதுரு அப்போஸ்தலர் கள்ளப் போதகர்களைக் குறித்து எச்சரித்தார்.

> இவர்களோ பிடிபட்டழிக்கப்படுவதற்கு உண்டான புத்தியற்ற மிருகஜீவன்களைப்போலத் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷித்து, தங்கள் கேட்டிலே கெட்டழிந்து, அநீதத்தின் பலனை அடைவார்கள். இவர்கள் ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, கறைகளும் இலச்சைகளுமாயிருந்து; உங்களோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்; விபசாரமயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள். செம்மையான வழியைவிட்டுத் தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப்போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி, தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்துகொள்ளப்பட்டான்,
>
> *(2 பேதுரு 2:12-15)*

இப்பேர்பட்ட கள்ளப் போதகர்கள் அன்பின் விருந்துகளில் கலந்துகொள்கிறார்கள். இராப்போஜனத்தில் பங்குபெறுகிறார்கள். ஆனால் அசுத்தமும், வெறுக்கப்படத்தக்கவர்களாய் இருக்கிறார்கள். ஒரு சபையிலுள்ளவர்கள் இவர்கள் கூறும் பொய்யை எப்படி ஏற்றுக்கொள்கிறார்களோ? அவர்கள் நம்புவதை எப்படி நம்புகிறார்கள் என உங்களால் நினைக்கவே முடியாது. உண்மையைத் தவிர எதையும் அவர்கள் நம்புவார்கள்.

தங்கள் கேட்டிலே கெட்டழிந்து, பிலேயாமின் வழியைப் பின்பற்றிய இருதயத்தையுடைய கள்ளப் போதகர்கள் என்று பேதுரு இவர்களைப் பற்றி ஏறெடுக்கிறார். மற்ற வார்த்தைகளில் கூறவேண்டுமானால், இவர்கள் பணத்தை இச்சிக்கிறவர்கள். இதுவே, பிலேயாமின் பிரச்சனையாகும். பிலேயாம் ஒரு தீர்க்கதரிசி தானே? ஆம். எண்ணாகமம் 23:25ஐ நீங்கள் படிக்கும்போது, பிலேயாம் உதடுகளிலிருந்து வந்த அழகான தீர்க்கதரிசனங்களை வேத புத்தகத்தில் வேறெங்கும் காணமாட்டீர்கள். எனினும் அவன் இருதயம் சரியானதாய் இருக்கவில்லை.

பிலேயாம் பழைய ஏற்பாட்டில் மூன்று முறைகள் தான் காணப்படுகிறார். ஆனால் புதிய ஏற்பாட்டில் ஒரு எச்சரிப்பின் அடையாளமாக அநேக முறைகள் மேற்கோள் காட்டப்படுகிறார். மோவாபியரின் அரசன் பாலாக், பிலேயாமிடம் இஸ்ரவேலை சபிக்கும்படி கூறினான். ஆனால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனெனில், அவன் தீர்க்கதரிசனம் உரைத்தபோது அவன் உண்மையைத் தவிர வேறொன்றையும் குறித்து பேசமுடியவில்லை. தேவன் சொல்ல சொன்னதையே அவன் பேசினான். பிலேயாம் உண்மையாய் நடைபெற முடியாத நல்ல எண்ணத்தையே கூறினான்.

யாக்கோபின் தூளை எண்ணத்தக்கவன் யார்? இஸ்ரவேலின் காற்பங்கை எண்ணுகிறவன் யார்? நீதிமான் மரிப்பது போல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக என்றான். (எண்ணாகமம் 23:10)

இது வெறும் வெளிப்படையான ஆசை தான். பிலேயாம் பொருளாசை உடையவனாய் இருந்தான். ஒரு நீதியான வாழ்க்கை வாழ்வதைவிட பணமே அவனுக்கு அதிக முக்கியமாக இருந்தது. இஸ்ரவேலின் மக்களால் அவன் கொல்லப்பட்டான். யோசுவாவின்

புத்தகத்தில் மனாசேயின் புத்திரர்கள் யோர்தானுக்கு கீழ்புறத்திலுள்ள தங்கள் சுதந்திரபாகத்துக்குள் நுழைந்தனர். இஸ்ரவேல் புத்திரர் வெட்டின மற்றவர்களோடுங்கூட, பேயோரின் குமாரனாகிய பாலாம் என்னும் குறிசொல்லுகிறவனையும் பட்டயத்தினால் வெட்டிப்போட்டார்கள். (யோசுவா 13:22) பிலேயாம் நீதிமான் மரிப்பதுபோல் சாகவில்லை. நீதிமானின் வாழ்க்கையை அவன் வாழவும் இல்லை. பணத்திற்கான ஆசை அவனை தப்பிதமாய் வழிநடத்தியது. முன்பு நான் எழுதினது போன்று ஒரு வரத்தை சுய லாபத்திற்காக உபயோகிப்பது ஆவிக்குரிய வரங்களை வல்லமையோடு உபயோகிப்பதில் சிலருக்கு சோதனையாக அமைகிறது. ஒரு தீர்க்கதரிசனத்தையும் அதன் விழைவுகளையும் நாம் மதிப்பீடு செய்யும்போது ஒரு தீர்க்கதரிசியின் கனியையும், குணநலன்களையும் நாம் கவனிக்க வேண்டும்.

சோதனை 5: தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களின் முன்னறிவுப்பு உண்மையானதா?

எதிர்காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனம் முன்னறிவிப்பாகச் சொல்லப்பட்டு அது நிறைவேறாவிட்டால் அது தேவனிடத்திலிருந்து வந்ததல்ல. உபாகமத்திலிருந்து கர்த்தர் சொல்லும் ஒரு பகுதியைக் காணலாம்.

> சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத் துணியும் தீர்க்கதரிசியும், வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக்கடவன். கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வாயாகில், ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும்போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி

ஒரு தீர்க்கதரிசனத்தையும் அதன் விளைவுகளையும் நாம் மதிப்பீடு செய்யும்போது அத்தீர்க்கதரிசியின் கனிகொடுத்தலையும் குணநலன்களையும் நாம் கவனிக்க வேண்டும்.

அதைத் துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்படவேண்டாம்.
(உபாகமம் 18:20-22)

ஒரு மனிதன் முன்னறிவிப்பாக சொல்லி அது நடக்காமல் போனால் கர்த்தருடைய வார்த்தை மிக எளிமையாகவும் தத்ரூபமாகவும் சொல்லுவதாவது இது தேவனால் பேசப்பட்டதல்ல. ஏனெனில் தேவன் பேசியிருந்தால் அது நிறைவேறியிருக்கும். இப்படிப்பட்ட மனிதர்களைப் பற்றி நாம் பயப்பட வேண்டாம். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி அந்த தீர்க்கதரிசி கொல்லப்பட வேண்டும். தனது ஜனங்களை ஏமாற்றுகிறவர்களுக்கு தேவன் இப்படித்தான் பதிலளிப்பார்.

தீர்க்கதரிசனம் சொல்லும் ஒரு மனிதன் தவறு செய்வதை நாம் உணர வேண்டும். தனக்குக் கொடுக்கப்பட்ட வரத்தின் எல்லைகளைக் கடந்து இவ்வாறு செய்யலாம். அவன் சரியான வழியில் ஆரம்பிக்கிறான். வெகுதூரம் சென்று விடுகிறான். நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்ககதரிசனங்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். (ரோமர் 12:6) ஜனங்கள் பரிசுத்த ஆவியினால் தீர்க்கதரிசனங் சொல்ல ஆரம்பித்து உணர்ச்சி வசப்பட்டு, உற்சாகம் பெற்று பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்டவற்றைத் தாண்டி அப்பால் சென்றுவிடுகிறார்கள். இதைப்போன்ற மனிதர்களை நான் அறிவேன். ஜனங்கள் வஞ்சிக்கப்படக் கூடாது. அவர்கள் கள்ளத் தீர்க்கதரிசிகள் அல்ல. ஆனால் அவர்கள் ஆவியானவரின் வழிநடத்துதலிலிருந்து வழிவிலகி, சரீரத்திற்குள் திரும்பவும் சென்றுவிடுகிறார்கள்.

தேவன் கொடுத்த விசுவாச அளவின்படி பூரணமாய் தீர்க்கதரிசனம் உரைக்கலாம்.

இதைக் குறித்து தேவன் நம்மை எச்சரிக்கிறார். அவனவனுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட விசுவாசத்தின்படி தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும். பவுல் (ரோமர் 12:3) ஆம் வசனத்தில் பேசும்பொழுது தேவன் கொடுத்த விசுவாச அளவின்படி பூரணமாய் தீர்க்கதரிசனம் உரைக்கலாம். அவ்விசுவாச அளவைத் தாண்டினால், நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் உதவியால் செயல்படவில்லை, உங்கள் ஆள்

தத்துவத்தின்படி, உங்களுக்கு விருப்பான முறையில் செயல்படுகிறீர்கள் என்பதை அறிந்துகொள்ளலாம்.

சோதனை 6: தீர்க்கதரிசனம் தேவனுக்குக் கீழ்ப்படிதலை அதிகரிக்குமா?

இச்சோதனை மிகவும் தேவையானது. தீர்க்கதரிசனம் உரைத்தபடி நடைபெறாவிடில், நாம் கள்ளத் தீர்க்கதரிசிகளோடு ஈடுபடுகிறோம் என்பதாக ஐந்தாம் சோதனை உரைக்கிறது. எனவே ஒரு தீர்க்கதரிசி உரைத்தது உரைத்தபடி நடக்காவிட்டால் அது கள்ளத் தீர்க்கதரிசனம் என எளிதாக நாம் முடிவெடுக்கலாம். என்றாலும் இம்முடிவு எப்பொழுதும் பொருத்தமானதாக இருக்க முடியாது. தீர்க்கதரிசனமாக, நடக்கப் போவதை முன்னறிவித்தாலும், அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட வெறிப்பாடுகளை உரைத்தாலும் கூட, ஒருவேளை அது தேவனுக்கும், தேவ வசனத்துக்கும் எதிரான கீழ்படியாமையை உண்டுபண்ணும்.

இதுபற்றி உபாகமம் புத்தகத்தில் நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

உபாகமம் 13:1-5 இல்

உங்களுக்குள்ளே ஒரு தீர்க்கதரிசியாகிலும், சொப்பனக்காரனாகிலும் எழும்பி: நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவிப்போம் வாருங்கள் என்று சொல்லி, உங்களுக்கு ஒரு அடையாளத்தையும் அற்புதத்தையும் காண்பிப்பேன் என்று குறிப்பாய்ச் சொன்னாலும், அவன் சொன்ன அடையாளமும் அற்புதமும் நடந்தாலும், அந்தத் தீர்க்கதரிசியாகிலும், அந்தச் சொப்பனக்காரனாகிலும் சொல்லுகிறவைகளைக் கேளாதிருப்பீர்களாக; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார். நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பின்பற்றி, அவருக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவர் சத்தத்தைக் கேட்டு, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக்கொள்வீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியும், அந்தச் சொப்பனக்காரனும் கொலைசெய்யப்படக்கடவன்; நீங்கள் நடக்கும்படிஉங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்க விதித்த வழியை விட்டு உங்களை

> விலக்கும்படி, அவன், உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவரும் உங்களை அடிமைத்தன வீட்டிலிருந்து நீங்கலாக்கி மீட்டுக்கொண்டவருமான உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமான துரோகப் பேச்சைப் பேசினான்; இப்படிப்பட்ட தீமையை உங்களிடத்திலிருந்து விலக்குவீர்களாக.

என்று கூறுகிறது.

இப்பகுதியிலிருந்து ஒரு மனிதன் இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளத்தைக் கூறி, அது நிறைவேறினாலும் அவன் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி, அவன் சாத்தானின் ஊழியக்காரன் என்பதை நாம் தெரிந்துகொள்கிறோம். மக்களைத் தேவனுக்குக் கீழ்ப்படிவதிலிருந்து பிரித்துத் தன் பக்கம் இருத்துக்கொள்வது அவன் நோக்கமாகும்.

ஆப்பிரிக்காவில் இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி நடந்ததை நான் பார்த்திருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் இரு குடும்பத்தினர் சண்டைபோட்டனர். இது சாதாரண விஷயம்தான். அதில் ஒரு குடும்பம் பில்லி சூனிய மருத்துவரிடம் சென்று மற்ற குடும்பத்திற்கு விரோதமாக ஒரு ஏவலை வைக்கும்படி வேண்டினர். அதற்கு அவனுக்கு ஒரு ஆட்டைக் கொடுத்தனர். அவன் அக்குடும்பத்திற்கு விரோதமாக ஏவல் வைத்தான். அதன்பின் அக்கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட நடு இரவில் குள்ளநரி அழும். அப்படி நரி அழும்போது அக்குடும்பத்திலுள்ள கடைசிப்பிள்ளை மரித்துவிடும் என்று கூறினான். என்ன நடந்தது உங்களுக்குத் தெரியுமா? அவன் சொன்னபடி அப்படியே நடந்தது. அவன் இயற்கைக்கு அப்பாற்பட்டு நடப்பதை முன்னறிவித்தான். அதுவும் நடந்தது. ஆனால் அவன் தேவ ஊழியக்காரனல்ல. அவன் சாத்தானுடைய ஊழியக்காரனாவான்.

பவுலினுடைய ஊழியத்திலே பவுலும், சீலாவும் பிலிப்பி பட்டணத்திற்கு முதன்முறையாக சுவிசேஷத்தை அறிவிக்க வந்தபோது நடந்த நிகழ்ச்சியை வேத வசனத்தின் எடுத்துக்காட்டு மூலம் பார்ப்போம். அப்போஸ்தலர் 16:16-18 இல்

> நாங்கள் ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர்

> உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்து கொண்டுவந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று.

என கூறப்பட்டுள்ளது.

அப்பெண் கூறியது முற்றிலும் உண்மையானது. பவுலும், சீலாவும் யார்? என்பதைச் சரியாக முதன் முதலில் கூறின முதல் ஆள் இப்பெண் தான். என்றாலும் அவள் சாத்தானின் ஊழியக்காரி. ஒரு அசுத்த ஆவி அவளை அவ்வாறு கூற வைத்தது. ஒரு பெண்ணை இவ்வாறு பயன்படுத்தின சாத்தானின் தந்திரத்தைக் கவனியுங்கள். பவுல், சீலாவின் ஊழியத்தின் மூலமாக கூடிவந்த விசவாசிகள் நிறைந்த புதிய சையில் அப்பெண்ணை வரவழைத்து செயல்படுத்த விரும்பினான். பிலிப்பி பட்டணத்திலுள்ள மக்கள் நடுவில் சவிஷேசத்தில் புதிதாக ஒன்றுமில்லை என்ற உணர்வை ஏற்படுத்த சாத்தான் விரும்பினான்.

மேலே கூறப்பட்ட பகுதியான உபாகமம் 13ஆம் அதிகாரத்திலிருந்து இங்கு ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தேவன் விதித்த வழிகளை விட்டுவிடுகிறவர்களைப் பற்றி கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு விலக்கித் தள்ளி விடுதல் (வசனம் 5) என்ற அர்த்தத்தில் குறிப்பிடுகிறது.

ஒரு தீர்க்கதரிசனம் தவறானதாய் இருந்தால் நம் உள்ளத்தில் இருக்கும் ஒருவித உணர்வு. அது பரிசுத்த ஆவியினால் உண்டானதல்ல என்பதை உணரச்செய்யும். அப்படி ஒரு உணர்வுக்குள் நீங்கள் வந்தால், எனக்குத் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டதை நான் நிறைவேற்றி முடிப்பேன் என்ற தவறான முடிவுக்கு வரக்கூடாது. அதைச் செயல்படுத்தக் கூடாது. தீர்க்கதரிசனத்தை செயல்படுத்தும் முறை இதுவல்ல.

ஒரு தீர்க்கதரிசனம் தவறானதாக இருப்பின், நம் உள்ளத்திலுள்ள ஒருவித உணர்வு அது பரிசுத்த ஆவியினால் உண்டானதல்ல என்பதை உணரச் செய்யும்.

உயிர்த்தெழுதலைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என ஒருவர் என்னை அழைத்துக் கேட்டார். நான் ஏன் என்று கேட்டேன்.

இங்கேயுள்ள சில விசுவாசிகள் மரித்துப்போன ஒரு குழந்தையை வைத்துக்கொண்டு உயிரோடே எழுந்திருக்கும் என தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்கள் எனக் கூறினார். மரித்து எத்தனை நாட்கள் ஆகின்றன என்று கேட்டேன். ஆறு வாரங்கள் என பதில் வந்தது. நீங்கள் இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என கேட்டார். அக்குழந்தை உயிரோடு எழும்பப் போவதில்லை என பதில் கூறினேன். இச்செய்தியை நீங்கள் சொன்ன உடனே இது பரிசுத்த ஆவியானவரால் உரைக்கப்பட்டதல்ல என்பதை உணர்ந்தேன். இதைத் தவிர சொல்வதற்கு எதுவுமில்லை. ஜாக்கிரதையாயிருங்கள். படிப்படியாக இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள். அக்குழந்தை உயிரோடு எழுந்தால் தொலைபேசி மூலமாய் எனக்கு அறிவியுங்கள் என்றேன். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற தேவசித்தத்தை நிறைவேற்ற விரும்பும் மக்களிடையே இப்படியான நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆவிக்குரியவர்களாக நடவுங்கள். அச்சிறுகுழந்தையை இழந்தவர்களுக்காக ஒருவேளை அனுதாபப்படலாம்.

இதைப்போன்ற அழுத்தங்களை என் சொந்த அனுபவத்தில் நான் உணர்ந்திருக்கிறேன். இது போன்ற அனபவங்கள் உங்களுக்கு இருப்பின் உடனே தடையைப் போட்டு, அந்த வாகனத்திலிருந்து கீழே இறங்குங்கள். யார் உங்களை ஓட்டிச் சென்றது என்பதைக் கண்டுபிடியுங்கள். ஏனென்றால் உங்களை நடத்தினது பரிசுத்த ஆவியானவரல்ல.

சோதனை 7: தீர்க்கதரிசனம் சுதந்தரத்தையும், சமாதானத்தையும் கொண்டு வருமா?

பவுல் 2 கொரிந்தியர் 3:17 இல்

கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.

கீழ்கண்ட வசனங்கள் மூன்று காரியங்களைத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின்

ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். (ரோமர் 8:15)

தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது. (1 கொரிந்தியர்14;33)

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (2 தீமோத்தேயு 1:7)

கட்டுகள், குழப்பங்கள், பயங்கள் ஆகியன பரிசுத்த ஆவியானவரால் வருவதல்ல.

20 வயதுள்ள ஒரு இளம்பெண் இருந்த பிரிட்டனிலுள்ள ஒரு சபையில் நாங்கள் இருந்தபோது பின்வரும் நிகழ்ச்சி நடந்தது. யாரோ ஒருவர், அந்த இளம்பெண், அந்தச் சபையிலுள்ள ஒரு வாலிபனையேத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தாராம். அப்பெண் எந்த வாலிபனையும் நேசிக்கவில்லை. அப்படியொரு திருமணம் செய்யவேண்டும் என விரும்பினதுமில்லை. அச்சபையிலுள்ள வாலிபனைத் திருமணம் செய்யாவிட்டால் தேவனுடைய வார்த்தையை மீறியவளாவேனோ, ஏதாவது அசம்பாவிதமான சம்பவம் தன் வாழ்வில் நிகழ்ந்து விடுமோ என அப்பெண் மிகவும் வேதனைப்பட்டாள். நானும், என் மனைவியும் அவளிடம் சென்று தேவன் நம்மை ஒருபோதும் பயமுறுத்தமாட்டார். அவர் நமக்குப் பயமுள்ள ஆவியைத் தரமாட்டார். நம்மைக் குழப்பத்திற்குட்படுத்தமாட்டார் என எடுத்துரைத்தோம். இது பரிசுத்த ஆவியானவர் செயல்படும் முறையுமல்ல என்று கூறி, அவள் விடுதலைப் பெற உதவினோம். அவள் வாழ்க்கையும் தீமையிலிருந்து காக்கப்பட்டது.

பலமுறை எங்கள் சபைகளில், ஜெபக் குழுக்களில், யாராவது ஒருவர்-பெரும்பாலும் பெண்-தன் தீர்க்கதரிசன வல்லமையைப் பயன்படுத்தித் தனக்குக் கீழ் பலர் தன்னைச் சார்ந்திருக்கும்படிச் செய்வாள். அவளறியாமல் அநேக சீஷர்களை அவள் தனக்கு உருவாக்குகிறாள். அக்குழுவிலுள்ளவர்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு முடிவு காணமாட்டார்கள். ஆனால் தாங்கள் அறியாத மற்றச் சகோதரிகளின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக ஓடுவார்கள். இம்முறை வேதத்திற்கு முற்றிலும் மாறானது. புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு

விசுவாசியும் ஒரு ஆசாரியன் தான். எல்லா விசுவாசிகளும் தேவனோடு நேரிடையான தொடர்பு கொள்ளலாம். தேவனிடத்திலிருந்து நேரிடையாக கேட்காவிட்டால் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் ஏதோ தவறு உள்ளது. எனவே அதைச் சரி செய்து கொள்ளுங்கள்.

சோதனை 8: தீர்க்கதரிசனமானது இணக்கமாய் ஜீவனைக் கொண்டுவருவதாக உள்ளதா?

பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசனம் கொடுத்தால் உங்களில் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தி தேவனுடைய பொதுவான சித்தத்திற்குள் உங்களை நடத்தும். ஒரு கூட்டத்தில் வரங்கள் செயல்பட்டு, தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டால், ஒருவேளை அது நலமானதாகவும், பக்திக்கடுத்ததாயும், வேதவசனங்கள் நிறைந்ததாகவும் கூட இருக்கலாம். ஆனால் அது பரிசுத்த ஆவியானவரால் வந்ததாயிராது. அது பக்தியின் வேஷம் தரித்த ஆவியினாலானது.

பின்வருவது அந்நிய பாஷைக்கு விளக்கம் கூறுதலைப் பற்றியதாகும், தீர்க்கதரிசனம் உரைத்தலுக்கும் இக்கோட்பாடே உரித்தானது. நான் தொழிலதிபர் நிறைந்த ஒரு கூட்டத்தில் பேச அழைக்கப்பட்டிருந்தேன். அங்கு ஆவியின் வரங்களைக் குறித்துப் பேசினேன். அக்கூட்டத்தின் பொறுப்பாளரிடம் தவறான காரியங்கள் எதுவும் நடக்காமல் பார்த்தக்கொள்ளும்படி நான் அவரிடம் கூறியிருந்தேன். நான் என் செய்தியை முடித்த பின்னும் ஒருவர் நின்றுகொண்டு ஆவியானவரின் துணையோடு அழகாக அந்நிய பாஷையைப் பேசிக்கொண்டிருந்தார். நாங்கள் அதன் விளக்கத்திற்குக் காத்திருந்தோம். மற்றொருவன் எழுந்திருந்து கூட்டத்திலுள்ளவர்கள் எதை நம்ப வேண்டும் என அவன் விரும்பினானோ அதையே அவன் அந்நிய பாஷையின் விளக்கமாகக் கூறினான்.

அது முற்றிலும் வேத வசனங்களோடு ஒத்திருந்தது. கடைசிக் காலத்தில் நிறைவேறக் கூடிய, மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்பன போன்ற வசனங்களாயிருந்தது. அவற்றிற்கெல்லாம் ஒத்த வசனங்களையும் கூறமுடியும். சொல்லப்போனால் இது உயிரிழந்ததும், பயனற்றதுமாகும். அதில் ஜீவனில்லை. அக்கூட்டம் முழுவதிலும் ஆவியானவர்

அசைவாடிக்கொண்டிருந்தார். ஆனால் அவன் விளக்கம் வேறு ஒரு கோட்டில் செல்வது போலிருந்தது.

அவன் விளக்கம் கூறி முடித்தபின், இப்பொழுது நான் ஏதாகிலும் செய்யவேண்டுமே, என்ன செய்வது எனச் சிந்தித்தேன். தேவன் எனக்கு ஞானத்தைத் தந்தார். நான் எழுந்து நின்று, சிறிது நேரத்திற்கு முன் ஒரு சகோதரன் தனக்குத் தெரிந்த மனப்பாட வசனங்களைக் கூறினான். இப்பொழுது நாம் அந்நிய பாஷைக்குரிய விளக்கத்தை தேவனிடம் கேட்போம் என்றேன். அக்கூட்டம் முழுவதிலும் ஒரு மயான அமைதி உண்டானது. அதன்பின் அந்நிய பாஷைக்குரிய சரியான விளக்கம் வந்தது. அது வல்லமையாகவும், தங்குதடையின்றி எல்லோருடைய உள்ளத்திலுமிருந்தும் துதியை புறப்படச் செய்தது.

பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்க்கையைத் தொடங்குகிறவராவார். சில செயல்கள் நல்லதாகவும், பக்திக்கடுத்ததாகவும் காட்சியளித்தாலும், அது உயிரற்றதாகவும், பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படாததாயும் இருக்கலாம்.

சோதனை 9: தீர்க்கதரிசனங்கள் ஒருவிதமான எச்சரிப்பை உடையதாயிருக்குமா?

தேவன் நம் உள்ளத்தில் வைத்திருக்கும் ஒருவித உணர்வு உண்மை எது? பொய் எது? என்பதை அறிந்துகொள்ள உதவுகிறது. 1 யோவான் 2:27 இவ்வாறு கூறுகிறது, நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. பரிசுத்த ஆவியின் அபிஷேகமும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும் ஒரே மாதிரியாய்ச் செயல்படுவதல்ல. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றபின், ஆவியினால் நாம் நடத்தப்பட அபிஷேகம் உதவுகிறது. நீங்கள் ஆவியானவரால் நடத்தப்பட்டால் உங்களுக்குள் இருக்கும் ஏதோ ஒன்று சாட்சி கொடுத்து உண்மை எது என்பதை உணர வைத்து தவறானதைத் தடுத்து நிறுத்தும்.

தேவன் நம் உள்ளத்தில் வைத்திருக்கும் ஒருவித உணர்வு உண்மை எது? பொய் எது? என்பதை அறிந்துகொள்ள உதவுகிறது.

நீங்கள் ஒரு கூட்டத்தில் இருக்கும்பொழுது, ஆவியின் வரங்கள் செயல்படத் தொடங்கினால், உங்களுக்குள் இருக்கும் அபிஷேகத்தின் மீது முழு கவனம் செலுத்துங்கள். செயல்பாடுகள் தவறானதாக இருப்பின் சிலருக்கு உள்ளத்தில் ஒரு வேதனை உண்டாகும். அப்படியான எச்சரிப்பைத் தேவன் தருவாராயின் நீங்கள் குதித்தெழுந்து இது கள்ளத் தீர்க்கதரிசனம் என்று சொல்ல முற்படவேண்டாம். அப்படிச் சொன்னால் நீங்கள் இக்கட்டுக்குள் செல்ல நேரிடும். ஏனென்றால் பெரும்பாலும் அத வாக்குவாதத்தில் தான் முடியும். சிலர் அது சரி என்றும், வேறு சிலர் அது தவறு என்றும் சொல்வர். இந்த இறுதி சோதனை அகத்தின் எண்ணத்தின் அடிப்படையிலானது, மற்ற எட்டுக் காரியங்களும் மனத்திற்குப் புறம்பானது. இப்படிப்பட்ட செயல்பாடுகளில் நாம் ஈடுபடக் கூடாது. தனிப்பட்ட முறையில் உங்களை எச்சரிப்பதே இச்சோதனையின் முக்கிய நோக்கமாகும். தேவன் ஏதோ ஒன்றை நமக்குள் வைத்துள்ளார். அது உண்மை எது? தவறு எது? என்பதை நாம் அறிந்துகொள்ள உதவுகிறது. இது தவறானது என உள்ளுணர்வினால் எச்சரிக்கப்படும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? அப்படியே அமர்ந்து எட்டுச் சோதனைகளோடு ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அந்நபர் தவறானதைச் சொல்பவராயின் ஒன்று அல்லது மற்றச் சோதனைகள் மூலம் உண்மையை அறிய வேண்டும்.

மேலே கூறப்பட்ட ஒன்பது சோதனைகளும் உண்மையான தீர்க்கதரிசனம் எது? என்பதை நீங்கள் அறிந்துகொள்ள உங்களுக்கு உதவி செய்யும். மேலும் விசுவாசிகள் வரங்களை முழுச் சுதந்தரத்தோடும், பாதுகாப்போடும், பரிசுத்த ஆவியானவரின் பூரணத்தோடும் செயல்படுத்த உங்களுக்கு வழி வகுக்கும்.

பகுதி 5 + வரங்களைச் பயன்படுத்துதல்

13 ஆவியின் வரங்களைச் செயல்படுத்துவது எவ்வாறு?

ஒரு விசுவாசி ஆவியின் வரங்களை வேதவசனங்களின் முறைமையின்படி செயல்படுத்த வேண்டும். நடைமுறையிலுள்ள பல வினாக்களுக்குப் பதிலளிப்பதின் மூலம் இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிசுத்த ஆவியின் ஒன்பது வரங்களைப் பற்றி நாம் நன்றாகக் கற்றுக்கொண்டோம்.

எல்லா வரங்களையும் செயல்படுத்துவதற்குரிய அடிப்படைத் தேவை விசுவாசமே

தேவனுக்கு ஊழியம் செய்வதற்கான அடிப்படைத் தேவையென்ன? பரிசுத்த ஆவியின் வரங்களைச் செயல்படுத்துவது எவ்வாறு? என்பதை முதலாவது நாம் புரிந்துகொள்ள வேண்டும். எபிரெயர் 11:6 இல் விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இத்தெளிவான வாசகம் பக்தியுள்ள மனிதர்களால் பலமுறை புறக்கணிக்கப்படுகிறது. நன்னடத்தை இல்லாதவன் தேவனுக்குப் பிரியமாயிருக்க முடியாது என்று கூறவில்லை. ஆனால் விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம் என்றே கூறப்பட்டுள்ளது. தேவன் நல் நடத்தையை விரும்புவது உண்மைதான். ஆனால் நன்னடத்தை மட்டுமே தேவனிடத்தில் நம்மைச் சேர்க்க முடியாது. விசுவாசமே தேவன் நம்மை அங்கீகரிப்பதற்கான அடிப்படைத் தேவையாகும்.

தேவனிடத்தில் வருகிறவன் அவரை நம்புகிறவனாகவும், அதை நடைமுறைப்படுத்துகிறவனாகவும் இருக்க வேண்டும் என வேத வசனம் கூறுகிறது. முதலாவது தேவன் இருக்கிறார் என்பதை நம்புகின்றனர். ஆனால் அந்த நம்பிக்கை போதுமான அளவினதாக இல்லை. இரண்டாவது அவரை உண்மையாய்த் தேடுகிறவர்களுக்கு அவர் பலனளிப்பவர் என்பதையும் நம்ப வேண்டும். இதை வேறுவிதத்தில் தனிப்பட்ட முறையில் சொல்ல வேண்டுமானால், நான் தேவனிடத்தில் வந்து, அவரைத் தேடும்போது அவருடைய வார்த்தையின்படி அவர் நிச்சயமாய் எனக்குப் பலனளிப்பார் என்று நம்ப வேண்டும். இதை நான் நம்பவில்லையானால், நான் சரியான முறையில் அவரை அணுகவில்லை என்றே அர்த்தமாகும்.

இதே கருத்துதான் ரோமர் 14:23 இல் கூறப்பட்டுள்ளது. அதாவது ரோமர் 14:23 இல் விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே என கூறப்பட்டுள்ளது. விசுவாசமில்லாமல் செய்யப்படும் எந்தச் செயலையும் தேவன் ஏற்றுக் கொள்ளமாட்டார். ஆலயத்திற்குச் செல்வது, கீர்த்தனைகளைப் பாடுவது அல்லது ஜெபம் பண்ணுவது போன்ற பக்திக்கடுத்த செயல்பாடுகள் நம்மிலே காணப்பட்டாலும் அவைகள் விசுவாசமில்லாமல் செய்யப்படுமானால் அது பாவமே. இது தேவனுடைய ஒரு அடிப்படையான கொள்கையாக இருப்பதால் அதில் தேவன் மாறுவதில்லை.

எனவே, விசுவாசம் மிகவும் தேவையான ஒன்றாக இருக்கிறது, தேவன் விரும்பும் விசுவாசத்தை நாம் பெற்றுக் கொள்வது எப்படி? என்ற ஒரு கேள்வியை நாம் எழுப்புவது தகுதியாயுள்ளது. இதற்கான பதிலை ரோமர் 10:17 இல் காணலாம். அதாவது ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்பதாகும். நம்மை ஊக்குவிக்கும் ஒரு கருத்து இந்த வசனத்திலுள்ளது. அது விசுவாசம் வரும் என்ற வார்த்தையாகும். உனக்கு விசுவாசமில்லையென்றாலும் பரவாயில்லை, நீ அதைப் பெற்றுக்கொள்ள வழியுண்டு. விசுவாசம் எனக்கில்லை, அதனால் எனக்கு ஒரு பயனுமில்லை என்று சொல்ல வேண்டிய தேவையில்லை.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போது, 12 மாதங்கள் ஒரு மருத்துவமனையில் படுக்கையில் நான் படுத்திருக்கும்போது, தனிப்பட்ட

முறையில் இக்கருத்தை நான் நன்றாக கற்றுக்கொண்டேன். எனக்கு விசுவாசமிருக்குமானால் தேவன் என்னை சுகமாக்க முடியும் என்று எனக்குத் தெரியும் என்று மீண்டும், மீண்டும் எனக்குள்ளே நான் சொல்லிக் கொண்டேன். ஆனால் விசுவாசம் எனக்குள் இருந்ததாகத் தெரியவில்லை. ஒருநாள் ரோமர் 10:17 இல் கூறப்பட்டிருந்த வேதபகுதியை வேறு ஒரு புத்தகத்திலிருந்து நான் வாசித்தேன். இருளில் வெளிச்சம் உதிப்பது போல விசுவாசம் வரும் என்ற வாசகம் எனக்குள் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கியது. எனக்கு விசுவாசமில்லையென்றாலும் பரவாயில்லை. எந்நிலையிலும் நான் விசுவாசத்தைப் பெறமுடியும் என நான் உணர்ந்தேன். விசுவாசத்தைப் பெறுவது எவ்வாறு என்றால் தேவனுடைய வசனத்தைக் கேட்பதின் மூலமாகும்.

வசனத்தைக் கேட்பது என்பது, தேவனுடைய வார்த்தைக்கும், விசுவாசத்திற்கும் இடையிலுள்ள ஒரு நடுநிலையாகும். தேவனுடைய வார்த்தையைக் கேட்காமலே வேதாகமத்தைப் படிக்க முடியும். அதுபோல் கேட்கிறதுபோல் கேட்காமலே ஒரு பிரசங்கத்தைக் கேட்கமுடியும். தேவனுடைய வார்த்தை உண்மையாய் என்ன சொல்கிறது என்பதைக் கேட்காத வரையில் விசவாசம் வராது. தேவன் என்ன சொல்லப் போகிறார் என்பதை ஏற்கெனவே நாம் நினைத்து வைத்திருப்பதால் அதுவே தேவனுடைய வசனத்தை நாம் கேட்பதற்கு பெருந்தடையாகவுள்ளது. எனவே, தேவன் வித்தியாசமாக ஏதேனும் சொல்வாரானால் அதை நாம் கேட்பதில்லை. இதுவே, தெய்வீக சுகமளிப்பதில் எனக்குள்ளப் பிரச்சனையாகும். தெய்வீக சுகத்தைப் பற்றி நான் வேதத்தில் வாசிக்கும்பொழுது இது நம்பத்தக்கதாக முழுவதுமாக உள்ளது. இது இப்படி இருக்கக்கூடுமா? என்று நினைப்பதுண்டு. என் சொந்தக் கருத்துக்கள், மற்றவர்களின் கருத்துக்கள், பாரம்பரியங்கள், சபை பாகுபாட்டுப் போதனைகள், ஆகியவற்றைப் புறம்பேத் தள்ளிவிட்டு தமது வார்த்தைகள் மூலம் தேவன் எனக்கு என்ன சொல்ல விரும்புகிறார்

தேவன் தம் வார்த்தையில் என்ன சொல்கிறார் என்பதை உண்மையாய்க் கேட்காத வரையிலும் விசுவாசம் வராது.

என்பதை அறியும் வரையில் நான் விசுவாசத்தைப் பெறமுடியாது. ஆவியினால் உந்தப்பட்டு, நான் ஏற்கெனவே கொண்டிருந்த எண்ணங்கள், பாரம்பரியங்கள், மூடநம்பிக்கைகள் இவைகளினின்று மனதைத் தெளிவுபடுத்திக் கொண்டு, என் ஆவியில் தேவன் என்னப் பேசப்போகிறார் என காத்திருக்கும்போது விசுவாசம் வரத் தொடங்கும். அதற்குப் பின் நான் சுகமடைந்தேன்.

தேவன் தனது வார்த்தையில் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்கும் தகுதியை வளர்த்துக் கொள்வதே கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதாயுள்ளது. கேட்கும் தகுதியை வளர்த்துக் கொள்வது ஒரு பகுதியாகும்.

தேவப் பிரசன்னத்திலும், தேவ வசனத்தின் நேரத்தை செலவிடாத ஒருவன் கேட்கும் முறையைக் கற்றுக்கொள்ள முடியாது. ஆவியின் வரங்களைப் பொறுத்தமட்டில் வரங்களைச் செயல்படுத்துவதற்கு, இது சம்பந்தமான, வேதவசனங்களில் இடம் பெற்றுள்ள பகுதிகளைக் கேட்க வேண்டும். வெற்றி பெறுவதற்கான எட்டு சத்தியங்களை வேதவசனங்களிலிருந்து இவ்வத்தியாயத்தில் நாம் பார்க்கப் போகிறோம். அவைகளை நீங்கள் கேட்டால் ஆவிக்குரிய வரங்களைப் பெறுவதற்கும், அதைச் செயல்படுத்துவதற்குமுரிய விசுவாசத்தை உங்களில் கட்டி எழுப்பும். நாம் கற்றுக் கொண்ட பன்னிரெண்டு அத்தியாயங்களிலிருந்து பின்வரும் உண்மைகள் வெளிப்படுகின்றன. அதாவது, மனித பாரம்பரியங்கள், சபை பாகுபாட்டு உபதேசங்கள், தனிப்பட்ட மூடநம்பிக்கைகள் இவைகளிலிருந்து விடுபட்டு இன்றும் உங்கள் மனதை சுத்திகரிக்க வேண்டும். தேவன் உங்களிடம் என்ன பேசப்போகிறார் என்பதை அறிந்துகொள்ள ஆயத்தமாகுங்கள். அப்பொழுதுதான் இச்சத்தியங்களை உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முடியும்.

ஆவியின் வரங்கள் செயல்படுவதற்கான விசுவாசத்தைப் கட்டி எழுப்பும் சத்தியங்கள்

சத்தியம் 1: தேவனை மகிமைப்படுத்துவதே ஆவியின் வரங்களின் உன்னத நோக்கமாகும்

முதலாவது தேவனோடு நமக்குச் சம்பந்தப்பட்ட ஆவிக்குரிய

வரங்களைப் பற்றி, அப்போஸ்தலன் பேதுரு என்ன எழுதுகிறார் என்பதைப் பார்போம்.

1 பேதுரு 4:10-11 இல்

> அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

இவ்வாறு கூறுகிறார்.

மேலே கூறப்பட்ட வசனங்களைத் தொகுத்துப் பார்த்தால் யாவருமே தேவனுடைய வரங்களைப் பெற்றவர்களாயிருக்கிறோம் என்பது தெளிவாகிறது. அவனவன் பெற்ற வரத்திம்படியே நீங்கள் தேவனுடைய, பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும். இந்த ஊழியங்களைச் செய்வதன் நோக்கமென்ன? இயேசு கிறிஸ்து மூலம் தேவன் மகிமைப்பட வேண்டும் என்பதே உன்னத நோக்கமாகும். எப்பொழுதும் தேவனுடைய வார்த்தையின்படி ஆவியின் வரங்களைச் செயல்படுத்தும்போது இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனுக்கு மகிமையைச் செலுத்துகிறோம். அதுபோல எப்பொழுதும் ஆவியின் வரங்களைச் செயல்படுத்த தவறும்போது தேவனுடைய மகிமையைத் திருடுகிறோம்.

சத்தியம் 2: விசுவாசிகளிடத்தில் வரங்கள் செயல்படும்போது பக்திவிருத்தி உண்டாகும்

அடுத்த மக்களிடத்தில் ஆவியின் வரங்கள் செயல்படுவதன் நோக்கமென்ன என்பதைப் பார்ப்போம். ஆவியின் வரங்கள் மனிதர்களிடத்தில் செயல்படுவதின் நோக்கம், பக்திவிருத்தியை உண்டாக்குவதற்கும், விசுவாசிகளைக் கட்டி எழுப்புவதற்குமேயாகும்.

1 கொரிந்தியர் 14இல் உள்ள திறவுகோல் வார்த்தை பக்திவிருத்தி என்பதாகும். பெயரெச்சமோ, வினையெச்சமோ, எதுவோ,

பக்திவிருத்தி என்ற வார்த்தை இவ்வத்தியாயத்தில் ஏழுமுறை இடம் பெற்றுள்ளது. நான்கு காரியங்களை இப்பொழுது பார்ப்போம். மூன்று காரியங்களை முன்னதாகவே பார்த்துவிட்டோம்.

> அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; திர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப்பேசுகிறான்.
>
> *(1 கொரிந்தியர் 14:4)*

> நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்; ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்; ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவர்களாகவேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன்.
>
> *(1 கொரிந்தியர் 14:5)*

> நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்;
>
> *(1 கொரிந்தியர் 14:12)*

> நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம்பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம்பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது.
>
> *(1 கொரிந்தியர் 14:26)*

ஆவியின் வரங்களைச் செயல்கடுத்தாவிட்டால் பக்திவிருத்தி என்ற பெயரில் தங்களையும் மற்றவர்களையும் திருடுகிறவர்களாகிறோம்.

ஆவியின் வரங்களைச் செயல்படுத்தவதின் மூலமாகத்தான் கிறிஸ்தவர்கள் தங்களையும், மற்றவர்களையும் பக்திவிருத்திக்குள் நடத்தமுடியும். ஆவியின் வரங்களை நாம் செயல்படுத்தாவிட்டால் தங்களையும் மறற்வர்களையும் திருடுகிறவர்களாகிறோம்.

விசுவாசிகள் நிறைந்த கூட்டத்தில் நான் இருக்கும்போது அந்நியபாஷை எனக்குக் கொடுக்கப்பட்டால் அதற்கு விளக்கம் தேவைப்படுகிறது. பயத்தினாலோ, அல்லது தடுமாற்றத்தினாலோ நான் விளக்கம் கூற மறுக்கும்போது, அங்கு கூடியுள்ள விசுவாசிகளின் முழுக்கூட்டத்திற்கும், அந்நியபாஷையின் விளக்கத்தின் மூலமாக வரவிருந்த அனைத்து ஆசீர்வாதங்களையும் நான் தடுத்து நிறுத்துகிறவனாகிறேன். ஆவியின் வரங்களைச் செயல்படுத்துவதில் குற்றவுணர்ச்சி இருத்தல் கூடாது. ஆவியின் வரங்களை நாம் கட்டாயமாய்ச் செயல்படுத்த வேண்டும்.

சத்தியம் 3: ஆவியின் வரங்களைச் செயல்படுத்தல் வேண்டும் என்பத விசுவாசிகளைக் குறித்த தேவசித்தமாயுள்ளது.

இம்மூன்றாவது சத்தியம் மற்ற இரண்டு சத்தியங்களிலும் சற்று வேறுபட்டதாகும். இவ்வரம் ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசியும் உணரக்கூடியதும், அங்கீகரிக்க கூடியதுமாயிருக்கிறது. விசுவாசிகள் ஆவியின் வரங்களைச் செயல்படுத்த வேண்டும். அதுவே தேவனுடைய சித்தம். ஆவியின் வரங்கள் தகுதிபெற்ற சில தனிப்பட்ட மனிதர்களுக்கோ, போதகர்களுக்கோ, ஊழியர்களுக்கோ அல்லது சுவிசேஷகர்களுக்கோ மட்டும் கொடுக்கப்படுவதல்ல. புதிய ஏற்பாட்டு எல்லாச் சபைகளும் ஆவியின் வரங்களைச் செயல்படுத்தும் விசுவாசிகளால் நிறைந்திருந்தது.

பவுல் அப்போஸ்தலர் ஆவியின் வரங்களைப் பற்றி 1 கொரிந்தியர் 12 ஆம் அதிகாரத்தில் கூறுவதை நினைவிற்குக் கொண்டுவாருங்கள். 1 கொரிந்தியர் 12: ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.

இவ்வாறு கூறுகிறது. மேலே கூறப்பட்ட வசனங்களிலிருந்து ஒவ்வொரு தனிநபரும் வரங்களைப் பெற்றும், அதனைச் செயல்படுத்துவோருமாயிருந்தனர் என அறிகிறோம். ஆவியின் வரங்கள் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்படுகிறது.

சத்தியம் 4: அன்பும் வரங்களும் இணைந்தே செயல்படும்.

நான்காவதாக நாம் இரண்டாவது அத்தியாயத்தில் பார்த்தது போல ஆவியின் வரங்களுக்கும், ஆவியின் கனியாகிய அன்புக்கும் எந்த முரண்பாடும் இல்லை. அன்பும், ஆவியின் வரங்களும் ஒன்றுக்கொன்று எதிரானது என்றும், ஒன்று மற்றொன்றைவிட வேறுபடுகிறது என்றும், அதனால் அவைகளில் ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும் என லட்சக்கணக்கான மக்கள் நம்புகின்றனர். இக்கருத்து வேத வசனத்திற்கு எதிரானதாகும். பவுல் 1 கொரிந்தியர் 12:31 இல் இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன். என்றும் கூறுகிறார். இதன் சிறந்த மொழிபெயர்ப்பு இதைக்காட்டிலும் மேலான வழியைக் காட்டுவேன் என்பதே. இரண்டாவது வரியில் இன்னும் என்ற வார்த்தை இடம் பெறுவதைக் கவதியுங்கள். இம்மேலான வழி என்பது 1 கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தில் கூறப்படும் அன்பேயாகும்.

1 கொரிந்தியர் 13:13 இல் இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது என்று கூறப்பட்டுள்ளது. சிலர் அன்புதான் சிறப்பான வரம் என்று கூறுவர். அது தவறானதாகும். இவ்விடத்தில், புதிய ஏற்பாட்டில் அன்பு ஆவியின் கனி என்று அழைக்கப்படுகிறது. அன்பு ஆவியின் கனி. ஆனால் ஒரு சிலர் அன்பை வரம் என்று கூறுவர். ஆனால் இக்கருத்து வேதவசனத்திற்கு ஒத்ததல்ல. பவுல் அப்போஸ்தலன் மேலான வரங்களை நாடுங்கள். வரங்களைக் காட்டிலும் மேலானது உண்டு. அது அன்பே. ஒரு விதத்தில் பார்த்தால், மேலானவற்றை வெளிப்படுத்துவதற்கான நிபந்தனை என்னவென்றால், மேலான வரங்களை விரும்புவதாகும். ஒருவருக்கொருவர் எதிராய் நிற்பதைவிட்டு, அன்புகூறுவது சிறந்த வரங்களுக்கு வழிநடத்தும்.

பவுல் அப்போஸ்தலன் தேவ அன்பின் குணாதிசயங்கள் நிறைந்த மிகவும் அழகான 1 கொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தை தொடங்குமுன் இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் மேன்மையான வழியையும் உங்களுக்கு காண்பிக்கிறேன் என்று (1 கொரிந்தியர் 12:31) குறிப்பிடுகின்றார். அன்பு பற்றிய அதிகாரம் முடிந்தபின் பவுல் அப்போஸ்தலன் அன்பை நாடுங்கள்; ஞான

வரங்களையும் விரும்புங்கள் (1 கொரிந்தியர் 14:1) என்ற வாசகத்தோடு அடுத்த அதிகாரத்தைத் தொடங்குகிறார். அவர் மீண்டும் அன்பையும், வரங்கள் இணைக்கிறார். அநேகர் இவ்வாசகத்தை வாசிப்பதோடு விட்டுவிடுகிறார்கள். அன்பை கண்டிப்பாக நாடியாக வேண்டும். ஞான வரங்களை விரும்ப வேண்டும் என பவுல் அப்போஸ்தலன் வலியுறுத்துகிறார். எங்கேத் தெய்வீக அன்பு பாய்ந்தோடுகிறதோ அதன் வழியாகத்தான் பரிசுத்த ஆவியின் வரங்கள் செயல்பட முடியும். வரங்கள் கரத்தோடு கரம் இணைவதுபோல இணைந்து செயல்படும். அவைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டது. எனவே ஒன்றை விட்டு ஒன்றை உங்களால் பிரிக்கமுடியாது என்பது உண்மை. உனக்கு வரங்களே இல்லையென்றால், அன்பு செயல்படக் கூடிய முக்கியமான பாதையை நீ அடைத்து வைக்கிறாய். அன்பை வெளிப்படுத்த ஒரு வழி தேவை.

இப்படிப்பட்ட அன்பைக் குறித்துத் தான் பவுல் அப்போஸ்தலர் பேசுகின்றார். மற்றவர்களுக்குப் பக்திவிருத்தியை உண்டாக்க நாம் விரும்ப வேண்டும். ஆவியின் வரங்களைச் செயல்படுத்தி எவ்வாறு பக்திவிருத்தியை உண்டாக்கமுடியும்? 1 கொரிந்தியர் 14:1 இல் விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள் என்று பவுல் கூறுகிறார். ஏனென்றால் நம் உடன் விசுவாசிகளிடையே தீர்க்கதரிசனங்கள் மூலம் பக்திவிருத்தியை உண்டாக்கலாம். பக்திவிருத்தி உண்டாக்குவதின் மூலம் நம் அன்பை வெளிப்படுத்துகிறோம். நாம் அப்படியே அமர்ந்து கொண்டு அவர்களுக்காக ஒன்றுமே செய்யாமல் நான் உன்னிடத்தில் அன்பாயிருக்கிறேன் என்று எப்படிச் சொல்ல முடியும்.

2 கொரிந்தியர் 13 ஆம் அதிகாரத்தில் பவுல் அன்பைப் பற்றி 13 வசனங்கள் எழுதியுள்ளார். 2 கொரிந்தியர் 8, 9 ஆம் அதிகாரங்களில் பணத்தைக் குறித்து 39 வசனங்கள் எழுதியுள்ளார். அன்பை விட மூன்று மடங்கு அதிகமான வசனங்கள் பணத்தைக் குறித்து எழுதியிருக்கிறார். அதனால் அன்பை விட பணம் முக்கியமானது என்று பொருள்படுமா? இல்லை. அன்பு செலுத்தினால் நாம் என்ன செய்வோமென்றால் தேவனுக்காகவும் தேவ மனிதர்களுக்காகவும் நமது பணத்தை

அன்பைக் குறித்துப் பேசிவிட்டு எதையும் செயலில் காட்டாவிட்டால் அது வேதத்திற்கு முரண்பட்டதாகும்.

பயன்படுத்துவோம் என்பதே பொருளாகும். அதிகமான அன்பு நம்மிலிராவிட்டால் நம்மை நாமே வஞ்சிக்கிறோம். பரிசுத்த ஆவியின் வரங்களின் தளத்திலும் இதே கருத்துதான் உண்மையாகிறது. நம்மில் அன்பிருந்தால் ஆவியின் வரங்களைச் செயல்படுத்துவதின் மூலம் நம்மிலிருக்கும் அன்பை வெளிப்படுத்துகிறோம்.

சத்தியம் 5: நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்தால் வரங்களைப் பெறலாம்.

நாம் தேவனிடத்தில் அன்பு செலுத்தினால் அவருடைய ஆவியின் வரங்களை நாம் பெறவும் அதைச் செயல்படுத்தவும் விரும்புவோம். எடுத்துக்காட்டாக, ஒரு தாயார் தன் அன்பு மகளின் பிறந்தநாளுக்காக மணிக்கணக்காக நேரத்தை செலவழித்து, கேக் ஒன்று தயாரித்து, அதன்மேல் ண்ஹரீண்ய்ஞ் செய்து. அலங்கரித்து அந்த கேக்கை கொண்டுவந்து மகளிடம் கொடுத்தபோது, அம்மா நான் உங்களை அதிகமாய் அன்பு செலுத்துகிறேன். ஆனால் நீங்கள் கொடுத்த கேக் எனக்கு வேண்டாம் என்று சொன்னால் எப்படியிருக்கும், கற்பனை செய்து பாருங்கள். ஒரு குழந்தை இப்படிப் பேசும் என்று நான் நினைக்கவில்லை. இவ்விடத்தில் உண்மையில் அன்பு புறக்கணிக்கப்படுகிறது. இப்படி கற்பனை செய்யுங்கள். ஒரு இளைஞன் தான் அன்பு செலுத்தும், திருமணம் செய்து கொள்ளப்போகும் பெண்ணுக்கு ஒரு அழகான வைர மோதிரம் வாங்கினான். அவன் அந்த வைர மோதிரத்தைக் கொடுக்கும்போது, அந்தப் பெண், தேனே! நான் உன்னில் அதிகமாய் அன்பு செலுத்துகிறேன். ஆனால் இந்த மோதிரம் எனக்கு வேண்டாம் என்றால், அது அவர்கள் எப்போதும் திருமணம் செய்துகொள்ள தகுதியில்லாத ஒரு நிலையைக் காட்டுகிறது.

நம்மீது அன்பு செலுத்துவோர் நமக்குத் தரும் பரிசுப் பொருள்களை நாம் வாங்க மறுத்தால் அவர்கள் மீது நாம் அன்பு செலுத்தவில்லை என்றே பொருள்படும். அதுபோல், நாம் தேவனிடத்தில் அன்பு செலுத்தாவிட்டால் தேவன் நமக்குத் தரும் வரங்களைப் பெற மறுத்துவிடுவோம். இப்படிச் செய்வதால், நம்மை நாமே வஞ்சித்துக் கொள்கிறோம். மத்தேயு 7:11 ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில்

வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? இவ்வாறு கூறுகிறது.

முன்னர் கூறப்பட்ட எடுத்துக்காட்டில் தாயார் தயாரித்திருந்த அந்த அழகான கேக்கை அம்மா நீங்கள் தயாரித்த கேக் எந்தவிதத்திலும் நல்லதல்ல. நீங்கள் ஒருவேளை அதில் வேறு ஏதாவது கலந்திருக்கக் கூடும். அது என் வயிற்றைக் கெடுத்து விடும் என்று அந்தப் பெண் கூறினாளென்றால் எவ்வித உறவை அவள் தன் அம்மாவிடம் வைத்திருப்பாள் என்பதைக் கற்பனை செய்யுங்கள். இதுபோல் அநேக கிறிஸ்தவர்கள், உம்முடைய வார்த்தைகள் எழுதப்பட்ட இந்த ஆவியின் வரங்களினால் உண்மையான பயன் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை என்று கூறுகிறார்கள். இந்த எண்ணம் முற்றிலும் தவறானதாகும். நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளேன். அந்நிய பாஷையும் பேசுவேன், என் பரலோக பிதா நித்தியத்திற்காக எனக்கு ஆயத்தம் செய்திருக்கும் எந்த ஒரு செயலையும் நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. அப்படி நான் செய்வேனேயானால் நான் வேறு விதமாக மாறிவிடுவேன் என ஒரு சிலர் கூறுகின்றனர்.

தகுதியான, மதிப்புள்ள தேவ வரங்களைக் குறித்து நீ கேள்வி எழுப்புவாயானால், தேவனைக் குறித்த தவறான படத்தை மனதில் பதித்துள்ளாய் என்றே பொருளாகும்.

யாக்கோபு எழுதின நிருபத்திலுள்ள மற்றொரு பகுதியைப் பார்ப்போம். கிங் ஜேம்ஸ் வேதாகமப்படி, யாக்கோபு 1:16 இல் என் பிரியமான சகோதரரே, மோசம்போகாதிருங்கள், என எழுதியுள்ளார். மேலே கூறப்பட்ட வசனம், அடுத்த வசனத்தோடு எப்படி இணைந்து செல்கிறது என்பதைக் காணும் வரையில் பவுல் எழுதிய மோசம் போகாதிருங்கள் என்ற வாசகத்தைப் படித்து வியப்படைந்ததுண்டு. “நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் கரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.” என்று கூறுகிறது (வசனம் 17 - முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது) பூரணமல்லாத எதையும் தேவன் ஒருபோதும் நமக்குத் தரமாட்டார்.

எதையும் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. தேவனிடத்திலிருந்து வருவதெல்லாம் நலமானதே!

தகுதியான, மதிப்புள்ள தேவ வரங்களைக் குறித்து நீ கேள்வி எழுப்புவாயானால், தேவனைக் குறித்த தவறான படத்தை மனதில் பதித்துள்ளாய் என்றே பொருளாகும். எனவே மோசம் போகாதிருங்கள் என்றும், அந்த வழியிலே செல்லாதீர்கள் என்றும் பவுல் கூறுகிறார். ஆவியின் வரங்களைப் பெற்றுக்கொண்டு அதைச் செயல்படுத்த விருப்பம் தேவை, நாம் எந்த அளவு தேவனிடத்தில் அன்பு செலுத்துகிறோமோ அந்த அளவு நாம் அவருடைய வரங்களை விரும்பத் தொடங்குவோம். பிதா நம்மீது வைத்த அன்பினால் தன் சொந்தக் குமாரனை மரத்திற்கு ஒப்புகொடுத்தார். அவர் சிலுவையில் தமது சொந்த இரத்தத்தை கிரயமாக செலுத்தி இவைகளையெல்லாம் நமக்காக சம்பாதித்து வைத்திருக்கிறார். ஆவியின் வரங்களை நாம் புறக்கணித்தால் பிதாவினுடைய இருதயத்தைத் துக்கப்படுத்துகிறவர்களாவோம். அதுமட்டுமல்ல, நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் இருதயத்தையும் அது துக்கப்படுத்தும்.

சத்தியம் 6: வரங்கள் முடிவடைவதில்லை, ஆனால் அவைகள் இன்றும் நின்று நிலவுகிறது.

ஆதித் திருச்சபையோடு வரங்களெல்லாம் முடிவடைந்ததாக அநேகர் நம்புகின்றனர் என்பதை முன்னர் பார்த்தோம். அப்போஸ்தலர்கள் காலத்தோடு வரங்கள் யாவும் முடிவடைந்தன என்பதற்கான எவ்வித ஆதாரமும் வேத வசனங்களில் நான் காணவில்லை. முதலாவதாக, அப்போஸ்தலர்களின் காலம் எப்பொழுது முடிவுற்றது? அப்போஸ்தலர்கள் உள்ள வரையில் அப்போஸ்தலர்கள் காலமும் நீடிக்கும். ருவத வசனங்களின் அடிப்படையில் நான் புரிந்து கொண்டது என்னவென்றால், இயேசுவின் வருகை வரையிலும் அப்போஸ்தலர்கள் காலம் நீடிக்கும் என்பதே. இரண்டாவதாக, பவுல் 1 கொரிந்தியர் 1:4-7 இல்

> கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப்பட்டபடியே, நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும், சம்பூரணமுள்ளவர்களாக்கப்

> பட்டிருக்கிறபடியால், அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்.

இவ்வாறு எழுதுகிறார்.

சபைகளில் வரங்கள் எவ்வளவு காலம் தொடர்ந்து செயல்படும்? இயேசுகிறிஸ்து திரும்ப வரும் வரையிலும் அவரின் வருகைக்கு காத்திருக்கிறவர்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய் இருத்தல் வேண்டும். வரங்களின் செயல்பாடுகளைக் குறித்துப் பவுல் கூறுவதைக் கவனித்துப் பாருங்கள். நீங்கள் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாய் எல்லாவற்றிலும் சம்பூரணமாக்கப்பட்டிருக்கிறபடியால் என கூறுகிறார். வரங்கள் இல்லாத வபைகள் முன்னேற்றமடையாத சபைகளாகும். வாய்மொழி வரங்களைப் பற்றி பவுல் பேசும்பொழுது எல்லா உபதேசத்திலும் சம்பூரணமுள்ளவர்களாய் என்றும், வெளிப்பாட்டு வரங்களைப் பற்றிக் கூறும்பொழுது எல்லா அறிவிலும் சம்பூரணமுள்ளவர்களாய் என்றும் கூறுகிறார்.

இயேசு கிறிஸ்துவின் சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்பட வேண்டுமானால் வரங்கள் செயல்பட வேண்டும். முடவர் நடக்கும்போது, குருடர்கள் பார்வையடையும்போது வெளிப்பாட்டு வரங்கள் செயல்படும்போது இயேசுவின் சாட்சி உங்களிலே செயல்படும். 1 கொரிந்தியர் 1:7-8 இல்

> அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ் சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்.

இவ்வாறு கூறுகிறார்.

சபைகளிலே இந்த வரங்களானது இயேசு கிறிஸ்து திரும்ப வரும் கடைசிக்காலம் வரை செயல்படும் என்ற உண்மையை மேலே கூறப்பட்ட வசனம் உறுதிப்படுத்துகிறது. உலகம் கடைசி காலத்தை

நெருங்கும்பொழுது வரங்கள் மறைந்து விடும் என்பதைவிட, புதிய ஏற்பாட்டின்படி வரங்கள் அதிகமாய் செயல்படத் தொடங்கும் என்பதே உண்மை.

> கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்; என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்த்தகரிசனஞ் சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழப் பூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன். கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்.
>
> *(அப்போஸ்தலர் 2:17-20)*

இயேசு கிறிஸ்து மகிமையோடும் வல்லமையோடும் மீண்டும் வரப்போவதை மேலே கூறப்பட்ட வசனத்தின் பகுதி எடுத்துரைக்கிறது.

வரங்கள் செயல்படும்பொழுது இயேசு கிறிஸ்து அங்கே இருக்கிறார் என்பதை மக்கள் அறிந்து கொள்வார்கள்.

இதிலிருந்து, தெளிவாக தெரிவது என்னவென்றால் இங்கே கூறப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்கள், அதாவது தீர்க்கதரிசனம், நவமான பாஷை, வெளிப்பாடு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கும் அப்பாற்பட்ட முழு செயல்பாடுகள் தொடரும் என்பதே. மட்டுமல்ல, சபையானது கடைசி காலத்திற்குள் வரும்பொழுது இந்த வரங்களெல்லாம் அதிகமாக வெளிப்படும். பெந்தெகோஸ்தே நாளிலே பேதுரு எழுந்து நின்று பிரசங்கம் செய்யும்பொழுதே அவர்கள் கடைசி காலத்தில் இருக்கிறார்கள் என்றால், 2000 ஆண்டுகளுக்குப் பின் வாழ்கிற நாம் எப்படிப்பட்ட கடைசிக் காலத்தில் இருக்கிறோம் என்பதை உணரவேண்டும். வரங்கள் சபையில் அதிகமாக வெளிப்படும்போது, நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பதை நம்புகிறோம். இன்னும் வரங்கள் அதிக அதிகமாக செயல்படப் போவதை நாம் எதிர் நோக்கியிருக்க வேண்டும். சுருங்கச் சொன்னால் இவைகள் தான்

நடக்கின்றன. நாம் வாழ்கின்ற இக்காலத்திலே வரங்கள் அளவுக்கதிகமாய் அனுதினமும் செயல்பட்டு நம்மைப் புதுப்பிக்கும்.

சபைகளிலே ஆவியின் வரங்கள் அதிகமாக செயல்படுவதற்கான மற்றொரு காரணமும் உண்டு. சாத்தானின் வல்லமையும் அதிகரிக்கப் போகிறது. நாம் கடைசி காலத்தை மிகவும் நெருங்கிவிட்டோம். சாத்தான் அதிகமாக எதிர்த்துப் போராடப் போகிறான். தன்னுடைய வல்லமையைப் பயன்படுத்தவும், வெளிப்படுத்தவும் தனக்குப் பயன்படக்கூடிய கருவிகளையும், வழிமுறைகளையும் ஆராய்ந்து, யார் மூலம் அவைகளைச் செயல்படுத்தலாம் என்று அவன் தேடிக்கொண்டிருக்கிறான். பவுல் இப்படியாக 1 தீமோத்தேயு 4:1 இல் ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். இவ்வாறு எழுதுகிறார். வஞ்சிக்கிற ஆவிகளும், பிசாசின் தவறான உபதேசங்களும் கடைசி காலங்களில் சபைகளில் புகுந்துவிடும் என்பதை கவனிக்க வேண்டும். தமது மக்களுக்கு தேவன் அனுமதிக்கும் ஆற்றலைக் குறைத்து, சாத்தானின் அடியார்களுக்கு வல்லமையை அதிகரிப்பது என்பது ஒப்புக்கொள்ளக் கூடியதன்று.

நாம் கடைசி காலக்கட்டத்தை நெருங்கும்போது, சாத்தான் அதிகமாக நம்மை எதிர்த்துப் போராடுவான்.

பின் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில்,

> மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குத் கீழ்ப்படியாவர்களாயும், நன்றியறியாதவர்களாயிம், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத்

தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. (2 தீமோத்தேயு 3:1-5)

இவ்வாறு எழுதுகிறார்.

கடைசி காலங்களில் கொடிய காலங்கள் வருவதை நாம் காணப் போகிறோம். சிலர், இந்த வீழ்ச்சியின் அனுபவத்திற்குட்படுவார்கள். அவர்கள் தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்களாய் இருப்பார்கள். உண்மையான பக்தியின் வல்லமை பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாகும். எனவே கடைசிக் காலத்தில் சபைகளில் உள்ள, தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, பரிசுத்த ஆவியின் வல்லமையை மறுதலிக்கும் மக்களுக்கு நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என எச்சரிக்கப்படுகிறோம்.

2 தீமோத்தேயு 3:13 இல் கடைசிக் கால எச்சரிப்பு இடம் பெற்றுள்ளது. ‘‘பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.” என்று கூறுகிறது. கிரேக்க மொழியில் அந்த வார்த்தை வஞ்சகர் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது மந்திரவாதிகளையும், சாத்தானுடைய வல்லமையை அப்படியே வெளிப்படுத்துகிறவர்களையும் குறிக்கும். அப்படியானால், கிறிஸ்தவர்கள் எவ்வளவு அதிகமதிகமாக பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்.

சத்தியம் 7: அபிஷேகமும், வரங்களும் ஊழியத்திற்கு மிகவும் தேவை.

இயேசு தனது சொந்த அப்போஸ்தலர்களை ஊழியம் செய்யவும், பிரசங்கிக்கவும், தனக்கு பணிவிடை செய்யவும் அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரப்பப்படும் வரையில் அனுமதிக்கவில்லை. இயேசுவின் ஊழியம் இப்பூமியில் முடிவுறும்போது அவர் தன்னைப் பின்பற்றுகிறவர்களைப் பார்த்து, என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்.

(லூக்கா 24:49) பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும் வரையில் அவர்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டும் என்று கூறினார்.

அப்போஸ்தலர் 1:8 ஐ இப்பொழுது நாம் நினைவிற்கு கொண்டுவர வேண்டும். அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமுன் இதே எச்சரிப்பைக் கூறுகிறார். அப்போஸ்தலர் 1:8 இல், பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிப் பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். இவ்வாறு கூறுகிறார். இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையால் சுவிசேஷம் உலகம் முழுவதும் செல்வதை இயேசு முன்பாகவே தரிசனத்தில் கண்டார்.

சத்தியம் 8: சுவிசேஷம் அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் அறிவிக்கப்பட வேண்டும்

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தாலும், வல்லமையாலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி தேவன் நிரப்பப்பட்டிருந்தார். இதை நாம் மாற்கு எழுதின சுவிசேஷத்தில் வாசிக்கிறோம்.

> இயேசு சொன்னார், பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் . விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.
>
> *(மாற்கு 16:15, 17-20)*

தேவனுடைய வழியின்படி, நாம் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும். அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் என்ற வார்த்தையை

உறுதிப்படுத்த வேண்டும். மாற்கு விசுவாசிகளுக்குப் போதிக்கும்போது இயற்கைக்கு அப்பாற்பட்ட 5 அடையாளங்கள் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். அனைத்துப் படைப்புகளும் சுவிசேஷத்தைக் கேட்டு முடிக்கும்வரை, சுவிசேஷத்தை அடையாளங்கள் தொடரும். சுவிசேஷம் உலகம் முழுவதும் அறிவிக்கப்படவேண்டும். ஆனால் அது இன்னும் நடைபெறவில்லை. அற்புதங்கள் அதிகமாக வெளிப்படாததே காரணமாகும்.

எப்படி ஆதிசபைகளில் சுவிசேஷம் அடையாளங்களோடு இணைந்து வெளிப்பட்டது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். சமாரியாவில் பிலிப்பின் ஊழியத்தில் இயற்கைக்கும் அப்பாற்பட்ட அடையாளங்கள் அவனது போதனையோடு இணைந்து சென்று அவனது போதனையை அங்கீகாரம் பெறச் செய்தது.

> அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.
>
> *அப்போஸ்தலர் 8:5-7*

இவ்வாறு கூறுகிறது. அப்போஸ்தலர் 28 ஆம் அதிகாரத்தில் பவுலும் அவனது குழுவினரும் கப்பற்சேதத்திலிருந்து தப்பித்து மெலித்தா தீவிற்கு வந்தனர். அங்கு இருவிதமான இயற்கைக்கும் அப்பாற்பட்ட அடையாளங்களினால் கவரப்பட்டு, அந்நியராகிய அத்தீவார் அவன் சுவிசேஷம் அறிவிக்கும்படியான வாசலைத் திறந்தனர். அது என்னவென்றால் விஷப்பாம்பு பவுலைக் கடித்தும் சாகாமல் பிழைத்தது ஒன்றாகும். புபிலியுவின் தகப்பன் ஜீரத்திலும், இரத்த பேதியிலுமிருந்து குணமாக்கப்பட்டது மற்றொன்றாகும்.

நாம் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. தேவன் அதை அடையாளங்களோடு உறுதிப்படுத்துவார்.

அதுமட்டுமல்ல அத்தீவிலிருந்த மற்ற வியாதியஸ்தர்களையும் குணப்படுத்தினார். இயற்கைக்கும் அப்பாற்பட்ட முறையில் பரிசுத்த ஆவியின் வல்லமையால் பவுல் செய்த அற்புதங்களே அத்தீவிலுள்ள மக்கள் பவுலின் பிரசங்கத்தைக் கேட்க வைத்தது. இந்நிலை இன்று உலகத்தில் காணப்படுகிறது. ரோமர் 15:18-19 இல் பவுல்,

> புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை. இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்.

இவ்வாறு கூறுகிறார்.

கிறிஸ்துவின் பூரண சுவிசேஷத்தை முழுமையாகப் பிரசங்கித்தல் என்றால் என்ன? பிரசங்கிக்கப்பட்ட செய்தியானது அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் இயற்கைக்கும் அப்பாற்பட்ட நிலையில் தேவனால் உறுதிசெய்யப்படும். இப்படிப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட உறுதிப்பாட்டினால் வரும் பலன் யாது? இது புறஜாதி மக்களை கீழ்படியச் செய்யும். மிஷனெரி ஊழியம் செய்த ஆழ்ந்த அனுபவத்திலிருந்து இதைக் கூறுகிறேன். இவ்வாறு இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள், அடையாளங்கள் போன்ற நிகழ்வுகள் காணப்படவில்லையாயின் ஓரளவுதான் கீழ்படிதல் உண்டாயிருக்கும் - மற்றபடி ஞானஸ்நானம், சபையில் அங்கத்தினராதல் போன்ற வெளிப்பாடையான செயல்களுக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கப்படும். மேலும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையால் மக்கள் உண்மையான ஜீவனுள்ள தேவ ஆற்றலால் தான் இவற்றை நடப்பிக்கின்றனர் என நிரூபிக்கப்பட்டு உண்மையான இதய ஒப்புக்கொடுத்தல் தேவன்பால் ஏற்படும். இதுதான் மக்களை மாற்றி உண்மையான சீடர்களாக மாற்றும்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய வல்லமையால்தான் இருதயத்தை அவருக்கு முற்றிலும் அர்ப்பணிக்கும் இயல்பு உண்டாகும்.

எபிரெய நிரூபத்தின் எழுத்தாளர் சுவிசேஷ செய்திக்கு அதிக மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதற்கு மூன்று காரணங்கள் கொடுக்கின்றார். “முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்.” (எபிரெயர் 2:3-4)

கீழ்கண்ட காரணங்களுக்காக மனுக்குலம் சுவிசேஷ செய்திக்கு அதிக முக்கியத்துவம் தருதல் வேண்டும். முதலாவது இது இயேசு கிறிஸ்துவினால் அறிவிக்கப்பட்டது. இரண்டாவதாக இது பதிவு செய்யப்பட்டு நமக்கு அவரிடமிருந்து நேரிடையாக இச்செய்தியினைப் பெற்றவர்களிடமிருந்து நமக்கு வந்துள்ளது. அவர்கள் இதற்கு நேரிடை சாட்சிகள். மூன்றாவதாக, பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வசனத்திற்கு சாட்சி பகர்ந்து இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்களையும் வரங்களையும் இயக்குகின்றார். தேவனால் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் சாட்சி பகரப்பட்ட சுவிசேஷத்தை வழங்கி மக்கள் அதற்கு முழுவதுமாக கீழ்படியும்படி செய்ய வேண்டியது நம்மேல் விழுந்த கடமையாக உள்ளது.

ஆவியின் வரங்களைச் செயல்படுத்துவதற்கான நடைமுறைக் கருத்துகள்

ஆவியின் தளத்தில் ஆவியின் வரங்களைச் செயல்படுத்தி நீங்கள் முன்னேறிச் செல்வதற்கான சில நடைமுறைகளை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

விசுவாசிகளின் கூட்டத்தில் இவ்வரங்கள் செயல்படவேண்டும்

முதலாவது இந்த ஆவியின் வரங்களெல்லாம் ஒருமனமுள்ள விசுவாசிகள் நிறைந்த சபைகளில் செயல்படுத்தப்பட வேண்டும். மத்தேயு 5:15 “**விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல்,**

விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்." இவ்வாறு கூறுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 1:20 இல் கூறப்பட்ட ஏழுகுத்து விளக்குகள் ஏழு சபைகளைக் குறிக்கிறது. அக்காலத்தில் குத்துவிளக்குகள் எண்ணெயினால் நிரப்பப்பட்டு எரிந்துகொண்டிருக்கும். குத்துவிளக்குகள் வெளிச்சம் தரவேண்டுமானால் அதற்குரிய விளக்குத்தண்டின் மேல் வைக்கப்பட வேண்டும். அது மரக்காலின் கீழ் வைக்கப்பட்டால் வீட்டிற்கு வெளிச்சம் தரமுடியாது.

நீதிமொழிகள் 20:27 மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்துபார்க்கும். இவ்வாறு கூறுகிறது. பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது மனிதனுடைய ஆவியை அனல்மூட்டி எழுப்பிவிடுகிறது. அதுமட்டும் போதாது. ஏற்றப்பட்ட விளக்கானது அதற்கான சரியான இடமாகிய விளக்குத் தண்டின்மேல் வைக்கப்பட வேண்டும். இது சபையையும், அதன் அங்கத்தினர்களையும் தேவனின் சரீரத்தோடு இணைந்து ஒருமித்துச் செயல்படுவதைக் காட்டுகிறது.

வரங்களின் மேல் விசுவாசம் கொண்டு அதை செயற்படுத்திவரும் விசுவாசிகளுடன் சரியானபடி ஐக்கியம் கொள்ளாவிட்டால், நீ செயற்படுத்தும் வரங்களில் ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாடு உண்டாகும். இதனால் நீ சோர்ந்து போவாய். ஒரு காலத்தில் அக்கினியில் வைக்கப்பட்ட கலசமாயிருந்த நீ, தீயணைந்து புகையிடும் கலசமாக மாறிடுவாய். நீ விசுவாசிக்கும் சத்தியத்தை யார் விசுவாசிக்கிறார்களோ உன் அனுபவம் எவருக்கு இருக்கின்றதோ அவர்களுடன் நீ ஐக்கியம் கொள்ளவேண்டும். இப்படிச் செய்யும்பொழுது அனைவரிலும் உள்ள தொகுப்பான ஒளி, விளக்குத் தண்டில் வைக்கப்படும்பொழுது அறையில் உள்ள அனைவருக்கும் அது ஒளிதரும். உன்னைப் போன்று வரங்களை செயற்படுத்துபவர்களுடன் ஐக்கியம் கொள்வது உனக்கு அதிமுக்கியமான தேவையாகும். சரியாக செயல்பட இது உனக்கு உதவும்.

கிறிஸ்துவின் சரீரத்தில் உன் செயல்பாட்டைக் கண்டுபிடி

பவுல் அப்போஸ்தலன் கூறுகின்ற இரண்டாவது நடைமுறைக் கருத்துகள் மிகவும் முக்கியமானதாகும்.

ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ் செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்.

(ரோமர் 12:4-8) இல்

இவ்வாறு கூறுகிறார்.

நாம் செயல்படுத்தக்கூடிய பலவித வரங்களை பவுல் பட்டியலிடுகிறார். ஆனாலும் எல்லா விசுவாசிகளும் ஒரேவிதமான செயல்பாடுகளை உடையவர்களல்ல. உனக்குக் கொடுக்கப்பட்ட வரத்தை முழுமையாக நீ செயல்படுத்த வேண்டுமானால் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உன் செயல்பாடு என்ன என்பதைக் கண்டறிய வேண்டும். முழுமையாக செயல்படுத்தக்கூடிய ஒரு திட்டவட்டமான இடத்தை கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உனக்கென்று தேவன் வைத்திருக்கிறார். உன்னைக் கையாக பயன்பட வேண்டும் என்று தேவன் நியமித்திருந்தால் நீ காலாக செயல்படக் கூடாது. அப்படிச் செய்தால் நீ எப்பொழுதும் சோர்வடைந்து சிறப்பாக செயலாற்ற முடியாது.

எப்பொழுது நீ இருக்க வேண்டிய இடத்தைக் கண்டுபிடிக்கிறாயோ அப்பொழுது விசுவாசமும் அதனோடு இணைந்து செல்வதைக் காண்பாய்.

நீ முழுமையாக செயலாற்றக் கூடிய திட்டமான இடத்தை தேவன் கிறிஸ்துவின் சரீரத்தில் உனக்கென்று வைத்திருக்கிறார். நாம் நம்முடைய செயல்பாடு என்னவென்பதை ஜெபத்தின்மூலம் வெளிப்பாடுகளையும், ஞானத்தையும் பெற்று, நம்முடைய ஆவிக்குரிய பெலத்தினால் எந்த இடத்தில் பணியாற்ற

வேண்டும் என்பதையும் தெரிந்தெடுக்க வேண்டும். நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் எவ்வாறு செயலாற்றினோம் என்று மற்ற விசுவாசிகளிடம் கேட்டறிய வேண்டும்.

கிறிஸ்துவின் சரீரத்தில் நமக்குரிய செயல்பாடுகளுக்கும், தேவன் நமக்கு அளிக்கும் விசுவாசத்திற்கும், தொடர்பு உண்டு என்பது நாம் அறிந்துகொள்ள வேண்டிய மற்றொரு முக்கிய கருத்தாகவுள்ளது. ஏற்கெனவே தேவன் நமக்கு விசுவாசத்தைப் பகிர்ந்தளித்துள்ளார் என வேத வசனம் கூறுகிறது (ரோமர் 12:3 ஐப் பார்க்கவும்). தேவன் உன்னைக் கரமாகப் பயன்படுத்த வேண்டும் என தீர்மானித்திருந்தால், கரமாக செயல்படுவதற்குத் தேவையான விசுவாசத்தைக் கொடுப்பார். காலாக செயல்படுவதற்கான விசுவாசத்தைத் தரமாட்டார். விசுவாசத்திற்காக எப்பொழுதும் போராடிக் கொண்டிருக்கும் மக்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் தாங்கள் சரியான இடத்தில் இல்லை என்கிற உண்மையை விளம்பரம் செய்கிறவராவார்கள். என் சரீரத்தில் கரத்தை, கரமாக பயன்படுத்துவதில் எவ்வித பிரச்சனையுமில்லை. அப்படி கரத்தை பயன்படுத்துவதற்கு எவ்வித முயற்சியும் தேவைப்படுவதில்லை. என் கரத்தை, காலாக பயன்படுத்த முயற்சித்தால் அதற்கு எப்பொழுதும் கடினமுயற்சி தேவைப்படும். என் கை, காலாக செயல்படுவதற்கு உருவாக்கப்பட்டதல்ல. எனவே சோர்வை உண்டாக்கும். இவ்வாறு அநேக கிறிஸ்தவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு, சுகவீனப்பட்டு தொடர்ந்து விசுவாசத்திற்காக போராடுகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கவேண்டிய இடத்தில் இல்லையென்பதை நாம் நிச்சயமாய் அறியலாம். மேலும், அவர்கள் தேவனால் தங்களுக்கு அருளிச் செயல்பட்ட தெய்வீக செயல்பாடுகளை நிறைவேற்றமாட்டார்கள்.

நீ கிறிஸ்துவின் சரீரத்தில், உனக்குரிய செயல்பாடு என்ன என்பதைச் சரியாக கண்டுபிடித்தாயானால், அந்த குறிப்பிட்ட செயல்பாட்டைச் செய்வதற்குத் தேவையான விசுவாசத்தையும் தேவன் பகிர்ந்தளிக்கிறார் என்பதையும் கண்டுபிடிப்பாய். எப்பொழுது நீ இருக்கவேண்டிய இடத்தை கண்டுகொள்கிறாயோ அப்பொழுது அழ்ற்கரிய விசுவாசமும் அதனோடு இணைந்து செல்வதைப் புரிந்துகொள்வாய். தேவனைத் தேடி அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்பொழுது வரங்கள் நம்முடைய வாழ்க்கையில் அதிகமதிகமாய் வெளிப்படும். விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவின் சரீரத்தில் நமது செயல்பாடுகளை முழுமையாகச்

செயல்படுத்த இயலும். இவ்வரங்களை நாம் செயல்படுத்தும்போது, அது நமக்குத் தேவையானவைகளைத் தந்து தேர்ச்சியுள்ளவர்களாய் நம்மை உயர்த்தும்.

எடுத்துக்காட்டாக, ஒருவன் சுவிசேஷகனாக அழைக்கப்பட்டால் அவன் ஒருவேளை தெய்வீக சுகமளிக்கும் வரத்தையோ அல்லது அற்புதங்கள் செய்யும் வரத்தையோ பெறலாம். ஒருவேளை தீர்க்கதரிசியாக அழைக்கப்பட்டால் அவன் ஒருவேளை ஞானத்தைப் போதிக்கும் வசனமும் அல்லது ஆவிகளை பகுத்தறிதலுமாகிய வரங்களைப் பெறலாம். நீ உன் செயல்பாடு என்ன என்பதைச் சரியாக கண்டுபிடிக்கவில்லையானால், வரங்கள் உன் வாழ்க்கையில் ஒருபோதும் செயல்படாது. என்றாலும், உன் செயல்பாடுகளைக் கண்டுபிடித்து, உனக்குள் இருக்கும் விசுவாசத்தின் மூலம், வரங்களைச் செயல்படுத்தி வளரவேண்டுமானால், நீ உனக்குக் கொடுக்கப்பட்ட வரங்களைச் சரிவர செயல்படுத்த வேண்டும்.

வரங்கள் தேவ சித்தத்தின்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது

தேவ சித்தத்தின்படி வரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். 1 கொரிந்தியர் 12:11, இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். இவ்வாறு கூறுகிறது. எபிரெயர் 2:4, அடையாளங்களினாலும் அற்புதங்களினலலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். இவ்வாறு கூறுகிறது. தேவ சித்தத்திற்கு எதிராக நம் சித்தத்தின்படி எனக்கு இவ்வரம் வேண்டும், அவ்வரம் வேண்டும் என சொல்லுதல் கூடாது. எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ, அவர்களே தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் என ரோமர் 8:14 கூறுகிறது. நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்க விரும்பினால் தேவனுடைய ஆவியினால்

நடத்தப்படவேண்டும். கிறிஸ்தவர்களின் அடிப்படைத் தேவை இதுவேயாகும்.

பரிசுத்த ஆவியானவர் எந்த வரங்களை குறிப்பாக நமக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை வெளிப்படுத்துவார். ஆனால் தேவையான நேரங்களில் மற்ற வரங்களையும் செயல்படுத்த ஆவியானவர் வழிநடத்துவார். தேவனுடைய சித்தப்படி வரங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டாலும், எல்லா வரங்களும் நம்முடைய வாழ்க்கையில் செய்ல்பட வேண்டும் என்றும், வெளிப்படவேண்டும் என்றும் நாம் ஜெபிக்க வேண்டும்.

தங்களுக்கல்லாத வரங்களைப் பெற சிலர் பாடுபடும்வேளை சிலர் உதாசீனமாக தேவனுக்குச் சித்தமானால் அவர் இந்த வரத்தை எனக்குத் தருவார் என்ற எண்ணம் கொண்டுள்ளனர். நீங்கள் இரட்சிக்கப்பட்டு கொஞ்சகாலம் மட்டுமே ஆகியிருந்தால் இந்தக் காரியத்தை தேவன் கேட்பார். ஆனால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியிருந்தால் அதற்குப் பின்பும் நீங்கள் இப்படி எண்ணம் கொண்டிருந்தால் அது சோம்பேறித்தனமாக கருதப்படும். ஏனென்றால் முடிவில் தேவனுடைய சித்தத்தை வசனத்திலிருந்து அதிகம் அறிந்து கொள்வீர்கள். உதாரணமாக, சில வரங்கள் எல்லா விசுவாசிகளுக்கும் உரியது என வேத வசனத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த வரங்கள் நவமான பாஷை பேசுதலும் தீர்க்கதரிசனம் உரைத்தலுமாகும். பவுல் 1 கொரிந்தியர் 14:5 இல், நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்; ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்ககதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன்; ஆதலால் நீங்கள் தீர்ககதரிசனஞ்சொல்லுகிறவர்களாகவேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன். என்று எழுதுகிறார்.

இது பவுலின் சொந்தக் கருத்து என்று ஒருவேளை கூறலாம் மீண்டும் பவுல் 1 கொரிந்தியர் 14:37 இல், ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன். என்று கூறுகிறார். பவுல் தன் சொந்தக் கருத்துக்களை எழுதவில்லை, அவர் தெய்வீக வெளிப்பாடுகளுடன்

தெய்வீக அதிகாரத்தோடு எழுதுகிறார். நவமான பாஷை பேசுவதும், தீர்க்கதரிசனம் உரைத்தலும் எல்லா விசுவாசிகளுக்குமுரியது. தேவனால் வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தமாயிருக்கிறது. இந்த வரங்களைப் பெற்றுக்கொள்ள ஜெபம் செய்து, அதனை செயல்படுத்தத் துவங்க வேண்டும்.

மீண்டும், எத்தனை விசுவாசிகள் தீர்க்கதரிசனம் உரைக்கலாம்? எல்லோரும் உரைக்கலாம். எத்தனை பேர் நவமான பாஷைகளைப் பேசலாம்? அனைவரும். ஆவிக்குரிய வரங்கள் செயல்படுத்துவது தேவனுடைய சித்தம்தானா என்று நிச்சயமற்றவர்களுக்கு, நவமான பாஷையில் பேசுவதும், தீர்க்கதரிசனம் உரைப்பதும் எல்லா விசுவாசிகளுக்கும் உரிய தேவசித்தம். இது அதிகாரம் நிறைந்த தேவ வார்த்தையால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நீ கேட்டால், நீ பெற்றுக்கொள்வாய்

ஆவியின் வரங்களாகிய தீர்க்கதரிசனமுரைத்தலையோ, அந்நிய பாஷைக்கு வியாக்கியானம் பண்ணுதலையோ அல்லது வேறு வரங்களையோ நாம் தேவனிடம் கேட்டு ஜெபிக்கும்பொழுது, பரிசுத்த ஆவியானவர் நம்மைச் செயல்படுத்த தூண்டுவார். நாம் கேட்பதைத் தேவன் தருவார் என்று அறிந்திருப்பதினால், விசுவாசத்தில் நாம் அதைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து பேசும்பொழுது இயேசு லூக்கா 11:9-13 இல், பின்வருமாறு கூறுகிறார்.

> மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா? அல்லது முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர்

தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.

இதனோடு ஒத்துவருகின்ற மற்றொரு பகுதியாகிய மத்தேயு 7 இல் இயேசு, **ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?** (வசனம் 11) இவ்வாறு கூறுகிறார்.

நவமான பாஷையில் பேசுவதும், தீர்க்கதரிசனம் உரைப்பதும் எல்லா விசுவாசிகளுக்கும் உரிய தேவசித்தம்.

இந்தப் பகுதி பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை குறிப்பதாய் இருந்தாலும், நாம் தேவனிடத்தில் எதையும் கேட்கலாம், தனிநபரின் ஆவியின் வரத்தையும் கூட, என்ற கொள்கையை வலியுறுத்துவதாயுள்ளது. எனவே நமது பரலோகப் பிதாவிடம் நாம் வரங்களைக் கேட்கும்போது, எதைப் பெற்றுக்கொள்ளப் போகிறோம் என்பதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ருதவனிடத்தில் நலமானதைக் கேட்கும்பொழுது அவர் தீமையானதைத் தருவாரா? என்று இயேசு சொல்கிறார். ஒருபோதும் இல்லை என்பதே பதிலாகும். நீங்கள் ரொட்டியைக் கேட்டால், தேவன் உங்களுக்கு எதைக் கொடுப்பார்? ரொட்டியைத் தான். நீங்கள் முட்டையைக் கேட்டால் அவர் எதைத் தருவார்? முட்டையைத் தான். நீங்கள் மீனைக் கேட்டால் அவர் எதைத் தருவார்? மீனைத் தான். தீர்க்கதரிசனத்தைக் கேட்டால் அவர் உங்களுக்கு எதைத் தருவார்? தீர்க்கதரிசனத்தை. இது தான் வேத வசனத்தில் எழுதப்பட்டு உறுதியாக்கப்பட்டது. வேத வசனத்தின்படி நலமானவைகளைத் தேவனிடத்தில் கேட்டால் நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுக் கொள்வீர்கள். நலமானதைக் கேட்கும்போது, தேவன் ஒருபோதும் தீமையானதைத் தரமாட்டார் என்பதை நினைவிற்கொள்க.

ஒரு சலவை செய்யும் இயந்திரத்தை சியர்ஸ் (Sears) கம்பெனியில், உத்தரவாதத்தோடு வாங்கினால் அந்த உத்திரவாத காலம் முடியும்

வரையில் அந்த இயந்திரத்தைக் குறித்து ஒருபொழுதேனும் சந்தேகப்படமாட்டோம். அதுபோன்ற விசுவாசம் நமக்கிருக்கிறது. அந்த சியர்ஸ் (Sears) கம்பெனியில் இருக்கும் நம்பிக்கையில் பாதியளவு விசுவாசம், விசுவாசிகளுக்கு இருந்தால் ஆவிக்குரிய தளத்தில் வரங்களைச் செயல்படுத்துவதில் முன்னேறிச் செல்வர். தேவனால் வேத வசனத்தில் கூறப்பட்ட வார்த்தைகளை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டும்.

கேட்கும்பொழுதே பெற்றுக்கொள்ளலாம்

நீங்கள் கேட்டதைப் பெற்றுக்கொள்ளும்பொழுது, அதிசயப்படலாம். நீங்கள் கேட்கும்பொழுது பதிலைப் பெறுவீர்கள். **ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.** (மாற்கு 11:24) எப்பொழுது அவைகளைப் பெற்றுக் கொள்கிறீர்கள்? ஜெபிக்கும்பொழுது. 1 யோவான் 5:14-15 இல், **நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.** இவ்வாறு கூறுகிறது.

நாளை என்பதே எப்பொழுதும் சாத்தானுடைய கொள்கையாயுள்ளது. இன்றைக்கே தேவனுடைய கோட்பாடாகவுள்ளது என்று வேத வசனம் கூறுகிறது. அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள். 2 கொரிந்தியர் 6:2 இவ்வாறு கூறுகிறது. நாளை என்ற சாத்தானின் கொள்கையைக் கவனித்தால் இன்றைக்கே என்ற தேவனின் கோட்பாட்டுக்குள் ஒருபொழுதும் நுழைய முடியாது. நீ ஒருவேளை அந்நிய பாஷைக்குரிய விளக்கத்தைக் கேட்டுப் பெற்றிருக்கலாம்.

பெற்றபின் நீ என்ன செய்வாய். விசுவாசிகள் நிறைந்த சாதாரண சபையாக இருந்தாலும் நீ அவ்வரத்தைப் பயன்படுத்த வேண்டும். இதைப் பற்றி முன்பே பார்த்திருக்கிறோம்.

நான் ஒருபோதும் இவ்வரத்தைச் செயல்படுத்தியதில்லை என்று கூறலாம். சரியானமுறையில் வரத்தைப் பயன்படுத்தாவிட்டாலும் பரவாயில்லை. தேவனிடத்தில் சரியானதைக் கேட்கிறேனா? அல்லது தவறானதைக் கேட்கிறேனா? என்று உங்களிடமே கேட்டுக் கொள்ளுங்கள். சரியானது என்று பதிலிருக்குமானால், நீ பெற்றுக் கொண்டதாக நம்புகிறாயா? என்று உன்னையே கேட்டுக் கொள். நீ நம்பினாய், அதனால் பெற்றுக் கொண்டாய். எனவே நீ விசுவாசத்தோடு அடி எடுத்து வைத்தால் சரியான செயல்பாடு உனக்குக் கிடைக்கும். நீ எப்படி அதைத் தெரிந்து கொள்வாய்? ஏனென்றால் தேவன் வாக்களித்திருக்கிறார். நீ எதை உணர்கிறாய் என்பதை வைத்து வருவதல்ல, அல்லது பிறர் கூறுவது போலுமல்ல. நீ பெறுவாய் என வேத வசனம் கூறுகிறது. நீ செய்ய வேண்டியதென்ன? வரத்தைப் பயன்படுத்துவதுதான்.

இந்த கோட்பாடுதான் தீர்க்கதரிசனம் உரைத்தலுக்கும் உரித்தானது. வேத வசனங்களின்படி இது வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தமாயிருக்கிறது என்பதை நீ அறிய வேண்டும். கேட்கும்பொழுது நீ பெற்றுக் கொள்வாய். பெற்றுக்கொண்டபின் அதைச் செயல்படுத்த வேண்டும். நீ செயல்படுத்தாவிட்டால் அது உன்னுடையதாயிராது. இதுதான் விசுவாசத்தின் ஒழுங்காகும்.

யார் புறப்பட்டுச் செல்கிறார்களோ அவர்களை அடையாளங்கள் தொடர்ந்து செல்லும்

அடுத்த நடைமுறை கருத்து என்னவென்றால் யார் புறப்பட்டுச் செல்கிறார்களோ அவர்களை அடையாளம் தொடர்ந்து செல்லும். விசுவாசத்தில் அடியெடுத்து வைத்து வரங்களைப் பெற்றுக் கொண்டு, அதைச் செயல்படுத்துவதோடு இது தொடர்புடையது. வெறும் எழுத்தினால் மட்டும் நாம் வரங்களைப் பற்றி புரிந்துகொள்ளுதல் கூடாது. நாம் நமக்குரிய பங்கைச் செயல்படுத்த வேண்டும். கீழ்படிதலோடு தேவனைச் சேவிக்க வேண்டும். உற்சாகத்தோடு விசுவாசத்தை பகிர்ந்து

கொள்ள வேண்டும். இந்த வழியில்தான் நம்முடைய வாழ்க்கையில் பலமுறை வரங்கள் வெளிப்படுவதை நாம் கண்டிருக்கிறோம். இயேசு தம்முடைய சீஷர்களிடம், **பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.** என்று கூறினார். (மாற்கு 16:15, முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது) **இயேசு பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின், சீஷர்கள், புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.** (வசனம் 20, முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது)

விசுவாசிகள் ஆலயத்தில் அமைதியாக அமர்ந்திருப்பவர் மட்டுமல்ல. அவர்கள் வெளியே சென்று ஊழியம் செய்ய வேண்டும். ஆலயத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டு, மீதியான வாழ்க்கைப் பாதை முழுவதும் ஆலயத்தில் உட்கார்ந்தே கழித்தால் எபபடி மற்றவர்கள் தேவனை பின்பற்ற முடியும்? முன்னேறிச் செல்லக் கூடிய சில வழிமுறைகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

ஆவியின் வரங்களைச் செயல்படுத்த என்ன செய்ய வேண்டுமென அறிந்துகொள்ள மக்கள் பலமுறை விரும்புகின்றனர். என்றாலும், ஆலயத்தில் தங்குவதையும் கீர்த்தனைகள் பாடுவதையுமே அவர்கள் விரும்புகின்றனர். அவ்வாறு செயல்படுவதற்கு எந்த வரங்களும் தேவையில்லை. அநேக நூற்றாண்டுகளாக மக்கள் ஆலயத்திற்குச் செல்கின்றனர். ஆனால் எவ்வித வரங்களையும் ஒருபோதும் செயல்படுத்துவதில்லை. மக்கள் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றிருந்த போதிலும், பரிசுத்த ஆவியானவரின் வரங்கள், தேவன் விரும்புகிற முறையில் ஆலய ஆராதனையில் செயல்படுவதில்லை. அவர்கள் ஒருபோதும், தெய்வீக சுகமளிக்கும் வரங்களையோ பார்த்ததில்லை. ஞானத்தைப் போதிக்கும் வசனத்தையோ அல்லது அறிவை உணர்த்தும் வசனத்தையோ அவர்கள் கேட்டதுமில்லை. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று இருப்பது அல்லது மப்பது ஆண்டுகள் கடந்தும் அந்நியபாஷை பேசுதல், அதற்கு வியாக்கியானம் உரைத்தல் ஆகிய வரங்களைத் தவிர, வேறு எந்த வரங்களையும் செயல்படுத்தாத ஆலயங்களை நான் பார்த்திருக்கிறேன்.

என்றாலும், மறுபுறத்தில் ஆவியின் வரங்கள் பாய்ந்தோடுகிறது. இளைஞர்கள் உலகத்தின் பல பகுதிகளுக்கும், உள்ளடங்கிய பகுதிகளுக்கும் பயணம் செய்து எடுத்துக்காட்டாக, வாலிபர் மத்தியில் சுவிசேஷப் பணியைச் செய்கின்றனர். போற்றத்தக்க அற்புதங்கள் நடக்கின்றன. அவர்கள் ஏதாவது வேதாகமப் பள்ளிக்குச் சென்று அற்புதங்கள் செய்வது எவ்வாறு என்று கற்றுக் கொண்டார்களா? இல்லை. அவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கும் கீழ்படிந்து புறப்பட்டுச் சென்று, மற்றவர்களுக்கு ஊழியம் செய்தனர். அவர்களுடைய வாழ்க்கையில் இவ்வடையாளங்கள் வெளிப்பட்டதினால் தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களின் தேவைகளை சந்திக்க முடியும் என்பதை முன்னதாகவே அவர்கள் அறிந்திருந்தனர்.

தேவனுக்கென்று புறப்பட்டுச் செல்பவர்களோடு அடையாளங்களும் தொடர்ந்து செல்லும். நீங்கள் அடையாளங்களை விரும்பினால், புறப்பட்டுச் சென்று மற்றவர்களுக்கு ஊழியம் செய்யுங்கள்.

வரங்களைச் செயல்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

வரங்களைச் செயல்படுத்தும்போது தவறு செய்து விடுவோமோ என்று நீங்கள் ஒருவேளை பயப்படலாம். தவறு செய்வதில் நீங்கள் மட்டுமல்ல, ஆரம்ப காலத்தில் வரங்களைச் செயல்படுத்தும்போது இவ்விதம் நடைபெறலாம். நீ திறம்பட, சரியாக செயல்படுத்த வேண்டும் என்று நினைத்தால், என்ன நடக்கும் என்று உனக்குத் தெரியுமா? நீ ஒருபோதும் வரங்களைச் செயல்படுத்த துவங்கமாட்டாய்.

நீ தவறு செய்தாலும் பரவாயில்லை. தேவன் உன்னை தூக்கியெடுப்பார். நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் எழுந்திருப்பான் என வசனம் கூறுகிறது. (நீதிமொழிகள் 24:16ஐ பார்க்கவும்.) அவன் தரைமட்டத்திலே நிற்கமாட்டான். உயர்வடைவான். பவுலின் வார்த்தைகளை நினைவு கூறுங்கள். **எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம்.** (1 கொரிந்தியர் 14:31, முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது) இப்படியாக ஆவியின் வரங்களை செயல்படுத்துவதைக் கற்றுக்கொள்ள வேண்டும். நன்மை, தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறிய வேண்டும் என்று எபிரெயர்

5:14 கூறுகிறது. ஆவியின் வரங்களைச் செயல்படுத்தாவிட்டால், நாம் வளரமுடியாது. வரங்களை செயல்படுத்துவதை கற்றுக்கொள்ள வேண்டுமானால், உன்னில் அன்பு செலுத்துகின்ற விசுவாசிகளின் கூட்டத்தில் நீ இருக்க வேண்டும். அவர்கள் பொறுமையாக இருந்து உன்னை அமுக்கிப்போடாமல், உன்னை ஊக்குவித்து உயர்வடைய உதவுவார்கள்.

நமது நோக்கத்தை நாம் சரிபார்க்க வேண்டும்

இறுதியாக, இந்த அளவிற்கு நீங்கள் வந்தபின் உங்கள் நோக்கங்களை இருமுறை சரிபார்க்க வேண்டும். சபை பக்திவிருத்தியடைய வேண்டுமென்பதே ஆவியின் வரங்களைச் செயல்படுத்துவதின் முக்கிய நோக்கமாகும்.

> நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள்.
>
> *(1 கொரிந்தியர் 14:12)*

சபை பக்திவிருத்தியடைய வேண்டுமென்பதே ஆவியின் வரங்களைச் செயல்படுத்துவதின் முக்கிய நோக்கமாகும்.

எல்லா நல்ல பணிகளிலும் உங்களை ஈடுபடுத்திக்கொள்ளுங்கள்

ஆவியின் வரங்களைக் குறித்ததான பாடங்களின் முடிவுக்கு வந்துவிட்டதால் பவுல், தீமோத்தேயுவை ஊக்குவித்தது போல நானும் உங்களை ஊக்குவிக்க விரும்புகிறேன்.

> நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல், வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.
>
> *(2 தீமோத்தேயு 3:14, 16-17)*

சபையின் பக்திவிருத்திக்கும், உலகத்தின் சுவிசேஷத்திற்கும் தேவையான எல்லாவித நற்பணியிலும் ஆவிக்குரிய வரங்கள் உங்களை ஈடுபடுத்தும்.

ஆசிரியரைப் பற்றி . . .

டெரிக் பிரின்ஸ் (1915-2003) இந்தியாவில் வசித்து வந்த ஆங்கிலேய பெற்றோருக்குப் பிறந்தவர். இங்கிலாந்து நாட்டின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்க மற்றும் லத்தீன் மொழிகளில் புலவராக தேர்ச்சி பெற்றார். பழங்காலத்து மற்றும் நவீன தத்துவம் என்ற துறையில், கிங்ஸ் கல்லூரியில் அவர் கௌரவ பணியாற்றினார். மட்டுமல்ல, அராமிய மற்றும் எபிரெய மொழிகள் உட்பட, பல மொழிகளைக் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக்கழகத்திலும் அவர் கற்றார்.

இரண்டாம் உலக யுத்தத்தில், பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றியபோது, அவர் வேதத்தை வாசிக்க ஆரம்பித்து, இயேசுவுடன் வாழ்வை மாற்றும் ஓர் நேர்முக சந்திப்பைப் பெற்றார். இச்சந்திப்பிலிருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலாவது, இயேசு கிறிஸ்து உயிரோடிருக்கிறார்; இரண்டாவது, வேதாகமம் ஓர் உண்மையான, அர்த்தமுள்ள, நவீன காலத்துக்கும் ஏற்ற புத்தகம். இவ்விரண்டு முடிவுகளும் அவருடைய வாழ்க்கையின் முழுப் போக்கையும் மாற்றின. அதன்பின் வேதத்தைப் படிக்கவும் அதைக் கற்றுக்கொடுக்கவும் அவர் தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

வேதாகமத்தையும் அதின் போதனையையும் தெளிவான மற்றும் எளிய விதத்தில் விளக்கும் டெரிக்கின் பிரதான வரம், லட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையில் விசுவாசத்தின் அடித்தளத்தை அமைப்பதற்கு உதவி செய்திருக்கிறது. சபைப் பிரிவுகளை மற்றும் குழுக்களைச் சாரா நிலையினால், அவருடைய போதனை எல்லா இன மற்றும் மதப் பின்னணிகளிலிருந்தும் வந்த மக்களுக்கு மிகப் பிரயோஜனமாகவும், வாழ்க்கைக்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளது.

அவர் 80க்கும் மேற்பட்ட புத்தகங்களுக்கும், 600 ஒலி மற்றும் 100 ஒளிப்பதிவு செய்யப்பட்ட போதனைகளுக்கும் காரணராய் இருக்கிறார். இவைகளில் அநேகம் 100க்கும் மேலான பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டுள்ளன. அவருடைய அனுதின ரேடியோ ஒலிபரப்பு, அராபிய, பஹாசா, இந்தோனேஷியா, சீன (அமாய், காண்டோனீஸ், மாண்டரின்,

ஷாங்காயீஸ், சுவாட்டோ) க்ரோஷிய, ஜெர்மன், மலகாசி, மங்கோலிய, ரஷிய, சமோவா, ஸ்பானிஷ் மற்றும் டோங்கன் பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த ரேடியோ ஒளிபரப்பு இன்றைக்கும் உலகெங்கும் அநேகருடைய வாழ்வை மாற்றிக்கொண்டிருக்கிறது.

140 நாடுகளில், டெரிக் பிரின்ஸின் போதனைகளைக் கொண்டு, விசுவாசிகளைச் சந்திக்கும் ஊழியத்தை, டெரிக் பிரின்ஸ் ஊழியங்கள் இன்றும் செய்து வருகிறது. இதனால் "இயேசு கிறிஸ்து வரும் வரை" என்ற கட்டளையை நிறைவேற்றுகிறது. உலகெங்குமிருக்கும் **30** டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இப்பணி நிறைவேறி வருகிறது. இவ்வலுவலகங்கள், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லேண்ட்ஸ், நியூசிலாந்து, நார்வே, ரஷியா, தென் ஆப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் இந்தியா உட்பட பல நாடுகளில் உள்ளன. மேலும் விபரங்கள் அறிய **www.derekprince.in** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

ங்கள்

உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் இதர காரியங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

For orders, prayer requests & other enquiries please contact :

DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

You can also send your offerings and contributions towards this ministry to the above address.

Visit our WEBSITE:

www.derekprince.com/ta-in